مركز أصول
Osoul Center
www.osoulcenter.com
Rabwah



03

# இஸ்லாத்தின் சர்வதேச தூது

தமிழ்

அப்துர் ரஹ்மான் ஷீஹா

Osoul Center
www.osoulcenter.com

# இஸ்லாத்தின் சர்வதேச தூது

## தொகுப்பு

கலாநிதி:
அப்துர் ரஹ்மான் ஷீஹா

## தமிழாக்கம்

அப்துல்லாஹ் முஹம்மத் அகீல் (மதனி)

Tamil
தமிழ்
تاميلي

بسم الله الرحمن الرحيم

“ அளவற்ற அருளாளனும்
நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் பெயரால்... ”

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டாளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 504 442 532
+966 11 445 4900
+966 11 497 0126
P.O.BOX 29465 Riyadh 11457
osoul@rabwah.com
www.osoulcenter.com

Osoul Center
www.osoulcenter.com

# முன்னுரை

புகழனைத்தும் வானங்கள், பூமி அதிலுள்ளவற்றின் படைப்பாளன், அகிலத்தாரின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் அகிலத்தாருக்கு அருட்கொடையாக இறுதியாக அனுப்பப்பட்ட, அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவரைப் போன்றே மனிதர்களுக்கு நேர்வழி காட்டவும், இருள்களிலிருந்து ஒளியின்பால் அவர்களை மீட்டெடுக்கவும் இறைவனால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்கள், ரஸூல்மார்கள் மீதும் உண்டாவதாக.

இதோ நாம் 'உஸூல் சர்வதேச அழைப்பாளர் மையம்'ல் இருக்கின்றோம். எமது புதிய வெளியீட்டின் மூலம் வாசகர்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். எமது இவ்வெளியீடுகள் அனைத்தினதும் குறிக்கோள் ஒன்றுதான். அது : இஸ்லாத்தின் யதார்த்தத்தையும், அதன் சிறப்பம்சங்களையும் தெளிவு படுத்துவதன் மூலம் சகல மக்களுக்கும் இஸ்லாத்தை முன்வைப்பதாகும். மேலும் மனிதர்களது அனைத்து வித பிரச்சினைகளுக்கும் யதார்த்தமான, பயனுள்ள தீர்வுகளை முன்வைக்கும் ஒரே மார்க்கம் இந்த இஸ்லாம்தான். நாம் எவ்வாறு உருவானோம்? ஏன் உருவாக்கப்பட்டோம்? எங்கே செல்லப் போகிறோம்? போன்ற மனித சமூகம் விடைகாணத் துடிக்கும் பல சிக்கலான வினாக்களுக்கு தெளிவான, உறுதியான பதில்களை வழங்கும் ஒரே மார்க்கம் இந்த இஸ்லாம்தான். அத்துடன் நபி மூஸா (அலை) , நபி ஈஸா (அலை) உட்பட அனைத்து நபிமார்களையும் பாரபட்சமின்றி நேசிக்குமாறு தன்னைப் பின்பற்றுவோரைத் தூண்டும் ஒரே மார்க்கம் இந்த இஸ்லாம் மாத்திரம்தான்.

மேலும் இஸ்லாத்திற்கெதிரான குற்றச்சாட்டுகளை மறுத்து, அதனைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்வதிலும் எமது இந்த வெளியீடுகள் அக்கறை கொண்டுள்ளன. நாம் இங்கு முன்வைக்கும் அனைத்தையும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக்கூடிய, உள்ளம் சாந்தமடையக்கூடிய தெளிவான ஆதாரங்கள் மூலம் பலப்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளோம். அல்ஹம்து லில்லாஹ். இதெல்லாம், நவீன காலத்தில் மிக வேகமாகப் பரவிவரும் இந்த மகத்தான இஸ்லாமிய மார்க்கத்தின் பால் மக்களுக்கு வழிகாட்டவே. இஸ்லாத்தின் இவ்வேகத்தை மதங்களின் வளர்ச்சி பற்றி 2015ம் ஆண்டு (நற சுநளநயசஉா ஊநவெநச) எனும் நிறவனம் வெளியிட்ட அறிக்கையும் உறுதிப்படுத்துகின்றது.

தற்போது வாசகர்களின் கையில் தவழ்வது 'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' எனும் அழகிய நூல். இறுதித்தூதர் (ஸல்) அவர்கள் பிறந்தது முதல், அல்லாஹ் அகிலத்தாருக்கு அருட்கொடையாகவும் நேர்வழியாகவும் இறக்கிய இந்த இஸ்லாமியத் தூதை மக்களுக்கு எத்திவைத்து, உபதேசித்து, அமானிதத்தை நிறவேற்றியதன் பின் அல்லாஹ்விடம் போய்ச் சேரும் வரையிலான அன்னாரது முழு வரலாற்றையும் அலசுகின்றது.

நபித்துவத்தின் சூழலை வர்ணிக்கும் இந்நூலின் பக்கங்களில் : நபி (ஸல்) அவர்களின் உயர்ந்த குணங்களையும், பணிவான அவர்களுடைய வாழ்கை முறைகளையும் அறிவதற்காக இந்நூலுடனேயே நாமும் ஒன்றியிருப்போம். மேலும், தனது சிறு குடும்பம், மனைவிமார், தோழர்கள், தம்மைச் சுற்றியுள்ள பலதரப்பட்ட மக்கள் அனைவருடனும் எவ்வாறு பழகினார்கள்?, அல்லாஹ்வுடைய மார்க்கத்தை நிலைநாட்ட எவ்வாறு உண்மையாகப் போராடினார்கள்?, அச்சந்தர்ப்பங்களின் எதிரிகளுடனான அவர்களின் நிலைப்பாடு எவ்வாறிருந்தது?, அதில் யாரும் வெறுக்காத உயர்ந்த சாணாக்கியம் மிக்க நடவடிக்கைகள் எவ்வாறிருந்தன?, அறிவுடனும், அழகிய உபதேசத்துடனும் அவர்கள் அழைப்புப் பணியில் கடைபிடித்த தனித்துவமான முறை போன்ற இன்னோரன்ன விடயங்களை இந்நூலில் அறிந்து கொள்ளலாம். மனிதர்களுக்கு மத்தியில் நீதம், உபகாரம், பாதுகாப்பு உருவாக்குவதில் எந்தளவு கரிசனை எடுத்தார்கள் என்பதையும் இதில் அவதானிக்கலாம். உண்மையாகவே 'அகிலத்தாருக்கு அருட்கொடையாகவே அன்றி உம்மை நாம் அனுப்பவில்லை' (21:107) என்று இறைவன் கூறுவதைப் போன்றே நபிகளாரும் திகழ்ந்தார்கள்.

முஸ்லிம் வாசகர், நபியவர்களைப் பற்றி மென்மேலும் அறிந்து, அவர்களை நேசிக்கவும், பின்பற்றவும் போதியளவு தகவல்களை இந்நூலில் பெற்றுக் கொள்ளலாம் என நாம் எதிர்பார்க்கும் அதேவேளை, முஸ்லிமல்லாதோர் இந்நூலை வாசிக்கும் போது இன்பமடைவர் என்றும், இஸ்லாத்தைப் பற்றியும் நபியைப் பற்றியும் மென்மேலும் அறிய இந்நூல் உதவுமென்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

பொறுப்பியலாளர் ∴ பாஸில் இப்னு அப்துல்லாஹ் அல்பௌஸான்

நிர்வாக இயக்குனர்- உஸூல் சர்வதே அழைப்பாளர் மையம்





## அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்

புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரித்தாகட்டும். மேலும் ஸலாத் எனும் கருணையும் ஸலாம் எனும் ஈடேற்றமும் எங்கள் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் கிளையார் தோழர்கள் மீதும் உண்டாகட்டும்!

இப்புத்தகம் பற்றி ஓர் அறிமுகம்.

இறைவன் அல் குர்ஆனில் கூறுகின்றான்: ((நபியே! அவர்களிடம்) "வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள் (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம். அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம் அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ளவும் மாட்டோம்" எனக் கூறும். (மு..மின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கனித்து விட்டால் "நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!" என்று நீங்கள் கூறிவிடுங்கள்".) (ஆலு இம்ரான்: 64)

உண்மையில் இஸ்லாம் தான் சத்திய மார்க்கம், ஏனெனில் அதுவே இயல்பானதும் தெளிவானதுமாகும். அதில் சிக்கலோ குழப்பமோ கிடையாது. தங்கள் சிந்தனையில் ஏற்படும் அது பற்றிய சந்தேகங்களையும் வினாக்களையும் முன்வைக்கும் உரிமையையும் அது வழங்கியுள்ளது. அதே போன்று மார்க்கத்தோடு தொடர்புடைய அந்த வினாக்களுக்கான விடையளிக்கும் உரிமையை அது அனைவருக்கும் வழங்கவில்லை. இறைவன் அருள்மறையில் கூறும் போது: ("என் இறைவன் ஹராம் எனத் தடுத்திருப்பவையெல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான, மானக்கேடான

செயல்கள், பாவங்கள், நியாயமின்றி (ஒருவருக்கொருவர்) கொடுமை செய்வது ஆதாரமில்லாமல் இருக்கும் போதே நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல், நீங்கள் அறியாவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவது (ஆகிய இவையே என்று நபியே!) நீர் கூறுவீராக.") (அஃராப்: 33)

மார்க்கத்தோடு தொடர்புடைய அந்த பதில்கள் மார்க்க அறிஞர்களாலேயே முன்வைக்கப்படல் வேண்டும் என்று அது வலியுறுத்துகின்றது. "நீங்கள் (இதனை) அறிந்து கொள்ளாமலிருந்தால், (முந்திய) வேத ஞானம் பெற்றோரிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள் (என்று கூறுவீராக"). (அந்நஹ்ல்: 43)

தகுந்த அறிவில்லாதவர்களிடம் மார்க்கத்தினை கற்பதனால் ஏற்படும் விளைவுகளை நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தும் போது "நிச்சயமாக அல்லாஹ் கல்வியை(த் தன்னுடைய) அடியார்களிடமிருந்து ஒரேயடியாகப் பறித்து விடமாட்டான். ஆயினும் அறிஞர்களைக் கைப்பற்றுவதன் மூலமே அவன் கல்வியைக் கைப்பற்றுவான். கடைசியாக ஓர் அறிஞர் கூட மீதமில்லாமல் ஆக்கிவிட்டதும் மக்கள் அறிவீனர்களைத் தம் தலைவர்களாக்கிக் கொள்வார்கள். அவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு அறிவின்றியே மார்க்கத் தீர்ப்பும் வழங்குவார்கள். (இதன் மூலம்) தாமும் வழி கெட்டு(ப் பிறரையும்) வழி கெடுப்பார்கள் என இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னில் ஆஸ் (ரலி) அறிவித்தார்.

இஸ்லாத்தில் நாங்கள் நம்பவேண்டிய தெளிவில்லாத அம்சங்களோ, நிவர்த்தி செய்ய இயலாத வினாக்களோ கிடையாது. எனினும் மனிதனின் பகுத்தறிவினால் கிரகிக்க முடியாத சில மறைவான அம்சங்கள் இருக்கின்றன. மனிதன் அதனை அறிவதனால் அவனுக்கு எவ்வித நலனும் இல்லையென்பதால் இறைவன் அதனை கூறாமல் விட்டுவிட்டான். எந்த மறைவான விடயங்களை அறிவதனால் மனித இனத்திற்கு நலன் கிட்டுமோ அவற்றை மட்டும் தன் தூதரின் மூலம் தெளிவுபடுத்தியிருக்கின்றான்.

நாம் மனிதன் என்ற அடிப்படையில் எமது சிந்தனையில் தோன்றும் பலவிதமான சந்தேகங்களுக்கான பதில்களை இஸ்லாம் அனைவரும் கவரக்கூடிய இலகுவான தொனியில் முன்வைக்கின்றது.

மனிதன் தன் தோற்றம் பற்றி வினவினால் அதற்கான விடையை திருமறை பின்வருமாறு கூறுகின்றது: "நிச்சயமாக நாம் (ஆதி) மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம். பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பன இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம் பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம் பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான)அல்லாஹ் மிகவும் மேலாங்கியவன் (படைப்பாளர்களில்எல்லாம்) மிக அழகான படைப்பாளன்". (அல் மு∴மினூன்: 12 - 14)

இப்பாரில் ஏனைய சிருஷ்டிகளுக்கிடையில் தன்னுடைய அந்தஸ்து என்ன? என்ற வினாவிற்கான விடையை பின்வரும் இறைவசனத்தில் பெற்றுக்கொள்கின்றான்: "நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம் இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்." (இஸ்ரா:70)

இவ்வுலகில் இறைவன் உருவாக்கிய படைப்பினங்களோடு தன் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்? என்று வினவினால் அதற்கான விடையையும் பின்வருமாறு கூறுகின்றது: "கப்பல்கள் அவன் கட்டளையைக் கொண்டு (கடலில்) செல்லும் பொருட்டும், நீங்கள் அவனுடைய அருளைத் தேடிக்கொள்ளும் பொருட்டும் மேலும் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டும் உங்களுக்குக் கடலை வசப்படுத்திக் கொடுத்தவன் அல்லாஹ்வே ஆவான். அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும்

தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான் அதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன."(ஜாஸியா: 12 - 13)

மனிதன் உருவாக்கப்பட்ட நோக்கம் என்ன? என்ற அவனுடைய கேள்விற்கு அல்குர்ஆன் இவ்வாறு விடையளிக்கின்றது: "இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை." இவ்வுலகத்தை சிருஷ்டித்த அந்த சிருஷ்டிகர்த்தாவைப் பற்றியும், யாருக்கு இம்மனிதன் தலைசாய்ந்து வணங்க வேண்டும் என்ற வினாக்களுக்கான பதில்களையும் பின்வரும் திருவசனங்களின் மூலம் பெற முடிகின்றது. "(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை." (இக்லாஸ்)

"(யாவற்றுக்கும்) முந்தியவனும் அவனே, பிந்தியவனும் அவனே, பகிரங்கமானவனும் அவனே, அந்தரங்கமானவனும் அவனே, மேலும், அவன் அனைத்துப் பொருள்களையும் நன்கறிந்தவன்."(ஹதீத்: 3)

உளஅமைதி மற்றும் ஆத்ம நிம்மதி என்பவற்றின்பால் இட்டுச்செல்லும் பாதையைப் பற்றிய மனித கேள்விகளுக்கான பதில்களை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது: "(நேர் வழி பெறும்) அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தாம் (முற்றிலும்) ஈமான் கொண்டவர்கள் மேலும், அல்லாஹ்வை நினைவு கூறுவதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன அல்லாஹ்வை நினைவு கூறுவது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க!(ரஃது: 28)

மனித வாழ்வின் வெற்றி, அனுகூலம் பற்றிய வினாவிற்கு அல்குர்ஆன் இவ்வாறு பதிலளிக்கின்றது: "ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற்செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம் இன்னும் (மறுமையில்)

அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்". (நஹ்ல்: 97)

இறைவனையும் அவன் அருளியவற்றையும் நம்பிடாதவனின் நிலையை பற்றிய அவனது வினாவிற்கான பதிலை பின்வரும் வசனம் கூறுகின்றது: "எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும் மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்" (தாஹா: 124).

ஈருலகிலும் சமூகம் மற்றும் தனிமனிதனுக்கு பொருத்தமான அனைத்து விதமான சட்டதிட்டங்களையும் உள்ளடக்கிய பரிபூரண மார்க்கத்தினைப் பற்றிய அவனது வினாவிற்கான விடையை பின்வரும் வசனம் கூறுகின்றது: "இன்றைய தினம் காஃபிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள் எனக்கே அஞ்சி நடப்பீர்களாக. இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்." (மாயிதா: 3)

மனிதன் அவசியம் ஏற்கவேண்டிய மார்க்கத்தைப் பற்றியும் இறைவனிடமும் அவனது சுவனத்திற்கும் இட்டுச் செல்லும் பாதையைப்பற்றியும் அவன் வினவினால்: "இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார்." (ஆலஇம்ரான் 85)

மனிதர்களுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றி அல்குர்ஆன் "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும்,

கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்." (ஹுஜ்ராத்: 13)

கல்வியோடும் அறிவோடும் தனது நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற வினாவிற்கு அல்குர்ஆன் "உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கும் கல்வி வழங்கப்பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான்." (முஜாதிலா: 11)

இவ்வுலகத்தில் அவனுடைய முடிவைப்பற்றிய வினாவிற்கு "ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும்- இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ. அவர் நிச்சயமாக வெற்றிடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை." (ஆலஇம்ரான் 185) .

மரணத்தின் பின்பு அவன் திரும்பவும் எழுப்பப்படுவது சாத்தியம் தானா? என்ற அவனது கேள்விக்கு "மேலும், அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டதெப்படி என்பதை) மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான் 'எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?' என்று. 'முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்' என்று நபியே நீர் கூறுங்கள்". (யாஸீன்: 78)

மரணத்தின் பின் எழுப்பப்பட்டால் இறைவனிடம் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய நல்லறங்கள் பற்றிய வினாவிற்கு "நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நல்ல - செயல்களைச் செய்கிறார்களோ அவர்கள் (விருந்துக்கு) இறங்கும் இடமாக ஃபிர்தவ்ஸ் என்னும் தோட்டங்கள் இருக்கும். அதில்

அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள் அவர்கள் அதிலிருந்து மாறி (வேறிடம்) செல்ல விரும்ப மாட்டார்கள்." (அல் கஹ்ப்: 107)

மரணத்தின் பின் எழுப்பப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டதன் பின்னர் அவன் செல்லும் நிரந்தரமான இடம் இரண்டாகும். மூன்றாவதோர் இடம் கிடையாது. ஒன்றில் சுவர்க்கம் அல்லது நரகம். இறைவன் கூறுகின்றான்: "நிச்சயமாக வேதக்காரர்களிலும் முஷ்ரிக்குகளிலும் எவர்கள் நிராகரிக்கிறார்களோ அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள்- அதில் என்றென்றும் இருப்பார்கள்- இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள் ஆவார்கள். நிச்சயமாக, எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ, அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள் ஆவார்கள். அவர்களுடைய நற்கூலி, அவர்களுடைய இறைவனிடத்திலுள்ள 'அத்னு' என்னும் சுவர்க்கச் சோலைகளாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டு இருக்கும் அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி திருப்தி அடைவான், அவர்களும் அவனைப்பற்றி திருப்தி அடைவார்கள். யார் தன் இறைவனுக்குப் பயப்படுகிறாரே அத்தகையவருக்கே இந்த மேலான நிலை உண்டாகும்." (அல்பய்யினா: 6 - 8)

அன்பான வாசகரே!

எமக்கு உறுதியாக சொல்ல முடியும் இன்றைய உலகம் எதிர்நோக்குகின்ற எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு இஸ்லாமே, அதனை எடுத்து நடைமுறைப்படுத்துவது தான் அந்த பிரச்சினைகளை தீர்க்க உதவும். இன்றைய உலகம் அனைத்துவிதமான கொள்கைக் கோட்பாட்டு ஒழுங்குகளையும் பரீட்சித்துப் பார்த்துவிட்டது. ஓரிரு சிக்கல்களை அவை தீர்த்தாலும் எல்லா விதமான பிரச்சினைகளையும் தீர்க்க அவை பொறுத்தமற்றது என்பது காலத்தினால் நிருபணமாகிவிட்டது. இப்படியிருந்தும் இன்றைய உலகம் ஏன் இஸ்லாத்தை நடைமுறைப்படுத்திப் பார்ப்பதில்லை? F. FILWVEAS என்பவர் கூறுகின்றார்: 'நவீன மார்க்கங்களும் கொள்கைகளும் செயலற்றுப் போய்விட்டன, அதிலிருந்து தப்பித்துக்கொள்வது அவசியம் என்று மேற்கத்திய

தத்துவ மேதைகளும் எழுத்தாளர்களும் கருதுவதாக அண்மையில் பத்திரிகையில் வெளியான பல அறிக்கைகள் கூறுகின்றன. இது பெரும்பாலான மேற்கத்திய எழுத்தாளர்கள் தங்களின் கிறிஸ்தவ மார்க்கத்தில் இருக்கின்ற சட்ட ஒழுங்குகளின் சிக்கல்களால் எதிர்நோக்கும் பிரச்சினையின் வெளிப்பாடாகும். இவர்களும் பெரும் தவறை செய்கின்றார்கள். இஸ்லாம் என்றும் பரிபூரண விடைகளுடன் அந்த இடத்தை நிவர்த்தி செய்ய தயார் நிலையில் உள்ளது.’

அன்பான வாசகரே!

இன்றைய காலகட்டத்தில் அநேகமான முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களையும் அதன் சரியான போதனைகளையும் நடைமுறைப்படுத்துவதிலிருந்து முற்றுமுழுதாக ஒதுங்கியிருக்கின்றார்கள் என்ற கருத்திற்கு நாம் உடன்பட முடியாது. ஏனெனில் இன்று அநேகமான முஸ்லிம்கள் இயல்பு வாழ்வில் இஸ்லாத்தின் போதனைகளை விட்டும், அதன் உயரிய நெறிகளை விட்டும் வெகு தொலைவில் இருக்கின்றார்கள்.

சிலர் நினைப்பது போன்று இஸ்லாம் என்பது வெறுமனே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் செயற்படுத்தும் மார்க்க அனுஷ்டானம் அல்ல, அது கொள்கைக் கோட்பாடு, சட்டதிட்டம், வழிபாட்டு முறை, மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்ட ஒரு மார்க்கமும் ஒரு ஆட்சி முறையுமாகும்.

மார்க்கத்தின் அடிப்படை அம்சங்களையும் போதனைகளையும் நடைமுறைப்படுத்தக் கூடிய, அதன் ஏவல்களை எடுத்தும் விலக்கல்களை தவிர்த்தும் நடக்கக்கூடிய முறையினை “(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!” (அந்நஹ்ல்: 125) என்ற இறை போதனைக்கேற்ப ஏனைய சமுதாயங்களுக்கும் எடுத்தியம்பக்கூடிய நபர்கள் இருந்தால் அது எவ்வளவு அற்புதமான மார்க்கமாக இருக்கும்!

அரேபிய நாகரிகம் என்ற புத்தகத்தின் முன்னுரையில் J.S RESTLER

கூறுகிறார்: ‘இஸ்லாம் என்ற பெயர் வித்தியாசமான மூன்றுவித அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

1- மார்க்கம்

2- ஆட்சி

3- கலாச்சாரம்

சுருக்கமாக - தனித்துவமான நாகரிகம் எனலாம்.’

இஸ்லாம் தன் கொள்கையிலோ, வழிபாட்டு முறையிலோ, கொடுக்கல் வாங்கல்களிலோ, அதன் போதனைகளிலோ அது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப் பெற்றது முதல் இன்று வரை எந்த மாற்றத்திற்கும் திரிபுக்கும் உட்படவில்லை. மாற்றம் ஏற்பட்டதெல்லாம் முஸ்லிம்கள் மத்தியில்தான்.

இஸ்லாமியர்கள் தவறிழைத்துவிட்டலோ, தடுக்கப்பட்ட காரியங்களை செய்துவிட்டாலோ, இஸ்லாத்தின் போதனைகள் அதனை ஏற்கின்றது என்றோ அவைதான் அவ்வாறு பணிக்கின்றது என்றோ அர்த்தம் கிடையாது. இதனை மேலும் தெளிவுபடுத்த சிறந்ததோர் உதாரணத்தை நமக்கு கூறமுடியும். பகுதிகள் வேறுபடுத்தப்பட்ட ஒரு இயந்திரத்தை சரியாகப் பொருத்துவதற்கு வழிகாட்டும் ஒரு வழிகாட்டிப் புத்தகத்தையும் (ஊயுவுடுழுபு) ஒருவனிடம் கொடுத்து அப்புத்தகத்தில் இருப்பதற்கு புறம்பாக அவன் தவறாகப் பொறுத்திவிட்டால் அப்புத்தகத்தில் உள்ள கோளாறாக அது கருதப்படுமா? அல்லது என்னவென்று கூறப்படும்? அங்கு மூன்று விடயங்கள் நடந்திருக்கலாம்:

1 - ஒன்றோ அந்த மனிதன் புத்தகத்தில் கூறப்பட்ட அறிவுறுத்தல்களை சரியாக கடைபிடித்திருக்க மாட்டான்.

2 - அல்லது பூரணமாக செய்திருக்க மாட்டான்.

3 - அல்லது அப்புத்தகத்தில் உள்ள தகவல்களை சரியாக விளங்கியிருக்க மாட்டான். இந்நிலையில் அவன் அவ்வியந்திரத்தை உற்பத்தி செய்த குறிப்பிட்ட நிறுவனத்தை நாடி சரியான அறிவுருத்தல்களைப் பெறவேண்டும்.

இது போன்று தான் இஸ்லாமும், அதனை அறிய விரும்புபவர்கள் அதன் அங்கீகரிக்கப்பட்ட சரியான மூலாதாரங்களிலிருந்து அதனைப் பெறவேண்டும், ஏனெனில் மார்க்கமானது அதனைக் கற்றுத் தேர்ந்தவர்களிடமிருந்தே பெறப்படல் வேண்டும். நோயுற்றவன் வைத்தியரிடம் தான் செல்ல வேண்டும். வீடு கட்டுபவர் பொருயியளாலரிடம் தான் சென்றிட வேண்டும். இவ்வாறு ஒவ்வொன்றிற்கும் அதனை கற்றுத்தேர்ந்தவரிடம் தான் செல்ல வேண்டும்.

இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரிடமும் நாம் வினையமாக கேட்டுக்கொள்வது என்னவெனில் ஒருமுகப்படுத்தப்பட்ட தன் சிந்தனையை களைந்து உண்மையை அறியும் நோக்கில் இப்புத்தகத்தை வாசியுங்கள். தவறுகளை ஆராயும் நோக்கிலோ, குறைகளைத் தேடும் நோக்கிலோ வாசிக்க வேண்டாம். வாசிப்பவரின் அறிவுதான் தீர்ப்பளிக்க வேண்டுமே தவிர அவனது உணர்வு கிடையாது. அப்படி உணர்வை தீர்ப்பாளிப்பவராக எடுப்பவர் அல்லாஹ் இழிவுபடுத்தியவர்களில் ஆகிவிடுகின்றான். “மேலும், ‘அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்’ என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் ‘அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்’ என்று கூறுகிறார்கள். அவ்வாறாயின் அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காத, நேர்வழிபெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா?” (பகரா: 170)

சிறந்த சிந்தனையுடைய நாகரிகமான மனிதன், சிந்தனையை மற்றவர்களுக்கு இரவல் கொடுக்க மாட்டான். எந்த விடயத்தையும் ஆராய்ந்து அறிந்ததன் பின்னர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வான். மேலும் தான் அறிந்தவற்றை மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுத்து சமூகத்தில் நிலவும் தவறுகளை சீர்செய்வான்.

இந்நூலின் தலைப்பில் அடங்கவேண்டிய எல்லா அம்சங்களையும் முழு அளவில் நான் ஒன்று திரட்டியிருக்க மாட்டேன் என்பதனை ஏற்றுக்கொள்கிறேன்.

ஏனெனில் நான் ஏற்கனவே கூறியது போன்று இஸ்லாம் என்பது ஆன்மீகத்தையும் லௌகீகத்தையும் பரிபூரணமாக உள்ளடக்கிய ஒரு வாழ்க்கைத் திட்டமாகும். அதனை முன்வைக்க ஒரு புத்தகமல்ல பல்லாயிரணக்கான ஏடுகள் தேவைப்படுகின்றன. எனவேதான் அதன் அடிப்படை அம்சங்களினதும் அறநெறிகளினதும் ஒரு சில பகுதிகளை சமிக்ஞைகளாக எழுதியிருக்கின்றோம். அதனை ஆய்வு செய்பவர்களுக்கு அவை ஒரு தோற்றுவாயாக அமையுமென எதிர்பார்க்கின்றோம்.

சிலர் கேட்கலாம் இன்று சமூகங்களிடையே காணப்படும் மனிதனால் இயற்றப்பட்ட நவீன சட்டங்களிலும் இஸ்லாத்தில் இருக்கும் ஒழுங்குகள் இருக்கின்றனவே? என்றால் நாம் சொல்லும் பதில், எது முந்தியது? இஸ்லாமா? இல்லை மானுட சட்டங்களா? நிச்சயமாக இஸ்லாம் தான் முதன்மையானது. பதினான்கு நூற்றாண்டிற்கும் அதிகமான காலமாக அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே இஸ்லாத்தின் சில ஒழுங்கு விதிகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் நிகராக அமைந்திருக்கும் மானுட சட்டங்கள் இஸ்லாத்திலிருந்து திருடி எடுக்கப்பட்டவையாகும் என்றால் மிகையாகாது. அதிலும் குறிப்பாக இஸ்லாம் தோன்றியது முதல் அதனைக் கொச்சைப்படுத்தும் நோக்கிலோ, சத்தியத்தை அடையும் நோக்கிலோ முஸ்லிமல்லாத கிழக்கத்தேய வாதிகள் போன்ற மாற்றுமத சகோதரர்கள் இஸ்லாத்தைப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதை நாம் அறிவோம்.



# இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜில் மினாவில் இருந்தபோது, இது எந்த நாள் என்பதை நீங்கள் அறிவீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு மக்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர் என்றனர். உடனே அவர்கள் இது புனிதமிக்க தினமாகும்! இது எந்த நகரம் என்பதை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்க மக்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர் என்றனர். உடனே அவர்கள் (இது) புனித மிக்க நகரமாகும்! இது எந்த மாதம் என்பதை அறிவீர்களா? என்றதும் மக்கள், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிவர் என்றனர். பிறகு நபி(ஸல்) அவர்கள் (இது) புனிதமிக்க மாதமாகும்! எனக் கூறிவிட்டு, உங்களுடைய இந்த (புனித) நகரத்தில் உங்களுடைய இந்த (புனித) மாதத்தில் உங்களுடைய இந்த நாள் எவ்வளவு புனிதமானதோ அது போன்றே, அல்லாஹ் உங்கள் உயிர்களையும் உடைமைகளையும் உங்கள் மானம் மரியாதைகளையும் புனிதமாக்கியுள்ளான்! எனக் கூறினார்கள். (புகாரி: 5696)

இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களில் மிக முக்கியமானது ஒரு மனிதனின் ஆன்மா, மானம், செல்வம், புத்தி மற்றும் சந்ததி என்பவற்றை பாதுகாப்பதும் பலவீனமானவர்களின் உரிமைகளைக் காப்பதுமாகும்.

ஒருவனது உயிரைப் போக்குவது தடைசெய்யப்பட்டதாகும். இது பற்றி அல்லாஹ் “(கொலையை) அல்லாஹ் விலக்கியிருக்க

நீங்கள் எந்த மனிதனையும் நியாயமான காரணமின்றிக் கொலை செய்து விடாதீர்கள்." (இஸ்ரா: 33) மற்றுமோர் இடத்தில்: "நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருனையுடையவனாக இருக்கின்றான்." (நிஸா: 29)

மனிதனின் மானத்தின் மீது கைவைப்பதை கண்டித்து அல்லாஹ் கூறும் போது "நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது." (இஸ்ரா: 32)

அவனது செல்வத்தில் கைவைப்பதனைப் பற்றி இறைவன் கூறும்போது "அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள். மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து (எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள்." (அல்பகரா 188).

மேலும் அவனது சுய புத்தியினை கலங்கப்படுத்துவதை தடைசெய்வதை அறிவிக்கும் போது "ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்."

"நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான்.

எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா?" (மாயிதா: 91)

அதே போன்று மனித சந்ததியினை கலங்கப்படுத்துவதனைப் பற்றி கூறும்போது "அவன் (உம்மை விட்டுத்)திரும்பியதும், பூமியில் கலகத்தை உண்டாக்கவே முயல்வான் விளை நிலங்களையும், கால்நடைகளையும் அழிக்க முயல்வான். கலக்கத்தை அல்லாஹ் விரும்புவதில்லை." (அல்பகரா 205).

மேலும் மனிதர்களில் பலவீனர்களின் உரிமையைப் பற்றியும் அல்குர்ஆன் கூறுகின்றது: பெற்றோர்களின் விடயத்தில்"அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான் அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் முதுமை அடைந்து விட்டால், அவர்களை உஃப் (சீ) என்று (கடிந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்டவும் வேண்டாம் - இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!"
(இஸ்ரா 23)

அநாதையின் விடயத்தில் "எனவே,நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர்". (அல் ழுஹா 09). அவனது செல்வத்தினை பாதுகாப்பதன் அவசியம் பற்றி கூறும் போது "அநாதைகள் பிராயமடையும் வரை, (அவர்களின் பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள், இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த) வாக்குறுதியை நிறை வேற்றுங்கள் நிச்சயமாக (அவ்) வாக்குறுதி (பற்றித் தீர்ப்பு நாளில் உங்களிடம்) விசாரிக்கப்படும்." (அல் இஸ்ரா 34).

பிள்ளைகளின் உரிமைகள் விடயத்தில் "வாருங்கள்!

உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நாம் ஓதிக் காண்பிக்கிறேன் எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள் பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள் வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்- ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம். வெளிப்டையான இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள் அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் - கொலை செய்யாதீர்கள்- இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்.”
(அன்ஆம் 151)

நோயாளியின் உரிமைகள் பற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ‘கைதியினை விடுவியுங்கள், பசித்தவனுக்கு உணவளியுங்கள், நோயாளியை நலம் விசாரியுங்கள்.’
(புகாரி: 2881)

மேலும் வயது முதிர்ந்தவர்களின் உரிமையைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும் போது ‘பெரியோர்களுக்கு கண்ணியம் செய்யாதவனும் சிறியோருக்கு இரக்கம் காட்டாதவனும், நன்மையை ஏவாதவனும், தீமையைத் தடுக்காதவனும் எம்மைச் சேர்ந்தவன் அல்ல.’ (இப்னு ஹிப்பான்) தேவையுள்ளவனின் உரிமையைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: “யாசிப்போரை விரட்டாதீர்”. (லுஹா 10) நபி (ஸல்) கூறினார்கள்: ‘யார் தன் சகோதரனின் தேவைகளை நிவர்த்தி செய்கின்றானோ அல்லாஹ் அவனது தேவையை நிவரத்தி செய்கின்றான் (முஸ்லிம்)

# இஸ்லாத்தின் உயிர்நாடி

முன்னைய வான்மறைகளைப் போலவே இஸ்லாமும் சில அடிப்படை கொள்கைக் கோட்பாடுகளை முன்வைத்து அதனைப் பின்பற்றியொழுகு பவர்கள் அதனை முழுமையாக நம்பி நடைமுறைப்படுத்த வேண்டும் எனப் பணிக்கின்றது. மேலும் அதனைப் பரப்ப முயற்சிப்பதோடு எவ்வித வற்புறுத்தலும் கட்டாயப்படுத்தலும் இன்றி அதன் பக்கம் அழைப்பு விடுக்குமாறும் கூறுகின்றது. “(இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது. ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத உறுதியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்” (பகரா: 256)

அந்த அழைப்பு நல்ல தொனியில் அமைய வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. “(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியைவிட்டுத் தவறியவர்களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான்.” (அந்நஹ்ல்: 125)

மனப்பூர்வமாக ஏற்பதென்பது இஸ்லாத்தின் ஓர் அடிப்படை அம்சமாகும். வற்புறுத்தலின் அடிப்படையில் அமையும் நம்பிக்கை உள்ளொன்று புறமொன்று என்ற நிலமை ஒரு மனிதனிடத்தில் ஏற்படுத்தும். அது தான் இஸ்லாம் வன்மையாக கண்டிக்கும் நயவஞ்சகத்தனமாகும். நிராகரிப்பை விடவும் மோசமானதாக இஸ்லாம் அதனை அடையாளப்படுத்துகின்றது. “நிச்சயமாக

இந்நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகவும் கீழான அடித் தளத்தில்தான் இருப்பார்கள். அவர்களுக்கு உதவியாளராக எவரையும் நீர் காணமாட்டீர்." (அந்நிஸா: 145)

இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகளை, சொல், செயல், நம்பிக்கை ரீதியானவை என மூன்று அங்கங்களாக பிரித்து நோக்கமுடியும். அவற்றில் நம்பிக்கை சார்ந்த வழிபாடுகள் தூண்கள் என பிரயோகிக்கப்படுகின்றன.

# அல்லாஹ்வை நம்புதல்

மூன்று விடயங்களில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தல் வேண்டும்:

### தவ்ஹீத் அர்ருபூபிய்யாஹ்:

படைத்து பரிபாலிக்கும் விடயத்தில் அவனை ஒருமைப்படுத்தல். அதாவது இப்பிரபஞ்சத்தையும் அதில் உள்ளவற்றையும் படைத்த ஒரே சிருஷ்டிகர்த்தா அவன் மாத்திரமே என்பதை ஒப்புக்கொள்வதுடன் அதில் பூரண அதிகாரமுள்ள ஒரே சொந்தக்காரன் அவன்தான் என்பதை ஏற்றல், அவன் நாட்டத்தை மீறி எதுவும் நடக்கமாட்டாது. அவன் விரும்பியதே நடந்தேறும்.

“நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ் தான் ஆறு நாட்களில் வானங்களையும், பூமியையும் படைத்துப் பின், அர்ஷின் மீது தன் ஆட்சியை அமைத்தான்- அவனே இரவைக் கொண்டு பகலை மூடுகிறான் அவ்விரவு பகலை வெகு விரைவாக பின் தொடர்கிறது இன்னும் சூரியனையும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் தன் கட்டளைக்- ஆட்சிக்குக்- கீழ்படிந்தவையாக(ப் படைத்தான்) படைப்பும், ஆட்சியும் அவனுக்கே சொந்தமல்லவா? அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய (அவற்றைப் படைத்து, பரிபாலித்துப் பரிபக்குவப்படுத்தும்) அல்லாஹ்வே மிகவும் பாக்கியமுடையவன்.” (அஃராப்: 54)

படைக்கும் ஆற்றல் அல்லாஹ்விற்கு மாத்திரம் உள்ளது மேலும் அதில் அவனுடன் யாரும் கூட்டாக முடியாது என்பதை இறைவன் தெளிவுபடுத்துகின்றான். “அல்லாஹ் தனக்கென ஒரு மகனை எடுத்துக் கொள்ளவில்லை. அவனுடன் (வேறு) நாயனுமில்லை அவ்வாறாயின் (அவர்கள் கற்பனை செய்யும்) ஒவ்வோர் நாயனும் தான் படைத்தவற்றை(த் தன்னுடன் சேர்த்து)க் கொண்டு போய் சிலர் சிலரைவிட மிகைப்பார்கள். (இவ்வாறெல்லாம்) இவர்கள் வர்ணிப்பதை விட்டும் அல்லாஹ் மிகவும் தூயவன்.” (முஃமினூன்: 91)

## தவ்ஹீதுல் உலூஹிய்யாஹ்:

வணங்கி வழிபடும் விடயத்தில் அவனை ஒருமைப் படுத்தல். வணக்கத்துக்குரிய ஒரே இறைவன் அல்லாஹ் மாத்திரமே அவனைத் தவிர வேறு எவரும் அதற்குத் தகுதி பெறமாட்டார்கள் என்பதை உறுதியாக நம்புதல். அவனையன்றி வேறு யாரிடமும் நம்பிக்கை வைப்பதோ,தேவைகளைக் கேட்பதோ, துன்பம் நீங்க அல்லது தேவைகளை நிவர்த்தி செய்ய அழைப்பதோ, நேர்ச்சை வைப்பதோ கூடாது. மொத்தத்தில் எவ்வகையான வணக்க வழிபாடுகளாயினும் அவனுக்காக மாத்திரமே செய்யப்பட வேண்டும். அவனுடன் யாரும் கூட்டு சேர இயலாது.

“(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் ‘நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்’என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை.” (அல்அந்பியா: 25)

## தவ்ஹீதுல் அஸ்மாஇ வஸ்ஸிபாத்:

பெயர், பண்புகளில் அல்லாஹ்வை ஓர்மைப்படுத்தல். அல்லாஹ்விற்கு அழகிய திருநாமங்களும் உயரிய பண்புகளும் இருக்கின்றன, மேலும் அவன் அனைத்துவிதமான குறைகளை விட்டும் பரிசுத்தமானவன் என்று நம்புவதையே இது குறிக்கின்றது. “அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள், அவனுடைய திருநாமங்களை தவறாக பயன்படுத்துவோர்களை (புறக்கணித்து) விட்டு விடுங்கள்- அவர்களுடைய செயல்களுக்காக அவர்கள் (தக்க) கூலி கொடுக்கப்படுவார்கள்.” (அஃராப்: 180)

அல்லாஹ் தனக்கென்று கூறிய நாமங்கள், பண்புகள் அல்லது அவனது தூதர் அடையாளப்படுத்திய பெயர், பண்புகள் என்பவற்றை படைப்பினங்களுக்கு ஒப்பிடாமல் நாமும் அப்படியே நம்பிடவேண்டும். மேலும் அதற்கு விதம் கற்பிப்பதோ, அவற்றை மறுப்பதோ, படைப்பினங்களுக்கு நிகராக்குவதோ, முழுமையாக தவிர்க்கப்படவேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: “வானங்களையும், பூமியையும் படைத்தவன் அவனே உங்களுக்காக உங்களில் இருந்தே ஜோடிகளையும் கால் நடைகளிலிருந்து ஜோடிகளையும் படைத்து, அதைக் கொண்டு உங்களை(ப் பல இடங்களிலும்) பல்கி பரவச் செய்கிறான், அவனைப் போன்று எப்பொருளும் இல்லை அவன் தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்.” (அஷ்ஷூரா: 11)

## வானவர்கள் பற்றிய விசுவாசம்:

பெரும் தொகையான வானவர்கள் அல்லாஹ்விற்கு இருக்கின்றார்கள் என்று நம்புவதே இதன் கருத்தாகும். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அறியமாட்டார்கள். மேலும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரம் இப்பிரபஞ்சத்தில் இருக்கின்ற படைப்பினங்களை சீராக இயக்கி, கண்கானித்து பாதுகாக்கும் விடயத்தில் இறைவனின் நாட்டத்தை செயற்படுத்துகின்றார்கள். மேலும் உலகத்தில் நடக்கின்ற ஒவ்வொரு அசைவுகளும் இறைவன் விரும்புவது போன்று அவர்களின் கண்காணிப்பலே நடைபெறுகின்றன. “ஒவ்வொரு காரியத்தையும் நிர்வகிப்பவர்(களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக”. (நாஜிஆத்: 5) “(பூமியிலுள்ளோருக்கு விதியானவற்றை அல்லாஹ்வின்) கட்டளைப்படி பங்கிடுவோர் மீதும் சத்தியமாக”(தாரியாத்: 4).

அவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள். நபி (ஸல்) அவர்கள் அதனை தெளிவுடுத்தும் போது: ‘வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டார்கள். ஜின்கள் நெருப்புக் கங்கினால் படைக்கப்பட்டார்கள். ஆதம் நீங்கள் அறிந்த மண்ணினால் படைக்கப்பட்டார்’ எனக் குறிப்பிட்டார்கள். (முஸ்லிம்: 2996)

அவர்கள் மறைவான உலகத்தைச் சார்ந்தவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டாலும் வெற்றுக்கண்களால் அவர்களைப் பார்க்க முடியாது என்றாலும் இறைவன் அவர்களுக்கு வித்தியாசமான முறையில் உருமாறும் ஆற்றலை வழங்கியுள்ளான். அப்போது அவர்களை வெற்றுக்கண்களால் பார்க்க முடியும், அல்லாஹ் அருள் மறையில் ஜிப்ரீல் என்ற வானவரைப் பற்றி கூறும் போது மர்யம் (அலை) அவர்களிடம் அவர் மனித உருவத்தில்

வந்ததாக கூறுகின்றான். “அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை அமைத்துக் கொண்டார். அப்போது நாம் அவரிடத்தில் நம் ரூஹை (ஜிப்ரயீலை) அனுப்பி வைத்தோம் (மர்யமிடம்) சரியான மனித உருவில் தோன்றினார். (அப்படி அவரைக் கண்டதும்,) 'நிச்சயமாக நாம் உம்மை விட்டும் ரஹ்மானிடம் காவல் தேடுகிறேன் நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (நெருங்காதீர்)' என்றார். 'நிச்சயமாக நான் உம்முடைய இறைவனின் தூதன் பரிசுத்தமானதோர் பிள்ளையை உமக்கு அளிக்க (வந்துள்ளேன்)' என்று கூறினார்”. (மர்யம்: 17 - 19)

நபி (ஸல்) வானவர் ஜிப்ரீல் அவர்களை அவருடைய உண்மையான வடிவில் (அவருக்கு 600 இறக்கைகள் இருக்கக்) கண்டிருக்கின்றார்கள். அவை அந்த மாபெரும் தோற்றத்தினால் அடிவானத்தையே மூடிக்கொண்டுவிட்டது. (புஹாரி: 4575)

வானவர்களில் சிலருக்கு இரண்டு இறக்கைகளும் மற்றும் சிலருக்கு மூன்று இறக்கைகளும் மேலும் சிலருக்கு அதைவிட அதிகமான இறக்கைகளும் இருக்கின்றன. அதனை அல்குர்ஆன் கூறும்போது “அல்ஹம்து லில்லாஹ்- எல்லாப் புகழ் அல்லாஹ்வுக்கே வானங்களையும், பூமியையும் படைத்தவன் இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத் தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கினான். தான் நாடியதை தன் படைப்பிலே மிகுதப்படுத்துவான் நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பொருள்களின் மீதும் பேராற்றலுடையவன்”. (அல்பாதிர் 1)

அவர்களில் ஏனையவர்களை பற்றிய அறிவு அல்லாஹ்விடமே இருக்கின்றது. அவர்கள் எப்பொழுதும் இறைவனைத் தியானம்

செய்த வண்ணமும் துதி செய்தவர்களாகவும் இருப்பார்கள். “இடைவிடாமல் அவர்கள் இரவிலும், பகலிலும் அவனைத் துதித்துக் கொண்டே இருக்கிறார்கள்.” (அன்பியா: 20).

அல்லாஹ் அவனை வணங்கவே அவர்களைப் படைத்திருக்கின்றான். “முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும், அவன் தூதர் மீது அவன் இறக்கிய (இவ்) வேதத்தின் மீதும் இதற்கு முன்னர் இறக்கிய வேதங்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள். எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் (நம்பாமல்) நிராகரிக்கிறாரோ, அவர் வழிகேட்டில் வெகு தூரம் சென்றுவிட்டார்.” (அந்நிஸா: 136)

அவர்களில் சிலர் அல்லாஹ்விற்கும் அவனது தீர்க்க தரிசிகளுக்குமிடையே தூதுவர்களாக கடமையாற்றுவர். “ரூஹு ல் அமீன் (எனும் ஜிப்ரயீல்) இதைக் கொண்டு இறங்கினார்”. (அஷ்ஷுஅரா: 193)

“அல்லாஹ்வின் கட்டளைகளை உடனடியாகச் செயற்படுத்துவர் அவர்கள் தங்களுக்கு மேலாக இருக்கும் (சர்வ வல்லமையுடைய) தங்கள் இறைவனை பயப்படுகிறார்கள் இன்னும் தாங்கள் ஏவப்பட்டதை (அப்படியே) செய்கிறார்கள்.” (நஹ்ல்: 50)

இந்த வானவர்கள் அல்லாஹ்வின் பிள்ளைகள் என்ற கோட்பாட்டில் அவர்களை நேசிப்பதும், சங்கைப்படுத்துவதும் கூடாது. அதனை இறைவன் வன்மையாகக் கண்டிக்கின்றான். “அவர்கள் ‘அர்ரஹ்மான் ஒரு குமாரனைத் தனக்கென எடுத்துக் கொண்டிருக்கின்றான்’ என்று கூறுகிறார்கள் (ஆனால்) அவனோ மிகவும் தூயவன்! அப்படியல்ல (அல்லாஹ்வின் குமாரர்கள் என்று

இவர்கள் கூறுவோரெல்லோரும் அல்லாஹ்வின்) கண்ணியமிக்க அடியார்களே ஆவார்கள். அவர்கள் (எந்த ஒரு பேச்சையும்) அவனை முந்திப் பேச மாட்டார்கள் அவர்கள் அவன் கட்டளைப் படியே (எதையும்) செய்கிறார்கள்." (அல்அன்பியா: 26-27)

மேலும் இறைவனுக்கு இணையான கடவுளர்களாக அவர்களை ஏற்கவும் கூடாது. "மேலும் அவர், 'மலக்குகளையும், நபிமார்களையும் (வணக்கத்திற்குரிய இரட்சகர்களாக) ரப்புகளாக எடுத்துக் கொள்ளுங்கள்' என்றும் உங்களுக்குக் கட்டளையிடமாட்டார் - நீங்கள் முஸ்லிம்களாக (அல்லாஹ்விடமே முற்றிலும் சரணடைந்தவர்களாக) ஆகிவிட்ட பின்னர் (நீங்கள் அவனை) நிராகரிப்போராகி விடுங்கள் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிடுவாரா?" (ஆலுஇம்ரான்: 80)

இந்த வானவர்களில் சிலரின் பெயர்களையும் அவர்கள் ஆற்றும் கருமங்களையும் இறைவன் எமக்கு அறிவித்திருக்கின்றான்.

- ஜிப்ரீல் - இறைதூது கொண்டுசெல்பவர். "ரூஹுல் அமீன் (எனும் ஜிப்ரயீல்) இதைக் கொண்டு இறங்கினார்." (அஷ்ஷுஅரா: 193)

- மீகாஈல் - மழைப் புற்பூண்டுகளுக்கு பொறுப்பானவர். "எவன் அல்லாஹ்வுக்கும், அவனுடைய மலக்குகளுக்கும், அவனுடைய தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயிலுக்கும் பகைவனாக இருக்கிறானோ, நிச்சயமாக (அவ்வாறு நிராகரிக்கும்) கா..பிர்களுக்கு அல்லாஹ் பகைவனாகவே இருக்கிறான்." (பகரா: 98)

- மலகுல் மௌத் - உயிரைக் கைபற்றுபவர் "உங்கள் மீது நியமிக்கப்பட்டிருக்கும், 'மலக்குல் மௌத்' தாம் உங்கள்

உயிரைக் கைப்பற்றுவார் - பின்னர் 'நீங்கள் உங்கள் இறைவனிடம் மீட்டப்படுவீர்கள்' என்று (நபியே!) நீர் கூறும்'. (ஸஜ்தா: 11)

இஸ்ராபீல் - தீர்ப்பு நாளில் மனிதர்கள் எழுப்பப்படுவதற்கு குழல் ஊதுபவர். "எனவே ஸூர் (எக்காளம்) ஊதப்பட்டு விட்டால், அந்நாளில் அவர்களுக்கிடையே பந்தத்துவங்கள் இருக்காது ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்ளவும் மாட்டார்கள்." (முஃமினூன்: 101)

மாலிக் - நரகத்தின் காவலாளி "மேலும், அவர்கள் (நரகத்தில்) "யா மாலிக்' உமது இறைவன் எங்களை முடித்து விடட்டுமே!' என்று சப்பதமிடுவார்கள் அதற்கு அவர் 'நிச்சயமாக நீங்கள் (இங்கு) நிலைத்து இருக்க வேண்டியவர்களே' என்று கூறுவார்". (ஸுக்ருப்: 77)

ஸபானியா - நரகவாசிகளை வேதனை செய்ய சாட்டப்பட்டவர்கள். "ஆகவே, அவன் தன் சபையோரை அழைக்கட்டும். நாமும் நரகக் காவலாளிகளை அழைப்போம்." (அலக்: 17 - 18)

ஒவ்வொரு மனிதனினதும் நல்லறங்களையும் தீமைகளையும் பதிவதற்கென இரண்டு வானவர்கள் சாட்டப்படுகின்றார்கள். "(மனிதனின்) வலப்புறத்திலும், இடப்புறத்திலும் அமர்ந்து எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதும் போது" (காஃப்: 17)

ரிழ்வான் - சுவனத்தின காவலாளி. மேலும் மனிதனை பாதுகாக்கவென இன்னும் சில வானவர்கள் சாட்டப்படுகின்றார்கள். நாம் மேலே குறிப்பிட்டவர்கள் அல்குர்ஆனிலும் நபி மொழிகளிலும் பெயர்கள் குறிப்பிடப்பட்டவர்கள். நாம் பெயர் குறிப்பிடாத இன்னும் பலர் இருக்கின்றனர் அவர்களை நம்புவதும் அவசியமாகும்.

## வானவர்களை நம்புவதால் ஏற்படும் பயன்கள்.

1 - இறைவனின் வல்லமையையும் அவனது சக்தியையும் அறிவதுடன் அவை உலகம் அனைத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது என்பதனையும் அறிதல். படைப்பினங்கள் இறைவனின் வல்லமையையே பிரதிபலிக்கின்றன.

2 - ஒரு முஸ்லிம் எப்போதும் தனது காரியங்கள் வானவர்களினால் கண்காணிக்கப் பட்டுக்கொண்டே இருக்கின்றன என்று உணர்வதனால் மறைவிலும் வெளிரங்கத்திலும் நல்லறங்கள் செய்வதிலும் பாவங்களை விட்டும் விலகி நடப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றான்.

3 - மறைவான விடயங்களை நம்பாதவர்களுக்கு நேர்ந்த மூட நம்பிக்கைகளும் ஊகங்களும் தமக்க நேர்ந்துவிடாமல் காத்துக்கொள்ளல்.

4 - அடியார்களை பாதுகாக்கவும் அவர்களின் கருமங்களை சீரமைக்கவும் வானவர்களை நியமித்திருப்பது அவர்களின் மீது இறைவன் கொண்ட அருளின் வெளிப்பாடாகும்.

## வேதங்கள் பற்றிய விசுவாசம்:

இது மானுட சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லி நல்வழிப்படுத்துவதற்காக இறைவன் அவனது இறை தூ தர்களுக்கு வான்மறை வேதங்களை இறக்கியுள்ளான் என்று விசுவாசம் கொள்வதனை குறிக்கின்றது. அவை சத்தியத்தையும் இறைவனை எல்லா விதத்திலும் ஓர்மைப் படுத்துவதனையும் உள்ளடக்கியிருந்தன என்று ஒரு முஸ்லிம் நம்பிடவேண்டும்.

“நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம், அன்றியும், மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக,

அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக்கோலையும் இறக்கினோம், இன்னும், இரும்பையும் படைத்தோம், அதில் கடும் அபாயமுமிருக்கிறது, எனினும் (அதில்) மனிதர்களுக்குப் பல பயன்களும் இருக்கின்றன - (இவற்றின் மூலமாகத்) தனக்கும், தன்னுடைய தூதருக்கும் மறைமுகமாகவும் உதவி செய்பவர் எவர் என்பதையும் (சோதித்து) அறிந்து கொள்வதற்காக அல்லாஹ் (இவ்வாறு அருள்கிறான்) நிச்சயமாக அல்லாஹ் பலம் மிக்கவன், (யாவரையும்) மிகைத்தவன்." (ஸூரா அல்ஹதீத்: 25)

அல்குர்ஆனுக்கு முந்தைய எல்லா இறை வேதங்களும் இறைவனிடமிருந்து தான் அருளப்பட்டவை என்றும், அல்குர்ஆன் இறங்கிய பின்னர் முந்தைய வேதங்களை நடைமுறைப்படுத்த முடியாது என்றும் நம்புவதற்கு ஒரு முஸ்லிம் கடமைப்பட்டுள்ளான். ஏனெனில் அவ்வேதங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும் குறிப்பிட்ட சமூகத்திற்குமே இறக்கியருளப்பட்டன.

## அல் குர்ஆனில் இறைவன் எமக்கு பெயர் கூறிய சில இறைவேதங்கள்:

1 - இப்ராஹீம், மூஸா (அலை) ஆகிய நபிமார்களுக்கு வழங்கப்பட்ட ஸுஹுபுகள்.

அவ்வேதங்களில் கூறப்பட்ட சில அடிப்படை மார்க்க அம்சங்களை இறைவன் எமக்கு அல்குர்ஆனில் கூறும்போது "அல்லது, மூஸாவின் ஸுஹுஃபில் - வேதத்தில் இருப்பது அவனுக்கு அறிவிக்கப்படவில்லையா? (அல்லாஹ்வின் ஆணையைப் பூரணமாக) நிறைவேற்றிய இப்றாஹீமுடைய (ஆகமங்களிலிருந்து அவனுக்கு அறிவிக்கப்படவில்லையா?) (அதாவது:) சுமக்கிறவன் பிரிதொருவனின் சுமையைச் சுமக்க

மாட்டான், இன்னும், மனிதனுக்கு அவன் முயல்வதல்லாமல் வேறில்லை. அன்றியும், நிச்சயமாக அவன் முயற்சி(யின் பலன்) பின் அவனுக்குக் காண்பிக்கப்படும். பின்னர், அதற்கு நிரப்பமான கூலியாக, அவன் கூலி வழங்கப்படுவான். மேலும் உம் இறைவன்பால்தான் இறுதி (மீளுதல்) இருக்கிறது." (அந்நஜ்ம்: 36 - 42)

2 - தவ்ராத்:

இது நபி மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் அருளிய பரிசுத்த வேதமாகும். "நிச்சயமாக நாம்தாம் 'தவ்ராத்'தையும் இறக்கி வைத்தோம். அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன. (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்ட நபிமார்கள், யூதர்களுக்கு அதனைக் கொண்டே (மார்க்கக்) கட்டளையிட்டு வந்தார்கள். இறைபக்தி நிறைந்த மேதை(ரப்பானிய்யூன்)களும், அறிஞர்(அஹ்பார்)களும் - அவர்கள் அல்லாஹ்வின் வேதத்தைப் பாதுகாக்க கட்டளையிடப்பட்டவர்கள் என்பதனாலும், இன்னும் அவ்வேதத்திற்குச் சாட்சிகளாக அவர்கள் இருந்தமையாலும் அவர்கள் (அதனைக் கொண்டே தீர்ப்பளித்து வந்தார்கள். மு∴மின்களே!) நீங்கள் மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள் எனக்கே அஞ்சுங்கள். என்னுடைய வசனங்களை அற்பக் கிரயத்திற்கு விற்று விடாதீர்கள். எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் நிச்சயமாக கா∴பிர்கள்தாம்." (மாயிதா: 44)

தவ்ராத்தில் சொல்லப்பட்ட சில அம்சங்களையும் இறைவன் அல்குர்ஆனில் கூறியுள்ளான். முஹம்மத் (ஸல்) அவர்களின் குணாதிசயங்கள் பற்றி தவ்ராத்தில் குறிப்பிடுவது போன்று யூதர்கள்

மறைக்க முயற்சிக்கும் பல அம்சங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவன் கூறுகின்றான்: “முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதராகவே இருக்கின்றார். அவருடன் இருப்பவர்கள், காஃபிர்களிடம் கண்டிப்பானவர்கள், தங்களுக்கிடையே இரக்கமிக்கவர்கள். ருகூஃ செய்பவர்களாகவும், ஸுஜூது செய்பவர்களாகவும் அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும் (அவனுடைய) திருப்பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர். அவர்களுடைய அடையாளமாவது அவர்களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜூதுடைய அடையாளமிருக்கும் இதுவே தவ்ராத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும், இன்ஜீலிலுள்ள அவர்கள் உதாரணமாவது ஒரு பயிரைப் போன்றது. அது தன் முளையைக் கிளப்பி(ய பின்) அதை பலப்படுத்துகிறது. பின்னர் அது பருத்துக் கனமாகி, பிறகு விவசாயிகளை மகிழ்வடையச் செய்யும் விதத்தில், அது தன் அடித்தண்டின் மீது நிமிர்ந்து செவ்வையாக நிற்கிறது இவற்றைக் கொண்டு நிராகரிப்பவர்களை அவன் கோப மூட்டுகிறான் - ஆனால் அவர்களில் எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களிக்கின்றான்.” (பத்ஹு : 29)

மேலும் தவ்ராத்தில் குறிப்பிடப்பட்ட மார்க்க சட்டங்களைப்பற்றி அல்குர்ஆன் கூறும்போது: “அவர்களுக்கு நாம் அதில், ‘உயிருக்கு உயிர், கண்ணுக்கு கண், மூக்குக்கு மூக்கு, காதுக்கு காது, பல்லுக்குப் பல் ஆகவும் காயங்களுக்கு (ச் சமமான காயங்களாகவும்) நிச்சயமாக பழி வாங்கப்படும் என்று விதித்திருந்தோம்’ எனினும் ஒருவர் (பழி வாங்குவதை) தர்மமாக விட்டுவிட்டால், அது அவருடைய பாவங்களுக்குப்

பரிகாரமாகும். எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்த (வேதக் கட்டளைப்)படி தீர்ப்பு வழங்கவில்லையோ நிச்சயமாக அவர்கள் அநியாயக்காரர்களே!" (மாயிதா: 45)

3 - ஸபூர்:

இது தாவூது நபி அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட வேதநூலாகும். "(நபியே!) நூஹு க்கும், அவருக்குப் பின் வந்த (இதர) நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தது போலவே, உமக்கும் நிச்சயமாக வஹீ அறிவித்தோம். மேலும், இப்றாஹீமுக்கும், இஸ்மாயீலுக்கும், இஸ்ஹாக்குக்கும், யஃகூபுக்கும் (அவர்களுடைய) சந்ததியினருக்கும், ஈஸாவுக்கும், அய்யூபுக்கும், யூனுஸு க்கும், ஹாரூனுக்கும், ஸு லைமானுக்கும் நாம் வஹீ அறிவித்தோம். இன்னும் தாவூதுக்கு ஜபூர் (என்னும் வேதத்தைக்) கொடுத்தோம்." (அந்நிஸா: 163).

4 - இன்ஜீல்:

இது நபி ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் அருளிய பரிசுத்த வேதமாகும். "இன்னும் (முன்னிருந்த) நபிமார்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமின் குமாரராகிய ஈஸாவை, அவருக்கு முன் இருந்த தவ்ராத்தை உண்மைப்படுத்துபவராக நாம் தொடரச் செய்தோம் அவருக்கு நாம் இன்ஜீலையும் கொடுத்தோம். அதில் நேர்வழியும் ஒளியும் இருந்தன. அது தனக்கு முன்னிருக்கும் தவ்ராத்தை உண்மைப்படுத்துவதாக இருந்தது. அது பயபக்தியுடையவர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும் நல்லுபதேசமாகவும் உள்ளது." (மாயிதா: 46)

முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகை பற்றிய நற்செய்திகள் தவ்ராத்திலும் இன்ஜீலிலும் குறிப்பிடப்பட்டதாக அல்குர்ஆன்

கூறுவது போன்று அவ்வேதங்களில் குறிப்பிடப்பட்ட பல செய்திகளை அல்குர்ஆன் கூறுகின்றது. “எவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய நம் தூதரைப் பின்பற்றுகிறார்களோ - அவர்கள் தங்களிடமுள்ள தவ்ராத்திலும் இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப் பட்டிருப்பதைக் காண்பார்கள். அவர், அவர்களை நன்மையான காரியங்கள் செய்யுமாறு ஏவுவார். பாவமான காரியங்களிலிருந்து விலக்குவார். தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார். கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார். அவர்களுடைய பளுவான சுமைகளையும், அவர்கள் மீது இருந்த விலங்குகளையும், (கடினமான கட்டளைகளையும்) இறக்கிவிடுவார். எனவே எவர்கள் மெய்யாகவே நம்பி, அவரைக் கண்ணியப்படுத்தி, அவருக்கு உதவி செய்து, அவருடன் அருளப்பட்டிருக்கும் ஒளிமயமான (வேதத்)தையும் பின் பற்றுகிறார்களோ, அவர்கள் தாம் வெற்றி பெறுவார்கள்.” (அல்அஃராப்: 157)

ஏக இறைவனின் மார்க்கத்தின் உயர்வுக்காக அறப்போர் செய்வது இஸ்லாத்திற்கு மாத்திரம் சொந்தமானதல்ல மாறாக அவை முந்தைய வேதங்களிலும் இருந்ததாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. “(நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களின் உயிர்களையும், பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் இருக்கிறது என்ற (அடிப்படையில்) விலைக்கு வாங்கிக் கொண்டான் அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள்- அப்போது அவர்கள் (எதிரிகளை), வெட்டுகிறார்கள் (எதிரிகளால்) வெட்டப்படவும் செய்கிறார்கள். தவ்ராத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் இதைத் திட்டமாக்கிய நிலையில் வாக்களித்துள்ளான். அல்லாஹ்வை விட வாக்குறுதியைப்

பூரணமாக நிறைவேற்றுபவர் யார்? ஆகவே, நீங்கள் அவனுடன் செய்து கொண்ட இவ்வாணிபத்தைப் பற்றி மகிழ்ச்சி அடையுங்கள்- இதுவே மகத்தான வெற்றியாகும்." (தவ்பா: 111)

5 - சங்கைக்குரிய அல்குர்ஆன்

இது வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு தெளிவான அரபுமொழியில் அருளப்பட்ட இறைவனின் பேச்சாகும் என்று நம்புவது அவசியமாகும். "ரூஹுல் அமீன் (எனும் ஜிப்ரயீல்) இதைக் கொண்டு இறங்கினார். (நபியே!) அச்சமூட்டி எச்சரிப்பவராக நீர் இருப்பதற்காக உம் இதயத்தின் மீது (இவ்வேதத்தை இறக்கினார்) - தெளிவான அரபி மொழியில்." (அஷ்ஷுஅரா: 193 - 195)

1 - இவ்வேதம் முந்தைய வேதங்களைவிட பல்வேறு வகையில் சிறப்பு வாய்ந்ததாகும். இது ஏற்கனவே அருளப்பட்ட இறைவேதங்களில் குறிப்பிடப்பட்ட அம்சங்களை உண்மைப்படுத்தி இறுதியாக இறங்கிய இறைவேதமாகும். இறைவனை ஓர்மைப்படுத்தி அவனையே அவசியம் வழிபாடு செய்தல் போன்ற அவ்வேதங்களில் திரிவுபடுத்தப்பட்டதான அம்சங்கள் பற்றி இதிலும் குறிப்பிடப்படுகின்றன. "மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. எனவே அல்லாஹ் அருள் செய்த(சட்ட திட்டத்)தைக் கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்புச் செய்வீராக. உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி,) அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம். உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு

மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம். ஆனால், அவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கிறான்). எனவே நன்மையானவற்றின்பால் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் யாவரும், அல்லாஹ்வின் பக்கமே மீள வேண்டியிருக்கிறது. நீங்கள் எதில் மாறுபட்டு கொண்டிருந்தீர்களோ அத(ன் உண்மையி)னை அவன் உங்களுக்குத் தெளிவாக்கி வைப்பான்." (மாயிதா: 48)

2 - இவ்வேதத்தில் எல்லாக்கூட்டத்திற்கும் எல்லா இடங்களுக்கும் பொருத்தமான, நிலையான தெய்வீக போதனைகள் காணப்படுவதால் ஏற்கனவே அருளப்பட்ட வேதங்களை இதன் மூலம் இறைவன் மாற்றியமைத்தான். "இன்றைய தினம் கா∴பிர்கள் உங்களுடைய மார்க்கத்தை (அழித்து விடலாம் என்பதை)ப் பற்றிய நம்பிக்கையை இழந்து விட்டார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சாதீர்கள் எனக்கே அஞ்சி நடப்பீர்களாக. இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்து உள்ளேன். (மாயிதா: 3)

3 - ஏற்கனவே அருளப்பட்ட வேதங்களைப் போன்று இது ஒரு குறிப்பிட்ட சாராருக்கு இறங்கிய வேதம் அல்ல. மாறாக இது ஒட்டுமொத்த மனித குலத்திற்கும் அருளப்பட்ட வேதமாகும். "அலி∴ப், லாம், றா. (நபியே! இது) வேதமாகும்

மனிதர்களை அவர்களுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு இருள்களிலிருந்து வெளியேற்றிப் பிரகாசத்தின்பால் நீர் கொண்டுவருவதற்காக இ(வ்வேதத்)தை நாமே உம்மீது இறக்கியுள்ளோம். புகழுக்குரியவனும், வல்லமை மிக்கோனுமாகிய (அல்லாஹ்வின்) பாதையில் (அவர்களை நீர் கொண்டுவருவீராக!). (இப்ராஹீம்: 1)

முந்தைய வேதங்கள் அடிப்படை அம்சங்களில் ஒற்றுமையானதாக இருப்பினும் ஏனைய சட்ட திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட சாராரின் கால கட்டத்திற்கு இசைவானாதாகவே அமைந்திருந்தன. நபி ஈஸா (அலை) அவர்கள் தனது வருகையைப் பற்றி கூறும் போது: "பனூஇஸ்ரவேலர்களின் ஒரு வழிதவறிய சமுதாயத்திற்கே நான் அனுப்பப்பட்டேன்." என்றார்கள்.

4 - இவ்வேதத்தை பாராயாணம் செய்வதும், மனனமிடுவதும் வணக்கமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இறைவனின் வேதத்தில் ஓர் எழுத்தை வாசித்தாலும் அதற்கு ஒரு நன்மை உண்டு. மேலும் அந்த நன்மைக்கு 10 மடங்கு நன்மைகள் வழங்கப்படுகின்றன. 'அலிப் லாம் மீம்' ஓர் எழுத்து என்று நான் கூறமாட்டேன். அதில் 'அலிப்' ஓர் எழுத்து,'லாம்' ஓர் எழுத்து,'மீம்' ஓர் எழுத்தாகும்.' (திர்மிதி: 2910)

5 - இவ்வேதம் உயரியதோர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான அனைத்துவிதமான சட்டதிட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

அரேபிய நாகரிகம் என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஜே. எஸ் ரெஸ்ட்லர் கூறும்போது: அல்குர்ஆனில் எல்லா பிரச்சனைகளுக்குமான தீர்வுகளும் காணப்படுகின்றன. அது மார்க்கச் சட்டத்தையும் பண்பாட்டு ரீதியான சட்டத்தையும் இணைத்து நோக்குகின்றது.

மேலும் அது ஓர் ஒழுங்கான பண்பாட்டிற்கும் சமூக ஒற்றுமைக்கும் பாடுபடுகின்றது. மூடநம்பிக்கைகளையும், மிதமிஞ்சிய கஷ்டங்களையும் குறைப்பதற்கு முயல்கின்றது. இல்லாதவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்றது. நல்லதையே செய்யுமாறும் இரக்க வாஞ்சையுடன் நடக்குமாறும் பணிக்கின்றது. அதன் சட்டவாக்கமும் மிக துள்ளியமான முறையில் அமைந்துள்ளது. அதில் ஒரு முஸ்லிமின் நாளாந்த நடவடிக்கைகள், உடன்படிக்கைகள், சொத்துரிமை போன்ற அம்சங்களும் மிக நுட்பமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப வாழ்க்கையை பொருத்தமட்டில் ஒவ்வொரு தனிமனிதனும் தனது பெற்றோர் பிள்ளைகள், அடிமைகள் மற்றும் கால்நடைகளுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற விடயங்களையும், அவனது ஆரோக்கியம், அணிகலன்கள் எப்படி அமையவேண்டும் என்பதனையும் மிக அழகாக எடுத்துக்காட்டுகின்றது.

6 - உலகத்தின் முதல் தீர்க்கதரிசியான ஆதம் முதல் இறுதி தீர்க்கதரிசி முஹம்மத்(ஸல்) அவர்கள் வரை தோன்றிய நபிமார்களுக்கு அருளப்பட்ட மார்க்கங்களைப் பற்றிய ஒரு வரலாற்றுச்சான்றாக இவ்வேதம் காணப்படுகின்றது.

7 - இறுதிநாள் வரும் வரைக்கும் மனிதகுலத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருப்பதற்காக அதில் கூடுதல், குறைவு மாற்றம் மற்றும் திரிபுகள் ஏற்படுவதை விட்டும் பாதுகாப்பதாக இறைவன் உறுதியளித்துள்ளான். "நிச்சயமாக நாம்தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம் நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்." (அல் ஹிஜ்ர்: 9)

ஏற்கனவே அருளப்பட்ட வேதங்கள் ஒரு குறிப்பிட்ட சாராரிற்கும்

குறிப்பிட்ட காலகட்டத்திற்கும் அருளப்பட்டதனால் இறைவன் அவற்றின் பாதுகாப்பு பற்றி உத்தரவாதம் அளிக்கவில்லை. இதனால் அவற்றில் திரிபுகளும் மாற்றங்களும் ஏற்பட்டன. தவ்ராத்தில் யூதர்கள் நுழைவித்த திரிபுகளைப்பற்றி இறைவன் கூறும்போது: “(முஸ்லிம்களே!) இவர்கள் (யூதர்கள்) உங்களுக்காக நம்பிக்கை கொள்வார்கள் என்று ஆசை வைக்கின்றீர்களா? இவர்களில் ஒருசாரார் இறைவாக்கைக் கேட்டு அதை விளங்கிக் கொண்ட பின்னர், தெரிந்து கொண்டே அதை மாற்றி விட்டார்கள்.” (பகரா: 75)

பைபளில் கிறிஸ்தவர்கள் உண்டு பண்ணிய திரிபுகளைப்பற்றி அல்குர்ஆன் தெளிவுபடுத்தும் போது: “அன்றியும் எவர்கள் தங்களை, ‘நிச்சயமாக நாங்கள் கிறிஸ்தவர்கள்’ என்று கூறிக்கொள்கிறார்களோ அவர்களிடமிருந்தும் நாம் உறுதிமொழி வாங்கினோம். ஆனால் அவர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதனையின் (பெரும்) பகுதியை மறந்து விட்டார்கள். ஆகவே, இறுதி நாள் வரை அவர்களிடையே பகைமையும், வெறுப்பும் நிலைக்கச் செய்தோம். இன்னும், அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி அல்லாஹ் அவர்களுக்கு எடுத்துக் காட்டுவான்.

வேதமுடையவர்களே! மெய்யாகவே உங்களிடம் நம்முடைய தூதர் வந்திருக்கின்றார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பவற்றில் பல விஷயங்களை அவர் உங்களுக்கு விளக்கிக் காட்டுவார். இன்னும், (இப்பொழுது தேவையில்லாத) அநேகத்தை விட்டுவிடுவார். நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும், தெளிவுமுள்ள (திருக்குர்ஆன்) வேதமும் உங்களிடம் வந்திருக்கின்றது.” (மாயிதா: 14 - 15)

யூதர்களும் கிறிஸ்தவர்களும் தங்களின் மார்க்கத்தில் ஏற்படுத்திய மிகப்பெரும் திரிபுகளுக்கு உதாரணமாக உஸைர் என்ற இறைநேசரை யூதர்களும், ஈஸா (அலை) அவர்களை கிறிஸ்தவர்களும் இறைவனின் குமாரனாக சித்தரித்ததை அல்குர்ஆன் கூறும் போது: “யூதர்கள் உஸைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் (ஈஸா) மஸீஹை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள். இது அவர்கள் வாய்களால் கூறும் கூற்றேயாகும். இவர்களுக்கு, முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு இவர்கள் ஒத்துப்போகிறார்கள் அல்லாஹ் அவர்களை அழிப்பானாக! எங்கே திருப்பப்படுகிறார்கள்?” (தவ்பா: 30)

அவர்களின் வழிகெட்ட கொள்கையினை அல்குர்ஆன் திருத்தம் செய்து உண்மையான கடவுள் கொள்கையினை முன்வைக்கின்றது. “(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன். அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.” (அல் இக்லாஸ்)

தற்போது மக்கள் மத்தியில் வழக்கில் இருக்கின்ற பைபிள்கள் இறைவனின் வார்த்தையோ, நபி ஈஸா (அலை) அவர்களின் வார்த்தையோ கிடையாது என்பது நாம் மேலே குறிப்பிட்ட சான்றுகள் மூலம் தெளிவாகின்றன.

அவை நபி ஈஸா (அலை) அவர்களின் சரித்திரம், உபதேசங்கள், போதனைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டு அவர்களைத் துயர்ந்த மாணவர்களினால் எழுதப்பட்ட வார்த்தைகளாகும். குறிப்பிட்ட சில பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில்

அவர்கள் அதில் பல மாற்றங்களையும் தீர்வுகளையும் ஏற்படுத்தினார்கள்.

டீ.ஜே தாகிர் என்ற பாதிரியார் கூறுகின்றார்: ஒவ்வொரு அமைப்புக்களும் அதன் தேவைகள் நிமித்தம் பைபிள்களை கோர்வை செய்ததே ஒன்றுக்கொன்று முரணான பல பைபிள்கள் தோன்றக் காரணமாயிருந்தன. அவற்றில் உண்மையான தகவல்கள் இருப்பினும் கோர்வை செய்தவரின் எண்ணங்களுக்கும் நோக்கங்களுக்கும் ஒவ்வாத பல செய்திகள் நீக்கப்பட்டும், திரிபுக்கும் மாற்றத்திற்கும் உட்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதியாக கூறமுடியும்.

## வேதங்களை விசுவாசிப்பதனால் விளையும் பயன்கள்.

- இறைவன் தன் அடியார்கள் மீது கொண்டிருக்கும் கிருபையையும் இரக்கத்தையும் அறிய முடிகின்றது. அவர்கள் ஷைத்தானின் வலையில் சிக்கிவிடாமல் அவனுடைய திருப்பொருத்தத்தின் பால் இட்டுச் செல்லும் சரியான பாதையை தெளிவுபடுத்தும் வேதங்களை அவர்களுக்கு அருளியுள்ளான்.

- ஒவ்வொரு சமூகத்திற்கும் பொருத்தமான சட்டதிட்டங்களை இறைவன் ஏற்படுத்தியதிலிருந்து அவனுடைய ஞானத்தை அறிந்து கொள்ளல்.

- உண்மையான விசுவாசிகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டல். ஏனெனில் யார் தனக்கு அருளப்பட்ட வேதத்தை நம்புகின்றாறோ, அவர் அருளப்பட்ட ஏனைய வேதங்களையும் நம்புவது அவசியமாகும்.

- அல்லாஹ்விடமிருந்து பன்மடங்கு நன்மைகளை அடைந்து

கொள்ளல். முந்தைய வேதத்தை நம்பிய ஒருவர் இறுதியாக அருளப்பட்ட அல்குர்ஆனையும் நம்பும் போது இரண்டு வகையான நன்மைகள் அவருக்கு வழங்கப்படுவதாக இஸ்லாம் கூறுகின்றது.

## இறைதூதர் பற்றிய விசுவாசம்:

மனிதர்கள் இறைவனை வழிபாடு செய்து அவனுடைய மார்க்கத்தை நிலைநாட்டி எல்லா விதத்திலும் அவனையே ஓர்மைப்படுத்துவதற்காக அவர்களில் ஒரு சாராரையே தீர்க்கதரிசிகளாக தேர்வு செய்து அவர்களுக்கு மார்க்க சட்டதிட்டங்களையும் கொடுத்து அனுப்பியுள்ளான். என்று விசுவாசிப்பதனையே இது குறிக்கின்றது. "(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் 'நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்' என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை." (அன்பியா: 25)

அல்லாஹ்வின் மீது மனிதர்களுக்கு சாதகமாக யாதொரு ஆதாரமும் இல்லாதிருப்பதற்காக அவனுடைய மார்க்கத்தினை சரிவர எடுத்துச் சொல்லுமாறு அத்தூதர்களை இறைவன் பணித்தான். அத்தூதர்களும் அவர்களையும், அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தினையும் நம்பியவர்களுக்கு இறைவனின் திருப்பொருத்தமும், சுவனமும் இருப்பதாக நற்செய்தி பகர்ந்தனர். மேலும் அவர்களையும் அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தினையும் பொய்ப்பித்தவர்களுக்கு இறைவனின் கோபமும் தண்டனையும் இருப்பதாகவும் எச்சரித்தனர்.

"(நன்மையைக் கொண்டு) நன்மாராயம் கூறுவோராகவும், (தீமையை விட்டு) எச்சரிக்கை செய்வோராகவுமேயன்றி நாம் தூதர்களை அனுப்பவில்லை. எனவே எவர் நம்பி,

சீர்திருந்தி நடந்தார்களோ, அவர்களுக்கு அச்சமுமில்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். ஆனால் எவர் நம் திருவசனங்களைப்பொய்ப்பிக்கிறார்களோ அவர்களை அவர்கள் செய்து வரும் பாவங்களின் காரணமாக வேதனை பிடித்துக் கொள்ளும்". (அன்ஆம்: 48 - 49)

பல்லாயிரக்கணக்கான இறைதூதர்கள் இருந்துள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை இறைவனைத்தவிர வேறெவரும் அறியமாட்டார்கள். "திட்டமாக நாம் உமக்கு முன்னர் தூதர்களை அனுப்பியிருக்கின்றோம் அவர்களில் சிலருடைய வரலாற்றை உமக்குக் கூறியுள்ளோம் இன்னும் எவர்களுடைய வரலாற்றை உமக்குக் கூறவில்லையோ (அவர்களும்) அத்தூதர்களில் இருக்கின்றனர். (இவ்விருசாராரில்) எந்தத் தூதரும் அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த அத்தாட்சியையும் கொண்டு வருவதற்கு (அதிகாரமும்) இல்லை. ஆகவே அல்லாஹ்வுடைய கட்டளைவரும் போது, (அனைவருக்கும்) நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படும் அன்றியும், அந்த இடத்தில் பொய்யர்கள் தாம் நஷ்டமடைவார்கள்." (அல்கஃபிர்: 78)

அவர்கள் அனைவரையும் நம்புவது அவசியமாகும். அவர்கள் மனிதப்பண்புகளுக்கு அப்பாற் பட்டவர்கள் அல்லர். "(நபியே!) உமக்கு முன்னரும் மானிடர்களையே அன்றி (வேறெவரையும்) நம்முடைய தூதர்களாக நாம் அனுப்பவில்லை அவர்களுக்கே நாம் வஹீ அறிவித்தோம். எனவே (இதனை) நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் (நினைவுபடுத்தும்) வேதங்களுடையோரிடம் கேட்டுத் (தெரிந்து) கொள்ளுங்கள் (என்று நபியே! அவர்களிடம் கூறும்)". (அன்பியா: 7)

முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி இறைவன் குறிப்பிடும் போது "(நபியே!) நீர் சொல்வீராக நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது. எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக." (கஹ்ப்: 110)

நபி ஈஸா (அலை) அவர்களைப் பற்றி இறைவன் குறிப்பிடும் போது "மர்யமுடைய குமாரர் மஸீஹ் இறை தூதரேயன்றி வேறில்லை. இவருக்கு முன்னரும் தூதர்கள் பலர் வந்து சென்றுவிட்டனர். இவருடைய தாயார் மிக்க உண்மையானவர். இவ்விருவரும் (மற்ற மனிதர்களைப் போல்) உணவு உண்பவர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு நம்முடைய அத்தாட்சிகளை கொண்டு எவ்வாறு தெளிவாக்கினோம் என்பதை (நபியே!) நீங்கள் கவனிப்பீராக! அவர்கள் எவ்வாறு திசை திருப்பப்படுகிறார்கள் என்பதையும் கவனிப்பீராக!" (மாயிதா: 75)

அவர்கள் தெய்வீக அம்சங்களை விட்டும் அப்பாற்பட்டவர்கள் எந்த விதமான தெய்வீகத் தன்மையும் அவர்களுக்கு இல்லை. இப்பிரபஞ்ச இயக்கத்தில் அவர்களுக்கு எவ்வித பங்கும் கிடையாது. "(நபியே!) நீர் கூறும் கூஅல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன் மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நம்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன் (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு

நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை.” (அஃராப்: 188)

தங்களின் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றி தூதுத்துவத்தை நல்ல முறையில் எத்திவைத்தார்கள். அறிவாற்றலிலும், நல்லறங்களைச் செய்வதிலும் அவர்களே படைப்பினங்களில் மேன்மை மிக்கவர்கள். பொய்யுரைத்தல், மோசடி செய்தல், இறை கட்டளைகளை எடுத்துச் சொல்வதில் கவனக்குறைவாக இருத்தல் போன்றவற்றிலிருந்து அவர்களை இறைவன் பாதுகாத்திருக்கின்றான். “(நபியே!) நிச்சயமாக உமக்கு முன்னரும், நாம் தூதர்களை அனுப்பி வைத்தோம். அவர்களுக்கும் மனைவியரையும், சந்ததிகளையும் நாம் ஏற்படுத்தியிருந்தோம். மேலும், எந்தத் தூதரும் அல்லாஹ்வின் அனுமிதியில்லாமல் எந்த அத்தாட்சியையும் கொண்டுவந்ததில்லை. ஒவ்வொரு தவணைக்கும் ஒரு (பதிவு) ஏடு உள்ளது.” (ரஃது: 38)

அவர்கள் அனைவரையும் நம்புவது அவசியமாகும். யார் அவர்களில் சிலரை நம்பி, மற்றும் சிலரை நம்பவில்லையோ அவர் நிராகரித்தவராகவும், இஸ்லாத்திலிருந்து வெளிப்பட்டவராகவும் கருதப்படுகின்றார். “(நபியே) வேதத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்டவர்களை நீர் பார்க்கவில்லையா? இவர்கள் சிலைகளையும், ஷைத்தானையும், நம்பி காஃபிர்களைக் குறித்து இவர்கள் தாம் நம்பிக்கை கொண்டவர்களை விட நேரான பாதையில் இருக்கிறார்கள் என்றும் கூறுகின்றனர்.” (அந்நிஸா: 51)

25 தீர்க்கதரிசிகளின் பெயர்களை அல்குர்ஆன் எமக்கு குறிப்பிடுகின்றது. “இவை நம்முடைய ஆதாரங்களாகும், நாம் இவற்றை இப்றாஹீமுக்கு அவருடைய கூட்டத்திற்கு எதிராகக்

கொடுத்தோம் நாம் விரும்புவோருக்கு பதவிகளை (மேலும் மேலும்) உயர்த்துகிறோம் நிச்சயமாக உம்முடைய இறைவன் பூரண ஞானமும் பேரறிவும் உள்ளவன்.

நாம் அவருக்கு இஸ்ஹாக்கையும், யஃகூபையும் (சந்ததியாகக்) கொடுத்தருளினோம், இவர்கள் அனைவரையும் நாம் நேர்வழியில் செலுத்தினோம் இதற்கு முன்னர் நாம் நூஹையும் அவருடைய சந்ததியிலிருந்து தாவூது, ஸுலைமான், அய்யூப், யூஸுப், மூஸா, ஹாரூன் ஆகியோரையும் நேர்வழியில் செலுத்தினோம் இப்படியே நாம் நன்மை புரிவோருக்கு நற்கூலி வழங்குகிறோம்.

இன்னும், ஜகரிய்யா, யஹ்யா, ஈஸா, இல்யாஸ் - இவர்கள் யாவரும் (நேர் வழிசார்ந்த) ஸாலிஹானவர்களில் நின்றுமுள்ளவர்களே. இன்னும் இஸ்மாயீல், அல்யஸஉ, யூனுஸ், லூத் - இவர்கள் யாவரையும் உலகத்திலுள்ள அனைவரிலும் மேன்மையாக்கினோம்." (அன்ஆம்: 83 - 86)

நபி ஆதம் அவர்கள் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. "ஆதமையும், நூஹையும், இப்றாஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாக தேர்ந்தெடுத்தான்." (ஆலு இம்ரான்: 33)

நபி ஹூத் அவர்கள் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. 'ஆது' சமூகத்தாரிடம், அவர்களுடைய சகோதரர் ஹூதை (நம் தூதராக அனுப்பி வைத்தோம்). 'என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள், அவனன்றி (வேறு) இறைவன் உங்களுக்கு இல்லை நீங்கள் பொய்யர்களாகவே தவிர வேறில்லை' என்று அவர் சொன்னார்." (ஹூத்: 50)

நபி ஸாலிஹ் அவர்கள் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. “இன்னும்,‘ஸமுது’ (கூட்டத்தினர்) பால் அவர்கள் சகோதரர் ஸாலிஹை (நம் தூதராக அனுப்பினோம்). ‘என் சமூகத்தாரே! அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு நாயன் இல்லை. அவனே உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கி, அதிலேயே உங்களை வசிக்கவும் வைத்தான். எனவே, அவனிடமே பிழை பொறுக்கத் தேடுங்கள் இன்னும் தவ்பா செய்து அவன் பக்கமே மீளுங்கள். நிச்சயமாக என் இறைவன் (உங்களுக்கு) மிக அருகில் இருக்கின்றான் (நம் பிரார்த்தனைகளை) ஏற்பவனாகவும் இருக்கின்றான்’ என்று அவர் சொன்னார்.” (ஹூத்: 61)

நபி சுஐப் அவர்கள் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. “மத்யனி (நகரத்தி)லுள்ளவர்களுக்கு, அவர்களுடைய சகோதரராகிய ஷுஐபை (நம் தூதராக) அனுப்பிவைத்தோம். அவர் (அவர்களிடம் ‘என்) சமூகத்தவர்களே! அல்லாஹ் (ஒருவனையே) நீங்கள் வணங்குங்கள். அவனைத்தவிர உங்களுக்கு வேறு நாயனில்லை. அளவையிலும் நிறுவையிலும் நீங்கள் குறைவு செய்யாதீர்கள் நீங்கள் நல்ல நிலையிலிருப்பதை (இப்பொழுது) நான் காண்கின்றேன் ஆனால் (அளவிலும், நிறுவையிலும் நீங்கள் மோசம் செய்தால்) நிச்சயமாக உங்களைச் சூழ்ந்து கொள்ளக்கூடிய வேதனை ஒரு நாள் உங்களை வந்தடையும் என்று நான் பயப்படுகிறேன்’.” (ஹூத்: 84)

நபி இத்ரீஸ் அவர்கள் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. “மேலும் இஸ்மாயீல், இத்ரீஸ் மற்றும் துல்கிப்ல்

ஆகிய (தூதர்கள்) அனைவரும் பொறுமையாளர்களில் உள்ளவர்களாக இருந்தனர்". (அல்அந்பியா: 85)

முஹம்மது (ஸல்) அவர்கள் பற்றி குறிப்பிடும் போது அவர்கள் தான் நபிமார்களில் இறுதியானவர், மறுமை நாள் வரை அவருக்கு பின்னர் எந்த தூதரும் தோன்ற மாட்டார் என்றும் குறிப்பிடுகின்றது. "முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார் மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்."(அஹ்ஸாப்: 40).

அவருக்கு வழங்கப்பட்ட மார்க்கம் முந்தைய மார்க்கங்களை பூரணப்படுத்திய இறுதியான மார்க்கமாகும். மேலும் இறுதி நாள் வரும் வரை நிலை பெறக்கூடியதும், அவசியம் பின்பற்ற வேண்டியதுமான மார்க்கமாகும்.

நாம் மேலே குறிப்பிட்ட தூதர்களில் 'உலுல் அஸ்ம்' என்று அழைக்கப்படும் மேன்மைக்குறிய ஐந்து தீர்க்கதரிசிகள் உள்ளனர். அவர்கள் தமது பணியினை மேற்கொண்ட போது பொறுமையின் சிகரத்தையே அடைந்தவர்களாவர். நூஹ், இப்றாஹீம், மூஸ ா, ஈஸா, முஹம்மத் (அவர்கள் அனைவர் மீதிலும் இறைவனின் சாந்தி உண்டாகட்டும்) அவர்கள் பற்றி அல்குர்ஆன் "(நபியே! நம் கட்டளைகளை எடுத்துக் கூறுமாறு) நபிமார்(கள் அனைவர்) களிடமும், (சிறப்பாக) உம்மிடமும் நூஹு , இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய குமாரர் ஈஸா ஆகியோரிடமும் வாக்குறுதி வாங்கிய போது, மிக்க உறுதியான வாக்குறுதியையே அவர்களிடம் நாம் வாங்கினோம்." (அஹ்ஸாப்: 7)

## தீர்க்கதரிசிகளை விசுவாசிப்பதனால் கிட்டும் பயன்கள்

1. இறைவன் தன் அடியார்கள் மீது கொண்ட கிருபையையும், இரக்கத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

2. அவனுடைய மார்க்கத்தை எடுத்துச் சொல்லும் தீர்க்கதரிசிகளை அவர்களுக்கு அனுப்பியதினால், அவர்களை பின்பற்றிட முடிந்தது.

3. உண்மையான விசுவாசிகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டல். ஏனெனில் யார் தனக்கு அனுப்பப்பட்ட தூதரை நம்புகின்றாரோ, அவர் இறைவனால் அனுப்பப்பட்ட ஏனைய தூதர்களையும் நம்புவது அவசியமாகும்.

4. பன்மடங்கு நன்மைகளை இறைவனிடமருந்து பெற்றுக்கொள்ளல். எவர் ஒரு தூதரை நம்பி அத்தூதரின் பின்னர் அனுப்பப்பட்ட தூதர்ளையும் நம்புகின்றாரோ அவருக்கு இரண்டு வகையான நற்கூலிகள் உண்டு.

இறுதி நாள் பற்றிய விசுவாசம்

இவ்வுலக வாழ்வு ஏதோ ஒரு தினத்தில் முடிவுற்றுவிடும் என்று நம்புவதனையே இறுதி நாள் பற்றிய விசுவாசம் என்கின்றோம். "(பூமியில்) உள்ள யாவரும் அழிந்து போகக்கூடியவரே" (அர்ரஹ்மான்: 26)

இறைவன் இவ்வுலகை அழிக்க விரும்பும் போது ஸு ர் (குழல்) ஊதுமாறு அதற்கு பொறுப்பான இஸ்ராபீல் என்ற வானவரிடம் கட்டளையிடுவான். அவர் ஊதியவுடன் படைப்பினங்கள் அனைத்தும் மாண்டுவிடும். இறைவனின் கட்டளைக்கிணங்க திரும்பவும் ஒரு முறை அவர் அதனை ஊத முதல் மனிதர் ஆதம் முதல் பூமியின் எல்லா பகுதிகளிலுமுள்ள மண்ணறைகளிலிருந்தும்

மரணித்தவர்கள் உயிர் கொடுத்து திரும்பவும் எழுப்பப்படுவார்கள். "ஸூர் (எக்காளம்) ஊதப்பட்டால் உடன் வானங்களில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும்- அல்லாஹ் நாடியவர்களைத் தவிர - மூர்ச்சித்து விடுவார்கள். பிறகு அதில் மறு தடவை ஊதப்பட்டதும் உடன் அவர்கள் யாவரும் எழுந்து, எதிர் நோக்கி நிற்பார்கள்." (சுமர்: 68)

மரணத்தின் பின் நடைபெறும் என இறைவனும் அவனது தூதரும் குறிப்பிட்ட அனைத்து அம்சங்களையும் நம்புவது இறுதி நாள் பற்றிய விசுவாசத்தில் உள்ளடங்கும்.

அவற்றில் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

**மண்ணறை வாழ்வு பற்றிய விசுவாசம்:**

அது ஒரு மனிதனின் மரணத்துடன் துவங்கி மறுமை நாள் சம்பவிக்கும் வரை நீடிக்கும். அதில் இறை விசுவாசிகள் இன்பமான வாழ்வையும், நிராகரிப்பாளர்கள் வேதனையையும் அனுபவிப்பார்கள் என்று நம்பவேண்டும். "ஆகவே, அவர்கள் திட்டமிட்ட தீமைகளை விட்டும் அல்லாஹ் அவரைக் காத்துக் கொண்டான். மேலும் வேதனையின் கேடு ஃபிர்அவ்னின் கூட்டத்தாரைச் சூழ்ந்து கொண்டது. காலையிலும், மாலையிலும் அவர்கள் நரக நெருப்பின் முன் கொண்டுவரப்படுவார்கள். மேலும் நியாயத் தீர்ப்பு காலம் நிலைபெற்றிருக்கும் நாளில் 'ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்' (என்று கூறப்படும்). (ஃகாபிர்: 45-46)

மனிதர்கள் அனைவரும் எழுப்பப்பட்டு ஒன்று திரட்டப்படுவார்கள் என்பது பற்றிய நம்பிக்கை

படைப்பினங்கள் அனைவரையும் அன்றைய தினம்

பாதணிகளற்றவர்களாக, நிர்வாணமானவர்களாக, இறைவன் எழுப்புவான் என்று நாம் நம்பவேண்டும். “(மரித்த பின்னர்) அவர்கள் எழுப்பப்படவே மாட்டார்கள் என்று நிராகரிப்பவர்கள் எண்ணிக் கொண்டனர் ‘அப்படியல்ல! என்னுடைய இறைவன் மீது சத்தியமாக, நீங்கள் நிச்சயமாக எழுப்பப்படுவீர்கள்! பிறகு நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி நிச்சயமாக அறிவிக்கப்படுவீர்கள் - மேலும் அது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதேயாகும்’ என்று (நபியே!) நீர் கூறுவீராக”. (தகாபுன்: 7)

மனிதர்களில் அதிகமானவர்கள் மறுமை நாளை மறுக்கின்ற காரணத்தினால் அது நடைபெற இயலும் என்பதனை நிரூபணமாக்கும் விதத்திலும் நிராகரிப்பாளர்களின் சந்தேகங்களுக்கு திருப்திகரமான பதிலை சொல்லும் விதத்திலும் அல்குர்ஆன் பல உதாரணங்களை முன்வைக்கின்றது:

இறந்து போன பூமியினை திரும்பவும் உயிர்ப்பித்த இறைவன் அதில் புற்பூண்டுகளை வெளிப்படுத்துவதைப் பார்த்து சிந்திக்குமாறு அல்குர்ஆன் கூறுகின்றது:

“மனிதர்களே! (இறுதித் தீர்ப்புக்காக நீங்கள்) மீண்டும் எழுப்பப்படுவது பற்றி சந்தேகத்தில் இருந்தீர்களானால், (அறிந்து கொள்ளுங்கள்) நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு ‘அலக்’கிலிருந்தும் பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம். உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதனை விவரிக்கிறோம்) மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருப்பப்பையில் தங்கச் செய்கிறோம் பின்பு உங்களை குழந்தையாக வெளிப்படுத்துகிறோம். பின்பு

நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும்படிச் செய்கிறோம். அன்றியும், (இதனிடையில்) உங்களில் சிலர் மரிப்பவர்களும் இருக்கிறார்கள். (ஜீவித்து) அறிவு பெற்ற பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக் கூடிய தளர்ந்த வயது வரை விட்டுவைக்கப்படுபவர்களும் இருக்கிறார்கள். இன்னும், நீங்கள் (தரிசாய்க் கிடக்கும்) வரண்ட பூமியைப் பார்க்கின்றீர்கள் அதன் மீது நாம் (மழை) நீரைப் பெய்யச் செய்வோமானால் அது பசமையாகி, வளர்ந்து, அழகான (ஜோடி ஜோடியாகப்) பல்வகைப் புற்பூண்டுகளை முளைப்பிக்கிறது.

இது ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் அவனே உண்மையானவன்-(நிலையானவன்) நிச்சயமாக அவனே மரித்தோரை உயிர்ப்பிக்கின்றான் - இன்னும், நிச்சயமாக அவன்தான் எல்லாப் பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன் என்பதனால்.

(கியாம நாளுக்குரிய) அவ்வேளை நிச்சயமாக வரும் இதில் சந்தேகமே இல்லை கப்ருகளில் இருப்போரை, நிச்சயமாக அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான்.” (அல் ஹஜ்: 5-7)

மனிதனின் உறக்கத்தைப் பார்த்து சிந்திக்குமாறும் கூறுகின்றது, எப்படி உறக்கத்தின் பின் அவன் விழிக்கின்றானோ அவ்வாறே மரணத்தின் பின்னரும் அவன் விழிக்கப்போகின்றான். “அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான். மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் - சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு, நிச்சயமாக அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன”. (ஸு மர்: 42)

மனிதனின் முதல் தோற்றம் பற்றி சிந்திக்குமாறும் அது பணிக்கின்றது. “மேலும், அவன் தன் படைப்பை (தான் படைக்கப்பட்டதெப்படி என்பதை) மறந்துவிட்டு, அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான் ‘எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?’ என்று. ‘முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான். அவன் எல்லாவகைப் படைப்புகளையும் நன்கறிந்தவன்’ என்று (நபியே!) நீர் கூறுவீராக!” (யாசீன்: 78 - 79)

அன்றைய தினம் எல்லா படைப்பினங்களும் விசாரனைக்காக ஒன்று திரட்டப்பட்டு அவர்கள் இவ்வுலகில் செய்த செயற்கள் அனைத்தும் அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கப்படும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். “(நபியே!) ஒரு நாள் நாம் மலைகளை (அவற்றின் இடங்களை விட்டுப்) பெயர்த்து விடுவோம் அப்போது, பூமியை நீர், வெட்ட வெளியாகக் காண்பீர் அவர்களை ஒன்று சேர்ப்போம், (அந்நாளில்) நாம் ஒருவரையும் விட்டு வைக்க மாட்டோம். அவர்கள் யாவரும் உம்முடைய இறைவனின் சமூகத்தில் வரிசையாகக் கொண்டு வரப்படுவார்கள். ‘நாம் உங்களை முதல் தடவை படைத்தவாறே திட்டமாக இப்பொழுதும் நீங்கள் நம்மிடம் வந்து விட்டீர்கள், ஆனால் நாம் உங்களுக்காக வாக்களிக்கப்பட்ட இத்தகைய நாளை ஏற்படுத்த மாட்டோம் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்’ (என்று சொல்லப்படும்).”(கஹ்ப்: 47 - 48)

அன்றைய தினம் எமது உடல், உறுப்புக்கள் தான் எமது செயற்களுக்கு சாட்சியாக இருக்கும் என்றும் நம்பவேண்டும். “இறுதியில், அவர்கள் (அத்தீயை) அடையும் போது, அவர்களுக்கு

எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவை செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும். அவர்கள் தம் தோல்களை நோக்கி, ‘எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?’ என்று கேட்பார்கள் அதற்கு அவை ‘எல்லாப் பொருட்களையும் பேச வைத்த அல்லாஹ்வே, எங்களையும் பேச வைத்தான். அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான் பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்’ என்று கூறும். உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, உ(ங்கள் பாவ)ங்களை நீங்கள் மறைத்துக் கொள்ளவில்லை அன்றியும், நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிகுதமானதை நிச்சயமாக அல்லாஹ் அறியமாட்டான் என்று நீங்கள் எண்ணிக்கொண்டீர்கள்.” (புஸ்ஸிலத்: 20 - 22)

கேள்வி கணக்கு பற்றியும் நாம் விசுவாசிக்க வேண்டும். “இன்னும்,‘அவர்களை (அங்கே) நிறுத்தி வையுங்கள் அவர்கள் நிச்சயமாகக் (கேள்வி கணக்குக்) கேட்கப்பட வேண்டியவர்கள்’ (என்று மலக்குகளுக்குக் கூறப்படும்)

‘உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் ஏன் ஒருவருக்கொருவர் (உலகில் செய்தது போன்று) உதவி செய்து கொள்ளவில்லை?’ (என்று கேட்கப்படும்).

ஆனால் அவர்கள் அந்நாளில் (எதுவும் செய்ய இயலாது தலை குனிந்து) கீழ்படிந்தவர்களாக இருப்பார்கள்.” (ஸாப்பாத்: 24-26)

அஸ்ஸிராத் என்ற பாலத்தை ஒவ்வொருவரும் கடந்திட வேண்டும்

என்ற நம்பிக்கை. “மேலும், அதனைக் கடக்காமல் உங்களில் யாரும் (போக) முடியாது இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும். அதன் பின்னர், தக்வாவுடன் - பக்தியுடன் இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம். ஆனால், அநியாயம் செய்தவர்களை அ(ந் நரகத்)தில் முழந்தாளிட்டவர்களாக விட்டு விடுவோம்.” (மர்யம்: 71-72)

நமது செயல்கள் அனைத்தும் நன்மை, தீமை தராசில் வைத்து நிறுக்கப்படும். அதன் போது நல்லவர்கள் அவர்களின் நம்பிக்கை, நல்லறங்கள், இறை தூதர்களைப் பின்பற்றல் என்பவற்றிற்கேற்ப கூலி கொடுக்கப்படுவார்கள், மேலும் பாவிகளும் அவர்களின் பாவங்களுக்கேட்ப தண்டிக்கப்படுவார்கள். “இன்னும், கியாம நாளில் மிகத் துல்லியமான தராசுகளையே நாம் வைப்போம். எனவே எந்த ஓர் ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டாது. மேலும் (நன்மை, தீமையில்) ஒரு கடுகு அளவு எடையிருப்பினும், அதனையும் நாம் (கணக்கில்) கொண்டு வருவோம். அவ்வாறே கணக்கெடுக்க நாமே போதும்.” (அந்பியா: 47)

அன்றைய தினம் ஒவ்வொருவரினதும் செயல்களின் பதிவேடுகள் அவர்களுக்கு விநியோகிக்கப்படும். “ஆகவே எவனுடைய பட்டோலை அவனுடைய வலக்கையில் கொடுக்கப்படுகின்றதோ, அவன் சுலபமான விசாரணையாக விசாரிக்கப்படுவான். இன்னும், தன்னைச் சார்ந்தோரிடமும் மகிழ்வுடன் திரும்புவான். ஆனால், எவனுடைய பட்டோலை அவனுடைய முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்படுகின்றதோ- அவன் (தனக்குக்) ‘கேடு’ தான் எனக் கூவியவனாக- அவன் நரகத்தில் புகுவான்.” (அல்இன்ஷிகாக்: 7-12)

அன்றைய நாளில் வழங்கப்படும் கூலி ஒன்றில் நிரந்தரமான சுவனம் அல்லது நரகமாகும், மூன்றாவதொன்று கிடையாது. “நிச்சயமாக, எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ, அவர்கள்தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள். அவர்களுடைய நற்கூலி, அவர்களுடைய இறைவனிடத்திலுள்ள ‘அத்னு’ என்னும் சுவர்க்கச் சோலைகளாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டு இருக்கும் அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி, திருப்தி அடைவான், அவர்களும் அவனைப்பற்றி திருப்தி அடைவார்கள். தன் இறைவனுக்குப் பயப்படுகிறாரே அத்தகையவருக்கே இந்த மேலான நிலை உண்டாகும்.” (அல்பையினா: 7 - 8)

அன்றைய தினம் நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கென வழங்கப்படவுள்ள நீர்த்தடாகம், பரிந்து பேசும் உரிமை என்பன போன்று மறுமை பற்றி நபியவர்கள் கூறிய அம்சங்களும் இப்பகுதியில் உள்ளடக்கப்படும்.

## மறுமை பற்றிய விசுவாசத்தால் கிட்டும் பயன்கள்

1 -இறைவனிடமிருந்து கூலியை எதிர்பார்த்து நல்லறங்களை செய்வதில் முந்தியடிப்பதன் மூலமும் அவனுடைய தன்டணையைப் பயந்தவர்களாக பாவமான காரியங்களை விட்டுவிடுவதன் மூலமும் அம்மறுமைக்காக எம்மை தயார்படுத்திக் கொள்ளல்.

2 -இவ்வுலகில் இறை விசுவாசிகளுக்கு இழப்புக்கள் ஏற்படும் போது மறுமையில் இறைவனிடமிருந்து தமக்கு கிடைக்கவுள்ள இன்பமான கூலிகளை நினைத்து மன ஆறதலடைதல்.

3 -உண்மையான இறை விசுவாசிகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டல்.

## விதி எனும் இறைவனின் ஏற்பாடு பற்றிய விசுவாசம்:

உலகில் நடைபெறவிருந்த அம்சங்கள் அவை நிகழ்வதற்கு முன்பு ஆதியிலேயே அவற்றை இறைவன் அறிந்திருந்தான். அதன் பின்னரே அவனுடைய ஏற்பாட்டின் பிரகாரம் அவற்றை உருவாக்கினான், என்று நம்புவதனையே இது குறிக்கின்றது. “நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) தவனையின்படியே படைத்திருக்கின்றோம்.” (அல்கமர்: 49)

இப்பிரபஞ்சத்தில் ஏற்கனவே நடந்த, தற்போது நடைபெறுகின்ற, எதிர்காலத்தில் நடக்கவிருக்கின்ற அனைத்தும் இறைவனின் துல்லியமான அறிவாற்றலில் இருந்தன. அதன் பின்னரே அவற்றை தனது நாட்டத்திற்கேற்ப உருவாக்கினான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஓர் அடியான் தனக்கு நடக்கின்ற நல்லவையும், தீயவையும் இறைவனின் ஏற்பாட்டில் தான் நடைபெறுகின்றன என்றும் அவனுக்கு கிடைத்தவை கிடைக்கவிருந்தவையே, அவனுக்கு தவறியவை அவனுக்குக் கிடைக்கவிருக்கவில்லை என்றும் நம்பிடாத வரை உண்மையான இறை விசுவாசியாக முடியாது.’ (திர்மிதி: 2144)

இப்படி நம்பிவிடுவதால் ஒன்றை அடைவதற்கு தேவையான காரண, காரியங்கள் அவசியமில்லை என்ற அர்த்தம் கிடையாது.

உதாரணமாக பிள்ளைப் பாக்கியத்தை விரும்புகின்ற ஒருவன் அதற்கு காரணமான திருமணத்தை அவசியம் செய்ய வேண்டும். இந்த காரணத்தை செய்வதனால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அவன் சில சமயங்களில் அடைந்துவிட முடியும், இறைவனின்

ஏற்பாட்டின் அடிப்படையில் அடையாமலும் போய்விடலாம். எனவே காரண காரியங்கள் ஒன்றை உருவாக்குவதில் தாக்கம் செலுத்துவதை விட இறைவனின் நாட்டமே ஒன்றின் உருவாக்கத்தினை தீர்மானிக்கின்றது. மேலும் நாம் செய்கின்ற காரண, காரியங்களும் இறைவனின் ஏற்பாட்டின் அடிப்படையில் அமைந்தனவாகும். இதனால் தான் ஒரு முறை நபித்தோழர்கள் நபியவர்களிடம்: 'நாம் செய்கின்ற மருத்துவமும், அனுமதிக்கப்பட்ட மந்திரங்களும் இறைவனின் ஏற்பாட்டினை தட்டிக்கழித்துவிடுமா? என்று வினவிய போது 'அவை கூட இறைவனின் ஏற்பாட்டின் அடிப்படையில் அமைந்தனவாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்'.

பசி, தாகம், குளிர் என்பன இறைவனின் ஏற்பாட்டிலே நடைபெறுகின்றன. அவை ஏற்படும் போது உணவுகளை உட்கொண்டும், பானங்களை அருந்தியும், குளிரின் போது உடம்பை போர்த்துவதன் மூலமும் அவற்றிற்கான பரிகாரங்களை செய்கின்றார்கள். அப்பரிகாரங்களும் இறைவனின் ஏற்பாட்டின் அடிப்படையில் அமைந்தனவாகும்.

எனவே இறைவனின் ஓர் ஏற்பாட்டை மற்றோர் ஏற்பாட்டினால் தடுத்துக் கொள்கின்றார்கள். ஆகவே அதுவும் இறைவனின் ஏற்படாகும்.

## விதி பற்றிய விசுவாசத்தால் கிட்டும் பயன்கள்

1 -விதியை நம்பிவிடுவதனால் உள அமைதியும், மன நிம்மதியும் கிடைக்கின்றது.

2 -விதியை விசுவாசிப்பவனிடம் தனக்கு ஏற்பட்ட ஒன்றைப் பற்றியோ, கிடைக்காமல் போய்விட்ட ஒன்றைப் பற்றியோ கவலை இருக்காது.

3 -ஒரு மனிதனின் உள்ளம் அமைதியற்றிருப்பதனாலும், கவலையினால் சோர்வதனாலும் பல்வேறு வகையான மன நோய்ககள் ஏற்படுகின்றன. அதனால் அவை அவனுடைய உடலிலும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இறைவன் கூறுவது போன்று விதி பற்றிய விசுவாசம் ஒரு மனிதனை இந்நிலையிலிருந்து பாதுகாக்கின்றது. “பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை, நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும். உங்களை விட்டுத் தவறிப்போன ஒன்றின் மீது நீங்கள் துக்கப்படாமல் இருக்கவும், அவன் உங்களுக்கு அளித்தவற்றின் மீது நீங்கள் (அதிகம்) மகிழாதிருக்கவும் (இதனை உங்களுக்கு அல்லாஹ் அறிவிக்கிறான்) கர்வமுடையவர்கள், தற்பெருமை உடையவர்கள் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (ஹதீத்: 22 - 23)

விதி பற்றிய நம்பிக்கை இப்பாரில் இறைவன் மறைத்து வைத்திருக்கும் அறிவியல் அம்சங்களை மனிதன் கண்டுபிடிக்க தூண்டுகின்றது. நோய் போன்ற இடையூரான நிகழ்வுகள் இறைவனின் ஏற்பாட்டினால் மனிதனை தொற்றுகின்ற போது அந்த ஏற்பாட்டினை தடுப்பதற்கான நிவாரணங்களை அவன் தேடுகின்றான். அதன் போது இறைவன் இவ்வுலகில் படைத்திருக்கும் மருந்து மூலிகைகளை அவன் தேடிப் பெறுகின்றான்.

மனிதனுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைக் குறைத்தல். ஒரு மனிதனுக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படுவது அவனை துன்பத்தில் ஆழ்த்திவிடும். அதையே நினைத்து அவன் மனம்

குலைந்து விடும்போது இரண்டு வகையான துன்பங்களை அவன் எதிர்நோக்குகின்றான். முதலாவது வியாபாரத்தில் நஷ்டம் இரண்டாவது மன அழுத்தம், கவலை எனவே விதியை நம்பும் ஒருவன் முதல் துன்பம் ஏற்படும் போதே இறைவனின் நிர்ணயத்தின் அடிப்படையில் எவ்வித சந்தேகமுமின்றி நடந்தே தீரும் என்று நம்பிவிடுவதனால் தன்னை ஆறுதல் படுத்திக் கொள்கின்றான்.

நபி (ஸல்) அவர்கள் இதனை பின்வருமாறு கூறுகின்றார்கள்: 'கோழையான இறை விசுவாசியை விடவும் வீரமிக்க ஓர் இறை விசுவாசி எவ்வளவோ சிறந்தவராவார், அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பத்திற்கு உரியவராவார். அனைத்திலும் உனக்கு நலவிருக்கின்றது. உனக்கு பயனளிப்பவற்றில் நீர் ஆர்வம் கொள்வாயாக, அல்லாஹ்விடத்தில் உதவி தேடுவாயாக, உனக்கு ஏதாவதொன்று நேர்ந்து விட்டால் நான் இப்படி செய்திருந்தால் இவ்வாறு நடந்திருக்குமே என்று கூறிவிடாதே, அப்படிச் சொல்வது ஷைத்தானின் செயலாகும். இறைவன் நாடியது நடந்துவிட்டது என்று கூறுவாயாக." (முஸ்லிம் 2664).

சிலர் நினைப்பது போன்று விதி பற்றிய நம்பிக்கை ஒரு மனிதனை ஒன்றை அடைவதற்கான காரண காரியங்களை செய்யாமல் விட்டுவிடவோ, சடைவை ஏற்படுத்தவோ மாட்டாது. நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து 'எனது ஒட்டகத்தினை அவிழ்த்துவிட்டு இறைவன் மீது நம்பிக்கை வைக்கவா?' என வினவியபோது 'அதனை கட்டிவிட்டு இறைவன் மீது நம்பிக்கை வைப்பீராக' என பதிலளித்தார்கள்.

## இஸ்லாத்தின் தூண்கள் என்று கருதப்படுகின்ற சொல், செயல் ரீதியான வணக்க வழிபாடுகள்.

இஸ்லாத்தின் நிலையான கட்டமைப்பை எடுத்துக்காட்டுவதும் ஒரு முஸ்லிமையும், முஸ்லிமல்லாதவனையும் வேறுபடுத்திக் காண்பிப்பதும் இவற்றின் மூலமாகும். இந்த அடிப்படைத் தூண்களில் முதல் அம்சமாக கருதப்படும் ஓர் இறைக் கொள்கை சொல் ரீதியான வணக்கமாகும். தொழுகை, நோன்பு என்பன உடல் ரீதியான வணக்கமாகும். ஸகாத் எனும் ஏழைவரி செல்வத்துடன் தொடர்பான வழிபாடாகும். இறுதிக் கடமை ஹஜ் உடல் மற்றும் செல்வத்துடன் தொடர்புடைய வணக்கமாகும். இஸ்லாம் இவற்றை அதன் துயர்வோர் மீது கடமையாக்கி அவர்களின் வெளித் தோற்றங்களை மாத்திரம் கருத்திற் கொள்ளவில்லை. இவ்வழிபாடுகளை நிறைவேற்றுவதனால் அவர்களின் உள்ளம் பரிசுத்தமடைவதனையும், நிலைபெறுவதனையும், பக்குவமடைவதையுமே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த அடிப்படை அம்சங்களை நடைமுறைப் படுத்துவனால் தனி மனித, சமூக நல்லினக்கமும், அவற்றின் சீரான கட்டமைவும் உருவாக வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.

**தொழுகையைப் பற்றி இறைவன் கூறும் போது:** “(நபியே!) இவ்வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் எடுத்தோதுவீராக, இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை (மனிதரை) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா (ன சக்தியா) கும் அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறான்.” (அன்கபூத்: 45)

**ஸகாத்தைப் பற்றி இறைவன் கூறும் போது:** “(நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக, இன்னும் அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக நிச்சயமாக உம்முடைய பிரார்த்தனை அவர்களுக்கு (சாந்தியும்), ஆறுதலும் அளிக்கும் அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான்.” (தவ்பா: 103)

**நோன்பைப் பற்றி கூறும் போது:** "ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் இறையச்சமுள்ளோராக மாறும்பொருட்டு உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது." (பகரா: 183)

நோன்பில் மனித உள்ளம் மோகம் கொள்ளும் அம்சங்களுக்கு அடிபணிந்துவிடாமல் இருப்பதன் மூலம் பெரும் ஒரு பயிற்சி வழங்கப்படுகின்றது. 'யார் பொய்யுரைப்பதையும் அதன் படி நடப்பதையும் விட்டுவிடவில்லையோ, அவர் பசித்திருப்பதனாலும் தாகித்திருப்பதனாலும் எப்பலனையும் அடையமாட்டார்'. (புகாரி: 5710)

**ஹஜ் வணக்கம் பற்றி இறைவன்:** "ஹஜ்ஜு க்குரிய காலமானது குறிப்பிடப்பட்ட மாதங்களாகும். எனவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தம் மீது கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் சம்போகம், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சச்சரவு - ஆகியவை செய்தல் கூடாது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு நன்மையையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கிறான். மேலும் ஹஜ்ஜு க்குத் தேவையான பொருட்களைச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக இவ்வாறு சித்தப்படுத்தி வைப்பவற்றுள் மிகவும் ஹைரானது (நன்மையானது), தக்வா (என்னும் பயபக்தியே) ஆகும் எனவே நல்லறிவுடையோரே! எனக்கே பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள்." (பகரா: 197)

நற் குணங்களை கட்டமைத்து அவற்றை வளர்ப்பதில் இஸ்லாமிய வணக்க வழிபாடுகளுக்கு பெருமளவு பங்கு இருக்கின்றன.

# இஸ்லாத்தின் கடமைகள்

## முதல் கடமை

### ஏகத்துவ மற்றும் தூதுத்துவ கொள்கை முழக்கம்.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் திருத்தூதரும் ஆவார்கள் என்றும் சாட்சியமளிக்க வேண்டும். வார்த்தையுடன் தொடர்புடைய இக்கடமையே இஸ்லாத்தில் நுழைவதற்கான திறவுகோலாகும். ஏனை சகல கடமைகளும் இதனுடன் தொடர்புபடுகின்றது.

### லாஇலாஹ இல்லல்லாஹ்வின் பொருள்:

தூய ஏகத்துவத்தினை உணர்த்தும் இவ்வார்த்தைக்காவே இறைவன் படைப்பினங்களைப் படைத்தான். சுவனமும் நரகமும் இதற்காவவே படைக்கப்பட்டன. “இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.” (தாரியாத்: 56)

இதுவே நபி நூஹ் (அலை) முதல் இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் வரையிலும் தோன்றிய நபிமார்களின் ஏகோபித்த கொள்கை முழக்கமாகும். “(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் ‘நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்’ என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை”. (அன்பியா: 25)

அதன் பொருள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

1- இவ்வுலகத்தைப் படைத்தவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் இருக்கமுடியாது.

2- இப்பிரபஞ்சத்தில் அதிகாரமுள்ள அரசன் அவன் ஒருவனே.

3- உண்மையானமுறையில் வணங்கி வழிபடத் தகுதியுள்ளவன் அல்லாஹ்வைத் தவிர ஒருவருமில்லை.

4- அவன் அனைத்துவிதமான பூரணத்துவத்தின் பண்புகளுக்குரியவனும், குறைபண்புகளைவிட்டும் பரிசுத்தமானவனும் ஆவான்.

## இக்கொள்கை விளக்கம் பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றது:

1- இப்பாரில் அல்லாஹ்வையன்றி வணங்கப்படுபவைகள் அனைத்தும் போலியானவையாகும். தொழுகை, பிரார்த்தனை, அறுத்துப்பலியிடல் போன்ற எல்லாவிதமான வழிபாடுகளும் நிறைவேற்றப்படுவதற்கு அல்லாஹ்வையன்றி வேறு எவரும் தகுதிபெறமாட்டார்கள். அவர் அல்லாஹ்வினால் அனுப்பட்ட தூதராக அல்லது அவனுக்கு நெருக்கமானவராக இருந்தாலும் சரியே. இவ்வாறு வழிபடும் நோக்கிலோ அல்லது கண்ணியப்படுத்தும் நோக்கிலோ அல்லாஹ் அல்லாத ஒன்றிற்கு வணக்கங்களை செய்பவர் நிராகரிப்பவராக ஆகிவிடுகின்றார், அவர் இக்கொள்கை முழக்கத்தை நாவால் குறிப்பிட்டவராயினும் சரியே.

2- அல்லாஹ் மீதுள்ள உறுதியான நம்பிக்கை: இக்கொள்கைக்கு முரண்படும் விதத்தில் சந்தேகம் கொள்ளவோ, தடுமாறிவிடவோ கூடாது. “இது சூனியம் தானா? அல்லது பார்க்க முடியாது (குருடர்களாக) ஆகிவிட்டீர்களா?” (அத்தூர்: 15)

3- அதனைத் தட்டிக் கழிக்காமல் முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளல். ‘அல்லாஹ்வைத்தவிர நாயன் இல்லை’ என்று அவர்களுக்குக்

கூறப்பட்டால், மெய்யாகவே அவர்கள் பெருமையடித்தவர்களாக இருந்தனர்.” (ஸாப்பாத்: 35)

4- வழிப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தல். எனவே இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றவதுடன் அவன் தடுத்தவைகளை விட்டுவிடல்.

5- கொள்கையில் உண்மையானவராக இருத்தல். “(நபியே! போருக்கு உம்முடன் சேர்ந்து வராமல்) பின்தங்கி விட்ட நாட்டுப் புறத்து அரபிகள் ‘எங்களுடைய சொத்துகளும், எங்கள் குடும்பங்களும் (உங்களுடன் வராது) எங்களை அலுவல்கள் உள்ளவர்களாக்கி விட்டன எனவே, நீங்கள் எங்களுக்காக மன்னிப்புக் கோருவீர்களாக!’ எனக் கூறுவர். அவர்கள் தங்கள் இதயங்களில் இல்லாததைத் தம் நாவுகளினால் கூறுகிறார்கள் ‘அல்லாஹ் உங்களுக்கு ஒரு கெடுதியை நாடினாலும் அல்லது அவன் உங்களுக்கு ஒரு நன்மையை நாடினாலும், அதில் எதையும் அவனுக்கெதிராக உங்களுக்கு (த் தடுக்கக் கூடிய) அதிகாரம் பெற்றவர் யார்! அப்படியல்ல! அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்குணர்ந்தவனாக இருக்கிறான்’ எனக் கூறும்.” (பத்ஹ்: 11)

6- வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்வதுடன் தூய்மையை கடைபிடித்தல். “அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும், மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்டவேண்டும், மேலும் ஸகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்.” (பய்யினா)

7- அல்லாஹ்வை நேசிப்பதுடன் அவன் தூதர்களையும் நேசர்களையும் நல்லடியார்களையும் நேசித்தல், மேலும் இறைவனையும் அவன் தூதர்களையும் விரோதிப்போரை

கோபித்தல். தனது விருப்பத்திற்கு புறம்பாக இருப்பினும் தனது இறைவனது, அவனது தூதரினது விருப்பத்திற்கு உரிய விடயங்களை முற்படுத்துதல். “(நபியே!) நீர் கூறும் உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்கு பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை) க் கொண்டுவருவதை எதிர்பார்த்து இருங்கள் - அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை.” (தஃவ்பா: 24)

**8-** மார்க்கமயமாக்கல் சட்டவாக்கம், “(நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள், இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள், மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன்.” (ஹஷ்ர்: 7).

## முஹம்மதுன் ரஸூலுல்லாஹ் என்பதன் பொருள்

**1-** அவர் கூறியவற்றை உண்மைப்படுத்தி அவர் ஏவியவற்றில் அவருக்கு வழிப்பட்டு, தடைசெய்த மற்றும் தவிர்ந்து நடந்த விடயங்களைவிட்டும் நாம் தவிர்ந்து நடப்பதாகும். “எவர் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்படிகிறாரோ, அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்படிகிறார். யாராவது ஒருவர் (இவ்வாறு கீழ்படிவதை) நிராகரித்தால் (நீர் வருந்த வேண்டியதில்லை, ஏனெனில்) நாம் உம்மை அவர்களின் மேல் கண்காணிப்பவராக அனுப்பவில்லை.” (அந்நிஸா: 80)

**2-** அவருடைய தூதுத்துவத்தை விசுவாசித்தல். மேலும்

அவர்தான் நபிமார்களில் இறுதியானவரும் அவர்களில் சிறந்தவருமாவார், அவரின் வருகைக்குப்பின் வேறு எத்தூதரும் வராமட்டார் என்பதனையும் நம்புதல். முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை) யாகவும் இருக்கின்றார் மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்." (அஹ்ஸாப்: 40)

3- இறைவனிடமிருந்து செய்திகளை எடுத்துச் சொல்லும் விடயத்தில் ஒருபோதும் தவறிழைக்கமாட்டார் என்று உறுதியாக நம்புதல் அவசியம். "அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை." (நஜ்ம்: 3).

ஆனால் உலகவிடயங்களில் அவர் கூறும் அபிப்பிராயங்களில் சிலவேளை தவறு வரமுடியும். அவரும் மனிதரே. தன்னிச்சைப்படி கூறும்போது அவர் கூறுகின்றார்: 'நான் ஒரு மனிதனே! என்னிடம் நீங்கள் உங்கள் வழக்குகளைக் கொண்டுவருகின்றீர்கள். உங்களில் ஒருவர் மற்றொருவரை விடத் தன்னுடைய ஆதாரத்தை எடுத்துவைப்பதில் வாக்கு சாதுர்யம் மிக்கவராக இருக்கக்கூடும். மேலும், நான் (அந்தச் சாதுர்யமானவரிடமிருந்து) செவியேற்பதற்கேற்ப அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்கிறேன். எனவே, (எவருடைய சொல்லை வைத்து) அவரின் சகோதரனின் உரிமையில் சிறிதை (அவருக்குரியது) என்று (உண்மை நிலை அறியாமல்) தீர்ப்பளித்து விடுகிறேனோ அவர் அதை எடுத்துக் கொள்ள வேண்டாம். ஏனெனில், அவருக்கு நான் நரக நெருப்பின் ஒரு துண்டைத்தான் பெயர்த்துக் கொடுக்கிறேன்.' (புஹாரி: 6967)

மறுமை நாள் சம்பவிக்கும்வரை இவ்வுலகில் தோன்றுகின்ற மனித, ஜின் வர்க்கத்தினர் அனைவருக்கும் இவருடைய தூதுச் செய்தியே பொதுவானது என்று நம்பவேண்டும். அவரின் வழிமுறைகளை பின்பற்றுவதுடன் அவற்றில் எவ்வித கூட்டல் குறைத்தல் செய்யாமல் இருத்தல். "(நபியே!) நீர் கூறும் 'நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள். அல்லாஹ் உங்களை

நேசிப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்' மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான்." (ஆலு இம்ரான்: 31)

## இரண்டாவது கடமை

### தொழுகை

இது மார்க்கத்தின் அடிப்படை அத்திவாரமாகும். இதனை விட்டவர் நிராகரிப்பாளனாகி விடுகின்றார். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விடயங்களில் தலையாயனது இஸ்லாமாகும், அதன் தூண் தொழுகையாகும், அதன் உயர்வு அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதாகும். (திர்மிதி)

தொழுகை என்பது முதல் தக்பீருடன் ஆரம்பிக்கப்படும், ஸலாமுடன் முடிவடையும் ஒருவிதமான வார்த்தைகளும் செயற்பாடுகளுமாகும். அல்லாஹ்வை முன்னிலைப்படுத்தி வழிப்படும் நோக்கில் ஒரு முஸ்லிம் அதனை நிறைவேற்றுகின்றான். அதில் தாழ்வுடனும் பணிவுடனும் தன் இரட்சகனுடன் உரையாடுகின்றான். அது ஓர் அடியானுக்கும் அவனுடைய இரட்சகனுக்குமிடையிலான தொடர்பாகும்.

இறை விசுவாசத்தின் ஒளியானது அணையத் துவங்குகின்றது. தொழுகைக்கான அழைப்பை அவன் கேட்கின்றபோது திரும்பவும் அது வலிமைபெறுகின்றது. எனவே சதாவும் அவன் தனது இரட்சகனுடன் தொடர்பில் இருக்க அது விழிவகுக்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமும் தினமும் ஐவேளைத் தொழுகைகளை பள்ளிவாசலில் கூட்டாக நிறைவேற்றவேண்டும். அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்காகவே தவிர கூட்டுத்தொழுகைகளைவிட்டும் அவன் பின்வாங்க இயலாது. அப்படி தினமும் அவர்கள் அறிமுகமாகுவதால் அவர்களுக்கு மத்தியில் அன்பு, பாசம், கூட்டுறவு, என்பன பலப்படுத்தப்படுகின்றன. அவர்களின் நிலவரங்களை கேட்டறிகின்றனர், நோயாளிகளை சுகம் விசாரிக்கின்றனர், தேவையுள்ளவர்களுக்கு உதவிக்கரம்கொடுக்கின்றனர், துக்கித்தவர்களுக்கு ஆறுதல் சொல்கின்றனர், தவறிழைப்பவர்கள் சரியானமுறையில் அணுகப்பட்டு

திருத்தப்டுகின்றனர், சிறுவர், பெரியவர், ஏழை, செல்வந்தர், ஆண்டி, அரசன் என்ற பாரபட்சமின்றி அனைவரும் ஒரே வரிசையில் தோளுடன் தோள் சேர்ந்து ஒரே விதமான அசைவுகளையும் வார்த்தைகளையும் ஒரே திசையை முன்னோக்கி ஒரே நேரத்தில் செய்கின்ற அக்காட்சி ஒரே சமூகத்தில் நிலவுகின்ற பிரிவினைகளையும் சாதி வேறுபாட்டையும் முற்றாக உடைத்தெறிகின்றது. அனைவரும் படைத்த இறைவனின் முன்னிலையில் சமமானவர்கள் என்ற மனிதநேயத்தை தெளிவுபடுத்துகின்றது.

## மூன்றாவது கடமை:

## ஸகாத் (ஏழைவரி)

பணம் படைத்த ஒரு முஸ்லிம் தன் இரட்சகனுக்கு வழிப்படும் நோக்கில் சுய விருப்பத்துடன் தன் செல்வத்திலிருந்து வெளிப்படுத்தும் ஒரு குறிப்பிட்ட தொகையாகும். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தன் ஏழைச் சகோதரனின் தேவைகளை நிவர்த்திசெய்து அவன் யாசகம் கேட்கும் தரத்திலிருந்து உயரியதோர் நிலைக்கு மாற்றும் எண்ணத்துடன் ஒரு முஸ்லிம் நிறைவேற்றுவதாகும்.

செல்வத்தில் ஒரு குறிப்பிட்ட அளவை உடந்தையாக்கிய ஒருவரின் மீது அது கடமையாகும். “அல்லாஹ்வுக்கு வணக்கத்தை தூய்மையாக்கியவர்களாக (தவறான வழியிலிருந்து விலகி சரியான வழியில்) பிடிப்புள்ளவர்களாக அல்லாஹ்வை அவர்கள் வணங்க வேண்டும், மேலும் தொழுகையை அவர்கள் நிலைநாட்டவேண்டும், இன்னும் ஸகாத்தை அவர்கள் வழங்க வேண்டும் என்பதைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. இதுதான் நேரான மார்க்கமாகும்.” (பய்யினா 05)

அது கடமை என்பதை மறுத்தவன் இறை நிராகரிப்பாளனாகி விடுகின்றான். ஏனெனில் அது ஏழைகளினதும் இயலாதவர்களினதும் உரிமையாகும். சிலர் நினைப்பதுபோன்று ஸகாத் என்பது ஒரு இஸ்லாமிய அரசு தன் குடிமக்களிடம் திரட்டும் சாதாரண வரியல்ல.

அது வரியாக இருப்பின் முஸ்லிமல்லாத குடிகள்மீதும் அது கடமையாகியிருக்கும். ஆனால் இஸ்லாம் கூறும் ஸகாத்தின் முதல் நிபந்தனையே கொடுப்பவன் முஸ்லிமாக இருக்கவேண்டும் என்பதே.

மேலும் சில நிபந்தனைகளை இஸ்லாம் இடுகின்றது:

**1-** அவனது செல்வம் இஸ்லாம் நிர்ணயித்த, குறிப்பிட்ட அளவை எத்தியிருத்தல். தங்கத்தில் அதன் பெருமதி 85 கிராம் ஆகும்.

**2-** கால்நடை, தாணியம், வியாபாரப் பொருட்கள் போன்றவற்றில் ஒரு வருடம் பூர்த்தியாகி இருத்தல் வேண்டும். தானியங்களிலும் பழவகைகளிலும் அவற்றை அறுவடைசெய்யும் நேரத்திலே ஸகாத் கொடுக்கவேண்டும். அந்த ஸகாத்தைப் பெறத் தகுதியானவர்களை இஸ்லாம் பட்டியல்படுத்தியுள்ளது. “(ஸகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், ஸக்காத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும் - அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன்.” (தௌபா: 60)

ஸகாத் கடமையாகிய செல்வத்தில் 2.5 வீதம் அதற்கு தகுதி பெற்றவர்களுக்கு கொடுக்கவேண்டும். இக்கடமையின் மூலம் சமூக மட்டத்தில் வறுமையை முற்றாக ஒழிப்பதே இஸ்லாத்தின் குறிக்கோலாகும்.

சமூகத்தில் உரிமை மறுக்கப்படுகின்ற ஏழை எளியவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதினூடாக வறுமையின் கொடூரத்தால் தோன்றுகின்ற கொலை, கொள்ளை, அத்துமீறல்கள் என்பவற்றை இல்லாதொழித்து சமூக ஒற்றுமையின் உயிர்நாடியினை பாதுகாப்பதும் இதன் குறிக்கோலாகும்.

ஸகாத்திற்கும் சாதாரண வரிக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒரு முஸ்லிம் எந்த வற்புறுத்தலுமின்றி சுய விருப்பத்துடன் ஸகாத்தை வழங்குகின்றான், ஸகாத் என்ற சொல்லே பெரும் சான்றாகும். ஸகாத் என்பது பரிசுத்தப்படுத்தல், தூய்மைப்படுத்தல் என்று பொருள்படுகின்றது. எனவே அதனை நிறைவேற்றுவதினூடாக ஒரு செல்வந்தனின் உள்ளம் தூய்மையடைகின்றது. உலோபித்தனம், பொருள்களின் மீது அற்பமான மோகம், பேராசை என்பவற்றிலிருந்து அவனது மனம் பரிசுத்தப்படுகின்றது.

வறுமை கோட்டின் கீழ் வாழும் தனது சகோதரனின் தேவைகளை மறக்கடித்துவிடும் உலக மோகத்திலிருந்து அவன் உள்ளம் பரிசுத்தப்டுகின்றது. “ஆகவே, உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். (அவன் போதனைகளைச்) செவிதாழ்த்திக் கேளுங்கள். அவனுக்கு வழிபடுங்கள். (அவன் பாதையில்) செலவு செய்யுங்கள். (இது) உங்களுக்கே மேலான நன்மையாக இருக்கும். அன்றியும் எவர்கள் உலோபத்தனத்திலிருந்து காக்கப்படுகிறார்களோ, அவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள்.” (தகாபுன்: 16)

மேலும் இதனை நிறைவேற்றுவதினூடாக ஏழை, எளியவர்களின் உள்ளத்தில் செல்வத்தின் மீது ஏற்பட்டுள்ள பொறாமை, குரோதம், வெறுப்பு என்பன இல்லாமல் போய்விடுகின்றன.

இதுபற்றி தெளிவுபடுத்தும் அல் குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் நிறையவே இருக்கின்றன. “அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் உலோபத்தனம் செய்கிறார்களோ அது தமக்கு நல்லது என்று (அவர்கள்) நிச்சயமாக எண்ண வேண்டாம் - அவ்வாறன்று! அது அவர்களுக்குத் தீங்குதான். அவர்கள் உலோபத்தனத்தால் சேர்த்து வைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமையில் அவர்கள் கழுத்தில் அரிகண்டமாக போடப்படும். வானங்கள், பூமி ஆகியவற்றில் (இருக்கும் அனைத்துக்கும்) அனந்தர உரிமை அல்லாஹ்வுக்கே உரியதாகும். அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் அறிகிறான்.” (ஆலு இம்ரான்: 180)

## நான்காவது கடமை:

## ரமழான் மாதம் நோன்பு நோற்றல்

வருடத்தில் ஒரு மாதகாலம் நோன்பு நோற்பது முஸ்லிம்களின் மீது விதியாக்கப்பட்டுள்ளது. அதன்போது அல்லாஹ்விற்கு வழிப்படும் நோக்கில் பஜ்ரு உதயம் முதல் சூரியன் அஸ்தமிக்கும் வரையிலான காலப்பகுதியில் ஏனைய காலங்களில் உணவு, பாணம், மனைவியுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடல், போன்ற நோன்பை முறிக்கும் அம்சங்களைவிட்டும் தவிர்ந்து நடக்கவேண்டும். இக்கடமை முன்னைய வேதங்களிலும் காணப்பட்டதாக அல் குர்ஆன் கூறுகின்றது. “ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது (அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம்.”(அல் பகரா: 183)

நோன்பு எனும் போது நாம் ஏற்கனவே குறிப்பட்ட வெளிப்படையான சில காரியங்களை செய்யாமல் இருப்பது மாத்திரம் என்று பொருள் கொள்ளக்கூடாது. பொய், புறம், கோள், சதி, மோசடி போன்ற வெறுக்கத்தக்க காரியங்களையும் முற்று முழுதாக தவிர்ந்து நடக்கவேண்டும். இவை ரமழான் அல்லாத காலங்களிலும் தடைசெய்யப்பட்டவை என்பதனைக் கருத்திற்கொண்டு ரமழானில் அவற்றை தவிர்ப்பதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘யார் பொய் பேசுவதையும் அதன்படி நடப்பதையும் விட்டுவிடவில்லையோ அவர் பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எவ்விதத் தேவையும் கிடையாது.’(புகாரி: 1903)

நோன்பு என்பது உள்ளத்தோடும் அதன் ஆசாபாசங்களோடும் செய்கின்ற ஒரு போராட்டமாகும். அதன்போது ஒரு முஸ்லிம் தீய வார்த்தைகளை பேசுவதையும் மோசமான நடத்தைகளில் ஈடுபடுவதையும் விட்டுவிடுகின்றான். இதனால்தான் இறைவன் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘நோன்பைத் தவிர ஆதமுடைய மகனின் ஒவ்வொரு செயலும் அவனுக்குரியதாகும்!

நிச்சயமாக, நோன்பு எனக்கு (மட்டுமே) உரியது அதற்கு நானே கூலி கொடுப்பேன்!என்று அல்லாஹ் கூறினான். நோன்பு (பாவங்களிலிருந்து காக்கும்) கேடயமாகும்! எனவே, உங்களில் ஒருவர் நோன்பு நோற்றால் அவர் கெட்ட பேச்சுகள் பேச வேண்டாம்! கூச்சலிட்டு சச்சரவு செய்ய வேண்டாம்! யாரேனும் அவரை ஏசினால் அல்லது அவருடன் சண்டையிட்டால்,நான் நோன்பாளி!என்று அவர் சொல்லட்டும்! முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விட விருப்பமானதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. (ஒன்று) நோன்பு துறக்கும்பொழுது அவன் மகிழ்ச்சியடைகிறான். (அடுத்து) தன் இறைவனைச் சந்திக்கும் பொழுது (நோன்பின் காரணமாக) அவன் மகிழ்ச்சியடைகிறான்.'(புகாரி: 1904)

நோன்பின்போது ஒரு முஸ்லிம் தேவையுள்ள ஒரு ஏழை சகோதரனின் பசியை உணர்ந்து அவனுக்கு வாரி வழங்க முன்வருகின்றான்.

## ஐந்தாவது கடமை:

## ஹஜ்

ஹஜ் என்பது குறித்த காலகட்டத்தில் குறிப்பட்ட இடங்களில் குறிப்பான கிரியைகளை செய்வதற்காக மக்கா நகரில் இருக்கின்ற மஸ்ஜிதுல் ஹராம் என்ற ஆலயத்தை (நாடிச் சென்று) தரிசிப்பதாகும். உடலாலும் செல்வத்தாலும் சக்தி பெற்ற பருவ வயதை எத்திய முஸ்லிமான ஆண், பெண் இருபாலாரும் வாழ்வில் ஒரு தடவையேனும் இக்கடமையை நிறைவேற்ற வேண்டும். பணம் படைத்த ஒரு நோயாளி தனக்குப் பகரமாக ஒருவரை இக்கடமையை நிறைவேட்ட சாட்டிவிட வேண்டும். மேலும் தனது அத்தியவசிய தேவைகளை விடவோ அல்லது தனது பொறுப்பில் இருப்பவனின் தேவைகளை விடவோ அதிகமான செல்வத்தை பெறாதவர் மீது இது கடமையாக மாட்டாது.

ஹஜ் என்பது மிகப்பெரிய இஸ்லாமிய மாநாடாகக் கருதப் படுகின்றது. உலகத்தின் நாலா புறத்திலும் வசிக்கின்ற முஸ்லிம்கள்

ஓர் இறைவனை அழைக்கின்றவர்களாக, ஒரே வகையான ஆடையை அணிந்தவர்களாக, ஒரு வழிப்பாட்டை செய்தவர்களாக (லப்பைக்) என்ற ஒரே கோஷத்தை எழுப்பியவர்களாக குறிப்பட்ட காலத்தில் ஒரே இடத்தில் ஒன்றுகூடுகின்றனர்.

அவர்கள் கூறும் அக்கோஷத்தின் பொருளாவது: இறைவா உன் அழைப்பை ஏற்று உன் திருப்பொருத்தத்தை நாடியவர்களாக இவ்விடத்திற்கு வந்திருக்கின்றோம், உன் ஏகத்துவத்தை மனப்பூர்வமாக நாம் ஏற்கின்றோம், நீ தான் வணங்கி வழிபட தகுதியுள்ள ஒரே நாயன்.

அங்கு ஒன்று குழுமியவர்களில் உயர்ந்தவன், தாழ்ந்தவன், கறுப்பன், வெள்ளையன், அரபி, அரபியல்லாதவன் என்ற எவ்வித வேறுபாடும் கிடையாது. இறைவன் முன்னே அனைவரும் சமமானவர்கள், அவர்களில் சிறந்தவர் இறைவனை அஞ்சி நடப்பவரே. இந்த மாநாடு மொத்தத்தில் முஸ்லிம்களின் சகோதரத்துவத்தையும் ஒருமைப்பாட்டையும் நிரூபிக்கின்றது.

# இஸ்லாமிய மார்க்கத்தின் நற்சிறப்புக்களும் அவற்றினை மெருகூட்டுபவைகளும்

உலகத்தில் அருளப்பட்ட மார்க்கங்களில் இஸ்லாம் இறுதியான மார்க்கம் என்பதனால் முன்னைய மார்க்கங்களில் காணப்படாத பலவகையான (மெருகூட்டும்) சிறப்புக்கள் அதில் இருக்கவேண்டும் என்பது இன்றியமையாததாகும். இத்தனிச்சிறப்புக்கள் இருப்பதால் உலக முடிவுவரை இம்மார்க்கம் அனைத்து காலத்திற்கும், இடத்திற்கும் பொருத்தமானதாக இருப்பதுடன் மனித குலத்திற்கு ஈருலக வெற்றியையும் ஈட்டிக் கொடுக்கின்றது.

## இஸ்லாத்தின் தனிச்சிறப்பம்சங்கள்:

அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் ஒன்றை மாத்திரமே நூஹ் (அலை) முதல் நபி முஹம்மத் (ஸல்) வரையிலான நபிமார்களை அனுப்பி அல்லாஹ் பூரணப்படுத்தினான் என்பதனை இஸ்லாம் தெள்ளத் தெளிவாக குறிப்பிடுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘எனக்கும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்களும் உதாரணம் ஒரு வீட்டைக் கட்டி அதை அழகாக அலங்கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவிற்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒரு மனிதரின் நிலை போன்றதாகும். மக்கள் அதைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்து,இச்செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா?என்று கேட்கலானார்கள். நானே அச்செங்கல். மேலும்,நானே இறைத் தூதர்களில் இறுதியானவன்’. (புகாரி: 3535)

பூமி முழுக்க அநியாயங்களும் அட்டூழியங்களும் நிரம்பியிருக்கும் இறுதிக் காலப்பகுதியில் நபி ஈஸா (அலை) அவர்கள் வந்து பூமியில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்கள். அவர் கூட முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட மார்க்கத்தையே நடைமுறைப் படுத்துவார்கள். புதியதோர் மார்க்கத்தை கொண்டுவர மாட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘மர்யமின் குமாரர் (ஈஸா) அவர்கள் நீதி செலுத்தும் நடுவராக உங்களிடையே இறங்குவார்கள். அவர்கள் வந்தவுடன் சிலுவையை உடைப்பார்கள் பன்றியைக் கொல்வார்கள். ஜிஸ்யா வரியை (ஏற்க) மறுப்பார்கள். எவரும் பெற முன்வராத அளவுக்கு செல்வம் பெருகி வழியும். இவையெல்லாம் நடக்காதவரை உலக முடிவு (மறுமை) நாள் வராது.’ (புகாரி: 3448)

இறைவனால் அனுப்பப்பட்ட அனைத்து தீர்க்கதரிசிகளினதும் அழைப்பும் கொள்கையும் ஒன்றாகவே இருந்தன. ஏக இறைவனை ஓர்மைப்படுத்தி, இணை கடவுள்களை விட்டும் அவனை பரிசுத்தப்படுத்தி, அவனையே வணங்குதல், அவனுக்கும் அடியர்களுக்குமிடையில் எந்தவித இடைத்தரகர்களையும் ஏற்படுத்தாமல் இருத்தல். மனித உள்ளங்களை பக்குவப்படுத்தி அதன் ஈருலக வெற்றிப் பாதைகளையும் தெளிவுபடுத்தல் என்ற ஒரே முழக்கமாகவே அவர்களின் அழைப்புப் பணி காணப்பட்டது. “நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்ராஹீமுக்கும், மூஸாவுக்கும்,ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால் நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள்

அதில் பிரிந்து விடாதீர்கள் என்பதே- இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது - தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் - (அவனை) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான்.” (ஷூரா: 13)

இஸ்லாத்தின் வருகையுடன் இறைவன் அதற்கு முந்தைய மார்க்கங்கள் அனைத்தினையும் மாற்றிவிட்டான். அதுதான் இறுதியும் அறுதியுமான மார்க்கமாகும், அதையன்றி எந்த மார்க்கத்தை பின்பற்றுவதையும் இறைவன் ஏற்கமாட்டான். “மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. எனவே அல்லாஹ் அருள் செய்த (சட்ட திட்டத்) தைக் கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்புச் செய்வீராக. உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி,) அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம். உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ் நாடினால் உங்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருக்கலாம். ஆனால், அவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதைக் கொண்டு உங்களைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு செய்திருக்கிறான்). எனவே நன்மையானவற்றின்பால் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் யாவரும், அல்லாஹ்வின் பக்கமே மீள வேண்டியிருக்கிறது. நீங்கள் எதில் மாறுபட்டு கொண்டிருந்தீர்களோ அத (ன் உண்மையி) னை அவன் உங்களுக்குத் தெளிவாக்கி வைப்பான்.” (மாயிதா: 48)

இறுதி மார்க்கம் என்பதனால் மறுமைநாள் வரை அதனை பாதுகாப்பதாக அவனே உத்தரவாதம் அளித்துள்ளான். முந்தைய மார்க்கங்கள் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு, குறிப்பிட்ட காலவரையறையுடன் அருளப்பட்டதனால் அவன் அவற்றிற்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவில்லை. “நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம் நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.” (ஹிஜ்ர்: 9)

எனவே இஸ்லாத்தின் தூதர்தான் இறுதித்தூதர், அவருடைய வருகையின் பின்னர் வேறு தூதர்கள் வரமாட்டார்கள் என்பது தெளிவாகிகன்றது. “முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை) யாகவும் இருக்கின்றார் மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்”. (அல் அஹ்ஸாப் 40)

இதனால் மற்றைய தூதர்களையும் வேதங்களையும் பொய்ப்பிக்க வேண்டும் என்பது அர்த்தம் கிடையாது. ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அவருக்கு முன் வந்த தீர்க்கதரிசியின் மார்க்கத்தை பூரணப்படுத்துவற்காகவே அனுப்பப்பட்டனர். நபி ஈஸா (அலை) அவர்கள் நபி மூஸா (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பூரணப்படுத்தினார்கள், முஹம்மத் (ஸல்) அவர்கள் நபி ஈஸா (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பூரணப்படுத்தினார்கள், அவருடன் நபிமார்களின் வருகை முற்றுப்பெற்றுவிட்டது. எனவே ஒரு முஸ்லிம் அனைத்து வேதங்களையும் அவற்றின் தீர்க்கதரிசிகளையும் நம்பவேண்டும். அவர்கள் அனைவரையுமோ அல்லது அவர்களில் ஒருவரையோ நம்பாதவன் இஸ்லாத்தைவிட்டும் வெளியேறிவிடுகின்றான். “நிச்சயமாக அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் நிராகரிப்பவர்கள், அல்லாஹ்வுக்கும் அவன் தூதர்களுக்கும் இடையே பாகுபாடு செய்ய விரும்பி, ‘நாம் (அத்தூதர்களில்) சிலர் மீது ஈமான் கொள்வோம் சிலரை நிராகரிப்போம்’ என்று கூறுகின்றனர். மேலும் (குஃப்ருக்கும், ஈமானுக்கும்) இடையே ஒரு வழியை உண்டாக்கிக் கொள்ள நினைக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் உண்மையாகவே காஃபிர்கள் ஆவார்கள். காஃபிர்களுக்கு இழிவு தரும் வேதனையைச் சித்தப்படுத்தி வைத்துள்ளோம்.

யார் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொண்டு, அத்தூதர்களில் எவரையும் பிரித்துப் பாகுபாடு செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்களுடைய நற்கூலியை (அல்லாஹ்)

அவர்களுக்குக் கொடுப்பான். அல்லாஹ் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையோனாகவும் இருக்கின்றான்.

(நபியே!) வேதமுடையவர்கள் தங்கள் மீது ஒரு வேதத்தை வானத்திலிருந்து நீர் இறக்கி வைக்க வேண்டுமென்று உம்மிடம் கேட்கின்றனர். அவர்கள் மூஸாவிடம் இதைவிடப் பெரியது ஒன்றைக் கேட்டு 'எங்களுக்கு அல்லாஹ்வைப் பகிரங்கமாகக் காட்டுங்கள்'எனக் கூறினர். ஆகவே அவர்களுடைய அக்கிரமத்திற்காக அவர்களை இடி தாக்கியது. அப்பால் அவர்களுக்குத் தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னும் அவர்கள் காளைக் கன்றை வணங்கினார்கள். அதையும் நாம் மன்னித்தோம். இன்னும், நாம் மூஸாவுக்குத் தெளிவான ஆதாரத்தையும் கொடுத்தோம்.

மேலும், அவர்களிடம் வாக்குறுதி வாங்கும் பொருட்டு, அவர்கள் மேல் தூர் (ஸினாய் மலையை) உயர்த்தினோம். இன்னும் 'இந்த வாசலில் தலை குனிந்து (தாழ்மையாக) நுழையுங்கள்' என்று சொன்னோம். மேலும் '(மீன் வேட்டையாடி) சனிக்கிழமையில் வரம்பு மீறாதீர்கள்'என்றும் அவர்களுக்கு கூறினோம். இன்னும் அவர்களிடமிருந்து மிக உறுதியான வாக்குறுதியும் வாங்கினோம்.

அவர்களுடைய வாக்குறுதியை அவர்கள் மீறியதாலும் அல்லாஹ்வின் வசனங்களை அவர்கள் நிராகரித்து விட்டதாலும், அநியாயமாக அவர்கள் நபிமார்களைக் கொலை செய்ததாலும், 'எங்கள் இதயங்கள் திரையிடப்பட்டுள்ளன.' (எனவே எந்த உபதேசமும் அங்கே செல்லாது) என்று அவர்கள் கூறியதாலும், (அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான்) அவர்களுடைய நிராகரிப்பின் காரணத்தால் அல்லாஹ் (அவர்களுடைய இருதயங்களின் மீது) முத்திரையிட்டுவிட்டான். ஆகவே அவர்களில் சிலரைத் தவிர (மற்றவர்கள்) ஈமான் கொள்ள மாட்டார்கள்.

இன்னும் அவர்களின் நிராகரிப்பின் காரணமாகவும், மர்யமின் மீது மாபெரும் அவதூறு கூறியதின் காரணமாகவும் (அவர்கள் சபிக்கப்பட்டனர்).

இன்னும், 'நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய - மர்யமின்

குமாரராகிய-ஈஸா மஸீஹை கொன்றுவிட்டோம்' என்று அவர்கள் கூறுவதாலும் (அவர்கள் சபிக்கப்பட்டனர்). அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. ஆனால் அவர்களுக்கு (அவரைப் போன்ற) ஒருவன் ஒப்பாக்கப்பட்டான். மேலும் இ(வ் விஷயத்) தில் அபிப்ராய பேதம் கொண்டவர்கள், அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள் - வெறும் யூகத்தைப் பின்பற்றுவதே அன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது. நிச்சயமாக அவர்கள், அவரைக் கொல்லவே இல்லை." (நிஸா: 150 - 157)

இஸ்லாத்தின் சட்டங்கள் முந்தை மார்க்கங்களின் சட்டங்களை பரிபூரணப்படுத்தின. முந்தைய மாாக்கங்களின் சட்டங்கள் மனித உள்ளங்களுடன் தொடர்புபட்ட அடிப்படை அம்சங்களையும் அதனை பரிசுத்தப்படுத்தும் விடயங்களைப்பற்றியும் பேசுபவையாக இருந்தன. அவை உலக அம்சங்களையோ வாழ்வியல் கலைகளையோ முன்வைக்கவில்லை. ஆனால் இஸ்லாம் மனித வாழ்விற்கு தேவையான அனைத்து விடயங்களையும் ஒழுங்கமைத்து பரிபூரணப்படுத்தியது. ஆன்மீக அம்சங்களையும் வெவ்வேறு உலக விடயங்களையும் ஆராய்ந்தது.

"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன். ஆனால் உங்களில் எவரேனும் பாவம் செய்யும் நாட்டமின்றி, பசிக் கொடுமையினால் நிர்ப்பந்திக்கப்பட்டு (மேலே கூறப்பட்ட விலக்கப்பட்டவற்றைப் புசித்து) விட்டால் (அது குற்றமாகாது). ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், கருணை மிக்கோனாகவும் இருக்கின்றான்." (மாயிதா: 3)

இதனால்தான் இது உலகில் தோன்றிய மார்க்கங்களில் சிறந்த மார்க்கமாக போற்றப்படுகின்றது. "மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும்

விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள். வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் - அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர். எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர்." (ஆலு இம்ரான்: 110)

இஸ்லாம் என்பது எவ்வித விதிவிலக்குமின்றி முழு மனிதகுலத்திற்குமான உலகலாவிய ஒரு போதனையாகும். சகல காலத்திற்கும் சகல இடத்திற்கும் அது பொருந்தும். அது ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ குறிப்பிட்ட சமூகத்திற்கோ குறிப்பட்ட காலகட்டத்திற்கோ இறங்கிய மார்க்கம் அல்ல. அது சமத்துவத்தின் மார்க்கம். ஜாதி, நிறம்,மொழி, பிரதேசம், பரம்பரை என்பவற்றின் அடிப்படையில் அமைந்த மார்க்கமல்ல. உயரியதோர் கொள்கையின் அடிப்படையில் அமைந்த மார்கம். ஒரே கடவுளை நம்பி, முஹம்மத் (ஸல்) அவர்களை தூதராக ஏற்று இஸ்லாத்தை தழுவியவர்கள் அனைவரும் அதிலே அங்கம் வகிப்பர். இறைவன் கூறுகிறான்: "இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி அனுப்பவில்லை ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்." (ஸபஃ: 28)

முன்னர் அனுப்பப்பட்ட தூதர்கள் தத்தமது சமூக்த்திற்கே அனுப்பப்பட்டனர்.

நபி நூஹ் (அலை) அவர்கள் பற்றி இறைவன் கூறுகிறான்: "நிச்சயமாக நாம் நூஹை அவருடைய கூட்டத்தாரிடம் அனுப்பி வைத்தோம் அவர் (தம் கூட்டத்தாரிடம்), என் கூட்டத்தாரே! அல்லாஹ்வையே வணங்குங்கள், உங்களுக்கு அவனன்றி வேறு நாயனில்லை நிச்சயமாக நான் உங்களுக்கு வர இருக்கும் மகத்தான ஒரு நாளின் வேதனையைப்பற்றி அஞ்சுகிறேன் என்று கூறினார். அவருடைய கூட்டத்தாரிலுள்ள தலைவர்கள், மெய்யாகவே, நாங்கள் உம்மை பகிரங்கமான வழிகேட்டில் தான் பார்க்கிறோம் என்று கூறினார்கள்." (அஃராப்: 59 - 60)

“ஸமூது கூட்டதாரிடம், அவர்கள் சகோதரராகிய ஸாலிஹை (நம் தூதராக அனுப்பி வைத்தோம்) ˙ அவர் (அவர்களை நோக்கி) என் சமூகத்தார்களே! அல்லாஹ்வையே வணங்குங்கள் அவனன்றி உங்களுக்கு வேறு நாயனில்லை இதற்காக, நிச்சயமாக உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து ஒரு தெளிவான அத்தாட்சியும் வந்துள்ளது அல்லாஹ்வுடைய இந்த ஒட்டகமானது உங்களுக்கு ஓர் அத்தாட்சியாக வந்துள்ளது. எனவே இதை அல்லாஹ்வின் பூமியில் (தடையேதுமின்றி) மேய விடுங்கள் - அதை எத்தகைய தீங்கும் கொண்டு தீண்டாதீர்கள்,அப்படிச்செய்தால் உங்களை நோவினை செய்யும் கடும் வேதனை பிடித்துக் கொள்ளும் என்று கூறினார்.” (அஃராப்: 73)

“மேலும் லூத்தை (அவர் சமூகத்தாரிடையே நபியாக அனுப்பினோம்) அவர் தம் சமூகத்தாரிடம் உலகத்தில் எவருமே உங்களுக்கு முன் செய்திராத மானக்கேடான ஒரு செயலைச் செய்யவா முனைந்தீர்கள்? என்று கூறினார்.” (அஃராப்: 80)

“மத்யன் நகரவாசிகளிடம் அவர்களுடைய சகோதரராகிய ஷுஐபை (நம் தூதராக அனுப்பிவைத்தோம்) அவர் (தம் கூட்டத்தாரை நோக்கி,) என் சமூகத்தார்களே! அல்லாஹ்வையே வணங்குங்கள் அவனன்றி உங்களுக்கு வேறு நாயனில்லை நிச்சயமாக உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து ஒரு தெளிவான (அத்தாட்சி) வந்துள்ளது அளவை நிரப்பமாக அளந்து, எடையைச் சரியாக நிறுத்துக் கொடுங்கள். மனிதர்களுக்கு அவர்களுக்குரிய பொருட்களைக் (கொடுப்பதில்) குறைத்து விடாதீர்கள் பூமியில் சீர் திருத்தம் ஏற்பட்ட பின்னர், அதில் குழப்பம் உண்டாக்காதீர்கள், நீங்கள் முஃமின்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு நன்மையாக இருக்கும் என்று கூறினார்.” (அஃராப்: 85)

“அவர்களில் பெரும்பாலோருக்கு வாக்குறுதியை (நிறைவேற்றும் தன்மை இருப்பதாக) நாம் காணவில்லை - அன்றியும் அவர்களில் பெரும்பாலோரைப் பாவிகளாகவே கண்டோம்.” (அஃராப்: 102)

இஸ்லாம் சகல காலத்திற்கும் இடத்திற்குமான உலகலாவிய

போதனை என்பதனால் தான் அதனைப் பின்பற்றும் முஸ்லிம்கள் அதன் செய்திகளை மனித சமூகத்திற்கு எத்திவைக்க கடமைப்பட்டுள்ளனர். “இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம். (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும், யார் (நம்) தூதரைப் பின்பற்றுகிறார்கள், யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதி கால்கள் மீது பின்திரும்பி செல்கிறார்கள் என்பதை அறிவதற்காகவேயன்றி நீங்கள் பின்தொடரும் இந்த கிப்லாவை நிர்ணயிக்கவில்லை. இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது. அல்லாஹ் உங்கள் ஈமானை (தொழுகையை) வீணாக்கமாட்டான். நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப்பெரும் கருணை காட்டுபவன், நிகரற்ற அன்புடையவன்.” (பகரா: 143)

இஸ்லாத்தின் சட்டங்களும் போதனைகளும் தெய்வீகமானவை என்பதனால் காலத்தால் அழியவோ, மாற்றங்களுக்கும் திரிபுகளுக்கும் உட்படுத்தப்படவோ அவற்றில் தவறுகள் வருவதற்கோ, கலாசார, சூழல் தாக்கங்களுக்கு உட்படுவதற்கு அவை மனித ஏற்பாடாகவோ இல்லை. அப்படி இருந்தால் அவை ஏற்படுவது இலகுவானதே. இதனால்தான் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் நிரந்தரமில்லாமல் இருப்பதைப் பார்க்கின்றோம். ஒரு சமூகத்திற்கு பொருத்தமான சட்டதிட்டங்கள் மற்றொரு சமூகத்திற்கு பொருத்தமற்றுக் காணப்படுதையும் ஒரு காலத்திற்கு பொருத்தமான சட்டதிதட்டங்கள் மற்றொரு காலத்திற்கு பொருத்தமற்றிருப்பதையும் பார்க்கின்றோம். உதாரணமாக ஜனநாயக சமூகத்திற்கு இருக்கின்ற சட்டங்களும் ஒழுங்குகளும் சோசலிச சமூகத்திற்கு இசைவாக அமைவதில்லை.

சட்டமமைக்கும் ஒவ்வொவருவம் அவரவர் சிந்தனைக்கும் கொள்கைக்கும் இசைவாக இயற்றுகின்றனர். இதனால் அவற்றின் ஸ்தீரத் தன்மை பேணப்படுவதில்லை. ஆரம்பத்தில் சட்டமியற்றிய ஒருவனைவிட கலாசாரத்தில், கல்வியில் தரம் மிக்க ஒருவன் அவற்றில்

குறைகளையும் தவறுகளையும் இனங்கண்டு வேறு சிந்தனைகளை முன்வைக்கின்றான்.

இஸ்லாமிய சட்டங்கள் தெய்வீகமானவை என்பதபால் சகலவற்றினதும் சிருஷ்டி கருத்தா மனிதர்களுக்கு அனைத்து விதத்திலும் பொருத்தமாக அவற்றை இயற்றியுள்ளான்.

அந்தஸ்தில் எவ்வளவு உயர்ந்தவனாக இருப்பினும் இறைவனின் சட்டதிட்டங்களில் முரண்பாடு காணவோ கோணல்கள் காணவோ முடியாது. ஏனெனில் அவை அனைவரினதும் உரிமைகளை பேணுகின்றன. “அஞ்ஞான காலத்து தீர்ப்பையா அவர்கள் விரும்புகிறார்கள்? உறுதியான நம்பிக்கையுள்ள மக்களுக்கு அல்லாஹ்வைவிட தீர்ப்பு வழங்குவதில் அழகானவன் யார்?” (மாயிதா: 50)

இஸ்லாம் முன்னேற்றம், எழுச்சி, அபிவிருத்தி என்பவற்றை ஆதரிக்கும் மார்கமாகும். இதனால் அது எல்லா காலங்களுக்கும் இடங்களுக்கும் பொருந்துகின்றது. அதன் கொள்கை, வழிபாடுகள் என்பவற்றில் காலத்தால் மாற்றம் வராத அனைத்தையும் உள்ளடக்கும் பொதுவான அடிப்படை விதிகள் வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக இறைவிசுவாசமும் தொழுகையும் அதன் முறையும், ஸக்காதும் அதன் அளவும், எப்பொருட்களில் அது கடமையாகும் என்பதும், நோன்பும் அதன் விதிகளும், ஹஜ் வணக்கம் பற்றிய விளக்கங்கள், குற்றவாளிகளுக்கான தண்டனை என்பவை தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

உலகில் உருவாகும் பிரச்சினைகளுக்கு முதலில் இறைமறை குர்ஆனில் தீர்வைத் தேடவேண்டும் (அதில் இருப்பவற்றை எடுத்துவிட்டு அதற்கு முரண்படுபவற்றை விட்டுவிடவேண்டும்) அதைப்பற்றி விளக்கம் அதில் இல்லாதபோது முஹம்மத் நபியவர்களைத்தொட்டும் அறிவிக்கப்பட்ட உறுதியான நபிமொழிகளில் அதற்கான தீர்வைத் தேடவேண்டும். அதிலும் இல்லாதவிடத்து எல்லாக் காலங்களிலும் எல்லா தேசங்களிலும் தோன்றுபவர்கள் என்று இஸ்லாம் எதிர்வு கூறிய தேர்ச்சிபெற்ற

அறிஞர் பெருமக்களிடம் அப்பிரச்சினையை ஆய்வுக்காக முன்வைக்கவேண்டும்.

அல் குர்ஆன் மற்றும் நபி மொழியிலிருந்து பெறப்பட்ட பொதுவிதிகள்:

1- அடிப்படையில் அனைத்தும் ஆகுமாக்கப்பட்டதாகும். (அல்குர்ஆன் தடைசெய்தவற்றைத்த தவிர)

2- பொது நலன் காத்தல் வேண்டும்.

3- சக்திக்கு மீறி கஷ்டப்படுத்தல் ஆகாது.

4- முதலில் கெடுதிகளை நீக்குதல் (அதற்கு முதலிடம் கொடுத்தல்)

5- சிக்கல் ஏற்படும் வழிகளை அடைத்துவிடல்.

6- நிர்ப்பந்தங்களின்போது தடைசெய்யப்பட்டதும் ஆகுமாகிவிடும்.

7- நிர்ப்பந்தங்களை தேவையின் அளவிற்கேற்ப பயன்படுத்த வேண்டும்.

8- ஒன்றிலிருந்து பயன்பெறுவதைவிட அதிலிருந்து ஏற்படும் கெடுதியை அகற்றவே முன்னுரிமை வழங்கப்படும்.

9- இரு கெடுதிகளை செய்யும் நிர்ப்பந்தத்திற்குள்ளானவன் அவற்றில் குறைந்தபட்ச தீங்குள்ளதையே செய்ய வேண்டும்.

10- ஒரு கெடுதியை நீக்க மற்றொரு கெடுதியை செய்யக்கூடாது.

மார்க்க ஆய்வாளர் ஒருவர் தன் ஆய்வின்போது மனோ இச்சசைக்கு இசைவாக ஆய்வை மேற்கொள்ள மாட்டார். இஸ்லாமிய மூலாதாரங்களுக்கு முரண்படாமல் மனித சமூகத்திற்கு பயன் தருவதையே இலக்காகக் கொள்ளவேண்டும். இஸ்லாம் எல்லா சமூக தேவைகளையும் நிவர்த்தி செய்வதனாலேயே அது அனைத்து காலகட்டத்திற்கும் பொருந்தும் மார்க்கமாக உள்ளது என்பதே இவ்வாய்வுரிமையின் மூலம் தெளிவாகின்றது.

இஸ்லாம் சட்டதிட்டங்களையும் ஒழுங்கு முறைகளையும் நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது என்று எதிர்பார்க்கின்றது. தாழ்ந்தவன்,

ஆண்டி, அரசன், வெள்ளையன், கறுப்பன் என்ற பாகுபாடே இருக்கக்கூாது.

அன்று நபியவர்கள் காலத்தில் உயர்குலப் பெண்மணி ஒருத்தி திருடிவிட்டாள் (திருடியவர் யாராயினும் அவரின் கரத்தைத் துண்டிக்கவேண்டும்) யார் இப்பெண்மணிக்காக நபியவர்களிடம் பரிந்து பேசுவார்? என்று ஆலோசனை கேட்டபோது நபியவர்களின் மிக நேசத்துக்குரிய நபித்தோழர் உஸாமா துணிந்து பேசுவார் என அவரை அனுப்பினர். அப்போது நபியவர்கள்: அல்லாஹ் ஏற்படுத்திய தண்டனையில் பரிந்து பேசுகிறீரா? என்று கண்டித்துவிட்டு மக்களை ஒன்று சேர்த்து உரை நிகழ்த்தினார்கள்: உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அழிக்கப்பட்டதெல்லாம் அவர்களில் உயர்ந்தவர் திருடிவிட்டால் அவரை விட்டுவிடுவார்கள், பலவீனமானவர் திருடிவிட்டால் இறைவனின் தண்டனையை அவர்மீது நிறைவேற்றிவிடுவார்கள். இறைவனின் மீது ஆணையாக எனது மகள் பாத்திமா திருடினாலும் அவளின் கரத்தையும் துண்டிப்பேன் என்று கூறினார்கள்.

இஸ்லாத்தின் மூலாதாராங்கள் ஆதாரபூர்வமானவையும் கூடுதல், குறைவு, திரிபு, மாற்றம் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டவையுமாகும். இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள்:

1) அல் குர்ஆன் 2) நபி மொழி

## அல்குர்ஆன்

அல் குர்ஆன் அன்று நபி (ஸல்) அவர்களுக்கு இறங்கியது போன்று இன்றுவரை அப்படியே இருக்கின்றது. அதன் கருத்துக்களிலோ வசனங்களிலோ எவ்வித மாற்றமோ திரிபோ கூடுதல், குறைவோ ஏற்பட்டவில்லை.

நபியவர்கள் இறைத் தூது அவர்களுக்கு இறங்கும் போதே அதனை எழுதுவதற்காக அலி, முஆவியா, உபை பின் கஃப், ஸைத் போன்ற நபித்தோழர்களை நியமித்தார்கள். ஒவ்வொரு வசனம் இறங்கும் போதும் அதனை எந்த அத்தியாயத்தில் சேர்க்க வேண்டும் என்று அவர்களுக்கு வழிகாட்டினார்கள். எனவே

நபியவர்களின் காலத்தில் ஏடுகளிலும் மனித உள்ளங்களிலும் பாதுகாக்கப்பட்டது. உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைக் கற்று அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே என்ற நபி மொழிக்கிணங்க முஸ்லிம்கள் அதனைக் கற்பதிலும் சிறார்களுக்கு அதனைக் கற்றுக்கொடுப்பதிலும் ஆர்வம் காட்டினர். இந்த அல்குர்ஆனிற்கு பணிவிடை செய்வதிலும் பேணிப்பாதுகாப்பதிலும் தங்களையும் தங்கள் செல்வங்களையும் அர்ப்பணித்து வருகின்றனர். அதனைப் பாதுகாப்பதும், பாராயனம் செய்வதும் வணக்கம் என்பதால் பரம்பரை பரம்பரையாக அதனை சொல்லிக்கொடுத்து வருகின்றனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் இறை வசனத்திலிருந்து ஓர் எழுத்தை ஓதுகின்றாரோ அதற்கு ஒரு நன்மை வழங்கப்படுகின்றது. அந்த ஒரு நன்மை அதனைப் போன்று பத்து மடங்கு நன்மையை ஈட்டித்தருகின்றது. 'அலிப் லாம் மீம்' ஓர் எழுத்தென்று நான் கூறமாட்டேன் அதில் 'அலிப்' ஓர் எழுத்து 'லாம்' ஓர் எழுத்து 'மீம்'ஓர் எழுத்தாகும். (திர்மிதி: 2010)

## நபி மொழி

இது இஸ்லாத்தின் இரண்டாவது மூலாதாரமாகும். அல்குர்ஆனுக்கு விளக்கமாகக் கணிக்கப்படுகின்றது. அல்குர்ஆனில் சுருக்கமாகக் கூறப்பட்ட நிறைய சட்டங்களை இது தெளிவுபடுத்துகின்றது. அவற்றில் இடைச்செருகல்கள், இட்டுக்கட்டுகள் ஏற்படுவதை விட்டும் அவை பாதுகாக்கப்பட்டுள்ளன. நபி மொழிகளையும் அவற்றின் அறிவிப்பாளர் வரிசைகளையும் அவற்றின் தரங்களையும் ஆய்வு செய்வதற்கென தங்களையே அர்ப்பணித்துள்ள பல நம்பகமான மனிதர்களை இறைவன் தேர்வுசெய்து அந்த நபி மொழிகளை பாதுகாக்கின்றான். அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மூலம் கூறப்பட்டவைகள் என உறுதிப்படுத்தப்பட்ட நபிமொழிகளை மாத்திரம் வடித்தெடுப்பார்கள். நபிமொழிகள் பாதுகாக்கப்பட்ட வரலாறுகளையும் முயற்சிகளையும் அறிய விரும்புவர்கள் நபிமொழித் திறனாய்வுக் கலையில் எழுதப்பட்ட புத்தகங்களை பார்ப்பதினூடாக எத்தகைய முயற்சிகள், தியாகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைக் காணமுடிகின்றது.

இஸ்லாம் மனிதர்களுக்கு மத்தியில் சமத்துவத்தை ஏற்படுத்துகின்றது. அவர்களில் ஆண், பெண், கறுத்தவர், வெள்ளையர், அரபி, அந்நியர் என்ற வேறுபாடின்றி முதல் மனிதன் ஆதமின் சந்ததிகளே என்ற கோட்பாட்டை முன்வைத்துள்ளது. "மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்). - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்." (நிஸா: 1)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் உங்களிடத்திலிருந்து அறியாமைக்கால குலப்பெருமையை வேரறுத்துவிட்டான். மனிதன் ஒன்றில் இறைபக்தியுள்ள விசுவாசியாக இருப்பான் அல்லது பாவியாக இருப்பான். மனிதர்கள் அனைவரும் ஆதமின் பிள்ளைகளே ஆதம் மண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளார். (அஹ்மத்: 8721)

ஏற்கனவே இப்பூமியில் தோன்றிய மனிதர்களும் இதன் பின் தோன்றவிருப்பவர்களும் ஆதமின் சந்ததியினரே. ஆரம்பத்தில் அவர்களில் அனைவரும் ஒரே மார்க்கத்தின் கீழ் இருந்தனர். சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக பூமியின் எல்லாத் திசைகளிலும் அவர்கள் குடியேற நேர்ந்தது. இதன் விளைவாக அவர்களில் வித்தியாசமான மொழிகள், தோற்றங்கள், இயல்புகள் என்பன உருவாகின. சூழல் மாற்றங்களினால் அப்படியானதோர் தாக்கங்கள் விளைவது இயல்பானதே. எனவே அவர்களின் சிந்தனைப் போக்கிலும் வாழ்வியல் அம்சங்களிலும் அவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும் கொள்கை கோட்பாடுகளிலும் அவை தென்பட்டன. "மனிதர்கள் யாவரும் (ஆதியில்) ஒரே இனத்தவராகவே அன்றி வேறில்லை பின்னர் மாறுபட்டுக் கொண்டனர். உமது இறைவனிடமிருந்து (இம்மையின்

கூலி மறுமையில் பூரணமாகக் கொடுக்கப்படும் என்ற) ஒரு வார்த்தை முந்தி ஏற்பட்டிருக்காவிட்டால் அவர்கள் எந்த விஷயத்தில் மாறுபட்டிருக்கின்றனரோ, அதைப்பற்றி அவர்களிடையே (இதற்குள்) முடிவு செய்யப்பட்டிருக்கும்." (யூனுஸ்: 19)

இஸ்லாத்தின் போதனைகள் அனைத்தும் இனம், நிறம், மொழி, பிரதேசம் என்ற பேதமின்றி அனைவருக்கும் பொதுவானதாகும். இறைவன் முன்னிலையில் அவர்கள் அனைவரும் சமமானவர்கள்.

இறைவன் கூறுகின்றான்: "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்." (ஹுஜ்ராத்:13).

நாம் மேலே குறிப்பட்ட சமத்துவத்தின் அடிப்படையில் மார்க்க வரையறைக்கு உட்பட்ட உரிமைகளை வழங்குவதில் இஸ்லாம் மனிதர்கள் அனைவருக்கும் மத்தியில் சமத்துவத்தைப் பேணுகிறது. இதன் அடிப்படையில் அனைவருக்கும் பின்வரும் உரிமைகள் வழங்கப்படுகின்றது.

1- சுயமாக சிந்திக்கும் உரிமையும் கருத்துக்களை வெளியிடும் உரிமையும்: இஸ்லாம் அதனை ஏற்பவர்கள் சத்தியத்தைக் கூறவேண்டும், அவர்களின் கருத்துகளையும் சிந்தனைகளையும் வெளியிடவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது. மேலும் சத்தியத்தைக் கூறும் விடயத்தில் பழிப்பவர்களின் பழிப்புக்கு அஞ்சக்கூடாதென்றும் பணிக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: போராட்டங்களில் சிறந்த போராட்டம் அநியாயக்கார அரசனிடம் சத்தியத்தைக் கூறுவதாகும். (அபூ தாவுத்: 4344)

இந்த அடிப்படை உரிமையை நடைமுறைப்படுத்துவதில் நபித்தோழர்கள் முன்மாதிரியாகத் திகழ்கின்றனர்.

கலீபா உமர் (ரழி) அவர்களிடம் ஒருவர்: “மு.ஃமின்களின் தலைவரே அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள் என்று கூறிய சமயத்தில் அச்சபையில் இருந்த ஒருவர் குறுக்கிட்டு கலீபாவிற்கே இறைவனை அஞ்சுமாறு கட்டளையிடுகின்றாயா? என்று கண்டித்து விட்டார். அப்போது உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்: அவன் சொல்லட்டும் விட்டுவிடுங்கள், நீங்கள் அதனைச் சொல்வதிலும் நாம் அதனைக் கேட்பதிலும் தான் நன்மை இருக்கின்றது என்றார்கள்.

மற்றொரு முறை நபித்தோழர் அலி (ரழி) அவர்கள் ஒரு விடயத்தில் தன் அபிப்பிராயத்தின் அடிப்படையில் தீர்ப்பளித்தார்கள். உமர் அவர்களுக்கு (கலீபாவாக இருந்தபோது) அவ்விடயம் கூறப்பட்டபோது: என்னிடம் அவ்விடயம் கேட்கப்பட்டிருந்தால் நான் இவ்வாறுதான் தீர்ப்பளித்திருப்பேன் என அலி அவர்களின் தீர்ப்பிற்கு மாற்றமானதோர் தீர்ப்பைக் கூறினார்கள். அவ்வாறிருந்தால் அலியின் தீர்ப்பை ஏன் நீங்கள் ரத்துச் செய்யவில்லை என வினவப்பட்டபோது அது அல்குர்ஆன் மற்றும் நபிமொழியில் கூறப்பட்ட தீர்ப்பாக இருந்தால் அதனை ரத்துச் செய்திருப்பேன். ஆனால் அவை அபிப்பிராயத்தின் அடிப்படையில் கூறப்படும் தீர்ப்புகளாகும், அவற்றில் எது சரி என்பதை அல்லாஹ்வே அறிந்தவன் என்றார்கள்.

**2-** சொத்துக்களை வைத்திருக்கும் உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட தொழிலை செய்யும் உரிமையும்: மேலும் எதன் முலம் உங்களில் சிலரை வேறு சிலரைவிட அல்லாஹ் மேன்மையாக்கி இருக்கின்றானோ, அதனை (அடையவேண்டுமென்று) பேராசை கொள்ளாதீர்கள். ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்த (வற்றில் உரிய) பங்குண்டு. (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித் (வற்றில் உரிய) பங்குண்டு. எனவே அல்லாஹ்விடம் அவன் அருளைக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப்

பொருட்களையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்." (நிஸா: 32)

**3-** அறிவைக் கற்கும் உரிமை: இஸ்லாம் இதனை ஒரு கடமையாக கணிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவைக் கற்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

**4-** இஸ்லாமிய வரையறைக்குட்பட்ட இப்பிரபஞ்சத்தில் இருக்கின்ற அனைத்து விளைச்சல்களினாலும் மனிதன் பலன்பெற முடியும் என்ற உரிமை வழங்கப்பட்டுள்ளது. (முல்க்: 15)

**5-** தலைமைத்துவத்திற்கு தகுதியும் பொருத்தமும் இருக்கின்ற எவருக்கும் சமூகத்தில் அப்பதவியினை வகிக்கும் உரிமையுண்டு. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் எவர் முஸ்லிம்களின் விடயங்களில் ஒன்றை பொறுப்பேற்று, அவர்களுக்கு தான் விரும்பும் ஒருவரை தலைவராக நியமிப்பாரானால் அல்லாஹ் அவனிடமிருந்து எதனையும் ஏற்றுக்கொள்ளமாட்டான், மாறாக அவனை நரகத்தில் நுழைவிப்பான். மேலும் எவன் அல்லாஹ்வின் பெயரில் பாதுகாப்பு வழங்கிவிட்டு, அந்த பாதுகாப்பில் எதையாவது சீர்குழைப்பானோ அவனின்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகிவிடும், அல்லது அல்லாஹ்வின் பொறுப்பு அவனைவிட்டும் நீங்கிவிடும். (அஹ்மத்: 8721)

தகுதியில்லாதவர்களுக்கு தலைமைத்துவத்தினை வழங்குவது உலக அழிவு அண்மித்திருப்பதை அறிவிக்கும் அமானித மோசடியாக இஸ்லாம் அடையாளப்படுத்தி இருக்கின்றது. நபி (ஸல்) அவர்கள்: "அமானிதம் வீணடிக்கப்பட்டால் மறுமை நாளை எதிர்பாருங்கள்"என்று கூறினார்கள். அதற்கு நபித்தோழர்கள்: அது எவ்வாறு வீணடிக்கப்படும் என்று வினவினர். அதற்கு நபியவர்கள்: தகுதியில்லாதவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலமாக என்று பதிலளித்தார்கள். (புகாரி: 6131)

ஏனைய மார்க்கங்களில் மதத் தலைவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களைப் போன்று இஸ்லாத்தில் எவருக்கும் தனிப்பட்ட அதிகாரம் கிடையாது. ஏனெனில் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில்

இடைத் தரகர்களை ஏற்படுத்துவதை இஸ்லாம் முற்றாகத் தகர்த்தெறிகின்றது. இணைவைப்பாளர்கள் வணக்க வழிபாடுகளில் இறைவனுக்கிடையில் இடைத்தரகர்களை ஏற்படுத்தியதை அருள்மறையில் இறைவன் கண்டிக்கும் போது: “அறிந்து கொள்வீராக! கலங்கமற்ற மார்க்க (வழபாடு யாவு) ம் அல்லாஹ்வுக்கே உரியது இன்னும், அவனையன்றிப் பாதுகாப்பாளர்களை எடுத்துக் கொண்டிருப்பவர்கள், அவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகே சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவேயன்றி நாங்கள் அவர்களை வணங்கவில்லை (என்கின்றனர்). அவர்கள் எதில் வேறுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அதைப்பற்றி நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்பான். பொய்யனாக நிராகரித்துக் கொண்டிருப்பவனை நிச்சயமாக அல்லாஹ் நேர்வழியில் செலுத்த மாட்டான்.” (ஸுமர்: 3).

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட இடைத்தரகர்கள் போலியானவை, அவற்றால் எவ்வித நன்மையோ தீமையோ ஏற்படப்போவதில்லை என்று இறைவன் தெளிவுபடுத்துகிறான். “நிச்சயமாக அல்லாஹ்வையன்றி எவர்களை நீங்கள் அழைக்கின்றீர்களோ, அவர்களும் உங்களைப் போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் நீங்கள் அவர்களை அழைத்துப் பாருங்கள் - அவர்கள் உங்களுக்கு பதில் அளிக்கட்டும்” (அஃராப்: 194).

இறைவனுக்கும் அடியார்களுக்கும் இடையில் நேரடித் தொடர்பு இருக்கவேண்டும் என்ற சிந்தனையை இஸ்லாம் விதைக்கின்றது. தேவைகளை முன்வைப்பது, பாவ மன்னிப்புத் தேடுவது, உதவி தேடுவது என்பனவற்றில் நேரடியாக இறைவனுடன் தொடர்பு கொள்வதன் மூலமே உண்மையான இறை விசுவாசம் ஏற்படுகின்றது. குற்றம் செய்தவன் அவன் எங்கிருந்தாலும் எந்த நிலையில் இருந்தாலும் இறைவனிடமே பாவமன்னிப்புத் தேடவேண்டும். “எவரேனும் ஒரு தீமையைச் செய்துவிட்டு, அல்லது தமக்குத் தாமே அநியாயம் செய்து பின்னர் அவர் (மனப்பூர்வமாக) அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பாரானால் - அவர் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும் மிக்க கருணை உடையவனாகவும் காண்பார். (நிஸா: 110)

இஸ்லாத்தில் ஒன்றை அங்கீகரிக்க அல்லது தடைசெய்ய அதிகாரம் பெற்றவர்கள் கிடையாது. அதுபோன்றுதான் இறைவனின் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு மார்க்கமயமாக்குவதற்கோ அல்லது புதுக்கொள்கைகளை உருவாக்கவோ மன்னிக்கவோ தான் நாடியவர்களுக்கு சுவனத்தைக் கொடுக்கவோ முடியாது. மார்க்கமயமாக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியதாகும்.

“அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும், தம் சந்நியாசிகளையும் மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர். ஆனால் அவர்களோ ஒரே இறைவனைத் தவிர (வேறெவரையும்) வணங்கக்கூடாதென்றே கட்டளையிடப்பட்டுள்ளார்கள்” என்ற இறைவசனத்திற்கு நபி (ஸல்) அவர்கள் விளக்கமளிக்கையில்: அவர்கள் அவர்களை வணங்கவில்லை மாறாக அவர்கள் ஹலால் என்று அங்கீகரித்தவற்றை ஏற்றுக்கொண்டனர், ஹராம் என்று தடைசெய்தவற்றை தவிர்ந்து நடந்தனர். என்று கூறினார்கள். (திர்மிதி: 3095)

## இஸ்லாமிய மார்க்கமும் ஷூரா எனும் கலந்தாலோசித்தலும்

ஆன்மிக விடயங்களிலும் உலக விடயங்களிலும் ஒன்றுகூடி கலந்தாலோசிப்பதை இஸ்லாம் வரவேற்கின்றது. “இன்னும் தங்கள் இறைவன் கட்டளைகளை ஏற்று தொழுகையை (ஒழுங்குப்படி) நிலைநிறுத்துவார்கள்- அன்றியும் தம் காரியங்களைத் தம்மிடையே கலந்தாலோசித்துக் கொள்வர். மேலும், நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (தானமாகச்) செலவு செய்வார்கள்.” (ஷூரா: 38)

கலந்தாலோசித்தல் என்பது இஸ்லாத்தில் வலியுறுத்தப்பட்ட அம்சமாகும். இதனால்தான் செயல்ரீதியாக அதனை நடைமுறைப்படுத்துமாறு இறைவன் நபியவர்களுக்கு கட்டளையிடுகின்றான். “சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும், பின்னர் (அவை பற்றி) நீர் முடிவு செய்து விட்டால் அல்லாஹ்வின் மீதே பொறுப்பு ஏற்படுத்துவீராக! - நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பு ஏற்படுத்துவோரை நேசிக்கின்றான்.” (ஆலுஇம்ரான்: 159)

கலந்தாலோசித்தல் மூலம் ஒரு சரியான தீர்வுக்கு வரமுடியும். இஸ்லாத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் இந்த அடிப்படையை நடைமுறைப்படுத்தியதாலேயே அவர்களின் உலக விடயங்களும் சீராக இருந்தன. உயர்நிலையை அடைந்தார்கள். எப்போது இதனை அவர்கள் விட்டுவிட்டார்களோ அப்போது அவர்களுக்கு வீழ்ச்சி ஏற்படத்தொடங்கியது.

மனித உறவுகள் சீர்பெற்று அவர்களின் உலகாயுத காரியங்கள் நிலையாக நடைபெற வேண்டும் என்பதற்கும் அவர்கள் ஆன்மீகரீதியான பலன்களை பெற்றிடவேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கிடையில் சில கடமைகளை ஏற்படுத்தியுள்ளன. பெற்றோர்களுக்கென்று சில கடமைகள் இருக்கின்றன, பிள்ளைகளுக்கென்று சில கடமைகள் இருக்கின்றன, சொந்தபந்தங்களுக்கென சில கடமைகள் இருக்கின்றன, அயலவர்களுக்கென சில கடமைகள் இருக்கின்றன, நண்பர்களுக்கென சில கடமைகள் இருக்கின்றன. “மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடம் உள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை.” (நிஸா: 36)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் மற்றொருவர் மீது பொறாமைகொள்ளவோ, கோபிக்கவோ வேண்டாம். வியாபாரத்தில் மோசடி செய்யவோ ஒருவர் மற்றவருக்கெதிராக சதித்திட்டம் தீட்டவோ வேண்டாம். ஒருவர் மற்றொருவருக்கெதிராக வியாபாரம் செய்யவும் வேண்டாம், அடியார்களாகிய நீங்கள் அனைவரும் சகோதரர்களாகிவிடுங்கள், ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான், அவனுக்கு அநீதி இழைக்கவோ மோசடி செய்யவோ அவனை தாழ்வாகக் கருதவோ மாட்டான், என்று கூறிய

நபியவர்கள் தனது உள்ளத்தை மூன்று முறை சைகை செய்து இங்குதான் பயபக்தி இருக்கின்றது என்றார்கள். உங்களில் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை தாழ்வாகக் கருதுவதே அவன் செய்கின்ற மிகப்பெரும் தீமையாகும். வேறொரு முஸ்லிமின் உயிர், மானம்,செல்வம் என்பன கண்ணியமானவையாகும். (முஸ்லிம்: 2564)

நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள்: 'நீங்கள் விரும்புகின்ற ஒன்றை உங்கள் சகோதர முஸ்லிமுக்கும் விரும்பாதவரை உங்களில் ஒருவர் பூரண முஸ்லிமாக முடியாது.' (புகாரி: 13)

இஸ்லாத்தை விரோதிப்பவர்களுக்கும் இஸ்லாம் உரிமைகளை வழங்குகின்றது. முஸ்அப் என்ற நபித்தோழரின் சகோதரர் அபூ உஸைத் என்பவரின் கூற்று இதற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். பத்ரு போரில் நான் சிறைக் கைதியாக பிடிக்கப்ட்டிருந்தேன், நபியவர்கள் கூறினார்கள்: 'கைதிகளுடன் இதமாக நடந்துகொள்ளுங்கள்'. அன்றைய தினம் நான் அன்சாரிகளுடன் இருந்தேன், அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டுவிட்டால், அவர்கள் நபிகளாரின் வேண்டுகோளுக்கு இணங்க பேரீத்தம் பழத்தை சாப்பிட்டுவிட்டு எனக்கு ரொட்டியைத் தருவார்கள் என்று கூறினார்கள்.

இன்னும் ஒரு படி மேலே சென்று ஜீவகாருன்யத்தைப்பற்றியும் பேசுகின்றது. பறவைகளுக்கான உரிமைகளையும் வழங்கியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் வீணாக ஒரு பறவையை கொலைசெய்கின்றாரோ, அப்பறவை மறுமைநாளில் இறைவனிடம் முறைப்பாடுசெய்யும், இறைவா இன்ன அடியான் என்னை வீணாக கொலைசெய்தான் பயன்பெறும் நோக்கில் அல்ல.' (இப்னு ஹிப்பான்: 5894)

குரைஷி வம்சத்தைச் சேர்ந்த சில வாலிபர்கள் ஓர் உயிருள்ள பறவையை இலக்காக வைத்து குறி தவறிய அம்புகள் பறவையின் சொந்தக்காரனிற்கு என்ற பந்தயத்தில் அம்பெறிந்துகொண்டிருந்தனர், அப்போது அங்கு சமுகமளித்த நபித்தோழர் இப்னு உமர் (ரலி) அவர்கள்: யார் இதனைச் செய்தவர்? அவருக்கு இறைவனின் சாபம் இருக்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருள்ள ஒரு

ஜீவனை வைத்து விளையாடுபவனை சபித்துள்ளார்கள் என்று கூறினார்கள். (முஸ்லிம்: 1958)

பசியின்கொடுமையால் முள்ளும் தோலுமாக இருந்த ஓர் ஒட்டகத்தைப் பார்த்த நபியவர்கள்: இப்பிராணிகளின் விடயத்தில் அல்லாஹ்வை பயந்துகொள்ளங்கள். அவை நன்றாக இருக்கும் போதுதான் நீங்கள் அவைகளில் ஏறிப் பயணம் செய்யவேண்டும். ஆரோக்கிமாக இக்கும்போதுதான் அவற்றை அறுத்துச் சாப்பிட வேண்டும் என்றார்கள். (இப்னு குஸைமா: 2545)

இஸ்லாம் ஒரு மனிதன் தன் சமூகத்துக்கும் ஒரு சமூகம் அதன் அங்கத்தவர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளை நிர்ணயித்துள்ளது. தனிமனிதன் தன் சமூகத்திற்காகவும், ஒரு சமூகம் அதன் அங்கத்துவ நபர்களுக்காகவும் பாடுபடவேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு இறைவிசுவாசியை மற்ற விசுவாசியுடன் ஒப்பிடும்போது ஒரு பகுதி மற்ற பகுதியைத் தாங்கிநிற்கும் கட்டிடத்தைப்போன்றாகும் என்று கூறிய பின்னர் நபி (ஸல்) அவர்கள் தங்கள் விரல்களை ஒன்றோடொன்று சேர்த்திக்காட்டினார்கள். (புகாரி: 481)

இஸ்லாத்தின் பார்வையில் தனிநபர் நலனா? அல்லது பொது நலனா? என்று பிரச்சினை தோன்றுகின்ற போது தனிநபர் நலனைவிட பொது நலனுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. உதாரணமாக பாதையோரத்தில் பாதசாரிகளுக்கு ஆபத்து விளைவிக்கும் விதமாக ஒரு கட்டிடமிருந்தால் அல்லது பாதை விஸ்தரிப்புக்காக ஒரு கட்டிடத்தை இடிக்க வேண்டிவந்தால் பொதுநலன் கருதி கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு நஷ்டஈட்டைக் கொடுத்துவிட்டு அதனை உடைப்பதற்கு அனுமதியுண்டு.

சமுரா என்ற நபித்தோழருக்கு அன்சாரிகளைச் சேர்ந்த ஒருவரின் தோட்டத்தில் பேரீத்தம்பழத் தோப்பொன்றிருந்தது. அந்த மனிதன் குடும்பத்துடன் இருந்ததால் சமுரா (ரலி) அவர்கள் தன் தோப்புக்கு செல்வது அம்மனிதனுக்கு இடையூறாக இருந்தது, எனவே அத்தோட்டத்தை தனக்கு விற்குமாறு அம்மனிதர் கோரினார், ஆனால்

சமுரா (ரலி) அதனை மறுத்துவிட்டர், வேறு இடத்திற்கு மாற்றுமாறு கூற அதனையும் மறுக்கவே விடயம் நபி (ஸல்) அவ்ாகளிடம் செல்கின்றது. நபி (ஸல்) அவர்களும் அதனை விற்பனை செய்யுமாறு அல்லது அதனை வேறு இடத்திற்கு மாற்றுமாறு கேட்டுக்கொண்டார்கள். அதனையும் சமுரா மறுத்துவிட்டார். பின்னர் நபியவர்களுக்கு தர்மமாக வழங்குமாறும் அதற்கு இன்ன நற்கூலி உமக்கு கிடைத்துவிடும் என்றும் கூறினார்கள். அதற்கும் அவர் மறுத்துவிடவே அவரின் ஈத்தம் மரங்களைப் பிடுங்கிவிடுமாறு நபியவர்கள் கட்டளையிட்டார்கள். (பைஹகி: 11603)

இஸ்லாம் கருணை, நளினம், பாசம் என்பவற்றைப் போதிக்கும் மார்க்கமாகும். அதன் போதனைகளில் கடினமான போக்கு கிடையாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரக்க சிந்தையுள்ளவர்களுக்கு இறைவன் இரக்கம் காட்டுகின்றான். பூமியில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுபவர்களுக்கு வானில் உள்ளவன் இரக்கம் காட்டுகின்றான். உறவுகள் இறைவனிடமிந்து வந்தவையாகும். யார் அவற்றுடன் சேர்ந்து நடக்கின்றாரோ இறைவனும் அவர்களுடன் சேர்ந்து நடக்கின்றான். யார் அவற்றை துண்டித்து நடக்கின்றானோ இறைவனும் அவனை துண்டித்து நடக்கின்றான்.

இஸ்லாம் போதிக்கும் கருணை, பாசம் என்பன வெறுமனே மனிதர்களுக்கு மாத்திரமல்ல, அவை ஏனைய ஜீவன்களுடனும் இருக்கவேண்டும்.

இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு பூனையின் விடயத்தில் ஒரு பெண் வேதனைசெய்யப்பட்டாள், அதற்கு எவ்வித உணவும் பாணமும் வழங்கவில்லை, சுயமாக அது உணவுதேட விடவுமில்லை, மரணமாகும் வரை அதை அடைத்து வைத்திருந்ததாள், அதனால் நரகத்தினுள் நுழைந்துவிட்டாள். (புகாரி: 3295)

மிருகங்களுக்கு இரக்கம் காட்டுவதை மனிதனின் பாவமன்னிப்பிற்குரிய காரணியாக, சுவனம் நுழைவதற்கான செயலாக இஸ்லாம் அடையாளப்படுத்துகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கடுமையான தாகத்தில் இருந்த ஒரு மனிதன் பாதையோரமாக இருந்த

கிணறொன்றில் இறங்கி தன் தாகத்தைப் போக்கிவிட்டு வெளியே வரும்போது ஒரு நாய் தாகத்தால் தவித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். எனக்கு எற்பட்ட தாகத்தைப்போன்றுதான் இந்த ஜீவனுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்று உடனே கிணற்றில் இறங்கிய அவன் தன் பாதணியில் நீரை நிரப்பி அந்த நாயின் தாகத்தைப் போக்கினான். இறைவன் அவனுக்கு நன்றி செலுத்தி அவனின் பாவத்தை மன்னித்துவிட்டான். நபி (ஸல்) அவர்கள் இச்சம்பவத்தைக் கூறியதும் கூடியிருந்த நபித்தோழர்கள் மிருகங்களை பராமரிப்பதற்கும் நற்கூலி இருக்கின்றதா என்று வினவினார்கள், ஆம். ஒவ்வொரு உயிர் ஜீவனுக்கும் கூலியுண்டு என நபியவர்கள் பதிலளித்தார்கள். (புகாரி: 2334)

மிருகங்களுடன் இப்படியான கருணையை இஸ்லாம் வலியுறுத்துகின்றதென்றால் அனைத்து படைப்பினங்களைவிட இறைவன் மேன்மைப்படுத்திய மனிதனுடன் எப்படிப்பட்ட கருணையுடன் நடக்கவேண்டும். "நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம் இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு (ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களைத் (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்." (இஸ்ரா: 70)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வீண்விரயம், பெருமை என்பவற்றைத் தவிர்த்து நீங்கள் உண்ணுங்கள், பருகுங்கள், தானதருமங்கள் செய்யுங்கள், இறைவனின் அருட்கொடைகள் தன் அடியானிடம் தென்படவேண்டுமென இறைவன் விரும்புகிறான். (ஹாகிம்: 7188)

கட்டுப்பாடின்றி உலகவிடயங்களில் மூழ்கிக்கிடப்பதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. மார்க்கம் உலக காரியங்கள் என்பவற்றுக்கிடையில் ஒரு நடுத்தரமான வாழ்வை இஸ்லாம் கூறுகின்றது. ஒன்று மற்றொன்றை மிகைத்துவிடாது இருக்கட்டும். உலகவிடயங்களில் மூழ்கிக்கிடக்கும் ஒரு முஸ்லிம் இறைவன் அவன் மீது விதியாக்கியுள்ள வழிபாடுகளை செய்வதினூடாக தன் ஆன்மீகத்தேவையை நிவர்த்தி செய்து கொள்கின்றான்.

இறைவன் கூறுகின்றான்: "ஈமான் கொண்டவர்களே! ஜுமுஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள் - நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும்." (ஜும்ஆ: 9)

அதேபோன்று அவன் வழிபாடுகளில் மூழ்கிக் கிடக்கும் போது சம்பாதிக்க வேண்டும் என்ற உணர்வு அவனுக்கு ஏற்படவேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. "பின்னர், (ஜு முஆ) தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டதும், (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள், அன்றியும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யுங்கள்." (ஜும்ஆ: 10)

நாம் மேலே கூறிய இரு பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளவர்களை இஸ்லாம் உயரிய மனிதர்களாக அடையாளப்படுத்துகின்றது. "அவர்கள் செய்த (நற்செயல்களுக்கு) மிக அழகானதை அவர்களுக்கு அல்லாஹ் கூலியாகக் கொடுப்பதற்காகவும், அவனுடைய நல்லருளைக் கொண்டு (அவன் கொடுப்பதை) மேலும் அவன் அதிகப்படுத்துவதற்காகவும் (பயபக்தியுடன் இருப்பார்கள்.) மேலும் அல்லாஹ், தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றிக் கொடுக்கிறான்." (நூர்: 38)

இஸ்லாம் உயிர், உடல், என்பவற்றின் உரிமையைப் பேணிப் பாதுகாக்கும் ஒரு தெய்வீகச் சட்டக்கொள்ளையை முன்வைக்கின்றது. அதில் அத்துமீறலோ தரக்குறைச்சலோ இல்லை. "எவர் அணுவளவேனும் நன்மை செய்கின்றாரோ அதனையும் அவர் (மறுமையில்) காண்பார். மேலும் எவர் அணுவளவேனும் தீமை செய்கின்றாரோ அதனையும் அவர் (மறுமையில்) காண்பார்." (ஸல்ஸலா: 8 - 9) என்று இறைவன் கூறுகின்றான். எப்படி மனிதன் தனக்கும் தான் செய்கின்ற எல்லா நடவடிக்கைகளுக்கும் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளானோ அதேபோன்று தனக்கு இறைவன் அளித்துள்ள உணவு, பானம், ஆடை, குடும்பவாழ்வு, என்பற்றை அனுபவித்து தன் உடலுக்கு செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளான்.

இறைவன் கூறுவது போன்று: “(நபியே!) நீர் கேட்பீராக அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்? இன்னும் கூறும் அவை இவ்வுலக வாழ்க்கையில் நம்பிக்கையாளர்களுக்கு (அனுமதிக்கப்பட்டவையே, எனினும் மறுமையில்) அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவையாகவும் இருக்கும் இவ்வாறு நாம் நம் வசனங்களை அறியக்கூடிய மக்களுக்கு விவரிக்கின்றோம்.” (அஃராப்: 32)

மனிதனின் புத்தி, உடல், செல்வம், அவன் சார்ந்திருக்கும் சமூகம் என்பவற்றிற்கு கேடுவிளைவிக்கும் விடயங்களையே இஸ்லாம் தடைசெய்கின்றது. இஸ்லாத்தின் பார்வையில் மனித ஆன்மா படைக்கப்பட்டது, ஏக இறைவனை வணங்கி அவனின் மார்க்கத்தை நடைமுறைப்படுத்தி பூமியில் மனித பரம்பரையை சிறப்பாக கொண்டுசெல்வதற்காகவே.

எனவே இஸ்லாம் அனுமதித்த காரணங்களுக்காகவே தவிர அந்த ஆத்மாவை அழிக்கும் உரிமை யாருக்கும் கிடையாது. ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பொருத்தமாக இறைவன் அழகிய உடலைப் படைத்திருப்பது அந்த உடலை வழிபாடுகள், உரிமைகள், கடமைகள், செழிப்பாக நிர்வகித்தல் இறைக்கட்டளைகளை இம்மனிதன் செவ்வனே நிறைவேற்றவேண்டும் என்பதற்கே. “திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்.” (தீன்: 4)

இதனால்தான் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டவிதத்தில் இவ்வுடலை பேணிப் பாதுகாக்க வேண்டும் என இறைவன் கட்டளையிடுகின்றான்.

1- உடலை சுத்தமாக வைத்துக்கொள்வது. “பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான். இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்.” (பகரா: 222) உடல் சுத்தத்தைப் பேணும் விதமாக தினமும் ஒவ்வொரு முஸ்லிமும் நிறைவேற்றவேண்டிய ஐவேளைத் தொழுகையின் முதல் நிபந்தனையாக வுழூ

செய்யவேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுத்திமின்றி தொழுகை ஏற்கப்படமாட்டாது. (முஸ்லிம்: 224)

மேலும் ஸ்கலிதம் ஏற்பட்டவர் குளிக்கவேண்டுமென இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. “நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து (த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து) க் கொள்ளுங்கள்.” (மாயிதா: 6)

சில முக்கியமான அனுஷ்டானங்களுக்கு குளிக்கவேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. உதாரணம்: ஜும்ஆத் தொழுகை, பெருநாள், ஹஜ், உம்ரா.

**2-** சுத்தம் பேணல்: இஸ்லாத்தின் பல போதனைகளில் சுத்தம் பேணப்பட்டுள்ளது.

உணவு உட்கொள்ளும் முன்னரும் பின்னரும் கைகளைக் கழுவுதல்,நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உணவின் விஸ்தீரணம் அபிவிருத்தி அதனை உட்கொள்ளமுன்னரும் உட்கொண்டபின்னரும் கைகளைக் கழுவிக்கொள்வதில்தான் இருக்கின்றது. உணவு உட்கொண்ட பின்னர் வாயைச் சுத்தப்படுத்தி பல்துலக்குவதனை ஆர்வமூட்டுவதன் மூலம் பற்கள், நாவு என்பவற்றின் சுத்தம் பேணப்பகின்றது. என் சமூகத்திற்கு சிரமமில்லை என்றிருந்தால் ஒவ்வொரு தொழுகைக்கும் பல்துலக்குவதை நான் கட்டாயப் படுத்தியிருப்பேன். (முஸ்லிம்: 252)

கழிவுகள் ஒன்று சேர்ந்து கிருமிகள் பரவுவதனை தடுப்பதற்கு சில பகுதிகளை நீக்குமாறும், அவசியம் சுத்தம்செய்யுமாறும் இஸ்லாம் பணிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விருத்தசேதனம் செய்வது, மர்ம உறுப்பின் முடியைக் களைந்திட சவரக் கத்தியை உபயோகிப்பது, அக்குள் முடிகளை அகற்றுவது, நகங்களை வெட்டிக் கொள்வது, மீசையைக் கத்தரித்துக்கொள்வது ஆகிய இந்த ஐந்து விஷயங்களும் இயற்கை மரபுகளில் அடங்கும். (புகாரி: 5889)

**3-** நல்ல உணவுகளையும் பானங்களையும் உட்கொள்ளல். **“**நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள் நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்.**”** (பகரா: 172) நல்ல உணவுகள் என்பதற்கு பின்வரும் அளவுகோல்களை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது:

- உடலிற்குத் தீங்கை ஏற்படுத்தாதிருத்தல்.
- வீண் விரயத்தைத் தவிர்த்தல்.

இறைவன் கூறுகின்றான்: **“**ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அலங்கரித்துக் கொள்ளுங்கள். உண்ணுங்கள், பருகுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை.**”** (அஃராப் 31)

மனிதனின் ஆரோக்கியமான நல்ல உணவுப் பழக்கவழக்கத்தினை பின்வருமாறு நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதன் நிரப்பும் பைகளில் அவனின் வயிற்றைவிட மோசமான ஒன்று இருக்கமுடியாது, மனிதன் நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு போதுமான சில பிடிகள் உனக்குப் போதுமாகும். அப்படித்தான் அவசியமாக இருந்தால் உன் வயிற்றின் மூன்றில் ஒரு பகுதியை உணவிற்கும் மற்றொரு பகுதியை பாணத்திற்கும் மற்றொரு பகுதியை காற்றிற்கும் வைத்துக்கொள். (இப்னு ஹிப்பான்: 4236)

**4-** மனித உடலுக்கு தீங்கை ஏற்படுத்தும் அனைத்துவிதமான உணவு மற்றும் பாணங்களை இஸ்லாம் தடைசெய்கின்றது. அவற்றில் இறந்தவை, இரத்தம், பன்றியின் இறைச்சி, மதுபானம், போதைப்பொருட்கள், புகைத்தல் என்பன குறிப்பிடத் தக்கவையாகும். உடல் ஆரோக்கியம் கருதியே இவை தடைசெய்யப்பட்டுள்ளன. இறைவன் கூறுகின்றான்:

“தானாகவே செத்தது, இரத்தம், பன்றியின் மாமிசம், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப்பட்டது ஆகியவைகளைத்தான் உங்கள் மீது ஹராமாக ஆக்கியிருக்கிறான். ஆனால் எவரேனும் பாவம் செய்யாத நிலையில் - வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் கருணைமிக்கோனும், மன்னிப்பவனுமாக இருக்கின்றான்.” (பகரா: 173)

பிரிதோர் இடத்தில்: “ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.

நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா?” (மாயிதா: 90 - 91)

**5-** மல்யுத்தம் போன்ற உடற் பயிற்சிகளை ஏற்படுத்தும் பயனுள்ள விளையாட்டுக்களை இஸ்லாம் ஊக்குவித்துள்ளது. ருகானா என்ற நபித்தோழருடன் நபி (ஸல்) அவர்கள் மல்யுத்தம் செய்து காட்டினார்கள். (ஹாகிம்: 5903) தன் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) அவர்களுடனும் ஓட்டப்பந்தயம் நடத்தினார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் நபியவர்களுடன் ஓட்டப்பந்தயம் நடத்தி நான் முதலிடத்தைப் பெற்றேன். சில காலங்களுக்குப் பிறகு திரும்பவும் நபியவர்களுடன் ஓட்டப்பந்தயம் வைத்தேன் அப்போது நான் சற்று கொழுத்திருந்ததனால் நபியவர்கள் வெற்றிபெற்றார்கள். பின்னர்: அன்று நீ என்னை ஜெயித்தற்கு இது ஈடாகிவிட்டது என்று கூறினார்கள். (இப்னு ஹிப்பான்: 4691)

இஸ்லாமிய சாம்ரஜ்யத்தின் இரண்டாவது கலீபா உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் பிள்ளைகளுக்கு நீச்சல், அம்பெய்தல், குதிரை சவாரி என்பவற்றைக் கற்றுக்கொடுங்கள்.

**6-** நோயுற்ற சமயங்களில் சிகிச்சசைகளை மேற்கொள்ள நபியவர்கள் கூறியுள்ளர்கள்: இறைவன் தான் நோயையும் அதற்கான நிவாரணத்தையும் படைத்துள்ளான். எனவே சிகிச்சை செய்யுங்கள் தடுக்கப்பட்டவற்றினைக்கொண்டு சிகிச்சை செய்யாதீர்கள்.

**7-** இறைவனை வணங்கி வழிப்படுவதை உளப்போஷனையாக இஸ்லாம் ஏற்படுத்தி உள அமைதியின்மை உடலில் ஏற்படும் நோய்கள் என்பவற்றை இல்லாதொழிக்கின்றது.

இறைவன் கூறுகின்றான்: **“**(நேர் வழி பெறும்) அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தாம் (முற்றிலும்) ஈமான் கொண்டவர்கள் மேலும், அல்லாஹ்வை நினைவு கூர்வதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க!**”** (ரஃத்: 28)

உடலை பராமரிப்பின்றி விட்டுவிடுவதை, அதற்கு அவசியமான போஷனைகள், ஓய்வு மற்றும் பாலியல் தேவைகள் போன்ற உரிமைகளை வழங்காமல் இருப்பதையும் இஸ்லாம் வன்மையாக கண்டிக்கின்றது. அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்களின் துணைவியரின் வீடுகளுக்கு மூன்று பேர் கொண்ட குழுவினர் வந்து நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் குறித்து வினாத் தொடுத்தனர். அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட போது, அவர்கள் நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகளைக் குறைத்து மதிப்பிட்டது போல் தெரிந்தது. பிறகு (அவர்களே அதற்குச் சமாதானமும் கூறிக்கொண்டு),முன் பின் தவறுகள் மன்னிக்கப்பட்டுவிட்ட நபி (ஸல்) அவர்கள் எங்கே? நாம் எங்கே என்று சொல்லிக்கொண்டனர். அவர்களில் ஒருவர், (இனிமேல்) நான் என்ன செய்யப்போகிறேன் என்றால், எப்போதும் இரவில் தொழுதுகொண்டே

இருக்கப்போகிறேன்என்றார். இன்னொருவர்,நான் ஒருநாள் கூட விடாமல் காலமெல்லாம் நோன்பு நோற்கப்போகிறேன். என்று கூறினார். மூன்றாம் நபர்நான் பெண்களைவிட்டும் ஒதுங்கியிருக்கப் போகிறேன்என்று கூறினார். ஒருபோதும் மணந்துகொள்ளமாட்டேன்என்று கூறினார். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், (அந்தத் தோழர்களிடம்) வந்து,இப்படி இப்படியெல்லாம் பேசிக்கொண்டது நீங்கள்தாமே! அறிந்து கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களை விட அதிகமாக நான் அல்லாஹ்வை அஞ்சுபவன் ஆவேன். அல்லாஹ்வைப் பயந்து நடப்பவன் ஆவேன். ஆயினும், நான் நோன்பு நோற்கவும் செய்கிறேன், விட்டுவிடவும் செய்கிறேன். தொழவும் செய்கிறேன், உறங்கவும் செய்கிறேன். மேலும், நான் பெண்களை மணமுடித்தும் உள்ளேன். எனவே, என் வழிமுறையை கைவிடுகிறவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்என்று கூறினார்கள். (புகாரி: 5063)

இஸ்லாம் கல்வியின் முக்கியத்துவத்தை அதிகமாக போதித்த மார்க்கமாகும். இறைவன் கேட்கின்றான்: “எவர் மறுமையை அஞ்சி தன் இறைவனுடைய ரஹ்மத்தை ஆதரவு வைத்து இராக்காலங்களில் ஸுஜூது செய்தவராகவும், நிலையில் நின்றவராகவும் வணங்குகிறாரோ அவர் (நிராகரிப்பவரைப் போல்) ஆவாரா? (நபியே!) நீர் கூறும் அறிந்தோரும், அறியாதோரும் சமமாவார்களா? நிச்சயமாக (இக் குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோர் அறிவுடையவர்கள் தாம். (ஸுமர்: 9)

அறியாமை, மடமை என்பவற்றின் சொந்தக்காரர்களையும் தாழ்த்திப் பேசுகின்றது. “அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடாமல் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.” (பகரா: 67)

மார்க்கம் மற்றும் வாழ்வின் அவசியங்கள் என்பவற்றை ஆலிம்கள் ஒவ்வொருவரும் கற்றுத்தான் ஆகவேண்டும் என்றும் மற்றும் சில கல்வியறிவினை ஒரு சமூகத்தில் குறைந்தது ஒரு சாராராவது கற்றிருக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றது. உலகவிடயங்களில் அறிவை மாத்திரமே அதிகப்படுத்திக் கேட்குமாறு இறைவன் அவனது தூதருக்கு கட்டளையிடுகின்றான். “இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப் படுத்துவாயாக! என்றும் நீர் பிரார்த்தனை செய்வீராக!” (தாஹா: 114)

இஸ்லாம் அறிவையும் அறிவுடையவர்களையும் கண்ணியப்படுத்துகிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் பெரியவர்களுக்கு கண்ணியம் செலுத்தவில்லையோ, சிறியவர்களுக்கு இரக்கம் காட்டவில்லையோ, எங்களில் அறிவுள்ளவர்களுக்கான கண்ணியத்தைத் தரவில்லையோ அவர் எனது சமூகத்தசை் சார்ந்தவரல்ல. (அஹ்மத்: 22807)

கல்வி கற்றவனுக்கு இஸ்லாம் உயரியதொரு அந்தஸ்தையும் இடத்தையும் வழங்கியுள்ளது. உங்களில் தாழ்ந்த ஒருவருக்கும் எனக்குமிடையில் உள்ள வித்தியாசத்தைப்போன்றதான் கல்வியறிவில்லாத வணக்கசாலியைவிட உங்களில் கல்விகற்றவருக்குள்ள சிறப்பு என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி: 2685)

இஸ்லாம் அறிவை பாரெங்கும் பரப்பி இருள்நீக்குவதற்காக அறிவைத் தேடுவதனையும் அதை கற்று கற்றுக்கொடுப்பதனையும் ஜிஹாத் எனும் அறப்போராகவும் சுவனம் செல்லும் பாதையாகவும் கணிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் அறிவைத் தேடும் நோக்கில் வெளியாகிச் செல்கின்றாரோ அவர் திரும்பி வரும்வரை இறைவனின் பாதையில் இருக்கின்றார். (திர்மிதி: 2647)

மேலும் கூறினார்கள்: யார் அறிவைத் தேடும் நோக்கில் ஒரு வழியில் செல்கின்றாரோ அல்லாஹ் அவனுக்கு சுவனத்திற்கு செல்லும் பாதையை இலகுபடுத்திக் கொடுக்கின்றான். யார் நல்லறங்கள் செய்வதில் தாமதிக்கின்றாரோ அவரின் குலம் அவரை முன்னே அழைத்துச் செல்லமாட்டாது.

மார்க்கக் கல்வியை மாத்திரம் இஸ்லாம் ஆர்வமூட்டவில்லை. ஏனைய அறிவியல் துறைகளிலும் மனிதன் ஈடுபடவேண்டும் என்று கூறுவதுடன் அதனை நன்மைபயக்கும் ஒரு வணக்கமாகக் கருதுகின்றது. -சமூகத்தில் ஒரு சாராரேனும் அவசியம் கற்றிடவேண்டும் என்று நாம் மேலே குறிப்பிட்டது இந்த அறிவியல் துறைகளாகும்- இது போன்று விஞ்ஞானத்துறைகள் மனிதனின் அத்தியவசியத்தேவைகளில் ஒரு பகுதியாக இருப்பதே இதற்கான காரணம். இறைவன் கூறுகிறான்: “நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்குவதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாமே அதனைக் கொண்டு

பல விதமான நிறங்களுடைய கனிகளை வெளியாக்கினோம். மலைகளிலிருந்து வெண்மையானதும், சிவந்ததும், தன் நிறங்கள் பற்பல விதமானவையான பாதைகளும் சுத்தக் கரிய நிறமுடையனவும் உள்ளன. இவ்வாறே மனிதர்களிலும், ஊர்வனவற்றிலும், கால் நடைகளிலும், பல நிறங்கள் இருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் -ஆலிம்கள் (அறிஞர்கள்) தாம். நிச்சயமாக அல்லாஹ் யாவரையும் மிகைத்தவன் மிக மன்னிப்பவன்.” (பாதிர்: 27-28)

மேற்கூறிய வசனங்கள் மனிதனின் சிந்தனையை தூண்டிவிட்டு இவ்வுலகத்தைப் படைத்துப் பரிபாலிக்கும் ஓர் இரட்சகன் இருக்கின்றான் என்பதனை சிந்திக்கவைப்பதுடன் அவன் படைத்திருப்பவற்றிலிருந்து மனிதன் பயன்பெறவேண்டுமென்று இறைவன் அழைப்புவிடுக்கின்றான். இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிஞர்கள் வெறுமனே மார்க்க அறிஞர்கள் மாத்திரம் கிடையாது, இப்பாரில் இறைவன் ஏற்படுத்தியிருக்கும் இரகசியங்களைக் கண்டுபிடிக்க ஆற்றல் பெற்ற விஞ்ஞானிகளையும் குறிக்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. உதாரணமாக வானிலை பற்றிய தகவல்களை அறிய அவசியமான வானியல் கலைகளைக் கற்கவேண்டும். பயிர்செய்கையை திறம்படச் செய்வதற்கு தாவரவியல் பற்றிய அறிவு இருக்கவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு அறிவியலிலும் ஒரு சாரார் ஈடுகட்டபடவேண்டும் என்று இஸ்லாம் எதிர்பார்க்கின்றது.

மனிதன் சதாவும் இறைக்கண்காணிப்பில் இருக்கின்றான் என்ற உணர்வை ஒவ்வொரு முஸ்லிமிடமும் இஸ்லாம் ஏற்படுத்துகின்றது. இதனால் அவனுடைய சொல் செயல்கள் இறைவனின் திருப் பொருத்தத்தைப் பெறவும் அவனுக்கு வெறுப்பான காரியங்களை செய்யாமல் இருக்கவும் முனைகின்றான்.

இறைவன் பார்த்துக்கொண்டிருகின்றான் என்று அவன் உறுதியாக அறிகின்றமையினால் இறைக்கட்டளைகளை சரிவர நிறைவேற்றி அவன் தடுத்தவற்றை விட்டும் தவிர்ந்து நடக்கின்றான். ஒரு முஸ்லிம் திருடுவதை விடுகின்றான் என்றால் இறையச்சத்தினால்தான் அவன் தவறை விடுகின்றானே தவிர பாதுகாப்பு ஊழியர்கள் பற்றிய பயத்தினால்

அல்ல. இப்படி இஸ்லாத்தின் போதனைகள் அனைத்திலும் ஒரு முஸ்லிமின் உள்ளுணர்வுகளும் வெளித்தோற்றமும் ஒற்றுமையாக வளர்கின்றன. “(நபியே!) நீர் உரக்கச்சொன்னாலும் நிச்சயமாக அவன் இரகசியத்தையும் (அதை விட) மறைவானதையும் அறிகிறான்.” (தாஹா: 7)

நபி (ஸல்) அவர்கள் ‘இஹ்ஸான்’ பற்றிக் கூறும் போது: ‘நீ இறைவனைப் பார்ப்பதுபோல அவனை வணங்கவேண்டும், நீ அவனை பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான். என்று கூறினார்கள்.’ (புகாரி: 50)

இறையச்சம் ஏற்படுவதற்கான வழிகள்:-

1- இறையச்சத்தில் நடைபெறுகின்ற சகல விடயங்களையும் அறிந்த பூரணமான அனைத்து பண்புகளையுமுடைய ஒரே இறைவனை நம்பவேண்டும். அவன் நினைத்ததைத் தவிர வேறொன்றும் நடைபெறமாட்டாது.

இறைவன் கூறுகின்றான்:“நீங்கள் எங்கிருந்த போதிலும் அவன் உங்களுடனே இருக்கிறான் - அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்வதை உற்று நோக்கியவனாக இருக்கிறான்.” (ஹதீத்: 4)

2- அவனின் அறிவு மனிதனின் புலன்களை உணர முடியுமான வற்றைத்தாண்டி அந்த உள்ளத்தில் தோன்றும் விடயங்களையும் அறியும் வல்லமையுடையதாகும். “மேலும் நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம், அவன் மனம் அவனிடம் என்ன பேசுகிறது என்பதையும் நாம் அறிவோம் அன்றியும், (அவன்) பிடரி (யிலுள்ள உயிர்) நரம்பை விட நாம் அவனுக்கு சமீபமாகவே இருக்கின்றோம்.” (காப்: 16)

3- படைப்பினங்கள் அனைத்தும் ஒரு தினத்தில் திரும்பவும் எழுப்பப்பட்டு ஓர் இடத்தில் ஒன்று திரட்டப்படும் என்பதை நம்பவேண்டும்

அத்தினத்தில் கேள்விகணக்கு கேட்கப்படும் என்பதை நம்பவேண்டும். ஒவ்வொருவரும் அன்றைய தினம்

தான் இவ்வுலகில் செய்த சிறிய, பெரிய, நல்ல, தீய விடயங்களைப்பற்றியும் பிரயோகித்த வார்த்தைகள்பற்றியும் இறைவனின் சன்னிதானத்தின் முன் விசாரிக்கப்படும். நல்லறங்களுக்கு நற்கூலியும், தீய காரியங்களுக்கான தண்டனையும் வழங்கப்படும். (அவ்வாறு அறிவிக்குமாறு) உம்முடைய இறைவன் அதற்கு வஹீ மூலம் அறிவித்ததனால். “அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள். எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத (ற்குரிய பல) னை அவர் கண்டு கொள்வார்.” (ஸல்ஸலா: 5-7)

4- இறைவனுக்கும் அவனது தூதருக்கும் வழிப்படுவதற்கே முன்னுரிமை வழங்கி, உலக மக்கள் அனைவரைவிடவும் அவ்விருவரையும் நேசித்தல். அவர்கள் யாராயினும் சரியே. “(நபியே!) நீர் கூறும் உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்கு பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை) க் கொண்டுவருவதை எதிர்பார்த்து இருங்கள்- அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை.” (தவ்பா: 24)

இஸ்லாமிய கோட்பாட்டின்படி மனிதன் செய்யும் நல்லறங்களுக்கான நற்கூலிகள் பன்மடங்குகளாக வழங்கப்படும். ஆனால் அவன் செய்யும் தீமைகளுக்கோ குற்றத்திற்கேற்ற தண்டனையே வழங்கப்படும். “எவர் ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதுபோல் பத்துப் பங்கு (நன்மை) உண்டு. எவர் ஒருவர் (ஒரு) தீமையைச் செய்கிறாரோ அதைப் போன்ற

அளவுடைய கூலியே கொடுக்கப்படுவார் - அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள்.” (அன்ஆம்: 160)

மனிதனின் நோக்கத்திற்கேற்பவே நற்கூலி வழங்கப்படும் அவன் ஒரு நல்ல காரியத்தை செய்ய நினைத்து அதனை செய்யத் தவறினாலும் அதற்கான கூலி கிடைக்கின்றது. அதேபோன்று ஒரு பாவமான விடயத்தை செய்யநினைத்த ஒரு முஸ்லிம் இறைவனின் தண்டனையை பயந்து அதனை செய்யாது விட்டுவிட்டால், அதற்கும் நற்கூலியிருக்கின்றது. ஏனெனில் இறையச்சத்தினாலே அவன் அதனை விடுவிட்டான்.

அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் நன்மைகளையும் தீமைகளையும் (அவை இன்னின்னவை என நிர்ணயித்து) எழுதிவிட்டான். பிறகு அதனை விவரித்தான். அதாவது ஒருவர் ஒரு நன்மை செய்யவேண்டும் என (மனதில்) எண்ணிவிட்டாலே அதைச் செயல்படுத்தாவிட்டாலும் அவருக்காகத் தன்னிடம் அதை ஒரு முழு நன்மையாக அல்லாஹ் பதிவு செய்கிறான். அதை அவர் எண்ணியதுடன் செயல்படுத்தியும்விட்டால், அந்த ஒரு நன்மையைத் தன்னிடம் பத்து நன்மைகளாக, எழு நூறு மடங்காக, இன்னும் அதிகமாக அல்லாஹ் பதிவு செய்கிறான். ஆனால் ஒருவர் ஒரு தீமை செய்ய எண்ணி, (அல்லாஹ்வுக்கு அஞ்சி) அதைச் செய்யாமல் கைவிட்டால், அதற்காக அவருக்குத் தன்னிடம் ஒரு முழு நன்மையை அல்லாஹ் எழுதுகிறான். எண்ணியபடி அந்தத்தீமையை அவர் செய்து முடித்துவிட்டாலோ, அதற்காக ஒரேயொரு குற்றத்தையே அல்லாஹ் எழுதுகிறான். (புகாரி: 6491)

இஸ்லாத்தின் வரையரைக்குட்பட்ட தூய எண்ணத்துடன் கூடிய மனித ஆசாபாசங்களுக்கு நற்கூலி வழங்கப்படுகின்றது. மனிதன் உண்ணும் போதும் பாணங்களை அருந்தும் போதும் தன் மேனியை ஆரோக்கியமாக பாதுகாப்பதையும் இஸ்லாம் அனுமதித்த சம்பாத்தியத்தை செய்து இறைவன் தன்மீது விதித்த வழிபாடுகளை நிறைவேற்றுவதையும் தன் மனைவி மக்களுக்கு செலவு செய்வதையும் குறிக்கோலாகக் கொண்டால் அதற்கும் நற்கூலி வழங்கப்படும். நபி (ஸல்) அவ்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதன் இறைவனின்

நற்கூலியைநாடி தன் குடும்பத்தாருக்கு செலவு செய்வதும் தான தர்மமாகும். (புகாரி: 55)

அதேபோன்று அவன் தன்னைப் பக்குவப்படுத்தி இறைவன் தடைசெய்த வழிகளில் சென்றுவிடாமல் இறைவன் அனுமதித்த முறையில் தன் மனைவியுடன் குடும்ப வாழ்வில் ஈடுபடுவதும் நற்கூலி வழங்கப்படும் வணக்கமாகும். நீங்கள் குடும்ப வாழ்வில் ஈடுபடுவது தானதர்மமாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய போது குழுமியிருந்த தோழர்கள் கேட்டார்கள் எங்களில் ஒருவர் தன் இச்சையைத் தீர்த்துக்கொள்வதற்குமா கூலி வழங்கப்படும்? நபியவர்கள் கூறினார்கள்: அவன் அனுமதிக்கப்படாத வழியில் தன் இச்சையைத் தீர்த்திருந்தால் தீமை கொடுக்கப்படுவது போன்று அவன் அனுமதிக்கப்பட்ட வழியில் செய்ததால் அதற்கு கூலியிருக்கின்றது. (முஸ்லிம்: 1006)

ஒரு முஸ்லிம் தூய எண்ணத்துடன் செய்கின்ற சகல செயற்பாடுகளுக்கும் அவனுக்கு தர்மமாக அமைகின்றன. தர்மம் செய்வது எல்லா முஸ்லிமின் மீதும் கடமையாகும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள், (தர்மம் செய்ய ஏதும்) கிடைக்கவில்லையானால்? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள்,தம் இரண்டு கைகளால் உழைத்துத் தாமும் பயனடைவார் தர்மம் செய் (து பிறரையும் பயனடையச் செய்) வார் என்று கூறினார்கள். மக்கள், அவருக்கு (உழைக்க உடலில்) தெம்பு இல்லையானால் அல்லது அதை அவர் செய்யாவிட்டால் (என்ன செய்வது?) என்று கேட்டனர். நபி (ஸல்) அவர்கள்,பாதிக்கப்பட்ட தேவையாளிக்கு அவர் உதவட்டும் என்றார்கள். மக்கள், (இதை இயலாமையாலோ சோம்பலினாலோ) அவர் செய்யவில்லையானால் (என்ன செய்வது?) என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள்,அப்போது அவர் நல்லதை அல்லது நற்செயலை(ச் செய்யும்படி பிறரை) அவர் ஏவட்டும் என்றார்கள். (இதையும்) அவர் செய்யாவிட்டால்? என்று கேட்டதற்கு, நபி (ஸல்) அவர்கள்,அவர் தீங்கு செய்யாமல் இருக்கட்டும். அதுவே அவருக்கு தர்மம் ஆகும் என்றார்கள். (புகாரி: 6022)

இஸ்லாமிய மார்க்கத்தில் குற்றம் செய்த பாவிகள் தாம் செய்த

குற்றத்தையிட்டு மனம் வருந்தி திரும்பவும் அக்குற்றத்தை செய்ய மாட்டோம் என் மன உறுதியுடன் பாவமன்னிப்புக் கோரும் போது அவர்களின் பாவங்கள் நல்லறங்களாக மாற்றப்படுகின்றன. “ஆனால் (அவர்களில் எவர்) தவ்பா செய்து ஈமானும் கொண்டு, ஸாலிஹான (நற்) செய்கைகள் செய்கிறார்களோ - அவர்களுடைய பாவங்களை அல்லாஹ் நன்மையாக மாற்றிவிடுவான். மேலும், அல்லாஹ் மிக்க மன்னிப்போனாகவும், மிக்க கிருபையுடையோனாகவும் இருக்கின்றான்.” (புர்கான்: 70)

ஆனால் இம்மன்னிப்பு இறைவனின் கடமைகளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகும். மனிதர்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்கான பரிகாரத்தை அவர்களிடமே பெற்றிடவேண்டும். அவர்கள் மன்னித்தாலே அப்பாவம் மன்னிக்கப்படும்.

இஸ்லாமிய சட்டதிட்டங்கள் பாவமன்னிப்பின் வாயிலைத் திறந்து குற்றவாளியின் மன உலைச்சலை நீக்குகின்றது. இதனால் அவன் திருந்தி வாழ எத்தனிக்கின்றான். “வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட என் அடியார்களே! அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் நீங்கள் நம்பிக்கையிழக்க வேண்டாம்- நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான்- நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்க கருணையுடையவன் (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக.” (ஸுமர்: 53)

இஸ்லாம் பாவமீட்சி என்பதை எவ்வித சிரமமுமின்றி இலகுவில் அடைந்து கொள்ளும் விடயமாக மாற்றியது. “எவரேனும் ஒரு தீமையைச் செய்துவிட்டு, அல்லது தமக்குத் தாமே அநியாயம் செய்து பின்னர் அவர் (மனப்பூர்வமாக) அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்பாரானால் - அவர் அல்லாஹ்வை மன்னிப்பவனாகவும் மிக்க கருணை உடையவனாகவும் காண்பார். எவன் பாவத்தைச் சம்பாதிக்கிறானோ அவன் தனக்குக் கேடாகவே அதை நிச்சயமாக சம்பாதிக்கிறான். அல்லாஹ் (யாவற்றையும்) அறிந்தவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.” (நிஸா: 110 - 111)

நாம் மேலே குறிப்பிட்டவை பரம்பரை முஸ்லிம்களுடன் இஸ்லாத்தின்

அனுகுமுறையாகும். ஆனால் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு இரண்டு விதமான கூலிகள் இருக்கின்றன. ஒன்று அவர்கள் ஏற்கனவே ஒரு தூதரை விசுவாசித்தமைக்காக, மற்றது முஹம்மத் நபியவர்களின் தூதுத்துவத்தை ஏற்று நம்பியமை.

“இதற்கு முன்னர் எவர்களுக்கு நாம் வேதத்தைக் கொடுத்திருக்கிறோமோ அவர்களும் இதன் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். மேலும் (இது) அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால், அவர்கள் நாங்கள் இதை நம்புகிறோம். நிச்சயமாக இது நம்முடைய இறைவனிடமிருந்து வந்துள்ள சத்திய (வசன) மாகும், இதற்கு முன்னரே நாங்கள் (இறைவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாகவே இருந்தோம் என்று கூறுகிறார்கள். இவர்கள் பொறுமை மேற்கொண்டமைக்காக இறைவனால் நற்கூலி அளிக்கப்படுவார்கள். மேலும், இவர்கள் நன்மையைக் கொண்டு தீமையைத் தடுத்துக் கொள்வார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து (தானம் தருமங்களில்) செலவும் செய்வார்கள்.” (கஸஸ்: 52 - 54)

அத்துடன் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு அவர்கள் செய்த குற்றங்கள் அனைத்திற்கும் இறைவன் பொதுமன்னிப்பை வழங்குகின்றான். அம்ர் பின் ஆஸ் என்ற நபித்தோழர் இஸ்லாத்தை ஏற்று நபியவர்களிடம் உறுதிமொழி அளிக்கின்றபோது: “நான் முன்பு செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட வேண்டும் என்றார். அம்ரே ஒரு மனிதன் இஸ்லாத்தை ஏற்றால் அது அவனின் முன்னைய பாவங்கள் அனைத்தையும் உடைத்தெரிந்துவிடும் என்பது உமக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள். (முஸ்லிம்: 121)

இஸ்லாத்தில் மரணிக்கும் ஒரு மனிதன் இவ்வுலக வாழ்வில் அவன் விட்டுச்சென்ற சில கிரியைகளினால் அவனுடைய மரணத்தின் பின்பும் அதற்கான கூலிகள் தொடர்ந்து அவனை அடைந்துகொண்டிருக்கின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓர் அடியான் மரணித்துவிட்டால் அவனின் சகல கிரியைகளும் நின்றுவிடுகின்றன, மூன்று விடயங்களைத்தவிர: நிரந்தரமாக பயனளிக்கும் விதத்தில் அவன் செய்த தர்மம், பயனளிக்கும் கல்வி, அவனுக்கு பிரார்த்தனை புரியும் சிறந்த பிள்ளை. (முஸ்லிம்: 1631)

மேலும் கூறினார்கள்: யார் ஒரு நேர்வழியின்பக்கம் அழைப்புவிடுக்கின்றாரோ, அவ்வழியில் செல்பவர்களுக்கு வழங்கப்படும் நற்கூலியைப்போன்று எவ்விதக் குறைச்சலுமின்றி அவருக்கும் வழங்கப்படும். மேலும் யார் ஒரு வழிகேட்டின் பக்கம் அழைக்கின்றாரோ அவ்வழியில் செல்பவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை போன்று எவ்விதக் குறையுமின்றி அவனுக்கும் வழங்கப்படும். இதுபோன்ற போதனைகளினால் சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு முஸ்லிமும் தான் நல்ல செயற்களையே செய்யவேண்டும் நல்ல விடயத்திற்கு ஒத்தசையாக இருக்கவேண்டும், அதன் பக்கம் மனிதர்களை அழைக்க வேண்டும், என்று தான் சார்ந்த சமூகத்தை சீராகவைத்திட பாடுபடுகின்றான், ஆர்வம்கொள்கின்றான், அவனுடைய ஏட்டில் எவ்விதத் தீமையும் எழுதப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்காக குரல்கொடுத்து அதை இல்லாதொழிக்க பாடுபடுகின்றான்.

இஸ்லாம் மனித அறிவையும் சிந்தனையையும் கண்ணியப்படுத்தி அதன் மூலம் அவன் சிந்தித்து செயல்பட வேண்டும் என்று எதிர் பார்க்கின்றது. “முஃமின்களுக்கு நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் அத்தாட்சிகள் இருக்கின்றன. இன்னும் உங்களைப் படைத்திருப்பதிலும், அவன் உயிர்ப் பிராணிகளைப் பரப்பியிருப்பதிலும் (நம்பிக்கையில்) உறுதியுள்ள சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. மேலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும், வானத்திலிருந்து அருள் மாரியை அல்லாஹ் இறக்கி வைத்து, இறந்து போன பூமியை அதைக் கொண்டு உயிர்ப்பிப்பதிலும் காற்றுகளை மாறி மாறி வீசச்செய்வதிலும் அறிவுடைய சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன.” (ஜாஸியா: 3 - 5)

இவ்வாறு பெரும்பான்மையான அல் குர்ஆன் வசனங்கள் மனித சிந்தனையுடன் உரையாடுகின்றன. அவர்கள் புத்துணர்ச்சி பெறக்கூடாதா! அவர்கள் ஆய்வு செய்யக்கூடாதா! அவர்கள் சிந்திக்கக்கூடாதா! அவர்கள் அறியக்கூடாதா! என்று எழுப்புகின்றன.

மனிதன் பார்க்கின்ற அவன் புலன்களினால் உணர்கின்ற அனைத்திலும் அவன் சிந்தனையை சுதந்திரமாக பயன்படுத்திட இஸ்லாம்

அனுமதியளிக்கின்றது. ஆனால் மனித புலன்களினால் உணர முடியாத இஸ்லாம் கூறுகின்ற (மறுமை போன்ற) மறைவான விடயங்களில் அவன் சிந்தனைக்கு இடம் கிடையாது. அவன் சிந்தனையால் அதனை அடைந்திடவும் முடியாது என்கிறது. அப்படி சிந்திப்பதினால் அவன் சக்தியே வீணாகிப் போகின்றது.

இஸ்லாம் மனித சிந்தனையை கண்ணியப்படுத்துவதற்கு மிகச்சிறந்த உதாரணம் ஒரு மனிதன் அறிவின்றி, ஆதாரமின்றி கண்மூடித்தனமாக ஒருவரை பின்பற்றுவதை அது முழுமையாக எதிர்க்கின்றது. அதனை மிகப்பெரிய குறையாகக் கூறுகின்றது. “மேலும், ‘அல்லாஹ் இறக்கிவைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்’ என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் ‘அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்’ என்று கூறுகிறார்கள். என்ன! அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காதவர்களாகவும், நேர்வழிபெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா? (பின்பற்றுவர்).” (பகரா: 170)

இஸ்லாம் இயற்கையான மார்க்கமாகும். அது இறைவன் ஏற்படுத்திய மனித இயல்புகளுடன் எவ்விதத்திலும் மோதிட மாட்டாது. இறைவன் கூறுகின்றான்: “எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும்.” (ரூம்: 30)

ஆனால் ஒரு மனிதன் இருக்கின்ற சுற்றுப்புறச் சூழல் காரணங்களினால் இந்த இயல்பான (இஸ்லாத்தை இயல்பாக நம்புகின்ற) தன்மையிலிருந்து சிலவேளை தடம்புரள்கின்றான். நபியவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு பிள்ளையும் இவ்வுலகில் பிறக்கின்றபோது இயல்பாக இஸ்லாத்தை ஏற்கும் மனோபாவத்துடனே பிறக்கின்றன. அவர்களின் தாய் தந்தையர்களே அவர்களை யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக அல்லது நெருப்பு வணங்கிகளாக மாற்றுகின்றனர்.

இஸ்லாமே நேரான பாதை. அல்குர்ஆன் கூறுவது போன்று: “(நபியே!) நீர் கூறும் மெய்யாகவே என் இறைவன் எனக்கு

நேரான பாதையின் பால் வழி காட்டினான் - அது மிக்க உறுதியான மார்க்கமாகும் இப்றாஹீமின் நேர்மையான மார்க்கமுமாகும், அவர் இணைவைப்பவர்களில் ஒருவராக இருக்கவில்லை." (அன்ஆம்: 161).

மனித அறிவுக்குப் பொருந்தாத ஒன்றும் இஸ்லாத்தில் இல்லை. நடுநிலையான எவருடைய அறிவும் இஸ்லாம் முன்வைத்த கொள்கைதான் சத்தியமானதும் பொருத்தமானதும் பயனுள்ளதும் என்பதை ஒப்புக்கொள்ளும்.

இஸ்லாத்தின் அனைத்துக் கட்டளைகளிலும் அது தடுத்தவற்றிலும் நீதம் இருக்கின்றது. அதனால் எவருக்கும் அநியாயம் நிகழ மாட்டாது. ஒன்றை ஏவியிருந்தால் நிச்சயமாக அதில் நன்மை இருக்கும், ஒன்றை தடைசெய்திருந்தால் நிச்சயமாக அது தெளிவான தீமையாகத்தான் இருக்கும். அல்லது அதில் இருக்கும் நலவைவிட கெடுதி அதிகமாக இருக்கும். குர்ஆனையும் நபிவழியையும் ஆராயும் ஒவ்வொருவருக்கும் இது அப்பட்டமாக புலன்படுகின்றது.

இஸ்லாம் மனித உள்ளத்தில் யதார்த்தமான தெய்வீக கொள்கையை பன்படுத்துகிறது. ஒரே இறைவனைத்தவிர வேறு எவருக்கும் அடியானாக இருப்பதை முற்றாகக் கண்டிக்கின்றது. அவர் இறைவனால் அனுப்பட்ட தீர்க்கதரிசியாக இருப்பினும் சரியே. அல்லது அவனுக்கு நெருக்கமான வானவராக இருப்பினும் சரியே.

இதன்மூலம் ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் இறைவனைத்தவிர வேறு எவருக்கும் அஞ்சும் உணர்வையும், அவனைத்தவிர வேறு எவரும் செய்வதற்கு அல்லது பயனளிப்பதற்கு ஆற்றலுடையவர்கள் என்ற நம்பிக்கையையும் இல்லாதொழித்து அவனிடத்தில் உறுதியான நம்பிக்கையை வளர்க்கின்றது. "(எனினும் முஷ்ரிக்குகள்) அவனையன்றி (வேறு) தெய்வங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் - அவர்கள் எந்தப் பொருளையும் படைக்கமாட்டார்கள் (ஏனெனில்) அவர்களே படைக்கப்பட்டவர்கள். இன்னும் அவர்கள் தங்களுக்கு நன்மை செய்து கொள்ளவோ தீமையை தடுத்துக் கொள்ளவோ சக்திபெற மாட்டார்கள் மேலும் அவர்கள் உயிர்ப்பிக்கவோ, மரிக்கச் செய்யவோ, மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பவோ, இயலாதவர்களாகவும் இருக்கின்றனர்." (புர்கான்: 3)

அனைத்தும் இறைவனின் கைவசமே இருக்கின்றன. “அல்லாஹ்வின் மீது பொய் கூறுபவன் அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்ப்பிக்க முற்படுபவன் - இவர்களைவிட மிக அநியாயம் செய்பவர் யார்? பாவம் செய்பவர்கள் நிச்சயமாக வெற்றியடைய மாட்டார்கள்.” (யூனுஸ்: 17)

இறைவனிடம் உயரிய அந்தஸ்தும் கண்ணியமும் ஓர் இறைத்தூதருக்கே இருக்கின்றது. எனினும் இறைவன் தன் தூதரைப் பார்த்துக் கூறுகின்றான்: “(நபியே!), அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன் மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன் (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை. நீர் கூறும்” (அஃராப்: 188).

ஒரு தூதரின் நிலையே இவ்வாறிருந்தால் மற்ற மனிதர்களின் நிலை எவ்வாறிருக்கும்?

இஸ்லாம் மனித உள்ளத்தில் ஏற்படும் பயம், கலக்கம், தடுமாற்றம் போன்றவற்றை பின்வரும் காரணிகளினால் கையாளுகின்றது:

**மரணம் பற்றிய அச்சமிருந்தால்** இறைவன் கூறுகின்றான்: “மேலும், எந்த ஆன்மாவும் (முன்னரே) எழுதப்பட்டிருக்கும் தவணைக்கு இணங்க, அல்லாஹ்வின் அனுமதியின்றி, மரணிப்பதில்லை.” (ஆலு இம்ரான்: 145)

மனிதன் மரணத்தைவிட்டும் விரண்டோட எவ்வளவுதான் நினைத்த போதிலும் இறைவன் கூறுகின்றான்: “நீங்கள் எதை விட்டும் விரன்டு ஓடுகிறீர்களோ, அந்த மரணம் நிச்சயமாக உங்களை சந்திக்கும், பிறகு, மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிந்தவனிடம் நீங்கள் கொண்டு மீட்டப்படுவீர்கள் - அப்பால், அவன் நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி உங்களுக்கு அறிவிப்பான் (என்று) (நபியே!) நீர் கூறுவீராக.” (ஜும்ஆ: 8)

**வறுமை, கஷ்டம் என்பவற்றின் மீது பயமிருந்தால்** இறைவன் கூறுகின்றான்: "இன்னும், உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்ளாத எந்த உயிரினமும் பூமியில் இல்லை. மேலும் அவை வாழும் இடத்தையும் (இருக்கும்) இடத்தையும், அவை (மடிந்து) அடங்கும் இடத்தையும் அவன் அறிகிறான். இவையனைத்தும் (லவ்ஹுல் மஹ்ஃபூல் என்னும்) தெளிவான புத்தகத்தில் (பதிவாகி) இருக்கின்றன." (ஹூத்: 6)

**நோய், சோதனைகள் பற்றிய பயம்** இறைவன் கூறுகின்றான்: "பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை, நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்." (ஹதீத்: 22)

ஏனைய படைப்பினங்களினால் ஏற்படும் கெடுதிகள் பற்றிய பயமா? நபியவர்கள் கூறினார்கள்: நீ உன் இரட்சகனைக் காத்துக்கொள் உன்னை அவன் பாதுகாப்பான், அவனை பாதுகாத்துக்கொள் உன் முன்னால் அவனைக் கண்டுகொள்வாய், நீ நன்றாக இருக்கின்ற போது அவனை நினைவு கூரு, உனக்கு துன்பம் ஏற்படும் போது அவன் உன்னை நினைவு கூர்வான், நீ கேட்டால் அல்லாஹ்விடமே கேள், உதவி தேடினாலும் அவனிடமே உதவிதேடு, நடக்கவிருப்பவை அனைத்தும் தீர்மானிக்கப்பட்டுவிட்டன. இறைவனின் தீர்மானமின்றி மக்களால் எவ்விதத்திலும் எனக்கு பயனளிக்க முடியாது, மேலும் அவர்கள் எவ்வளவு முயன்றாலும் உனக்கென்று எழுதாத ஒன்றை உனக்கு ஏற்படுத்தி தீங்குசெய்திட முடியாது, உறுதியான நம்பிக்கையுடன் பொறுமையாக உனக்கு நல்லறங்கள் செய்யமுடியுமெனின் அவ்வாறு செய்துகொள், அவ்வாறு முடியாவிட்டால் பொறுமையைக் கடைப்பிடித்துக்கொள், நீ விரும்பாவிட்டாலும் பொறுமையைக் கடைபிடிப்பதில்தான் நிறைய நன்மைகள் இருக்கின்றன. பொறுமைக்குத்தான் இறைவன் உதவுகின்றான், துன்பத்துடன்தான் இன்பம் இருக்கின்றது என்பதை அறிந்துகொள், மேலும் கஷ்டத்துடன்தான் இலேசி இருக்கின்றது. (ஹாகிம்: 6303)

இஸ்லாம், மார்க்க விடயங்களிலும் உலக விடயங்களிலும்

நடுநிலையைப் பேணும் ஒரு மார்க்கமாகும். “இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையான உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம்.” (பகரா: 143)

அது இலகுவானதும் எளிதானதுமான மார்க்கமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் என்னை கஷ்டப்படுத்துவதற்காகவோ கஷ்டத்தை விரும்புவனாகவோ அனுப்பவில்லை. மார்க்கத்தைக் கற்றுக்கொடுப்பவனாகவும் இலகுபடுத்துபவனாகவுமே நான் அனுப்பட்டுள்ளேன். (முஸ்லிம்: 1732)

இது தயாளம், மன்னிப்பு, நளினம் போன்ற பண்புகளை தன்னகத்தே கொண்ட மார்க்கமாகும். நபி (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: யூதர்களில் ஒரு குழுவினர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, அஸ்ஸாமு அலைக்கும் (உங்களுக்கு மரணம் உண்டாகட்டும்) என்று (சற்றே மாற்றி சலாம்) கூறினர். அவர்கள் கூறியதைப் புரிந்துகொண்ட நான் அவர்களுக்கு அலைக்கும் அஸ்ஸாமு வல்லஅனா (அவ்வாறே உங்களின் மீது மரணமும் சாபமும் உண்டாகட்டும்) என்றேன். அப்போது இறைத்தூ தர் (ஸல்) அவர்கள்,ஆயிஷா! நிதானம்! எல்லா விஷயங்களிலும் நளினத்தைக் கையாளுவதையே அல்லாஹ் விரும்புகிறான் என்று கூறினார்கள். அப்போது நான், இறைத்தூதர் அவர்களே! அவர்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா? என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள்,நான்தான் வஅலைக்கும் (அவ்வாறே உங்களுக்கு உண்டாகட்டும்) என்று சொல்லிவிட்டேனே! (அதை நீ கவனிக்கவில்லையா?) என்று கேட்டார்கள். (புகாரி: 6024)

இம்மார்க்கம் எப்போதும் மனிதர்களுக்கு நலவையே விரும்புகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்களில் இறைவனுக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் மக்களுக்கு அதிகம் பயனுள்ளவராவார். செயற்களில் அவனுக்கு மிக விருப்பமானது ஒரு முஸ்லிமை ஆனந்தப்படுத்துவது, அல்லது அவனுடைய துன்பத்தை நீக்குவது, அல்லது அவன் கடனை நிறைவேற்றுவது, அல்லது அவன் பட்டினியைப் போக்குவது, ஒரு சகோதர முஸ்லிமின் தேவையை நிறைவேற்ற நடந்து செல்வது ஒரு மாதகாலம் பள்ளிவாயலில்

தியானத்தில் இருப்பதைவிட எனக்கு மிக விருப்பமானதாகும், யார் தன் கோபத்தைக் கட்டுப்படுத்துகின்றாரோ, அவரின் வெட்கத்தலத்தினை இறைவன் மறைக்கின்றான், மேலும் மறுமைநாளில் இறைவனின் திருப் பொருத்தத்தினால் அவர் உள்ளத்தை நிரப்பிவிடுகின்றான், யார் தன் சகோதர முஸ்லிமின் தேவையின் நிமித்தம் நடந்துசென்று அதனை நிறைவேற்றிக் கொடுக்கின்றாரோ, பாதங்கள் சருகும் மறுமைநாளில் இறைவன் அவன் பாதங்களை நிலைப்படுத்துவான், தேனை வினாக்கிரி பழுதடையச் செய்வதைப்போன்று தீய குணமும் ஒரு மனிதனின் நல்லறங்களை அழித்துவிடும். (தபராணி - ஸஹீஹுல் ஜாமிஉ)

இஸ்லாம் நடுநிலையைப் பேணும் மார்க்கமாகும், அதில் சக்திக்கு மீறிய கஷ்டம், துன்பம் இருக்கமுடியாது. இறைவன் கூறுகின்றான்: “அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தை கொடுப்பதில்லை. அது சம்பாதித்ததின் நன்மை அதற்கே, அது சம்பாதித்த தீமையும் அதற்கே!” (பகரா: 286).

இஸ்லாமிய சட்டங்கள் இந்தப் போக்கினை அடிப்படையாகக் கொண்டுதான் அமைந்துள்ளன. நபியவர்கள் கூறுகின்றார்கள்: நான் தடுத்தவற்றைத் தவிர்ந்துகொள்ளுங்கள், நான் ஏவியவற்றை உங்கள் சக்திக்கு ஏற்ப நடைமுறைப் படுத்துங்கள், உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அழிவுக்குக் உட்படுத்தப்பட்டதெல்லாம் அளவுகடந்த அவர்களின் கேள்விகளினாலும் அவர்களின் நபிமார்களுடன் கொண்ட கருத்து முரண்பாடுகளினாலுமாகும். (முஸ்லிம்: 1337)

இஸ்லாத்தின் அனைத்து சட்டங்களும் வணக்க வழிபாடுகளும் மனித சக்திக்கு உட்பட்டவாறே அமைந்துள்ளன. அத்தோடு சில சந்தர்ப்பங்களில் அக்கடமைகள் நீங்கிவிடுகின்றதையும் பார்க்கமுடியும்.

சக்தியுள்ளவர்கள் நின்று தொழவேண்டும் என்பது கடமையாகும், எனினும் நின்று தொழ சக்தியற்றவர்கள் அமர்ந்த வண்ணம் தொழுகையை நிறைவேற்றமுடியும், அதற்கு முடியாதவர்கள் சாய்ந்தவண்ணம் தொழலாம், அதற்கும் சக்திபெறாதவர்கள் சமிக்ஞை மூலம் தொழுகையை நிறைவேற்ற முடிகின்றது.

குறிப்பிட்ட தொகை பணத்தை எட்டாதவர்கள் ஸகாத் எனும் ஏழைவரி கொடுக்கத் தேவையில்லை, மாறாக அவர்கள் ஸக்காத்துக்குத் தகுதியானவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஸகாத் வழங்கப்படும்.

நோயுள்ளவர், கர்ப்பிணித் தாய், மாதவிடாய் காலத்தில் இருப்போர் நோன்பு நோற்கத் தேவையில்லை.

ஏழை மற்றும் உடல்நிலை பலவீனமானவர்கள் மீது ஹஜ் கடமை விதியாகமாட்டாது. "இன்னும் அதற்கு(ச் செல்வதற்கு)ரிய பாதையில் பயணம் செய்ய சக்தி பெற்றிருக்கும் மனிதர்களுக்கு அல்லாஹ்வுக்காக அவ்வீடு சென்று ஹஜ் செய்வது கடமையாகும்." (ஆலு இம்ரான்: 97)

மனிதன் தன்மீது அழிவை, மரணத்தை அஞ்சும் அளவிற்கு நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாக்கப்பட்டால் இறைவன் தடைசெய்த இறந்தவை, பன்றியிறைச்சி, மதுபானம் என்பவற்றை தன் உயிரைக் காப்பாற்றத் தேவையான அளவு உட்கொள்ள முடியும். "நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள் நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்." (பகரா: 172).

இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும் ஸையித் குதுப் என்ற அறிஞர் இப்படிக் கூறுகின்றார்: மனிதனை மிருகமாகவோ பரிசுத்த வானவராகவோ இருந்திடாமல் ஒரு சாதாரண படைப்பாகப் பார்க்கும் கொள்கை இதுதான். இவற்றில் அவனது பலவீனம் தாங்கியிருக்கின்றது? எவ்விடயத்தினை அவனால் முழுமையாக செய்யமுடிகின்றது என்பதை கருத்திற் கொண்டு அவன் கஷ்டங்களை எதிர்நோக்காதவாறு கடமைகளை அவன்மீது சுமத்துகின்றது.

இறைவனால் இறக்கப்பட்ட ஏனைய மார்க்கங்களை ஒரு முஸ்லிம் விசுவாசித்து கண்ணியப்படுத்திட வேண்டும். மேலும் ஏற்கனவே அனுப்பட்ட தீர்க்கதரிசிகளின் மீது உகப்புவைத்து, சங்கை செய்யவேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிடுகின்றது. "யார் அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்கள் மீதும் ஈமான் கொண்டு, அத்தூ

தர்களில் எவரையும் பிரித்துப் பாகுபாடு செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்களுடைய நற்கூலியை (அல்லாஹ்) அவர்களுக்குக் கொடுப்பான். அல்லாஹ் மன்னிப்பவனாகவும் மிக்க கருணையுடையோனாகவும் இருக்கின்றான்." (நிஸா: 150)

மற்றவர்களின் மார்க்கங்களை வஞ்சிப்பதையும் தூற்றுவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றது. "அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவோரை நீங்கள் திட்டாதீர்கள் (அப்படித் திட்டினால்) அவர்கள் அறிவில்லாமல், (வரம்பை மீறி) அல்லாஹ்வைத் திட்டுவார்கள் -" (அன்ஆம்: 108)

மாற்றுக்கருத்துள்ள சகோதரர்களுடன் நளினமாகவும் சாதூரியத்துடனும் விவாதிக்க வேண்டும் என்கின்றது. "(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியைவிட்டுத் தவறியவர்களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான்." (நஹ்ல்: 125).

ஒன்றுபட்ட அனைவருக்கும் பொதுப்படையான தெய்வீகக் கோட்பாட்டினை வெளிப்படுத்தும் உரையாடலின்பால் அழைப்பு விடுக்கின்றது. "(நபியே! அவர்களிடம்) வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம். அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம் அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுள்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம் எனக் கூறும். (முஃமின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கனித்து விட்டால் நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்! என்று நீங்கள் கூறிவிடுங்கள்." (ஆலு இம்ரான்: 64)

இஸ்லாம் என்பது சமாதானத்தின் மார்க்கமாகும். இந்த

சமாதானம் ஒரு முஸ்லிம் சார்ந்திருக்கும் சமூகம் என்ற தரத்திலும் பேணப்படுகின்றது. இதனை நபியவர்கள் கூறும் போது: உண்மையான இறை விசுவாசி யாரென்றால், அவனால் மற்றவர்களின் உடமைகளுக்கும் உயிர்களுக்கும் எவ்வித ஆபத்தும் தொந்தரவும் இருக்கமாட்டாது. ஒரு முஸ்லிமின் நாவினாலும் கரத்தினாலும் மற்றவர்களுக்கு தொந்தரவு இருக்கமாட்டாது. உண்மையான தியாகி யார் தெரியுமா? இறை வழிபாட்டில் தன் ஆன்மாவுடன் போராடியவராவார். மேலும் முஹாஜிர் என்பவர் குற்றமிழைப்பதை விட்டுவிடுபவராவார். (இப்னு ஹிப்பான்: 4862)

அதே போன்று இஸ்லாம் முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்குமிடையில் அத்துமீறல்களைத் தவிர்த்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் நெருங்கிய இணைப்புகளை ஏற்படுத்தி உலகலாவிய ரீதியல் சமாதானத்தைப் பேணுகின்றது. அதிலும் விஷேடமாக மார்க்கத்தைக் கேலிசெய்யாத அதனைப் பரப்புவதற்குத் தடையாக இருக்காத சமூகங்களுடன் இப்பிணைப்புகள் நிறையவே காணப்படவேண்டும் என்கின்றது. “நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தீனுல் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்துவிடுங்கள். தவிர ஷைத்தானுடைய அடிச்சவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான்.” (பகரா: 208)

சமாதானத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்காக அநியாயத்திற்கும் அட்டூழியத்திற்கும் எதிராக குரல்கொடுக்குமாறு போதிக்கின்றது. “எவனாவது (அம்மாதத்தில்) உங்களுக்கு எதிராக வரம்பு மீறி நடந்தால், உங்கள் மேல் அவன் எவ்வளவு வரம்பு மீறியுள்ளானோ அதே அளவு நீங்கள் அவன் மேல் வரம்பு மீறுங்கள்.” (பகரா: 194)

இஸ்லாம் சமாதானத்தின் மீது கொண்ட பேராவலின் காரணமாகவே யுத்தத்திலும் எதிரிகள் சமாதானத்தை வேண்டிக்கொண்டால் அதனையும் ஏற்குமாறு முஸ்லிம்களுக்கு கட்டளையிடுகின்றது. “அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்து (இணங்கி) வந்தால், நீங்களும் அதன் பக்கம் சாய்வீராக! அல்லாஹ்வின் மீதே உறுதியான நம்பிக்கை வைப்பீராக - நிச்சயமாக அவன் (எல்லாவற்றையும்)

செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்.” (அன்பால்: 61)

எனினும் அவ்வாறு விட்டுக்கொடுப்பதினால் அவர்கள் சுய கௌரவத்தை விட்டுக்கொடுப்பதை விரும்பவில்லை, சமாதானத்தைப் பேணுவதுடன் அவர் இழிவடைந்து விடாமல் தங்கள் கௌரவத்தையும் பாதுகாக்குமாறு கட்டளையிடுகின்றது. “(முஃமின்களே! போரில்) நீங்கள் தளர்ச்சியடைந்து, தைரியமிழந்து சமாதானத்தைக் கோராதீர்கள். (ஏனென்றால்) நீங்கள் தாம் மேலோங்குபவர்கள் அல்லாஹ் உங்களுடனேயே இருக்கின்றான் - மேலும், அவன் உங்கள் (நற்) செய்கைகளை உங்களுக்கு (ஒரு போதும்) குறைத்து விடமாட்டான்.” (முஹம்மத்: 35)

இஸ்லாத்தினை ஏற்குமாறு எவரையும் வற்புறுத்த முடியாது. எவ்வித வற்புறுத்தலும் கட்டாயப்படுத்தலும் இன்றி முழு மனதுடனே ஒருவர் அதனை ஏற்கவேண்டும். இஸ்லாத்தையும் அதன் போதனைகளையும் பரப்புவதில் கட்டாயப்படுதல் என்று ஒன்று கிடையாது. இறைவன் அதனை கண்டிக்கின்றான். “(இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது.” (பகரா: 256).

மக்களுக்கு உண்மையான கொள்கை எடுத்துச் சொல்லப்பட்டபின் அதனை ஏற்பதும் மறுப்பதும் அவர்களின் சுயவிருப்பிலே இருக்கின்றது. அதுதான் மனித உரிமையும்கூட. “(நபியே!) இன்னும் இந்தச் சத்திய (வேதம்) உங்கள் இறைவனிடமிருந்து (வந்து) ள்ளது ஆகவே, விரும்புபவர் (அதனை) ஏற்றுக் கொள்ளட்டும், விரும்புபவர் அதனை நிராகரிக்கட்டும் என்று நீர் கூறுவீராக. (கஹ்ப்: 29)

ஏனெனில் நேர்வழி என்பது இறைவன் கைவசமே இருக்கின்றது. “மேலும், உம் இறைவன் நாடியிருந்தால், பூமியிலுள்ள யாவருமே ஈமான் கொண்டிருப்பார்கள் எனவே, மனிதர்கள் யாவரும் முஃமின்களாக (நம்பிக்கை கொண்டோராக) ஆகிவிடவேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா?” (யூனுஸ்: 99)

வேதம் கொடுக்கப்பட்டவர்களில் இஸ்லாத்தை ஏற்க மறுப்பவர்கள் தங்களின் மார்க்க அனுஷ்டானங்களை செய்வதற்கான உரிமையை இஸ்லாம் வழங்கியிருப்பது அதன் தயாளத் தன்மையினை எடுத்துக் காட்டுகின்றது. இஸ்லாமிய சாம்ராஜியத்தின் முதலாவது தலைவர் அபூபக்ர் (ரலி) அவர்கள் தன் படைவீரர்களிடம் கூறிய போதனை இதற்கு சான்று பகர்கின்றது: கிறிஸ்தவ ஆலயங்களிலே தங்களை முழுமையாக அர்ப்பணித்துவிட்ட ஒரு சாராரைக் காண்பீர்கள். அவர்களை அப்படியே விட்டுவிடுங்கள்.

மேலும் அவர்களின் மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட உணவு வகைகளையும் பானங்களையும் உட்கொள்வதற்கான உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் பன்றிகள் கொலை செய்யப்பட மாட்டாது, அவர்களின் மதுபானங்கள் கொட்டிவிடப்படமாட்டாது. அவர்களின் சிவில் சட்டங்களுடன் தொடர்புடைய திருமண விடயங்கள் விவாகரத்து கொடுக்கல் வாங்கல் போன்வற்றில் இஸ்லாம் ஏற்படுத்தியிருக்கின்ற நிபந்தனைகளுடனும் வரையறைகளுடனும் அவர்கள் நம்பிக்கைப் பிரகாரம் நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் அடிமை முறையினை ஒழித்துக் கட்டியது. அடிமைகளை உரிமையிடுவதில் பெரும் கூலி இருப்பதாகவும் சுவனத்தைத் தருவதாகவும் வாக்களித்து அதனை ஊக்கப்படுத்தியது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஓர் அடிமையை உரிமையிடுகின்றாரோ, அந்த அடிமையின் ஒவ்வொரு உறுப்புக்காகவும் இறைவன் உரிமையிடுபவனின் உறுப்புக்களை நரகத்திலிருந்து விடுதலை செய்கின்றான். அவன் கஷ்டத்தைப் போக்கிவிடுகின்றான். (முஸ்லிம்:)

யுத்தமொன்றில் கைதியாகப் பிடிக்கப்பட்டு அடிமையாக்குவதைத் தவிர மற்ற எவ்வழியிலும் அடிமையாக்குவதனை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அதுவும் இஸ்லாமிய ஆட்சியாளரே அதனைத் தீர்மானிக்க வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்தியிருக்கின்றது. அதற்கான சில நிபந்தனைகளையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது. “(முஃமின்களே! வலிந்து உங்களுடன் போரிட வரும்) நிராகரிப்பவர்களை நீங்கள் (போரில்) சந்திப்பீர்களாயின்,

அவர்களுடைய கழுத்துகளை வெட்டுங்கள் கடும் போர் செய்து (நீங்கள் அவர்களை வென்று) விட்டால் (அவர்களுடைய) கட்டுகளை பலப்படுத்தி விடுங்கள் அதன் பிறகு யாதொரு ஈடுபெற்றோ அல்லது (ஈடு பெறாது) உபகாரமாகவோ அவர்களை விட்டு விடுங்கள். போர் (ப் பகைவர்கள்) தங்கள் ஆயுதங்களைக் கீழே வைக்கும் வரையில் (இவ்வாறு செய்யுங்கள்) இது (இறை கட்டளையாகும்) அல்லாஹ் நாடியிருந்தால் (போரின்றி அவனே) அவர்களிடம் பழிவாங்கியிருப்பான் ஆயினும், (போரின் மூலம்) அவன் உங்களில் சிலரை, சிலரைக் கொண்டு சோதிக்கின்றான் ஆகவே, அல்லாஹ்வின் பாதையில், யார் கொல்லப்படுகிறார்களோ அவர்களுடைய (நற்) செயல்களை அவன் பயனற்றுப் போகுமாறு செய்யமாட்டான்." (முஹம்மத்: 4)

இவ்வாறு அடிமைமுறை உருவாவதனை அனைத்து வழிகளிலும் தடுத்து ஒருவழியை மாத்திரம் அனுமதித்த போதிலும், அம்முறையில் உருவாகும் அடிமைகளை இல்லாதொழிப்பதற்கும் உரிமையிடுவதனை சில குற்றங்களுக்கான தண்டப்பரிகாரமாக ஏற்படுத்தியுள்ளது.

## உதாரணம்:

1- **தவறுதலாக கொலை செய்தால்,** ஒரு முஃமின் பிறிதொரு முஃமினை கொலை செய்வது ஆகுமானதல்ல. "உங்களில் எவரேனும் ஒரு முஃமினை தவறாக கொலை செய்துவிட்டால், அதற்குப் பரிகாரமாக முஃமினான ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அவனுடைய குடும்பத்தாருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் - அவனுடைய குடும்பத்தார் (நஷ்ட ஈட்டுத் தொகையை மன்னித்து) அதை தர்மமாக விட்டாலொழிய. கொல்லப்பட்ட அவன் உங்கள் பகை இனத்தைச் சார்ந்தவனாக (ஆனால்) முஃமினாக இருந்தால், முஃமினான ஓர் அடிமையை விடுதலை செய்தால் போதும் (நஷ்ட ஈடில்லை. இறந்த) அவன் உங்களுடன் சமாதான (உடன்படிக்கை) செய்து கொண்ட வகுப்பாரைச் சேர்ந்தவனாக இருந்தால் அவன் சொந்தக்காரருக்கு நஷ்ட ஈடு கொடுப்பதுடன், முஃமினான ஓர் அடிமையை விடுதலை செய்யவும் வேண்டும்." (நிஸா: 91)

**2- சத்தியத்தை முறித்துவிட்டால்** “உங்கள் சத்தியங்களில் வீணானவற்றிற்காக அல்லாஹ் உங்களைக் குற்றம் பிடிக்க மாட்டான். எனினும் (ஏதாவது ஒன்றை) உறுதிப்படுத்தச் செய்யும் சத்தியங்களுக்காக (அவற்றில் தவறினால்) உங்களைப் பிடிப்பான். (எனவே சத்தியத்தை முறித்தால்) அதற்குரிய பரிகாரமாவது, உங்கள் குடும்பத்தினருக்கு நீங்கள் கொடுக்கும் ஆகாரத்தில் நடுத்தரமானதைக் கொண்டு பத்து ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும், அல்லது அவர்களுக்கு ஆடை அணிவிக்க வேண்டும், அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும்.” (மாயிதா: 89)

**3- தன் மனைவியை பெற்ற தாய்க்கு ஒப்பிட்டுக் கூறிவிட்டு திரும்பவும் சேர்ந்துவாழ விரும்பினால்.** “மேலும் எவர் தம் மனைவியரைத் தாய்களெனக் கூறிய பின் (வருந்தித்) தாம் கூறியதை விட்டும் திரும்பி (மீண்டும் தாம்பத்திய வாழ்வை நாடி) னால், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுவிக்க வேண்டும்.” (முஜாதலா: 3)

**4- ரமழானில் பகல் நேரத்தில் தாம்பத்திய உறவில் ஈடுபடல்.** அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தபோது அவர்களிடம் ஒருவர் வந்து, நபி அவர்களே! நான் அழிந்து விட்டேன்! என்றார். நபி (ஸல்) அவர்கள் ‘உமக்கு என்ன நேர்ந்தது?’ என்று கேட்டார்கள். நான் நோன்பு வைத்துக்கொண்டு என் மனைவியுடன் கூடிவிட்டேன்! என்று அவர் சொன்னார். நபி (ஸல்) அவர்கள், விடுதலை செய்வதற்கு ஓர் அடிமை உம்மிடம் இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அவர், இல்லை! என்றார். தொடர்ந்து இரண்டு மாதம் நோன்பு நோற்க உமக்கு சக்தி இருக்கிறதா?என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர், இல்லை! என்றார். அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க உமக்கு சக்தியிருக்கிறதா? என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கும் அவர், இல்லை! என்றார். நபி (ஸல்) அவர்களிடம் பேரீச்சம் பழம் நிறைந்த அரக் எனும் அளவை

கொண்டு வரப்பட்டது. அப்போது, நபி (ஸல்) அவர்கள் கேள்வி கேட்டவர் எங்கே? என்றார்கள். நானே! என்று அவர் கூறினார். இதைப் பெற்று தர்மம் செய்வீராக! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அம்மனிதர், நபி அவர்களே! என்னை விட ஏழையாக இருப்போருக்கா (நான் தர்மம் செய்ய வேண்டும்) ? மதீனாவின் (கருங்கற்கள் நிறைந்த) இரண்டு மலைகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் என் குடும்பத்தினரை விடப் பரம ஏழைகள் யாருமில்லை! என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் தங்களின் கடைவாய்ப் பற்கள் தெரியும் அளவுக்குச் சிரித்தார்கள்: பிறகு இதை உம்முடைய குடும்பத்தாருக்கே உண்ணக் கொடுத்து விடுவீராக! என்றார்கள். (புகாரி: 1936)

5- **அடிமைகள் மீது அத்துமீறி ஏதும் செய்துவிட்டால் அதற்கான பரிகாரமாக உரிமையிடுவதனை இஸ்லாம் ஏவியுள்ளது.** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் தன் அடிமைக்கு அறைந்துவிட்டாரோ அல்லது அடித்துவிட்டால் அதற்கான பரிகாரம் அவனை உரிமையிடுவதாகும். (முஸ்லிம்)

அடிமைகளை உரிமையிடுவதற்கு இஸ்லாம் அதிகம் பேராவல் கொண்டுள்ளது என்பதை பின்வரும் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன:

உரிமைச் சீட்டு எழுதிக்கொடுக்குமாறு கட்டளையிடுகின்றது. அதாவது ஒரு குறிப்பிட்ட அளவு தொகையை தன்னிடம் கொடுத்தால் அவனை உரிமையிடுவேன் என்று எஜமான் எழுதிக்கொடுப்பதாகும். அடிமை வேண்டிக்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் உரிமைச்சீட்டைக் கொடுப்பதனை சில அறிஞர்கள் கட்டாயப்படுத்துகின்றார்கள். பின்வரும் திருவசனத்தை அதற்கு சான்றாகக்கொள்கின்றனர். “இன்னும் உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களில் (அடிமைகளில் உரிய தொகையைக் கொடுத்தோ அல்லது முறையாக சம்பாதித்துத் தருவதாக வாக்குக் கொடுத்தோ) எவரேனும் (சுதந்திரமாவதற்கான) உரிமைப் பத்திரம்

கொடுக்க விரும்பினால் - அதற்குரிய நன்மையான தகுதியை நீங்கள் அவ்வடிமையிடம் (இருப்பது பற்றி) அறிவீர்களாயின், அவர்களுக்கு உரிமை பத்திரம் எழுதிக் கொடுங்கள். இன்னும் அதற்கான பொருளை அல்லாஹ் உங்களுக்கு தந்திருக்கும் பொருளிலிருந்து அவர்களுக்குக் கொடுப்பீர்களாக." (நூர்: 33)

ஸகாத் எனும் ஏழை வரியினை உரிமைச்சீட்டு எழுதப்பட்ட அடிமைகளுக்கு வழங்குமாறு இஸ்லாம் கூறுகின்றது. "(ஸகாத் என்னும்) தானங்கள் தரித்திரர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், இஸ்லாத்தின் பால் அவர்கள் உள்ளங்கள் ஈர்க்கப்படுவதற்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடன் பட்டிருப்பவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் (போர் புரிவோருக்கும்), வழிப்போக்கர்களுக்குமே உரியவை. (இது) அல்லாஹ் விதித்த கடமையாகும்- அல்லாஹ் (யாவும்) அறிபவன், மிக்க ஞானமுடையோன்." (தௌபா: 60)

இஸ்லாமிய மார்க்கம் மனித வாழ்வில் எல்லாவிதமான கோணங்களையும் உள்ளடக்கியுள்ளது. கொடுக்கல் வாங்கல், குடும்ப வாழ்வு, பொருளாதாரம், அரசியல், வழிபாடுகள் என அனைத்துத் துறைகளுக்குமான ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளது. அதன் மூலம் முன்மாதிரிமிக்க ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பிட முடியும். மனித குலம் ஒன்றுபட்டாலும் அதுபோன்றதொரு ஒழுங்குபடுத்தப்பட்ட யாப்பை உருவாக்கிட முடியாது. மனித சமூகம் எந்த அளவிற்கு அதனைவிட்டு ஒதுங்குமோ அந்த அளவிற்கு அதன் வீழ்ச்சியும் சென்றுகொண்டிருக்கும். "இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாகவும், நேர்வழி காட்டியதாகவும், ரஹ்மத்தாகவும், முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் உம்மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்." (நஹ்ல்: 89)

ஒரு முஸ்லிம் தன் இரட்சகனுடனான தொடர்பு, தான் சார்ந்திருக்கும் சமூகம், சூழல் என்பவற்றுடனான தொடர்பு என்பவற்றினை இஸ்லாம் ஒழுக்கமைத்துள்ளது. அதன் போதனைகளில் இயல்பு நிலைக்கு முரணான அம்சங்களோ, ஆரோக்கியமான மனித

புத்தியால் (சிந்தனையால்) ஜீரணிக்க முடியாத விடயங்களோ கிடையாது.

ஒரு முஸ்லிமின் அன்றாட வாழ்வுடன் தொடர்புபட்ட காலைக் கடனை நிறைவேற்றுகின்ற போது வைத்துக்கொள்ளவேண்டிய ஒழுங்கு விதிகள் போன்ற சிறிய ஒழுக்க விதிகளும் கூறப்பட்டிருப்பதிலிருந்து இஸ்லாத்தின் உயர்ந்த தன்மைகளை விளங்க முடிகின்றது.

அப்துர்ரஹ்மான் பின் ஸைத் என்பவர் கூறுகின்றார்: ஸல்மான் என்ற நபித்தோழரிடம் கேட்கப்பட்டது உங்கள் தூதர் காலைக் கடமைகளை நிறைவேற்றும் முறையுட்பட வாழ்வின் அனைத்து அம்சங்களையும் கற்றுத் தந்திருக்கின்றாரா? ஆம். மலஜலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்குவதையும் வலது கரத்தால் சுத்தம் செய்வதையும் மூன்று கற்களுக்குக் குறைந்த தொகையினால் சுத்தம்செய்வதையும் எலும்பு மற்றும் விட்டைகளினால் சுத்தம் செய்வதையும் தடுத்திருக்கின்றார் என்றார். (முஸ்லிம்: 262)

இஸ்லாம் பெண்வர்க்கத்தினரை உயர்த்தி கண்ணியப்படுத்தியுள்ளது. பெண்களுக்கு நல்லுபகாரம் செய்து கண்ணியப்படுத்துவதனை, பூரணமிக்க சிறந்தவர்களின் பண்பாக அடையாளப் படுத்துகின்றது. நபியவர்கள் கூறினார்கள்: விசுவாசிகளில் பூரணமான ஈமானுடையவர்கள் நற்குணமுடையவர்கரே, உங்களில் சிறந்தவர் உங்களின் மனைவியருடன் சிறந்தவரே. (இப்னு ஹிப்பான்: 4176)

இஸ்லாம்தான் பெண்ணின் கண்ணியத்தைக் காத்துக்கொடுக்கிறது. அவள் தவறின் ஊற்று கிடையாது. முந்தைய மார்க்கத் தலைவர்கள் கூறுவது போன்று நபி ஆதம் சுவனத்திலிருந்து வெளிவர பெண்குலம் காரணம் கிடையாது. “மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்)

கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்). - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்." (நிஸா: 1)

பெண்ணின் உரிமையில் அன்றிழைக்கப்பட்ட கொடூரத்தையும் பரவிக்கிடந்த அறியாமையினையும் இஸ்லாம் இல்லாதொழித்தது. குறிப்பாக பெண்ணை ஆணைவிட தரத்தில் குறைவாகக் கருதி அவளுக்கு அளிக்கப்படவேண்டிய மனித உரிமைகள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. இஸ்லாம் அதனை மாற்றியமைத்தது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்கள் ஆண்களின் ஒன்றுவிட்ட சகோதரிகளே. (அபூ தாவுத்: 230)

இஸ்லாம் அவளின் மானத்தைக் காத்தது. அவள் மீது வீண்பலி சுமத்தி அவள் மானத்தில் கைவைத்து நோவினைப்படுத்துவதனையும் பெரும் பாவமாக்கி செய்பவனுக்கு உலகத்தில் தண்டனையையும் ஏற்படுத்தியுள்ளது. "எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ, அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அவர்களது சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள்தான் தீயவர்கள்." (நூர்: 4)

முந்தைய சமூகங்களில் அவளுக்குக் கொடுக்கப்படாதிருந்த அனந்தரச் சொத்தில் ஆணுக்கு இருப்பது போன்று அவளுக்கும் உரிமையுண்டு என்பதனை கூறுகிறது. "பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்) தில் ஆண்களுக்கு பாகமுண்டு. அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்) தில் பெண்களுக்கும் பாகமுண்டு - (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்." (நிஸா: 7)

சொத்துக்களை வைத்திருக்கவும் சுதந்திரமாக பொருளியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் பூரண சுதந்திரத்தினை அவளுக்கு வழங்குகின்றது. இஸ்லாமிய சட்டத்திற்கு முரண்படாதவாறு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி பொருளீட்டவும் விற்கவும் வாங்கவும்

அவளுக்கு உரிமை வழங்கியது. “நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப்படுத்தித் தந்த (தானியங்கள், கனி வகைகள் போன்ற) வற்றிலிருந்தும், நல்லவற்றையே (தான தர்மங்களில்) செலவு செய்யுங்கள்.” (பகரா: 267)

அவளுக்கு கல்வி வழங்குவதை இஸ்லாம் கட்டாயப்படுத்தியது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிவைக்கற்பது ஒவ்வொரு ஆண், பெண்மீதும் கடமையாகும். (இப்னு மாஜா: 224)

அவளை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதனை ஒரு மனிதனை சுவனத்தில் நுழைவிற்கும் காரணியாகக் கூறுகின்றது. யார் மூன்று பெண்மக்களை நல்லமுறையில் வளர்த்து திருமணம் முடித்துக் கொடுக்கின்றாரோ அவருக்கு சுவனம் இருக்கின்றது. (அபூ தாவுத்: 5147)

# இஸ்லாம் சுத்தத்தை விரும்பும் மார்க்கமாகும்

## 1- உளச்சுத்தம்:

- இறைவனுக்கு இணைகற்பிப்பதிலிருந்து தன்னைப் பரிசுத்தப்படுத்தல்: அல்லாஹ் கூறுகின்றான்: “இணைகற்பிப்பது மிகப் பெரிய அநியாயமகும்.”

- முகஸ்துதியைவிட்டு உள்ளத்தை சுத்தப்படுத்தல்: “இன்னும், (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடுதான். அவர்கள் எத்தகையோர் என்றால் தம் தொழுகையில் பராமுகமாக (வும், அசிரத்தையாக) வும் இருப்போர். அவர்கள் பிறருக்குக் காண்பிக் (கவே தான் தொழு) கிறார்கள். மேலும், அற்பமான (புழங்கும்) பொருள்களைக் (கொடுப்பதை விட்டும்) தடுக்கிறார்கள்.” (மாஊன்)

- ஆணவம், அகங்காரம் என்பவற்றைத் தவிர்த்தல்: “(பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே!

அகப்பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான். உன் நடையில் (மிக வேகமோ, அதிக சாவதானமோ இல்லாமல்) நடுத்தரத்தை மேற்கொள் உன் குரலையும் தாழ்த்திக்கொள் குரல்களிலெல்லாம் வெறுக்கத்தக்கது நிச்சயமாக கழுதையின் குரலேயாகும்." (லுக்மான்: 18)

பெருமை: நபியவர்கள் கூறினார்கள்: பெருமையுடன் தன் ஆடையை இழுத்துச் செல்பவனை இறைவன் மறுமையில் ஏரெடுத்தும் பார்க்கமாட்டான். (புகாரி: 3465)

தற்பெருமை: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவருடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்கின்றதோ அவர் சுவனம் நுழையமாட்டார். அப்போது குழுமியிருந்த தோழர்களில் ஒருவர்: ஒரு மனிதன் தன் ஆடை, அணிகலன், காலணிகள் என்பவை அழகாக இருக்கவேண்டும் என்று விரும்புகின்றான் அதுவும் பெருமையில் அடங்குமா? என்று வினவினார். அதற்கு நபியவர்கள்: அல்லாஹ் அழகியவன், அவன் அழகையே விரும்புகின்றான். பெருமை என்பது உண்மையை மறுப்பதும் மனிதர்களை தரக்குறைவாக கருதுவதுமாகும். (முஸ்லிம்: 91)

பொறாமை: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களுக்கு பொறாமையை எச்சரிக்கின்றேன். நெருப்பு விறகை எரிப்பது போன்று பொறாமை நல்லறங்களை எறித்துவிடும். (அபூ தாவுத்: 4903)

## 2- உடல் சுத்தம்:

"முஃமின்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாராகும் போது, (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு கைகளையும், கழுவிக் கொள்ளுங்கள். உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி (மஸ்ஹு செய்து) கொள்ளுங்கள். உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்)- நீங்கள் பெருந்தொடக்குடையோராக (குளிக்கக் கடமைப் பட்டோராக) இருந்தால் குளித்து(த் தேகம் முழுவதையும் சுத்தம் செய்து)க் கொள்ளுங்கள். தவிர நீங்கள்

நோயாளிகளாகவோ, அல்லது பிரயாணத்திலோ இருந்தால், அல்லது உங்களில் எவரும் மல ஜலம் கழித்து வந்தாலும், அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டி (உடல்உறவு கொண்டி) ருந்தாலும் (உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள) உங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டால் (தயம்மும் செய்து கொள்ளுங்கள். அதாவது) சுத்தமான மண்ணைக் (கையினால் தடவிக்) கொண்டு அவைகளால் உங்கள் முகங்களையும், உங்களுடைய கைகளையும் தடவிக் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களை வருத்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப் படுத்தவும் இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்.” (மாயிதா: 6)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நபியவர்கதைத் தொட்டும் அறிக்கின்றார்கள்: “பரிசுத்தமாக இருப்பதை விரும்பும் சிறந்த மனிதர்கள் அதில் இருக்கின்றனர். அல்லாஹ்வும் பரிசுத்தமாக இருப்பவர்களையே விரும்புகின்றான்.” என்ற திருவசனம் குபா வாசிகளின் விடயத்தில் இறங்கியது. அவர்கள் மலஜலம் கழித்துவிட்டு நீரினால் சுத்தம் செய்பவர்களாக இருந்தனர். அவர்கள்விடயத்தில் மேற்கண்ட வசனம் இறங்கியது. (தௌபா: 108) (திர்மிதி: 3100)

இஸ்லாம் மனித உள்ளங்களை கவர்ந்துவிடவும், சிந்தனைகளை வென்றெடுக்கவும் தேவையான உளவியல் திறன்களையும் பெற்றுள்ளது. இதனால் வெகு விரைவில் அது பரவுவதை அவதானிக்க முடிகின்றது. முஸ்லிம்களின் குறைந்தளவிலான பொருளியல், உளவியல் ஒத்துழைப்புகள் காணப்படினும் இஸ்லாத்தில் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது. இஸ்லாத்தின் விரோதிகளும் இஸ்லாத்துடன் பொறாமை பிடித்தவர்களும் அதனை எதிர்ப்பதற்கும் கொச்சைப்படுத்தி அதனைவிட்டும் மனிதர்களை தடுப்பதற்கும் எண்ணற்ற முயற்சிகள் மேற்கொண்டும் கூட, மக்கள் சாரை சாரையாக இஸ்லாத்தினுள் நுழைகின்றனர். அதில் நுழைந்தவன் அதனைவிட்டு செல்வது மிகவும் அரிதே. இஸ்லாத்தின் குறைகளை ஆராய்ந்து அதனை விரோதிக்கும் தவறான நோக்குடன் அதனை ஆய்வுசெய்த

பெரும்பாலான கீழைத்தேய வாதிகள் இஸ்லாத்தை ஏற்கும் நிலைக்கு தள்ளப்படுவதற்கு அதன் உளவியல் அணுகுமுறைகள் பெரும் பங்காற்றின. இஸ்லாம் கொண்டுவந்த அழகிய போதனைகளும் யதார்த்தமான கொள்கைக் கோட்பாடும் சிந்தனைமிக்க பொருந்தும் அம்சங்களும் இஸ்லாத்தில் நுழையவைத்தன. அவர்களின் வாழ்வை மாற்றியமைத்தன. அதன் எதிரிகள்கூட அதனை சத்திய மார்க்கமாக ஏற்றனர்.

மார்க்கோலிபோத் என்பவர் அவர்களில் ஒருவராவார். இஸ்லாத்தை எதிர்த்து குறைகூறுவதில் பெயர்போன இவருக்கும் குர்ஆனின் மகத்துவம் சத்தியத்தைக் கூற தடையாக இருக்கவில்லை. அவர் கூறும் போது சங்கைமிக்க வேத நூல்களில் அல்குர்ஆன் சிறந்த தரத்தைப் பெற்றுவிட்டது என்பது ஆய்வாளர்களின் ஒன்றுபட்ட கருத்தாகும். வேதநூல்களின் வரலாற்றில் இறுதியானதாக இருந்தபோதிலும், அது மனிதனில் ஏற்படுத்திய தாற்பரியத்தில் அனைத்து வேதங்களையும் மிஞ்சிவிட்டது. அது புதியதோர் மனிதாபிமான சிந்தனையை தோற்றுவித்தது. வித்தியாசமான ஒழுக்கவியல் பாசறைக்கு அத்திவாரமிட்டது.

இஸ்லாம் சமூக பிணைப்பினை வலியுறுத்திய மார்கமாகும். ஒவ்வொரு முஸ்லிமும் தன் சகோதர முஸ்லிமின் விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும். அவன் எங்கிருந்த போதிலும் சரியே. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருக் கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டு விடுகிறது. (புகாரி: 6011)

துன்பத்திலிருப்பவனின் நிலைகளை சீராக்குவதற்கு அவசியமான ஸக்காத் எனும் ஏழை வரி மூலமோ, வலியுறுத்தப்பட்ட தான, தர்மங்கள் மூலமோ உதவிக்கரம் நீட்டுமாறு இஸ்லாம் கட்டளையிடுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தான்

விரும்புவதை தன் சகோதரனுக்கு விரும்பாதவரை உங்களில் ஒருவர் முஸ்லிமாக முடியாது. (புகாரி: 13)

சோதனைகளிலும் நெருக்கடிகளிலும் அவர்களுடனே இருக்குமாறு வலியுறுத்துகின்றது. ஒரு கட்டிடத்தின் ஒரு பகுதி இன்னொரு பகுதியை எப்படி வலுப்படுத்திக் கொண்டிருக்கிறதோ அது போன்றே ஒரு இறை நம்பிக்கையாளர் இன்னொரு இறை நம்பிக்கையாளர் விஷயத்தில் நடக்க வேண்டும என்று நபி (ஸல்) கூறிவிட்டுத் தம் விரல்களைக் கோர்த்துக் காட்டினார்கள். (புகாரி: 481)

அவர்களுக்கு உதவி ஒத்தாசை அளிக்குமாறு இறைவன் கூறுகின்றான். “முஃமினான ஆண்களுக்கும் முஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் நெருங்கிய நேசர்களாவர்.” (அத்தவ்பா: 71)

அவர்களுக்கு உதவி செய்யாமல் மோசடி செய்பவனை இஸ்லாம் கண்டிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிமின் கண்ணியம் தகர்க்கப்படும் போது அவனுடைய மானத்தில் கைவைக்கப்படும் போது யார் அவருக்கு உதவி செய்யாமல் மோசடி செய்கின்றாறேரா, அவனுக்கு உதவி அவசியமான நேரத்தில் இறைவன் அவனுக்கு உதவி செய்யாமல் விட்டுவிடுவான். ஒரு முஸ்லிமின் கண்ணியம் தகார்க்கப்படும் போது அவனுடைய மானத்தில் கைவைக்கப்படும் போது யார் அவருக்கு உதவி செய்கின்றானோ, அவனுக்கு உதவி தேவைப்படும் நேரத்தில் இறைவன் அவனுக்கு உதவிசெய்வான். (அபூ தாவுத்: 4884)

ஒரு மனிதன் மரணிக்கும் வேளையில் விட்டுச் செல்கின்ற சொத்துக்களை பங்கீடு செய்யும் ஒழுங்கு விதிகளை இஸ்லாம் குறிப்பிடுகின்றது. அவனுடைய கடன்களையும் மரணசாசனத்தையும் நிறைவேற்றிய பின்னர் மீதமாகும் சொத்துக்களை மரணித்தவரின் அனந்தரக்காரர்கள் சிறியவர், பெரியவர், ஆண், பெண் அனைவருக்கும் நீதியாகவும் நியாயமாகவும் மரணித்தவர் பயன்பெரும் விதத்திலும் வழங்கிட வேண்டும் என்கின்றது.

இஸ்லாத்தின் இந்த பங்கீட்டு முறையை இன்றைய புத்திஜீவிகளும்

ஏற்கின்றனர். எவருக்கும் தான் நினைத்தபடி இந்த பங்கீட்டை மேற்கொள்ள முடியாது. இந்த பங்கீட்டு முறையின் இலாபம் என்னவெனில் எவ்வளவு பெரிய வளங்களையும் சிறிய உடைமைகளாக பிரிக்கின்றது. வளங்கள் ஒரு சாராரிடம் முடக்கப்படுவதை இல்லாதொழிக்கின்றது. அல்-குர்ஆனில் பிள்ளைகள், பெற்றோர், கணவன் - மனைவி, சகோதர - சகோதரிகள் ஆகியவர்களுக்கு சேர வேண்டிய பங்குகளை இறைவன் தெளிவுபடுத்துகின்றான். அவற்றை விரிவாக விளக்க இந்நூல் இடம் கொடுக்காது. மேலதிக விளக்கங்களுக்கு இத்துறையில் எழுதப்பட்ட விரிவான நூல்களை வாசிக்கவும். நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்: இறைவன் ஒவ்வொருவரினது பங்கையும் குறிப்பிட்டுள்ளான் (கொடுத்துள்ளான்) எனவே அனந்தரக் காரருக்கு மரணசாசனம் (சொத்துக்களை) எழுதுவது என்பது கிடையாது. (அபூ தாவுத்: 2870)

இஸ்லாம் மரணசாசனம் எழுதும் ஒழுங்கை மார்க்கமாக்கியுள்ளது. எனவே ஒரு முஸ்லிம் மரணிக்கும் தருவாயில் தன் செல்வத்தில் ஒரு பகுதியை நல்வழியில் செலவு செய்யுமாறு மரணசாசனம் செய்ய அனுமதியுண்டு. இதனால் அது அவனுடைய மரணத்தின் பின்னர் கூட நிரந்தரமாக பயன் பெரும் தர்மமாக மாறிவிடும். அதிகபட்சமாக மூன்றில் ஒரு பகுதியையே இவ்வாறு மரணசாசனம் செய்ய அவனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அறிவித்தார்: நான் மக்காவில் நோய்வாய்ப்பட்டிருந்த போது, நபி (ஸல்) அவர்கள் என்னை நலம் விசாரித்து வந்தார்கள். நான், இறைத்தூதர் அவர்களே! என்னிடம் செல்வம் உள்ளது. என்னுடைய செல்வம் முழுவதையும் (தர்மத்திற்காக) நான் மரணசாசனம் செய்துவிடட்டுமா? என்று கேட்டேன். அவர்கள், வேண்டாம் என்று பதிலளித்தார்கள். நான் பாதியை (மரணசாசனம் செய்துவிடட்டுமா) ? என்று கேட்டேன். அதற்கும் அவர்கள் வேண்டாம் என்று கூறினார்கள். நான், (அப்படியென்றால்,) மூன்றிலொரு பங்கை (மரணசாசனம் செய்யட்டுமா) ? என்று கேட்டேன். அதற்கவர்கள் மூன்றிலொரு பங்கா! மூன்றிலொரு பங்கு கூட அதிகம் தான். நீங்கள் உங்கள் வாரிசுகளை மக்களிடம்

கையேந்தும் ஏழைகளாகவிட்டுச் செல்வதைவிட அவர்களைத் தன்னிறைவு கொண்டவர்களாக விட்டுச் செல்வதே சிறந்ததாகும். நீங்கள் (அவர்களுக்காக) எதைச் செலவு செய்தாலும் அது நீங்கள் செய்த தர்மமே எந்த அளவிற்கென்றால், நீங்கள் உங்கள் மனைவியின் வாயில் இடுகிற ஒரு கவளம் உணவும் கூட (தர்மமாகவே உங்களுக்கு எழுதப்படும்). அல்லாஹ் உங்களுக்கு நீண்ட ஆயுளை அளிக்கக்கூடும். அப்போது மக்கள் சிலர் உங்களால் பயன் அடைந்திடவும், வேறு சிலர் உங்களால் இழப்புக்குள்ளாகவும் கூடும் என்று கூறினார்கள். (புகாரி: 5354)

அம்மரண சாசனத்தின் மூலம் அவனது அனந்தரக் காராகளுக்கு எவ்விதத் தீங்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. "இதுவும் அவர்களின் மரண சாசனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது." (நிஸா: 12)

சமூகத்தில் குற்றங்கள் நடை பெறுவதையும் அது பரவிவிடுவதையும் தவிர்த்து அதன் பாதுகாப்பதை உறுதிசெய்யும் பொருட்டு இஸ்லாம் தண்டனைகளின் ஒழுங்குகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் மூலம் உயிர்களையும் மானத்யையும் சொத்து செல்வங்களையும் பாதுகாக்கின்றது. தீய சக்திகளை ஒழித்து, சிலர் சிலர் மீது அத்துமீறுவதிலிருந்து மக்களை காக்கின்றது. இதனால் குற்றம் நிகழ்வதை ஒழிக்கின்றது அல்லது குறைக்கின்றது.

இதனால் தான் குற்றங்களின் தரத்திற்கேற்ற வித்தியாசமான தண்டனைகளை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. வேண்டுமென்றே செய்கின்ற கொலைக்கு பழிவாங்குதலை தண்டனையாக ஏற்படுத்துகின்றது. "ஈமான் கொண்டோரே! கொலைக்காகப் பழி தீர்ப்பது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது." (பகரா: 178)

ஆனால் கொலை செய்யப்பட்டவரின் பந்தங்கள் விரும்பினால் கொலையாளியை மன்னித்து விட முடியும். "(கொலை செய்த) அவனுக்கு அவனது (முஸ்லிம்) சகோதரனா (கிய கொலையுண்டவனின்

வாரிசுகளா) ல் ஏதும் மன்னிக்கப்படுமானால், வழக்கமான முறையைப் பின்பற்றி (இதற்காக நிர்ணயிக்கப் பெறும்) நஷ்ட ஈட்டைக் கொலை செய்தவன் பெருந் தன்மையுடனும், நன்றியறிதலுடனும் செலுத்திவிடல் வேண்டும்." (பகரா: 178)

திருட்டுக்கு தண்டனையாக கையைத் துண்டிப்பதை தண்டனையாக வைத்துள்ளது. "திருடனோ திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு, அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும், ஞானம் மிக்கோனுமாக இருக்கின்றான்." (மாயிதா: 38)

கை துண்டிக்கப்படுவதனை அறிந்த எவரும் திருட முன் வரமாட்டார். மக்களின் செல்வங்களுக்கு பாதுகாப்பு கிடைத்துவிடும். திருமணமாகாதவர் விபச்சாரம் செய்துவிட்டால் நூறு கசையடிகள் தண்டனையாக வழங்கப்படும். "விபசாரியும், விபசாரனும் இவ் விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள் மெய்யாகவே, நீங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் ஈமான் கொண்டவர்களாக இருந்தால், அல்லாஹ்வின் சட்டத் (தை நிறைவேற்றுவ) தில், அவ்விருவர் மீதும் உங்களுக்கு இரக்கம் ஏற்பட வேண்டாம் இன்னும் அவ்விருவரின் வேதனையையும் முஃமின்களில் ஒரு கூட்டத்தார் (நேரில்) பார்க்கட்டும்." (நூர்: 2)

மேலும் அவதூறுகூறி மானங்களில் கைவைப்பவர்களுக்கும் 80 கசையடிகளை தண்டனையாக இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. "எவர்கள் கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறி (அதை நிரூபிக்க) நான்கு சாட்சிகளைக் கொண்டு வரவில்லையோ, அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அவர்களது சாட்சியத்தை எக்காலத்திலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள்தான் தீயவர்கள்." (நூர்: 4)

பின்னர் குற்றங்களை அளவீடு செய்வதற்கான பொதுவானதோர் வழியை இஸ்லாம் அமைக்கின்றது. "இன்னும் தீமைக்குக் கூலி அதைப் போன்ற தீமையே யாகும்." (ஷூ ரா: 40) " (முஃமின்களே!) நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்த அளவிற்கு நீங்கள்

தண்டிக்கப்பட்டீர்களோ அது போன்ற அளவுக்கே நீங்களும் தண்டியுங்கள்.” (நஹ்ல்: 126)

மேற் கூறப்பட்ட தண்டனைகளை நிறைவேற்றுவதற்கான நிபந்தனைகளையும் கட்டுபாடுகளையும் இஸ்லாம் ஏற்படுத்தியிருப்பதுடன் ஒரு குற்றம் நடந்துவிட்டால் குறிப்பிட்ட தண்டனைகளை நிறைவேற்றித்தான் ஆகவேண்டும், என்று கட்டாயப்படுத்தவில்லை. சம்பந்தப்பட்டவர் விரும்பினால் மன்னித்துவிட முடியும் என்று கருணையின் வாயிலையும் திறந்தே வைத்துள்ளது. “எவர் (அதனை) மன்னித்துச் சமாதானம் செய்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது.” (ஷூ ரா: 40)

இந்த தண்டனைகளை அமுல்படுத்துவதனால் இஸ்லாம் வன்முறையை விரும்பும் மார்க்கம் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. இத்தண்டனைகளின் குறிக்கோள் மனிதர்களின் உடைமைகளைக் காத்து பாதுகாப்பைப் பலப்படுத்தி சமூகத்தில் அமைதியினை ஏற்படுத்துவதும், சமூக அமைதிக்கு பாதகம் விளைவிப்பவர்களை தண்டிப்பதுமாகும்.

கொலை செய்பவன் தானும் பழிவாங்கப்படுவேன் என்பதனையும் திருடினவன் கரம் துண்டிக்கப்படும் விபச்சாரம் செய்பவனுக்கும் அவதூறு சொல்பவனுக்கும் கசையடி கொடுக்கப்படும் என்பதனையும் அறிந்துவிட்டால் அக்குற்றங்கள் பூமியில் நடைபெற மாட்டாது. ஒட்டுமொத்த சமூகமே ஈடேற்றமடைந்துவிடும். இறைவனின் கூற்று எவ்வளவு யதார்த்தமானது. “நல்லறிவாளர்களே! கொலைக்குப் பழி தீர்க்கும் இவ்விதியின் மூலமாக உங்களுக்கு வாழ்வுண்டு (இத்தகைய குற்றங்கள் பெருகாமல்) நீங்கள் உங்களை (த் தீமைகளில் நின்று) காத்துக் கொள்ளலாம்.” (பகரா: 179)

சிலர் கேட்கக்கூடும்: சில குற்றங்களுக்கு இஸ்லாம் மிகக் கொடூரமான தண்டனைகளை ஏற்படுத்தியுள்ளதே? என்றால்

இஸ்லாம் கடுமையான தண்டனைகளை ஏறப்டுத்திய குற்றங்கள் அனைத்தினதும் விளைவுகள் மிகப் பாரதூரமானது என்பது அனைவரும் ஏற்ற உண்மையே! அவற்றை எதிர்த்து சமூகத்திலிருந்து

இல்லாது ஒழித்திட வேண்டும் என்பதனை அனைவரும் ஏற்பர். அதற்கு தண்டனைகளையும் ஏற்படுத்தி தண்டனைகளின் வகைகளிலே வேறுபாடும் காணப்படுகின்றது.

இஸ்லாம் விதித்துள்ள தண்டனைகள் பொருத்தமானவையும் வெற்றிகரமானவையுமாகும். அவை தானா குற்றங்களை தவிர்க்க அல்லது குறைக்க உதவுகின்றன? அல்லது மனிதன் வைத்த சட்டங்களா? என்ற வினாவிற்கான விடைகளை ஒவ்வருவரும் தன்னிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்களின் வாழ்வியல் அம்சங்களை கருத்திற் கொண்டு இஸ்லாம் வியாபாரங்கள், வாடகைக்குவிடல், பங்கு வியாபாரம் போன்ற அனைத்து பணரீதியான கொடுக்கல் வாங்கல்களையும் பரந்த அடிப்படையில் அனுமதித்துள்ளது. கெடுதி விளைவிக்காமல் உரிமைகளை சரிவர பேணுதல் என்ற மார்க்க வரையரைகளுக்கு உட்பட்டு கொடுக்கல் வாங்கல்களை செய்ய முடியும். இரு தரப்பினரும் குறிப்பிட்ட வியாபார ஒப்பந்தத்தின் அடிப்படைகளையும் நிபந்தனைகளையும் அறிந்து மனப்பூர்வமாக ஏற்றுவிட்டால் வியாபாரம் செல்லுபடியானதே. வட்டி, சூதாட்டம் போன்ற ஒரு சாரார் மாத்திரம் பயன் பெற்று மற்றவர்களுக்கு தீங்கையும் அநியாயத்தையும் ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களையே இஸ்லாம் தடைசெய்துள்ளது. இஸ்லாமிய வரையரைகளுக்கு உட்பட்டு வியாபாரம் செய்யும் ஒருவனின் வியாபாரத்தில் அவனுக்கோ மற்றவர்களுக்கோ கெடுதி இருந்தாலே அவனை வியாபாரம் செய்வதிலிருந்து நிறுத்திவைக்க வேண்டும் என்கிறது. உதாரணம்: சிறுவன், முட்டால், பைத்தியம் பிடித்தவன் போன்றோர்கள் தடைசெய்யப்படுகின்றனர். அவர்களின் கொடுக்கல் வாங்கல் செல்லுபடியாகாது. மேலும் கடன் சுமை நிறைந்த ஒரு வியாபாரியின் நிலை மென்மேலும் மோசமடைந்துவிடும் என்றிருந்தால் கடன் கொடுத்தவர்களின் கடன்களை அடைப்பதற்கு அவர் வியாபாரம் தொடர்ந்து செய்வதிலிருந்து தடைசெய்யப்படுகின்றார்.

மற்றவர்களின் உரிமைகளை மீட்டுக் கொடுப்பதற்கு மேற்படி நடவடிக்கைகளை செய்வது நியாயமானதே என்பதனை அறிவுள்ள அனைவரும் ஏற்பர்.

இஸ்லாம் ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் போதிக்கும் மார்க்கமாகும். ஆலிம்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் அணிதிரள வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றது. பின்வரும் நடவடிக்கைகள் மூலம் அவர்களிடத்தில் கண்ணியம், அந்தஸ்த்து என்பன மலர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.

கொள்கை, கோத்திரம், இனம் ரீதியான பிடிவாதத்தை அவர்களிடத்தில் ஏற்படுத்தி, சமூக பிளவிற்கும் பிரிவினைக்கும் வித்திடும் சுயநலத்தையும் அளவுகடந்த இச்சைகளையும் அவர்கள் விட்டுவிட வேண்டும். “(இறைவனின்) தெளிவான ஆதாரங்கள் தங்களிடம் வந்த பின்னரும், யார் தங்களுக்குள் பிரிவையுண்டுபண்ணிக் கொண்டு, மாறுபாடாகி விட்டார்களோ, அவர்கள் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள்.” (ஆலு இம்ரான்: 105)

முரண்பாடு என்பது இஸ்லாத்தின் சட்ட மூலத்தின் (அகராதியிலேயே) கொள்கையிலேயே கிடையாது. “நிச்சயமாக எவர்கள் தங்களுடைய மார்க்கத்தை (தம் விருப்பப்படி பலவாறாகப்) பிரித்து, பல பிரிவினர்களாகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் (நபியே!) உமக்கு எவ்வித சம்பந்தமுமில்லை அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே உள்ளது - அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி முடிவில் அவனே அவர்களுக்கு அறிவிப்பான்.” (அன்ஆம்: 159)

ஏனெனில் முரண்பாடுகளும் பிரிவினைகளும் மனிதனின் தரத்தைக் குறைத்து கண்ணியத்தைப் போக்கிவிடுகின்றன. “நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள் உங்கள் பலம் குன்றிவிடும் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள்.” (அன்பால்: 46)

இஸ்லாமிய கொள்கைகளுக்கும் வழிபாடுகளுக்கும் சேறு பூசும் இணைவைத்தல் மற்றும் நூதனமான அம்சங்களை மார்க்கத்தில் ஏற்படுத்தல் என்பவற்றிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளல். “அறிந்து கொள்வீராக! கலங்கமற்ற மார்க்க (வழிபாடு யாவு)ம் அல்லாஹ்வுக்கே உரியது.” (ஸுமர்: 2)

முஸ்லிம்களின் பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் பொருட்டு அரசியல்

பொருளாதாரம் என்று அனைத்து விடயங்களிலும் அவர்களுடன் ஒற்றுமையாக இருத்தல். “இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள்.” (ஆலு இம்ரான்: 103)

மனித குலம் அறியாத எத்தனையோ செய்திகளை இஸ்லாம் தான் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது. முன்சென்ற சமூகங்களின் செய்திகளை தொடர்பு படுத்தியது. அதிகமான திருமறை வசனங்கள் முன்சென்ற தூதர்கள் பற்றியும் அவர்களின் சமூகத்தினர் பற்றியும் அவர்களுக்கு நடந்தவை பற்றியும் கூறுவதை அவதானிக்க முடிகின்றது. “நிச்சயமாக நாம் மூஸாவை நம் வசனங்களுடன், தெளிவான அத்தாட்சியுடனும், அனுப்பிவைத்தோம். (அவற்றுடன் அவர்) ஃபிர்அவ்னிடமும் அவனுடைய பிரமுகர்களிடமும் (வந்தார்). அப்போது ஃபிர்அவ்னுடைய கட்டளையை (அவனுடைய சமூகத்தார்) பின்பற்றி வந்தார்கள். ஃபிர்அவ்னுடைய கட்டளையோ நேர்மையானதாக இருக்கவில்லை.” (ஹூத்: 96 - 97)

மேலும், மூஸா தம் சமூகத்தாரிடம் “என் சமூகத்தாரே நிச்சயமாக நான், உங்களிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதன் என்பதை நீங்கள் திடமாக அறிந்து கொண்டே, ஏன் என்னை துன்புறுத்துகிறீர்கள்? என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக) ஆகவே அவர்கள் (நேர்வழியிலிருந்து) சருகிய பொழுது, அல்லாஹ் அவர்களுடைய இருதயங்களை (நேர்வழியிலிருந்து) சருகச் செய்தான். அன்றியும் - ஃபாஸிக்குகளான - பாவம் செய்வோரான சமூகத்தாரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்.” (ஸப்: 5)

இஸ்லாத்தின் முதல் சட்ட யாப்பாகிய அல்-குர்ஆன் போன்ற ஒரு நூலை கொண்டுவருமாறு அது மனித குலம் அனைத்திற்கும் சவால் விட்டது. அது இதுவரை முறியடிக்கப்படவில்லை மறுமைநாள் சம்பவிக்கும் வரை அது நீடிக்கும். “இந்த குர்ஆனை போன்ற ஒன்றைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து (முயன்று), அவர்களில் ஒரு சிலர் சிலருக்கு உதவி புரிபவர்களாக இருந்தாலும், இது போன்ற ஒன்றை அவர்கள் கொண்டு வரமுடியாது” என்று (நபியே) நீர் கூறும். (இஸ்ரா: 88)

முதல் சவாலிலிருந்து ஒரு படி கீழிறங்கி அல் குர்ஆனின் அத்தியாயங்களில் சில அத்தியாயங்களையேனும் கொண்டுவருமாறு சவால் விட்டது. அல்லது “இ(வ் வேதத்)தை அவர் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டார் என்று அவர்கள் கூறுகிறார்களா? (அப்படியானால்) நீங்களும் இதைப் போன்ற கற்பனை செய்யப்பட்ட பத்து அத்தியாயங்களை கொண்டு வாருங்கள்- நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால்! அல்லாஹ்வைத் தவிர்த்து உங்களுக்கு சாத்தியமான எல்லோரையுமே (இதற்குத் துணை செய்ய) அழைத்துக் கொள்ளுங்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக.” (ஹூத்: 13)

இறுதியாக அல் குர்ஆனின் அத்தியாயங்களைப் போன்ற ஒரு அத்தியாயத்தைக் கொண்டுவருமாறு சவால்விட்டது. “இன்னும், (முஹம்மது (ஸல்) என்ற) நம் அடியாருக்கு நாம் அருளியுள்ள (வேதத்) தில் நீங்கள் சந்தேகம் உடையோராக இருப்பீர்களானால், (அந்த சந்தேகத்தில்) உண்மை உடையோராகவும் இருப்பீர்களானால் அல்லாஹ்வைத் தவிர உங்கள் உதவியாளர்களை (யெல்லாம் ஒன்றாக) அழைத்து (வைத்து) க்கொண்டு இது போன்ற ஓர் அத்தியாயமேனும் கொன்டு வாருங்கள்.” (பகரா: 23)

இஸ்லாமிய மாாக்கத்தின் தோற்றம் உலக முடிவையும் மறுமைநாள் நெருங்கிவிட்டது என்பதையும் உணர்த்தும் அடையாளங்களில் ஓர் அடையாளமாகும். நபி (ஸல்) அவர்கள் தான் இறுதி நபி என்பதனை, தன் வருகை மறுமை சம்பவிக்கப் போகின்றது என்பதனை வலியுறுத்தும் அத்தாட்சியாகும் என்று கூறினார்கள். அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள்: நானும் மறுமையும் இவ்வாறுதான் அனுப்பப்பட்டுள்ளோம் என்று கூறிவிட்டு தன் ஆள்காட்டி விரலையும் நடு விரலையும் சேர்த்துக் காட்டினாாகள். (முஸ்லிம்)

## இஸ்லாம் கூறும் அரசியல்

இஸ்லாம் ஏனைய துறைகளை பேணுவது போன்று அரசியல் நிலமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது. இஸ்லாமிய

நாடு தோற்றுவதற்கான அடிப்படை விடயங்களையும், மூல சட்டதிட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த சட்டதிட்டங்களையும் அடிப்படை விதிகளையும் நடைமுறைப்படுத்தி, அவன் கட்டளைகளை நிறைவேற்றக்கூடிய ஆட்சியாளர்களை உருவாக்கியுள்ளது. இறைவன் கூறுகின்றான்: "அஞ்ஞான காலத்து தீர்ப்பையா அவர்கள் விரும்புகிறார்கள்? உறுதியான நம்பிக்கையுள்ள மக்களுக்கு அல்லாஹ்வைவிட தீர்ப்பு வழங்குவதில் அழகானவன் யார்?" (மாயிதா: 50)

இஸ்லாமிய ஆட்சியாளன் மக்களின் பிரதிநிதி. தனது பிரதிநிதித்துவத்தில் பின்வரும் விடயங்களை கடைபிடிப்பது அவனுக்கு கடமையாகும் அல்லது அத்தியவசியமாகும்.

அல்லாஹ்வின் சட்டதிட்டத்தின் அடிப்டையில் அனைவரும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல். அவர்களின் மார்க்கம், உயிர், உடமைகளுக்க பாதுகாப்பளித்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:ஓர் அடியானுக்குக் குடிமக்களின் பொறுப்பை அல்லாஹ் வழங்கியிருக்க, அவன் அவர்களின் நலனைக் காக்கத் தவறினால், சொர்க்கத்தின் வாடையைக் கூட அவன் பெறமாட்டான். (புகாரி: 7150)

உமர் (ரலி) தனது தோழர்களுக்கு கூறியது போன்று தான் ஒரு இஸ்லாமிய ஆட்சியாளன் இருக்கவேண்டும். அவர் கூறியதாவது: எனக்கு ஒரு நபரை தாருங்கள் அல்லது அறிவித்துத் தாருங்கள், எனக்கு முக்கியமான முஸ்லிம்களது விடயத்தில் அவரை பயன்படுத்திக் கொள்வேன். அதற்கு (தோழர்கள்) கூறினார்கள்: அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (பொருத்தமானவர்) என்றனர். அதற்கு (உமர் (ரலி) அவர்கள்) அவர் பலவீனமானவர். தோழர்கள் கூறினார்கள்: இன்னார் (இருவரை குறித்துக் கூறினர்). அதற்கு உமர் (ரலி) அவர்கள் எனக்கு எந்த தேவையும் இல்லை எனக்கூற, தோழர்கள்: நீங்கள் யாரை விரும்புகிரீர்கள்? என வினவ உமர் (ரலி) அவர்கள்: நான் எதிர்பார்க்கும் மனிதர், அவர்களுக்கு தலைவர்கள் காணப்பட்டால் அந்த நபர் அவர்களில் ஒருவராக இருப்பார், அவர்களுக்கு தலைவர்கள் காணப்படாவிட்டால் அந்த நபர் அவர்களது தலைவர் போல இருப்பார். அதற்கு தோழர்கள்: அதற்கு பொருத்தமாவராக

ரபீஃ பின் ஹாரிஸை தவிர வேறு யாரையும் நாம் அறிய மாட்டோம் என்றனர். அதற்கு உமர் (ரலி) அவர்கள்: உண்மை கூறிவிட்டீர்கள் என்றார்கள்.

முஸ்லிம்களுடைய விடயங்களில் தலைமைத்துவத்திற்கு தகுதியில்லாத, பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றத் தெரியாதவர்களை நியமிக்கக் கூடாது. ஏனெனில் இவ்வாறு நியமித்தால் நண்பர்களையும் நெருங்கியவர்களையும் நியமித்து, தலைமைத்துவத்திற்கு தகுதியானவர்களை விட்டுவிடுவார்கள்.

முதலாவது கலீபா அபூபக்கர் (ரலி) அவர்கள் யசீத் பின் அபூ சுப்யான் அவர்களை ஷாம் தேசத்திற்கு கவர்ணராக அனுப்பும் போது கூறினார்கள்: யசீதே! உமக்கு நெருங்கியவர்கள் உள்ளார்கள். அவர்கள் ஆட்சியிலே தாக்கத்தை ஏற்படுத்திவிடுவார்கள் என்பதைத்தான் அதிகமாக பயப்படுகின்றேன். நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: யார் முஸ்லிம்களது விடயத்தில் பொறுப்புதாரிகளாக நியமிக்கப்பட்டு அவர் தனது நெருங்கியவர்களை நியமித்தால் அவருக்கு அல்லாஹ்வுடைய சாபம் ஏற்படுவதுடன், அந்த நபரை நரகில் நுழைவிக்கும் வரை அவரிடமிருந்து நீதியையும், எந்த ஒன்றையும் ஏற்றுக்கொள்ளமாட்டான். (ஹாகிம்: 7024)

இந்த அடிப்படைக் கோட்பாடுகளும் சட்டவிதிகளும் சில விடயங்களைக்கொண்டு சிறப்புறுகின்றன. அவையாவன:

- இறைவன் வைத்த ஆன்மிக நெறி: அதன்மூலம் ஆட்சியாளனும், குடிமகனும், பணக்காரன், ஏழை, வெள்ளையன், கறுப்பன் அனைவரும் சமமே. எந்த ஒரு மனிதனுடைய அந்தஸ்து, சிறப்பு எவ்வளவுதான் உயர்ந்தாலும் அவர் இந்த இஸ்லாமிய கோட்பாட்டிற்கு மாற்றம் செய்யவோ, முரணான ஒரு சட்டத்தை நபி வழியாக பின்பற்றவோ முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்: “மேலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை

ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்மான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்." (அஹ்ஸாப்: 36)

இந்த சட்டத்தை ஆட்சியாளனும் குடிமகனும் கடைபிடித்து அதனை கண்ணியப்படுத்தி தங்களது வாழ்க்கையில் எடுத்து நடப்பதனை அல்லாஹ் அனைவர் மீதும் கடமையாக்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்: "முஃமின்களிடம் அவர்களுக்கிடையே (ஏற்படும் விவகாரங்களில்) தீர்ப்புக் கூறுவதற்காக அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் (வரும்படி) அழைக்கப்பட்டால், அவர்கள் சொல் (வது) எல்லாம் நாங்கள் செவியேற்றோம், (அதற்குக்) கீழ்படிந்தோம் என்பது தான் இ(த்தகைய)வர்கள் தாம் வெற்றியடைந்தவர்கள்." (நூர்: 51)

இஸ்லாத்தில் எந்த ஒரு தனிநபருக்கும் முழுமையான ஆட்சியதிகாரமும் இல்லை. ஒரு ஆட்சியாளராகக் காணப்பட்டாலும் அவரது ஆட்சி அதிகாரங்கள் இஸ்லாம் வரைந்த எல்லைக்குள்ளே உட்பட்டதாகக் காணப்படும். அந்த ஆட்சியாளர் இஸ்லாத்திற்கு மாற்றமாக நடந்தால், அவரை பின்பற்றி அவருக்கு கட்டுப்படத் தேவையில்லை. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (இறைவனுக்கு) மாறு செய்யும்படி கட்டளையிடப்படாத வரை, ஒரு முஸ்லிம் தமக்கு விருப்பமான விஷயத்திலும் விருப்பமில்லாத விஷயத்திலும் (தலைமையின் கட்டளையைச்) செவியேற்பதும் (அதற்குக்) கீழ்ப்படிவது கடமையாகும். (இறைவனுக்கு) மாறு செய்யும்படி கட்டளையிடப்பட்டால் (அதைச்) செவியேற்பதோ (அதற்குக்) கட்டுப்படுவதோ கூடாது. (புகாரி 7144)

கலந்தாலோசித்தல்: இந்த விடயம் அரசியலின் மூல கருவாகும். இதன் மீதுதான் அரசியல் விழுமியங்கள் தங்கியுள்ளன. இந்த கலந்தாலோசிப்பு மூலம்தான் இஸ்லாமிய நாடு உருவாகும். அல்லாஹ் கூறுகின்றான்: "இன்னும் தங்கள் இறைவன் கட்டளைகளை ஏற்று தொழுகையை (ஒழுங்குப்படி) நிலைநிறுத்துவார்கள் - அன்றியும் தம் காரியங்களைத் தம்மிடையே

கலந்தாலோசித்துக் கொள்வர் மேலும், நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து (தானமாகச்) செலவு செய்வார்கள்." (ஷூரா: 38)

அல்லாஹ் கூறுகின்றான்: "அல்லாஹ்வுடைய ரஹ்மத்தின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக (கனிவாக) நடந்து கொள்கிறீர். (சொல்லில்) நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப்பீரானால், அவர்கள் உம் சமூகத்தை விட்டும் ஓடிப் போயிருப்பார்கள். எனவே அவர்களின் (பிழைகளை) அலட்சியப்படுத்திவிடுவீராக. அவ்வாறே அவர்களுக்காக மன்னிப்புத் தேடுவீராக. தவிர, சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்." (ஆலு இம்ரான்: 159).

முதலாவது இறை வசனத்தில் இஸ்லாத்தின் முக்கிய விடயங்களுள் ஒன்றான தொழுகையுடன் இணைத்துக் கூறியுள்ளான். இதன் மூலம் முக்கியத்துவத்தினை உணர்த்துவதும், சமூக நலனோடு தொடர்புபடுகின்ற விடயங்களில் அறிவாளிகளுடன், மற்றும் சிந்தனையாளர்களுடன் கலந்தாலோசித்தி, முடிவுகள் எடுப்பதன் முக்கித்துவத்தை தெளிவுபடுத்துகின்றது.

இரண்டாவது வசனத்தில் அல்லாஹ் முஸ்லிம்களை புகழ்ந்து கூறியுள்ளான். ஏனெனில் அவர்கள் அவர்களது அனைத்து விடயங்களிலும் கலந்தாலோசிப்பதை கட்டாயமாக பேணுவதே!

இரண்டாம் வசனத்தில் ஆட்சி நடத்தக் கூடிய தனது தூதரிடம் சமூக நலனோடு சம்மபந்தப்பட்ட விடயங்களில் இறைக்கட்டளை காணப்படாவிட்டால் அந்த விடயங்களில் கலந்தாசிக்கும்படி வேண்டுகின்றான். எந்த விடயத்தில் தெளிவான இறை (வசனம்) கட்டளை வந்துள்ளதோ அதில் கலந்தாலோசிப்பதற்கு பங்கு கிடையாது. நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் கலந்தாலோசிக்கக் கூடியவர்களாகக் காணப்பட்டார்கள். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் அவர்களைவிட தனது தோழர்களுடன் அதிகமாக கலந்

தாலோசிப்பதைப் போன்று அதிகம் கலந்தாலோசிக்கக்கூடிய ஒருவரை நான் காணவில்லை. (திர்மிதி: 1714)

ஏனென்றால் மார்க்க அறிஞர்கள் ஆட்சியாளன் சமூக நலனோடு தொடர்புபடுகின்ற விடயங்களிலே கலந்து ஆலோசிப்பதனை கடமையாக்கியுள்ளார்கள்.

இஸ்லாமிய மார்க்கம் ஓர் ஆட்சியாளனை, தான் சுமந்துள்ள பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றக் கூடிய பிரதிநிதியாகவே கணிக்கின்றது. அதேபோன்று ஆட்சியாளன் இடுகின்ற கட்டளைகளை எடுத்து நடக்கக்கூடியவர்களாக சமூகத்தை ஆக்கியுள்ளது. இஸ்லாம் ஒவ்வொரு மனிதனினதும் பேசும் உரிமையையும், பிரச்சினை ஏற்படாத வண்ணம் அது காட்டிய அடிப்படையில், பொருந்தக்கூடிய விதத்தில் விமர்சிப்பதற்கும் உரிமை அளித்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிந்துகொள்ளுங்கள், போராட்டத்தில் சிறந்தது, அநியாயம் செய்யும் ஆட்சியாளனிடம் பேசக்கூடி உண்மையான பேச்சாகும். (ஹாகிம்: 8543)

இஸ்லாத்தின் முதலாவது கலீபா அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்: மக்களே! உங்களுக்கு நான் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டுள்ளேன். இதனால் நான் உங்களைவிட சிறந்தவனாக இல்லை. என்னை நேரான வழியில் கண்டால், எனக்கு உதவி செய்யுங்கள். என்னை தவறின் மீது கண்டால் திருத்திவிடுங்கள். உங்களது விடயத்தில் நான் அல்லாஹ்வுக்கு கட்டுப்படும் வரை எனக்கு நீங்கள் கட்டுப்படுங்கள், நான் அல்லாஹ்வுக்கு மாறுசெய்தால் எனக்கு நீங்கள் கட்டுப்பட்த் தேவையில்லை.

இதே போன்று இரண்டாவது கலீபா உமர் (ரலி) அவர்கள் மிம்பரில் தன் மக்களுக்கு உபதேசம் செய்யும் போது இவ்வாறு கூறினார்கள்: மக்களே! என்னிடத்தில் ஏதாவது கோணல்களை அல்லது குறைகளை கண்டால் அதனைத் திருத்தித்தாருங்கள். ஒரு நாட்டுப்புற அரபி மக்கள் மத்தியிலே எழுந்து: அல்லாஹ்வின் மீது ஆணையாக, உங்களிடத்தில் ஏதாவது குறைகளைக் கண்டால் எம் வாட்களால் திருத்துவோம் என்றார். இதனை செவியுற்ற உமர் (ரலி) அவர்கள்

கோபப்படவுமில்லை, அந்த மனிதரை தண்டிக்கவுமில்லை, மாறாக தனது இரு கரங்களையும் வாளின் பக்கம் உயர்த்தி பின்வருமாறு கூறினார்கள்: தனது உம்மத்திலே உமருடைய குறைகளை திருத்தக்கூடிய நபரை ஆக்கிய அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அதே போன்று தான் ஆட்சியாளன் கணக்குக் கேட்கப்பட வேண்டும், கேள்வி கேட்கப்பட வேண்டும். ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது, அவர் மீது இரண்டு ஆடைகள் காணப்பட்டன. உமர் (ரலி) அவர்கள் மக்களை நோக்கி மக்களே! கட்டளைகளை செவியுறுங்கள், அவற்றின் படி நடவுங்கள் என்று கூறினார்கள். உடனே ஒரு மனிதர் எழுந்து வழிப்படத் தேவையில்லை என்றார். அதற்கு உமர் (ரலி) அவர்கள்: ஏன், என்றார். அதற்கு அம்மனிதர்: உங்களுக்கு இரு ஆடைகள் உள்ளன, எங்களுக்கு ஒரு ஆடைதான் இருக்கின்றது என்றார். (உமர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஒரு ஆடையை கடமையாக்கியிருந்தார்கள்) பின்னர் உமர் (ரலி) அவர்கள் உரத்த குரலில்: அப்துல்லாஹ்வே! (தன் மகனை நோக்கி) இது எனது ஆடை, இதனை அவருக்குக் கொடுத்துவிட்டேன் என்று அவருக்கு அறிவிக்கும்படி கூறினார்கள். அதற்கு அந்த மனிதர்: இப்பொழுது உங்களுக்கு செவிசாய்த்து கட்டுப்பட்டுவிட்டோம் என்றார்.

இஸ்லாம் இந்த விடயங்களையும் உரிமைகளையும் பொது சுதந்திரங்களையும் பேணிப் பாதுகாக்கின்றது. மனோ இச்சையின் அடிப்படையில் உருவாகின்ற சட்டங்களையும் அதன் அடிப்படைகளையும் இஸ்லாம் தூரமாக்கியுள்ளது. ஏனெனில் இவர்களின் சட்டங்கள் மனோ இச்சையின் பிரதிபளிப்பாகத்தான் காணப்படும்.

## இஸ்லாம் கூறும் பொருளாதாரத்தில் சில

பணம் வாழ்க்கைக்கு அத்தியவசியமாகும். இஸ்லாமிய மார்க்கம் சமூக நீதி பிரதிபளிக்கக் கூடிய சமமான சமூகத்தை உருவாக்குவதில் அக்கறை செலுத்துகின்றது. அப்போது தான் ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையும் விஸ்தீரனமுடையதாக காணப்படும். அல்லாஹ் கூறுகின்றான்: “செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும்.” (கஹ்ப்: 46)

இஸ்லாமிய கண்ணோட்டதில் பணம் அத்தியவசியமாக கணிக்கப்படுகின்றது. இதனை விட்டும் தனிமனிதனோ சமூகமோ தேவையற்று வாழ முடியாது. இந்த பணத்தை எவ்வாறு சம்பாதிக்க வேண்டும், எவ்வாறு செலவளிக்க வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளது. அதே போன்று தான் சம்பாதித்ததிலிருந்து குறிப்பிட்ட ஒரு விகிதத்தை அதாவது 2.5 பங்கை ஸகாத் என்ற பெயரில் வழங்குவதை கடமையாகக்கியுள்ளது. பணம் படைத்தவர்களின் பணத்திற்கு ஓர் ஆண்டு பூர்த்தி அடைந்தால் குறிப்பிட்ட ஸகாத் தொகையை அவற்றிலிருந்து வெளியாக்குவது கடமையாகும். இந்த ஸகாத் ஏழைகளுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். தனி நபர் சொந்தமாக்கிக் கொள்வதனையும் தனி நபருக்கு சொந்தமான வியாபாரங்களையும் இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. இந்த வியாபாரங்களை கண்ணியப்படுத்துகின்றது. அடுத்தவர்களுடைய சொத்துக்களை சொந்தாமக்கிக் கொள்வதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: “அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள்.” (பகரா: 188)

இஸ்லாம் எதிர்பார்க்கின்ற இலட்சியம் நிறைவேறுவதற்காக சில ஒழுக்க விதிகளை மார்க்கமாக்கியுள்ளது. இதன் மூலம் இஸ்லாமிய சமூகத்தின், தனி மனிதனுடைய வாழ்க்கை சிறப்புறுகின்றது. அதனடிப்படையில்:

1- வட்டியை ஹராம் ஆக்கியுள்ளது. அது தனது சகோதரனது உழைப்புக்களை வீணாக பறிப்பதாகும். அவனது பணத்தை உரிமையின்றி எடுப்பதாகும். இந்த வட்டியால் நலவுகள் வீணாக்கப்பட்டு ஒரு சாராரின் கையில் பணம் குவியும். அல்லாஹ் கூறுகின்றான்: “ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உண்மையாக முஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வுக்கு அஞ்சியடங்கி, எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள். இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப்பட்டு விட்டது (என்பதை அறிந்து கொள்ளுங்கள்) -

நீங்கள் தவ்பா செய்து (இப்பாவத்திலிருந்தும்) மீண்டுவிட்டால், உங்கள் பொருள்களின் அசல் - முதல் - உங்களுக்குண்டு. (கடன்பட்டோருக்கு) நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள் நீங்களும் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள்.” (பகரா: 278)

**2-** இஸ்லாம் கடன்கொடுப்பது, வாங்குவதுபற்றி தூண்டுகின்றது. அதன்பக்கம் அழைப்புவிடுக்கின்றது. இதன் மூலம் வட்டியின் தொடர்பும் அதன் வழிகளும் குறையும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஒரு முஸ்லிம் சகோதரனுக்கு ஒரு திர்ஹத்தை இரண்டு தடவைகள் கடனாகக் கொடுக்கின்றானோ, அவனுக்கு ஒரே தடவையில் இரண்டு தர்மம் செய்த கூலி வழங்கப்படும். (அபூ யஃலா: 5030)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஒரு முஸ்லிம் சகோதரனது கஷ்டத்தைப் போக்குகின்றானோ, அல்லாஹ் மறுமை நாளின் கஷ்டங்களில் ஒரு கஷ்டத்தை அவனை விட்டும் நீக்குவான்.

கடன் வாங்கியவர் கஷ்டமான நிலையில் இருந்தால் அவரை வற்புறுத்தாமல் அவருக்கு கால அவகாசம் வழங்குவதை ஏவுகின்றது. இந்த செயலை கட்டளை அல்லாமல் வரவேற்கத்தக்கதாக ஆக்கியுள்ளது.

தான் வாங்கிய கடனை அடைப்பதற்கு முயற்சி எடுக்கும் நபருக்குத்தான் இந்த சலுகை, மாறாக மறுப்பவருக்கு அல்ல. அல்லாஹ் கூறுகின்றான்: “அன்றியும், கடன்பட்டவர் (அதனைத் தீர்க்க இயலாது) கஷ்டத்தில் இருப்பின் (அவருக்கு) வசதியான நிலை வரும்வரைக் காத்திருங்கள்.” (பகரா: 280)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கடன் பெற்றவர் கஷ்டமான நிலையில் இருக்கும் போது அவருக்கு அவகாசம் வழங்கினால், அவருக்கு (கடன் கொடுத்தவருக்கு) ஒவ்வொரு நாளுக்கும் பதிலாக தர்மம் வழங்கியதன் நன்மை வழங்கப்படும். (இப்னு மாஜா: 2418)

கடன் பெற்றவர் தான் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவராக இருந்தால் அவரை கஷ்டப்படுத்துவதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. அதன் சிறப்பை இவ்வாறு தெளிவுபடுத்துகின்றது. “இன்னும், (கடனைத் தீர்க்க இயலாதவருக்கு அதை) தர்மமாக விட்டுவிடுவீர்களானால் - (அதன் நன்மைகள் பற்றி) நீங்கள் அறிவீர்களானால் - (அதுவே) உங்களுக்குப் பெரும் நன்மையாகும்.” (பகரா: 280)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் மறுமை நாளில் அல்லாஹ் தனது கஷ்டங்களை நீக்க வேண்டுமென விரும்புகின்றாரோ, அவர் கடன் பெற்றவர்களுக்கு அவகாசம் அழிக்கட்டும். அல்லது வாங்காது விட்டு விடட்டும். (பைஹகி: 10756)

**3-** எந்த வகையான பொருளாக இருப்பினும் அதனை பதுக்கிவைப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது. மக்களுக்கு தேவையான பொருளை சந்தையில் முடியும் வரை பதுக்கி வைத்து பின்னர் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு விலைவைத்து விற்பதனை தடுக்கின்றது. இதனால் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி மக்களுக்கு தீங்கு ஏற்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் பதுக்கிவைக்கின்றாரோ அவர் தவறிழைத்துவிட்டார் பாவம் செய்துவிட்டார். (முஸ்லிம்: 1605)

இமாம் அபூ ஹனீபா அவர்களின் மாணவன் அபூ யூஸுப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஒழிக்கக் கூடிய அனைத்தும் மோசடியே! பதுக்கலே! அது தங்கமாகவோ, வெள்ளியாகவோ இருப்பினும் சரியே. அதனுடைய பாவனை கெட்டுவிடும் என்று எண்ணி பதுக்கினாலும் சரியே. இவ்வாறு பொருட்களை பதுக்குவதன் மூலம் மக்களுக்கு தீங்குதான் ஏற்படுகின்றது. மக்களுக்கு பல்வேறு தேவைகள் இருக்கின்றன. இதன் மூலம் அவர்கள் கஷ்டங்களுக்கும் இடர்களுக்கும் உள்ளாகின்றனர்.

இஸ்லாமிய ஆட்சியில் எவரேனும் ஒருவர் வியாபார பொருளை பதுக்கல் செய்தால், வியாபாரிக்கு வாங்குபவருக்கு நஷ்டம்

ஏற்படா வண்ணம் அப்பொருளுக்கு ஒரு விலையைத் தீர்மானித்து விற்குமாறு ஆட்சியாளர் வியாபாரிக்கு கட்டளையிடுவார். வியாபாரி அதனை மறுப்பாராயின் ஆட்சியாளர் தலையிட்டு நிர்ப்பந்தமாக குறிப்பிடப்பட்ட முறையில் விற்கவைப்பார்.

4- வரி அறவிடுவதை தடை செய்துள்ளது. ஒரு வியாபாரி தனது பொருளை விற்பனை செய்வதற்கு அல்லது அதனை நாட்டினுள் கொண்டு வருவதற்குப் பகரமாக அவனிடமிருந்து ஒரு தொகையை அறவிடுவதாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: கப்பம் (வரி) பெறுபவன் சுவனம் நுழையாமாட்டான். (இப்னு குஸைமா: 2333)

எனவே இந்த வரியை பொறுத்தவரையில் அதை கொடுப்பதும் கூடாது, அதை பெறுவதும் கூடாது. அதற்கு யாரெல்லாம் எழுத்து ரீதியாகவோ, சாட்சியாக இருப்பதன் மூலமோ எந்த விதத்தில் உதவியாக இருந்தாலும் அவர்கள் பின்வரும் எச்சரிக்கையிலிருந்து தப்ப முடியாது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹராத்தில் (தடைசெய்யப்பட்டதை உண்டு) வளர்ந்த எந்தவொரு மாமிசமும் சுவனம் நுழையமாட்டாது, நரகமே அவற்றிற்கு மிகத் தகுதியானதாகும். (இப்னு ஹிப்பான்: 5567)

5- பணத்தை பொக்கிசமாக சேர்த்துவைத்து, தனி நபர்களும் சமூகமும் அதன் மூலம் பயன் பெறும் விதத்தில் அதை செலவிடாமல் இருப்பதையும் தடைசெய்துள்ளது. ஏனென்றால் அது மனிதரின் கையில் தவழ வேண்டும், அதன் மூலம் பொருளாதாரம் நடைபெற வேண்டும். அப்போது தான் சமூக நிலை சீர்பெறும். அல்லாஹ் கூறுகின்றான்: “இன்னும் எவர்கள் பொன்னையும், வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவிடாதிருக்கின்றார்களோ (நபியே!) அவர்களுக்கு நோவினை அளிக்கும் வேதனை உண்டு என்று நன்மாராயம் கூறுவீராக!.” (தௌபா: 34)

இஸ்லாத்தில் தனிநபருக்கென உரிமைகள் இருக்கின்றன.

உதாரணமாக: ஸகாத், பொது தர்மம்,குடும்பத்தினருக்கு செலவிடல். மற்றும் சமூகத்திற்கென உரிமைகள் இருக்கின்றன. உதாரணமாக: பாடசாலைகள், வைத்தியசாலைகள், அநாதை இல்லங்கள், பள்ளிவாயல்கள் போன்றவற்றிற்கு செலவிடல். எனவே அவ்விரு தரப்பினருக்கும் தனது பணத்தின்மூலம் செலவிடுவத ஒரு செல்வந்தனின் பொறுப்பாகும்.

**6-** அளவை, நிறுவையில் மோசடிசெய்தல்: இது ஹராம் ஆகும், ஒரு விதமான களவும் மோசடியும் ஏமாற்றுதலுமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: “அளவில் (எடையில்) மோசம் செய்பவர்களுக்கு கேடுதான். அவர்கள் மனிதர்களிடமிருந்து அளந்து வாங்கும் போது நிறைவாக அளந்து வாங்குகின்றனர். அவர்கள் அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும் போது குறை (த்து நஷ்டமுண்டா) க்குகிறார்கள்.” (முதப்பிபீன்: 1 - 3)

**7-** மனிதர்கள் அனைவரும் பயன் பெரும் தண்ணீர், மேய்ச்சல் நிலங்கள் போன்ற பொதுச் சொத்துக்களில் ஆக்கிரமிப்புச் செலுத்துதல். அல்லது அவற்றிலிருந்து பயன் பெறாதவாறு செய்தல் என்பனவும் தடை செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் எவருக்கும் அதில் தனியுரிமை இல்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மூன்று பேர்களுடன் மறுமையில் அல்லாஹ் பேசவும் மாட்டான் அவர்களை ஏறெடுத்துப் பார்க்கவும் மாட்டான் (அவர்கள் வருமாறு:) (ஒருவன், தன் பொருளை (அதிக விலைக்கு) விற்பதற்காக (அதைக் கொள்முதல் செய்தபோது) வாடிக்கையாளர் கொடுக்கும் விலையை விட அதிக விலை கொடுத்து வாங்கியதாக (பொய்) சத்தியம் செய்தவன். (மற்றொருவன்), அஸர் தொழுகைக்குப் பின் (மக்கள் கூடும் நேரத்தில்) முஸ்லிம் ஒருவரின் செல்வத்தை அபகரித்துக் கொள்வதற்காகப் பொய்சத்தியம் செய்தவன். (இன்னொருவன்), தன் தேவைக்கு மேல் எஞ்சியிருந்த தண்ணீரை (மக்கள் உபயோகிப்பதை) விட்டும் தடுத்தவன் ஆவான். (மறுமையில்) அவனை நோக்கி, உன் கரங்கள் உருவாக்காத தண்ணீரின் மீதத்தை மக்கள் உபயோகிக்க விடாமல் தடுத்ததைப் போன்றே இன்று நான் என்னுடைய

அருளிலிருந்துஉன்னைத் தடுக்கிறேன் என்று அல்லாஹ் கூறுவான். (புகாரி: 2369)

இன்னுமோர் ஹதீஸில்: முஸ்லிம்கள் மூன்றில் பொதுவுரிமை பெற்றவர்களாவார்கள்: அவையாவன தண்ணீர். புல், தீ என்பனவாகும். (அஹ்மத்: 23132)

**8-** அநந்தரச்சொத்தை பங்கிடும் சட்டவொழுங்கு. மரணித்தவர் பயன் பெறும் விதத்தில் ஒரு நற்காரியத்தை செய்துவிட்டு, நெருங்கிய மற்றும் தூர உறவுகளை கவனித்து சொத்தை பிரித்தல், இதில் எவருக்கும் தான் விரும்பிய பிரகாரம் பங்கீடுசெய்ய முடியாது. இந்த பங்கீட்டு முறையின் நன்மைகளில் ஒன்றுதான், சொத்துக்கள் சிறு, சிறு உடமைகளாக பிரிக்கப்பட்டு ஒருவர் கையில் பெரும் சொத்துகள் முடங்குவது சாத்தியமற்றதாக மாறிவிடுகின்றது. அல்லாஹ் ஒவ்வொருக்கும் உரிய பங்கினை வழங்கியுள்ளான். எனவே அநந்தக்காரருக்கு மரணசாசனம் வழங்குவது கூடாது. (அபூ தாவுத்: 2870)

**9-** (வக்பு) நிரந்தர தர்மம் சம்பந்தமான சட்ட ஒழுங்குகள்: இஸ்லாம் இதில் அதிகம் ஆர்வ மூட்டுகின்றது. இது இருவகைப்படும்:

- வக்பு செய்பவர், வறுமையில் வாழும் தன் உறவினரை வறுமையிலிருந்தும் பிறரிடம் கையேந்தவதிலிருந்தும் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கில் அவர்களுக்காக வக்பு செய்தல். ஆயினும் அந்த உறிவினர்களின் மறைவிற்குப் பின்னால் அச்சொத்து பொது நலன்களுக்காக பாவிக்கப்பட வேண்டும்.

- பொதுவான வக்பு -நிரந்தர தர்மம்-: இதன் வருமானம் வைத்தியசாலை, பாடசாலைகள், பாதைகள், பொது நூல் நிலையங்கள், பள்ளிவாயல்கள், அநாதை இல்லங்கள், முதியோர், அனாதரவற்றோர் இல்லங்கள் என்பவற்றை நிறுவும் பணி, இதுபோன்ற சமூகத்திற்கு பிரயோசனம் தரும் வழிகளில் பயன் படுத்தப்படும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் மரணித்தவிட்டால். அவனின் கிரிகைகள்

அனைத்தும் அவனைவிட்டும் தொடர்பற்றுவிடும், மூன்று விடயங்களைத் தவிர: நிரந்தர தர்மம், பிரயோசனம்தரும் அறிவு, தனக்காக பிரார்த்திக்கும் நல்ல குழந்தை. (முஸ்லிம்: 1631)

10- இஸ்லாத்தில் மரணசாசனம்: ஒரு முஸ்லிம் தனது மரணத்திற்கு பின்னால் தனது சொத்தில் ஒரு பகுதியை நற்காரியங்களுக்காகவும் பொது நலன்களுக்காகவும் மரணசாசனம் (வஸிய்யத்த) செய்யுமாறு இஸ்லாம் வேண்டுகின்றது. எனினும் அவர் தனது சொத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகமாக வஸிய்யத் செய்யக் கூடாது. ஏனெனில் அது அநந்தரக்காரர்களுக்கு தீங்கை ஏற்படுத்தும். ஆமிர் பின் ஸஃத் எனும் நபித்தோழர் கூறுகின்றார்: நான் மக்காவில் நோயாளியாக இருக்கும் போது நபியவர்கள் என்னை நோய் விசாரிக்க வந்தார்கள்: நான் கேட்டேன்: எனது முழு சொத்தையும் நான் வஸிய்யத் செய்யவா? அதற்கவர்: வேண்டாம் என்றார்கள். அப்படியாயின் அரைவாசியை எனக்கேட்டேன். அப்போதும் வேண்டாம் என்றார்கள். அப்போது மூன்றில் ஒரு பகுதியை என நான் கேட்டேன். அப்போது: மூன்றில் ஒன்றா? மூன்றில் ஒன்று அதிகமே, நீர் உன் அநந்தர்களை மனிதர்களிடம் கை நீட்டும் ஏழைகளாக விட்டுச்செல்வதை விட அவர்களை செல்வந்தர்களாக விட்டுச் செல்வது மேலானதாகும். நீர் எவ்வளவுதான் செலவளித்தாலும் அது உனக்கு தர்மம்தான், நீர் உன் மனைவியின் வாயில் இடும் உணவுக் கவளமாயினும் சரியே. (புகாரி: 5354)

11- பின்வரும் இறைவசனம் பொதிந்துள்ள அனைத்தும் ஹராம் ஆகும். “நம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் ஒருவருக்கொருவர் பொருந்திக் கொள்ளும் முறையில் செய்து கொள்ளும் வர்த்தகம் அல்லாமல், ஒருவர் மற்றொருவரின் பொருட்களை தவறான முறையில் உண்ணாதீர்கள்.” (நிஸா: 29)

அபகரித்தல்: அதில் மனிதர்களுக்கு அநியாயமும், சமூகத்திற்கு தீங்கும் இருக்கின்றது. நபி (ஸல்) அவர்கள்

கூறினார்கள்: எவர் தனது கரத்தினால் ஒரு முஸ்லிமின் உரிமையை சுரண்டுகின்றாரோ, அல்லாஹ் அதற்குப் பகரமாக அவனுக்கு நரகத்தைக் கட்டாயப்படுத்தி, சுவர்க்கத்தை தடைசெய்கின்றான். அதற்கொரு மனிதர்: அது சிறிய விடயமானாலுமா? என வினவ, ஆம். அது (பல் துலக்கும்) அராக் குச்சியாயினும் சரியே என்றார்கள். (முஸ்லிம்: 137)

களவு: அது அநீதமான முறையில் மனிதர்களின் உரிமையில் அத்துமீறுவதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விபச்சாரம் செய்பவன் விபச்சாரம் செய்யும் போது (முஃமினாக) விசுவாசியாக இல்லை, களவெடுப்பவன் களவெடுக்கும் போது முஃமினாக இல்லை. (முஸ்லிம்: 57)

ஏமாற்றுதலும் தந்திரமும்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் எங்களுக்கெதிராக ஆயுதம் ஏந்துகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல, எவர் எங்களை ஏமாற்றுகின்றாரோ அவரும் நம்மைச்சார்ந்தவர் அல்ல. (முஸ்லிம்: 101)

லஞ்சம் வாங்குதல்: இறைவன் கூறுகின்றான்: “அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள். மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து (எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் உண்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள்.” (பகரா: 188)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் சட்ட விடயத்தில் லஞ்சம் வாங்குபவனையும், கொடுப்பவனையும் சபித்தார்கள். (இப்னு ஹிப்பான்: 5076)

லஞ்சம் கொடுப்பவன் சபிக்கப்படக் காரணம் அவன்தான் இந்த தீய பழக்கம் சமூகத்தில் பரவக்காரணம், மேலும் லஞ்சம் எடுப்பவன் சபிக்கப்படக் காரணம் யாதெனில் அவன் அநீதமான முறையில் பணத்தை எடுத்தமையும், தான் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கு மோசடி செய்தமையுமாகும்.

அனுமதி இன்றி மற்ற சகோதரனின் வியாபாரத்துக்கு எதிராக வியாபாரம் செய்தல்: அது சமூகத்தவர்களிடையில் கோபத்தையும் பகைமையையும் உண்டுபண்ணுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உத்தரவின்றி உங்களில் ஒருவர் தன் சகோதரனின் வியாபாரத்துக்கு எதிராக வியாபாரம் செய்யவேண்டாம். அவரின் திருமணப் பேச்சுக்கு எதிராக திருமணம் செய்யவும்வேண்டாம். (முஸ்லிம்: 1412)

# இஸ்லாம் கூறும் சமூகவியல்

சமூக நிலை சீர்பெறும் வண்ணம் தனிநபர் உரிமைகளையும் கடமைகளையும் வரையறுக்கும் சட்டங்களை இஸ்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கடமை, உரிமைகள் தனிப்பட்டவை, பொதுவானவை என வேறுபடுகின்றன. அல்லாஹ் கடமையாக்கிய உரிமைகளும் கடமைகளும் பின்வருமாறு:

## குடிமக்கள் ஆட்சியாளனுக்கு செய்யவேண்டிய கடமைகள்:

ஆட்சியாளனுக்கு வழிப்பட்டு நடப்பது: அல்லாஹ்வுக்கு மாறுசெய்யாத விடயத்தில் தான் அவருக்கு வழிப்பட வேண்டும். இறைவன் கூறுகின்றான்: "நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள். இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்." (நிஸா: 59)

ஆட்சியாளனுக்கு நலவை நாடுதல், மென்மையைக் கையாண்டு அவரை ஏமாற்றாதிருத்தல், அவருக்கும் அவர் குடிமக்களுக்கும் பிரயோசனம் அளிக்கும் விதத்தில் நல்லுபதேசங்களை வழங்குதல், மனிதர்களின் தேவைகளை அவருக்கு நினைவூட்டுதல். அல்லாஹ் மூஸா, ஹாரூன் ஆகிய இரு நபிமார்களையும் பிர்அவ்னிடம் அனுப்பும் போது அவர்களுக்குக் கூறினான்: "நீங்கள் இருவரும் அவனிடம் (சாந்தமாக) மென்மையான சொல்லால் சொல்லுங்கள்,

அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம், அல்லது அச்சம் கொள்ளலாம்." (தாஹா: 44). நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மார்க்கம் என்பது நலவை நாடுவதாகும். அப்போது நபித் தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே யாருக்கு நலவை நாடுவது என் வினவினர், அல்லாஹ்வுக்கும் அவனது வேதத்திற்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் அவர்களின் பொதுமக்களுக்கும் நலவை நாடுவதாகும் என்று பதிலுரைத்தார்கள் நபி (ஸல்) அவர்கள். (முஸ்லிம்: 55)

கஷ்டம், நெருக்கடிகளின் போது அவருடன் நிற்றல், அவருக்கு எதிராக கிளர்ச்சி செய்யவோ, உதவி செய்யாது ஒதுங்கி இருக்கவோ, உதவி மறுக்கவோ கூடாது. இவர் அவருக்கு பைஅத் (வாக்களித்தல்) செய்யாதவராக இருப்பினும் சரியே. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஒரு மனிதனுக்கு கட்டுபப்பட்டு இருக்கும் நிலையில் ஒருவர் வந்து உங்கள் ஒற்றுமையைக் குலைக்க அல்லது பிரிவினையை ஏற்படுத்த நாடினால் அவனை கொன்றுவிடுங்கள். (முஸ்லிம்: 1852)

## ஆட்சியாளன் குடிமக்களுக்கு செய்யவேண்டிய கடமைகள்:

அவர்களுக்கு மத்தியில் நீதமாக நடத்தல்: ஒவ்வொருவரினதும் உரிமையைப் பேணல், உரிமைகள், கடமைகள், பொறுப்புக்களை வழங்குதல், சட்டம் என்பவற்றில் நீதமாக நடப்பது அவர் மீது கடமையாகும். அனைவரும் அவர் முன் சமமானவர்களே,நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளில் அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமாக அமர்ந்திருப்பவர் நீதமான அரசனாவார், மேலும் மறுமை நாளில் அல்லாஹ்வுக்கு மிக வெறுப்புக்குரியவனும், கடும் வேதனைக்குரியவனும் அநியாயக்கார அரசனாவான். (திர்மிதி: 1329)

தன் குடிமக்களுக்கு அநியாயம் செய்தல், ஏமாற்றுதல், மோசடி செய்தல் என்பவற்றைத் தவிர்த்தல்: நபி (ஸல்) அவர்கள்

கூறினார்கள்: அல்லாஹ் ஓர் அடியானை ஆட்சியாளனாக நியமிக்க அவர் மரணிக்கும் நாளில் தனது குடிமக்களுக்கு மோசடி செய்தவர் என்ற பெயருடன் மரணிப்பாரானால், அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தை ஹராம் ஆக்குவான். (முஸ்லிம்: 142)

அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் அவர்களுடன் கலந்தாலோசித்தல் -நேரடியாக மார்க்கத்தில் கூறப்படாத விடயங்களில்- சுதந்திரமாக தங்களது கருத்துக்களை வெளியிட அவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல், அவர்களின் கருத்துக்களில் பொது நலன் தென்பட்டால் அவற்றை ஏற்றல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்தின் போது தண்ணீர் கிணறுகளை முன்னே விட்டுவிட்டு ஒரு இடத்தில் இறங்கினார்கள், அப்போது ஒரு தோழர்: அல்லாஹ்வின் தூதரே இது இறைவனின் கட்டளையா? அல்லது யுத்த தந்திரமா? என வினவ, இல்லை இது யுத்த தந்திரம் தான் என நபியவர்கள் கூற, கிணறுகள் எங்களுக்குப் பின்னால் இருந்தால் பகைவர்கள் அவற்றைவிட்டும் தடுக்கப் படுவார்கள் என்று அத்தோழர் கூற நபியவர்கள் அக்கருத்தை சரிகண்டு அதனை அமுல்படுத்தினார்கள்.

ஆட்சியாளன் தன் குடிமக்களை ஆளுகின்ற சட்டயாப்பு மார்க்கமாக இருக்க வேண்டும். தனிநபர் கருத்துக்களுக்கும் மனோ இச்சைகளுக்கும் மரபு சட்டங்களுக்கும் இடம் கிடையாது. ஏனெனில் அவை சரியாகவும் இருக்கலாம் சிலவேளை பிழையாகவும் இருக்கலாம். இரண்டாம் கலீபா உமர் (ரலி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு தனது சகோதரன் ஸைத் பின் கத்தாப் அவர்களை கொலை செய்த அபூ மர்யம் ஸலூலி என்பவனைப் பார்த்து கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் உன்னை விரும்ப மாட்டேன் பூமி இரத்தத்தை விரும்பும் வரையில், அதற்கவன்: அது எனது உரிமைகளில் எதையாவது தடுத்துவிட்டாலுமா? எனக்கேட்டான். அதற்கு உமர் (ரலி) அவர்கள் இல்லை எனக்

கூறினார்கள். அப்போதவன்: அப்படியானால் பரவாயில்லை, பெண்கள்தான் கவலையைப் பாராட்டுகின்றனர் என்றான்.

குடிமக்களை விட்டும் திரைமறைவின்றி இருத்தல். அவர்கள் மீது பெருமை அடிக்காதிருத்தல். அவர்களுக்கும் தனக்கும் மத்தியில், தாம் விரும்புவர்களுக்கு அனுமதி அளிக்கவும், விரும்பாதவர்களுக்கு அனுமதி மறுக்கவும் செய்யும் தரகர்களை ஏற்படுத்தி வைத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவன் முஸ்லிம்களின் விடயங்களில் ஒன்றைப் பொறுப்பேற்று அவர்களின் நற்பு, தேவை, வறுமை, பஞ்சம் என்பவற்றை விட்டும் பொறுப்பற்றவனாக இருப்பானோ, அல்லாஹ் மறுமைநாளில் அவனின் தேவை, வறுமை, பஞ்சம் என்பவற்றை விட்டும் திரைமறைவாக இருப்பான். (ஹாகிம்: 373)

குடிமக்களுக்கு கருணைகாட்டுதல், அவர்களுக்கு இயலாதவற்றை சுமத்தாதிருத்தல், அவர்களின் வாழ்க்கைச் செலவினத்தில் நெருக்கடியை ஏற்படுத்தாதிருத்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவா! எவர் எனது சமூகத்தின் விடயங்களில் ஒரு விடயத்தை பொறுப்பேற்று அவர்கள் மீது கஷ்டத்தை ஏற்படுத்துவாரோ, அவர் மீது கஷ்டத்தை ஏற்படுத்துவாயாக. எவர் எனது சமூகத்தின் விடயங்களில் ஒரு விடயத்தை பொறுப்பேற்று அவர்களுடன் அன்பாக நடந்துகொள்வாரோ நீயும் அவருடன் அன்பாக நடப்பாயாக. (முஸ்லிம்: 1828). உமர் (ரலி) அவர்கள் இதன் பாரதூரத்தை விளக்கும் போது: அல்லாஹ்வின் மீது ஆணையாக, இராக்கில் ஒரு கோவேரிக்கழுதை கால் தடுக்கினாலும், நீர் ஏன் அதற்கு பாதையை சீர்செய்து கொடுக்கவில்லை என இறைவன் என்னிடம் கேட்பானோ என நான் பயப்படுகின்றேன் என்றார்கள்.

ஒரு இஸ்லாமிய ஆட்சியாளன், ஹஸனுல் பஸ்ரி (ரஹ்) அவர்கள் கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில்

வர்ணித்த அமைப்பில் இருப்பது கட்டாயமாகும். அக்கடிதம் பின்வருமாறு:

முஃமின்களின் தலைவரே! அறிந்துகொள்ளுங்கள்: அல்லாஹ் ஒரு நீதமான தலைவரை, வளைந்து செல்பவனை நேராக்குபவராகவும், அநியாயக்காரனை தடுத்து நிறுத்துபவராகவம், கெட்டவனை நல்லவனாக்குபவனாக, பலவீனமானவனுக்கு பலமாக, அநியாயம் இழைக்கப்பட்டவனுக்கு நீதியாக, அல்லலுறுபனுக்கு நிவாரணமாகவும் ஆக்கியுள்ளான்.

முஃமின்களின் தலைவரே! ஒரு நீதமான தலைவர் ஒட்டகங்களின் அன்பான மேய்ப்பாளனைப் போன்றாவார். அவன் அவைகளுக்கு சிறந்த மேய்ச்சல் நிலங்களைத்தான் தேடுவான், அழிவிடங்களை விட்டும் பாதுகாப்பான், ஐவாய் மிருகங்களை விட்டும் சூடு, குளிர் என்பவற்றின் தீங்கை விட்டும் அவற்றைப் பாதுகாப்பான்.

முஃமின்களின் தலைவரே! ஒரு நீதமான தலைவர், தனது பிள்ளைகள் மீது இரக்கம் வைத்துள்ள தந்தையைப் போலாவார், அவர்களுக்காக ஓடியாடி வேலை செய்கின்றார், அவர்கள் பெரியவர்களாகிவிட்டால் அவர்களை படிக்கவைக்கின்றார், தனது வாழ்நாள் முழுதும் அவர்களுக்காக உழைகின்றார், தன் மரணத்துக்குப் பின்பும் அவர்கள் பயன் பெற சேமிக்கின்றார்.

முஃமின்களின் தலைவரே! ஒரு நீதமான தலைவர், தன் பிள்ளையுடன் அன்பும் பரிவும் அர்ப்பணிப்பும் கொண்ட தாயைப் போன்றாவார், கஷ்டத்துடன் சுமந்து, கஷ்டத்துடன் பெற்றாள். குழந்தையாக இருக்கும் போது அவன் விழிக்கும் போது கண் விழித்து, அவன் அமைதி பெறும் போது அமைதியடைவாள், ஒருமுறை பால்கொடுப்பாள், மறுமுறை நிறுத்துவாள், அவன் ஆரோக்கியமாக இருக்கும் போது ஆனந்தமடைவாள், அவன் நோயுறும் போது கவலையடைவாள்.

முஃமின்களின் தலைவரே! ஒரு நீதமான தலைவர், அநாதையின் பொறுப்பாளனையும் ஏழைகளின் பாதுகாவலனையும் போன்றாவார். அவர் அவர்களின் சிறுவர்களை வளர்ப்பார், பெரிவர்களை வழிநடத்துவார்.

முஃமின்களின் தலைவரே! ஒரு நீதமான தலைவர், உள்ளம் அமைந்திருக்கும் இடத்தைப் போன்றாவார். உள்ளம் சீரடைந்தால் அவை சீரடையும், அது கெட்டுவிட்டால் அவையும் கெட்டுவிடும்.

முஃமின்களின் தலைவரே! ஒரு நீதமான தலைவர், அல்லாஹ்வுக்கும் அவன் அடியார்களுக்கும் இடையில் நிற்பவரைப் போன்றாவார். அவர் அல்லாஹ்வின் பேச்சைக் கேட்டு அவர்களுக்கும் செவிமடுக்க வைப்பார், அவர் அல்லாஹ்வைப் பார்த்து அவர்களுக்கும் பார்க்கவைப்பார், அவர் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு அவர்களையும் வழிப்படவைப்பார்.

முஃமின்களின் தலைவரே! நீங்கள் ஒரு அடிமையைப் போன்று இருக்க வேண்டாம். அவனது எஜமான் அவனை நம்பி அவனிடத்தில் தனது சொத்துக்களையும், குடும்பத்தினரையும் பாதுகாப்பாக விட்டுச் செல்கின்றார், அவன் அச்செல்வங்களை வீணாக்கி, குடும்பத்தினரை சிதரடிக்கவைத்து, மேலும் தன் குடும்பத்தினரை ஏழைகளாக்கிவிடுகின்றான், அவரின் பணத்தை சீரழித்து விடுகின்றான்.

முஃமின்களின் தலைவரே! அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் தண்டனைகளை இறக்கியுள்ளான். அவைகள் மூலம் பாவங்களையும் மானக்கேடான விடயங்களையும் எச்சரிப்பதற்காக, அத்தண்டனைகளை பொறுப்பேற்பவரே அப்பாவங்களை செய்தால் எவ்வாறிருக்கும்? அல்லாஹ் கொலை செய்தவனிடம் பழிவாங்கல் செய்வதை தனது அடியார்களுக்கு வாழ்க்கையாக ஆக்கியுள்ளான், அவர்களுக்காக பழிவாங்குபவரே கொலை செய்தால் எவ்வாறிருக்கும்?

முஃமின்களின் தலைவரே! மரணத்தையும் அதற்கு பின்னுள்ள நிலையையும் ஞாபகியுங்கள். அப்போது உங்கள் கூட்டத்தாரும் உதவியாளர்களும் குறைந்திருப்பார்கள். எனவே அதற்காகவும் அதற்குப் பின்னால் இருக்கும் பெரும் அதிர்ச்சிக்காகவும் கட்டுச் சாதனம் எடுத்துக் கொள்ளுங்கள்.

முஃமின்களின் தலைவரே! அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் இருக்கும் வீடு அல்லாத ஒரு வீடு உங்களுக்கு இருக்கின்றது. அதில்தான் நீண்ட நாட்கள் உறங்கப் போகின்றீர்கள். உங்களை அதன் ஆழத்தில் தனியாக விட்டுவிட்டு உங்கள் நண்பர்கள் சென்று

விடுவார்கள். எனவே அதற்காக உங்களுடன் கூட இருக்கும் ஒன்றை கட்டுச்சாதனமாக எடுத்துக் கொள்ளுங்கள். அந்நாளில், மனிதன் தன் சகோதரனை விட்டும், தாயை விட்டும், தந்தையை விட்டும், மனைவியை விட்டும், பிள்ளைகளை விட்டும் விரண்டோடுவான்.

முஃமின்களின் தலைவரே! நினைவு கூறுங்கள்: மண்ணறைகளில் இருப்பவை மேலும் கீழுமாக புறட்டப்படும் போது, உள்ளங்களில் உள்ளவை வெளிப்படுத்தப்படும் போது அப்போது இரகசியங்கள் வெளிப்படும். சிறியதையோ பெரியதையோ எந்த ஒன்று விட்டுவைக்க மாட்டாது, அவைகளை கூறியே தவிர முஃமின்களின் தலைவரே! இப்போது அவகாசம் இருக்கின்றது இன்னும் தவணை வரவில்லை. எதிர்பார்ப்பு துண்டித்துவிடவில்லை.

முஃமின்களின் தலைவரே! அல்லாஹ்வின் அடியார்களுக்கு மடையர்களின் தீர்ப்பைக் கொண்டு தீர்ப்பளிக்காதீர்கள். அநியாயக்காரர்களின் பாதையில் அவர்களை நடத்தாதீர்கள், பெருமைக்காரர்களை பலவீனமாவர்கள் மீது சாட்டிவிடாதீர்கள், அவர்கள் ஒரு முஃமினிடத்தில் -பொறுப்பையோ கவனிக்க மாட்டார்கள். உங்கள் தவறுகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுங்கள், உங்கள் சுமைகள் அனைத்தையும் நீங்களே சுமந்து கொள்ளுங்கள், ஆடம்பரமாக வாழ்பவர்களைப் பார்த்து ஏமாந்து உங்கள் உரிமையை விடவோ, மேலும் அவர்கள் ஆடம்பரமாக உண்ணுவதைப் பார்த்து ஏமாந்து உங்கள் மறுமையின் ஆடம்பரமான உணவை விடவோ வேண்டாம். இன்று நீங்கள் சக்தியுடன் இருப்பதைப் பார்க்காதீர்கள், நீங்கள் நாளைக்கு சக்தியுடன் இருப்பதைப் பாருங்கள். நீங்கள் மரணத்தின் வலைகளில் சிறைபிடிக்கப்பட்டுள்ளீர்கள், மலக்குமார்களும் நபிமார்களும் ரசூல்மார்களும் குழுமி இருக்க அல்லாஹ்வின் முன்னிலையில் நிறுத்தப்படுவீர்கள், அப்போது முகங்கள் என்றும் நிலைத்திருப்பவனும் உயிருடன் இருப்பவனுமான (அல்லாஹ்வுக்கு) கட்டுப்பட்டிருக்கும்.

முஃமின்களின் தலைவரே! எனக்கு முன்னிருந்த அறிஞர்களின் உபதேசத்தின் அளவிற்கு எனது உபதேசம் இல்லாவிடினும் உங்கள் மீது இரக்கம் வைப்பதிலும் நலவை நாடுவதிலும் நான்

குறைவைக்கவில்லை. எனவே எனது கடிதம் ஒருவன் தனது நேசனுக்கு மருந்து வழங்கும் ஒருவனைப் போன்றாகும், அவன் ஆரோக்கியம் பெற வேண்டுமென்று அவன் வெறுக்கின்ற மருந்துகளையும் அவனுக்கு ஊட்டுவான். முஃமின்களின் தலைவரே! உங்கள்மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

## பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமை

அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமில்லாத விடயங்களில் பெற்றோர்களுக்கு வழிப்படுவது, அவர்களுக்கு மாறு செய்யாதிருத்தல், செலவளித்தல், அன்பளிப்புகளை வழங்குதல் மூலம் அவர்களுக்கு உபகாரம் செய்தல், உணவு, உடை, உறையுள் போன்ற அவர்களின் அத்தியவசியத் தேவைகளைப் பொறுப்பேற்றல், அவர்களுடன் பணிவாக பேச வேண்டும், உரத்துப் பேசக் கூடாது, அவர்களுக்கு பணிவிடை செய்வதில் பொறுமையைக் கையாழல், அவர்களின் உணர்வுகளை மதித்தல், அவர்களை நோவிக்கும் அல்லது அவர்களின் உணர்வுகளை புண்படுத்தும் பேச்சுக்கள் வேண்டாம், அவர்களை கோபப்படுத்தம் நடவடிக்கைகளும் வேண்டாம். அல்லாஹ் கூறுகின்றான்: “அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான் அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் முதுமை அடைந்து விட்டால், அவர்களை உஃப் (சீ) என்று (கடிந்தும்) சொல்ல வேண்டாம் - அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்டவும் வேண்டாம்- இன்னும் அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக!

இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக மேலும், என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்த போது, என்னை(ப்பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக! என்றும் கூறிப் பிரார்த்திப்பீராக!” (இஸ்ரா: 23)

அவர்களை நோவினை செய்வதை இஸ்லாம் பெரும் பாவங்களைச்

சேர்ந்ததாகக் கணித்துள்ளது. அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு கிராமவாசி நபி (ஸல்) அவர்களிடம் வந்து,இறைத் தூதரே! பெரும் பாவங்கள் எவை?என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள்,இறைவனுக்கு இணை கற்பிப்பது. என்றார்கள். அவர்,பிறகு எது?என்றார். பிறகு தாய் தந்தையரைப் புண்படுத்துவது என்று பதிலுரைத்தார்கள். (புகாரி: 6920)

பெற்றோர்களின் அந்தஸ்தையும் அவர்களுக்கு வழங்க வேண்டிய முக்கியத்தவத்தையும் இஸ்லாம் தெளிவுபடுத்துகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் திருப்பொருத்தம் தந்தையின் பொருத்தத்தில் இருக்கின்றது, அல்லாஹ்வின் கோபம் தந்தையின் கோபத்தில் இருக்கின்றது. (இப்னு ஹிப்பான்: 429).

அவ்விருவரும் மாற்று மதத்தில் இருந்தாலும், அவர்களின் உரிமைகளைப் பேணுவது கட்டாயமாகும். அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) கூறினார்: என்னிடம், என் தாயார் அல்லாஹ்வின் தூதருடைய காலத்தில் வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் இணைவைப்பவராக இருந்தார்கள். நான் அல்லாஹ்வின் தூதரிடம், என் தாயார் என்னிடம் ஆசையுடன் வந்துள்ளார். என் தாயிடம் அவரின் உறவைப் பேணி நல்ல முறையில் நடந்து கொள்ளட்டுமா? என்று கூறி மார்க்கத் தீர்ப்பு கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், ஆம். நீ உன் தாயின் உறவைப் பேணி அவருடன் நல்ல முறையில் நடந்து கொள் என்று கூறினார்கள். (புகாரி: 2620)

உபகாரம் செய்வதிலும், சேர்ந்து நடப்பதிலும், அன்பு காட்டுவதிலும், இறக்கம் காட்டுவதிலும் தந்தையை விட தாய்க்கே முன்னுரிமை வழங்கப்படும். அபூ ஹு ரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து: நான் அதிகம் சோர்ந்து நடக்க தகுதியானவர் யார்? என்று கேட்டார். அதற்கு நபியவர்கள்: உனது தாய் என்றார்கள். பின்பும் உனது தாய். பின்பும் உனது தாய். பின்பு உனது தந்தை பின்பு அவர்களுக்கு நெருக்கமானவர்கள் என்றார்கள். (முஸ்லிம்: 2548)

தாய்க்கு மூன்று உரிமைகள் இருக்கின்றன, தந்தைக்கு ஒரு உரிமை

மாத்திரம் தான் இருக்கின்றது, ஏனென்றால் தாய்தான் தந்தை சுமக்காத அளவு கஷ்டங்களையும் சுமைகளையும் சுமந்துள்ளார். அல்லாஹ் தனது திருமறையில் கூறுவது போன்று: “மனிதன் தன் பெற்றோருக்கு நன்மை செய்யும் படி உபதேசம் செய்தோம். அவனுடைய தாய், வெகு சிரமத்துடனேயே அவனைச் சுமந்து வெகு சிரமத்துடனேயே அவனைப் பெற்றெடுக்கிறாள்.” (அஹ்காப்: 15)

அவள் அவனை கஷ்டத்தடன் தன் வயிற்றில் சிசுவாக சுமக்கின்றாள், அவன் அவளின் உணவையே உண்டு வாழ்கின்றான், பின்பு கஷ்டத்துடன் அவனை பெற்றெடுக்கின்றாள், அவனை பெற்றெடுத்த பின்பு அவனுக்கு பால் கொடுப்பதிலும் அவனுக்காக கண்விழிப்பதிலும் கஷ்டப்படுகின்றாள்.

## மனைவி கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள்

அதிகாரத்தை வழங்குதல்: குடும்பத்தில் அதிகாரத்தை ஏற்கும் உரிமை அவனுக்கு இருக்கின்றது. குடும்பத்திற்கு எது நலன் பயக்கும் என்பதை அறிந்து அதை அமுல்படுத்தும் தலைவன் அவனே. அல்லாஹ் கூறுகின்றான்: “(ஆண், பெண் இருபாலாரில்) அல்லாஹ் சிலரை சிலரை விட மேன்மைப் படுத்தி வைத்திருக்கிறான். (ஆண்கள்) தங்கள் சொத்துகளிலிருந்து (பெண் பாலாருக்காகச்) செலவு செய்து வருவதினாலும், ஆண்கள் பெண்களை நிர்வகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.” (நிஸா: 34)

ஏனென்றால் (பெரும்பாலும்) ஆண்கள் தான் தோன்றுகின்ற பிரச்சினைகளை தம் புத்தியினால் அனுகுகின்றனர். பெண்களைப் பொறுத்தவரையில் உள்ளுணர்வே அவர்களின் நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றது. இதனால் தமது குடும்ப வாழ்க்கை சம்பந்தமான விடயங்களில் அவர்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெறக் கூடாது என்பது பொருள் அல்ல.

அவருக்கு கட்டுப்படல், அவரின் ஏவல்களை எடுத்து நடத்தல்-அவை அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக இல்லாவிட்டால்- ஆயிஷா

(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அல்லாஹ்வின் தூதரே ஒரு பெண் மனிதர்களில் எவருக்கு அதிகம் கடமைபுரிய வேண்டும்? எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள்: அவளது கணவனுக்கு என்று பதிலளித்தார்கள். அப்போது ஒரு ஆண் மனிதர்களில் எவருக்கு அதிகம் கடமை புரிய வேண்டும்? என வினவினேன். அதற்கு நபியவர்கள்: அவனது தாயிக்கு என்று பதிலளித்தார்கள். (ஹாகிம்: 7244)

அவர் படுக்கை அறைக்கு அழைக்கும் போது, செல்ல வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் தன் மனைவியை படுக்கை அறைக்கு அழைத்து, அவள் அவருக்கு விடை கொடுக்காத நிலையில் அவர் கோபத்துடன் தூங்குவாரானால், அவள் காலையை அடையும் வரையில் வானவர்கள் அவள் மீது சாபமிட்டுக் கொண்டிருப்பார்கள்." (முஸ்லிம்: 1436)

அவருக்கு இயலாதவற்றில் அவரை கஷ்டப்படுத்தக் கூடாது, அவருக்கு முடியாததை அவரிடம் கேட்கக் கூடாது, அவரின் பொருத்தத்தைப் பெற ஆசைப்பட வேண்டும், அவரின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அக்கறை காட்ட வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் யாரேனும் ஒருவர் மற்றொருவருக்கு சிரம் பணிக்க வேண்டுமென கட்டளையிடுவேனாயின், ஒரு பெண் தனது கணவனுக்கு சிரம்பணியுமாறு ஏவியிருப்பேன். (திர்மிதி: 1159)

அவரின் சொத்துக்களையும், குழந்தைகளையும், அவரின் மானத்தையும் பாதுகாத்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களில் சிறந்தவள் யாரென்றால், நீ அவளைப் பார்த்தால் உனக்கு மகிழ்ச்சியைத் தருவாள், நீ ஏவினால் வழிப்படுவாள், நீ அவளை விட்டும் மறைந்திருந்தால், தானும் பாதுகாப்பாக இருந்து உனது சொத்தையும் பாதுகாப்பாள். பின்பு இத்திருவசனத்தை ஓதினார்கள்: ஆண்கள் பெண்கள் மீது அதிகாரம் படைத்தவர்கள்.

அவர் பொருத்தத்துடன் அவருக்கு அறிவித்துவிட்டே வீட்டிலிருந்து வெளியேறவேண்டும், அவர் வீட்டில் அவர் விரும்பாதவர்களை நுழைவிக்கக்கூடாது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கென்று உங்கள் மனைவியர்மீது சில கடமைகள்

இருக்கின்றன, உங்கள் மனைவியர்களுக்கென்று உங்கள் மீது சில கடமைகள் இருக்கின்றன, உங்களுக்கென்று உங்கள் மனைவியர் மீது இருக்கின்ற கடமைகள்: நீங்கள் விரும்பாதவர்களுக்கு உங்களின் படுக்கையில் இடம் கொடுக்காதிருத்தல், மேலும் நீங்கள் விரும்பாதவர்களை உங்கள் வீட்டிற்குள் அனுமதிக்காதிருத்தல், உங்கள் மனைவியர்களுக்கென்று உங்கள் மீது உள்ள கடமைகள்: அவர்களுக்கு உணவளித்து, உடையளித்து அவர்களை நல்லமுறையில் வைத்துக் கொள்வதாகும். (இப்னு மாஜா: 1851)

ஆரம்ப கால முஸ்லிம்கள் இந்த மார்க்க உபதேசங்களை நடைமுறைப் படுத்துபவர்களாக இருந்தர்கள். இதோ அவுப் பின்து முஹ்லிம் ஷைபானி எனும் பெண்மணி தனது மகளுக்கு திருமண நாளன்று உபதேசிக்கின்றார்: என் அருமை மகளே! நீ பிறந்து வளர்ந்த வீட்டைப் பிரிந்து செல்லப் போகின்றாய், நீர் அறியாத ஒரு மனிதனிடம், பழகாத ஒரு தோழனிடம், நீ அவருக்கு அடிமையாக இரு, அவர் உனக்கு அடிமையாக இருப்பார், அவருக்காக நீ பத்து விடயங்களை பாதுகாத்து வைப்பாயாக அவை உனக்கு பெரும் பொக்கிஷமாக இருக்கும்:

முதலாவதும் இரண்டாவதும்: மனத்திருப்தியுடன் அவருக்கு பணிந்து நட, கேட்டு, வழிப்பட்டு நட.

மூன்றாவதும் நான்காவதும்: அவரின் கண், மூக்கு ஆகியன விழும் இடத்தினை கவனித்துக்கொள். அவரின் கண் அசிங்கமான தோற்றத்தின் மீது விழக் கூடாது, அவரின் நாசு மணமான வாடையைத் தவிர நுகரக் கூடாது.

ஐந்தாவதும் ஆறுாவதும்: அவரின் தூங்கும் நேரம், உண்ணும் நேரம் என்பவற்றை கவனித்துக் கொள்ளல். பசி அதிகரிப்பதும் தூக்கம் குலம்பவதும் கோபத்தை ஏற்படுத்தும்.

ஏழாவதும் எட்டாவதும்: அவர் பணத்தை பாதுகாத்தல், அவரின் குடும்பத்தினரை கௌரவித்தல். பணத்தில் முக்கியத்துவம் பெறுவது மதித்தலாகும் (வரவேற்பதாகும்), குடும்பச்செலவில் சிறந்தது சிறந்த திட்டமிடலாகும்.

ஒன்பதாவதும் பத்தாவதும்: அவரின் கட்டளைக்கு மாறுசெய்யாதே, அவரின் இரகசியத்தை வெளிப்படுத்தாதே, நீ அவருக்கு மாறுசெய்தால் அவரின் உள்ளம் கொதித்து விடும், அவரின் இரகசியத்தை பரப்பிவிட்டால் அவரின் சதியிலிருந்து நீ தப்பமாட்டாய். அவர் கவலையுடன் இருக்கும் போது அவர் முன் சந்தோசத்தை வெளிப்படுத்தாதே, அவர் சந்தோசத்தடன் புன்முறுவல் செய்யும் போது நீ வெறுப்பை வெளிப்படுத்தாதே.

## கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமை

மஹ்ர்: அது மனைவி கணவனிடமிருந்து பெறவேண்டிய கட்டாயமான உரிமையாகும். அதன் மூலமே திருமண உடன்படிக்கை பூரணமடைகின்றது. மனைவி பொருந்திக் கொண்டாலும் அது விழமாட்டாது. திருமண உடன்படிக்கை நிறைவடைந்துவிட்டால், அவள் விரும்பினால் அதனை திருப்பிக் கொடுக்க முடியும். அல்லாஹ் கூறுகின்றான்: “நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக்கொடை) களை மகிழ்வோடு (கொடையாக) கொடுத்துவிடுங்கள் - அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள் உங்களுக்கு கொடுத்தால் அதைத் தாராளமாக, மகிழ்வுடன் புசியுங்கள்.” (நிஸா: 4)

நீதியும் சமத்துவமும்: (இரண்டிற்கு மேற்பட்ட மனைவியர்கள் இருப்பவர்), எனவே அவர்களுக்கு மத்தியில் உணவு, பாணம், உடை, உறையுல் இரவில் தரித்தல் என்பவற்றில் நீதியை கடைபிடிப்பது கட்டாயமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவருக்கு இரண்டு மனைவிமார்கள் இருந்து அவர் அவர்களில் ஒருவர் பக்கம் சாய்வாரானால், மறுமை நாளில் அவரின் ஒருபக்கம் சாய்ந்தவராக வருவார். (அபூதாவுத்: 2133)

அவளுக்கும் அவளது குழந்தைகளுக்கும் செலவளித்தல். எனவே அவளுக்கு பொருத்தமான வசிப்பிடத்தை அமைத்துக் கொடுப்பதும், உணவு, பாணம், உடை போன்ற வாழ்க்கைச் செலவினங்களைப் பொறுப் பேற்றல், அவளுக்குத் தேவையான பணத்தை வழங்குதல்,

இவை அனைத்தும் அவனது சக்திக்கு உட்பட்டவாரே. அல்லாஹ் கூறுகின்றான்: “தக்க வசதியுடையவர்கள், தம் வசதிக் கேற்ப (இவ்விஷயத்தில்) செலவு செய்து கொள்ளவும், ஆனால், எவர் மீது அவருடைய உணவு (வசதி) நெருக்கடியாக்கப் பட்டுள்ளதோ, அவர் தமக்கு அல்லாஹ் கொடுத்ததில் இருந்து செலவு செய்து கொள்ளவும், எந்த ஆத்மாவையும் அல்லாஹ் அதற்குக் கொடுத்திருப்பதேயல்லாமல் (மிகையாக செலவு செய்யும் படி) சிரமப்படுத்த மாட்டான்.” (தலாக்: 7)

முஸ்லிம்கள் தமது குடும்பத்தினருக்கு செலவு செய்வதில் ஆர்வம் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் கொடுக்கும் செலவுகளை நன்மை பெற்றுத்தரும் தர்மமாக இஸ்லாம் ஆக்கியுள்ளது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு கூறினார்கள்: நீங்கள் செய்த (நல்ல) செலவு எதுவாயினும் தருமமேயாகும். நீங்கள் உங்கள் மனைவியின் வாயில் இடுகிற ஒரு கவளம் (உணவு) கூட (தருமமேயாகும்.) (புகாரி: 2742)

அவன் அவளினதும் அவன் பிள்ளைகளினதும் செலவினத்தில் குறைசெய்யும் பட்சத்தில், மனைவிக்கு அவன் பணத்திலிருந்து தேவையான அளவை அவனுக்குத் தெரியாமல் எடுக்க உரிமையுண்டு. ஹிந்து பின்து உத்பா அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் கூறுகின்றார்: (என் கணவர்) அபூ சுஃப்யான் கருமியான ஒருவர். எனக்கும் என் குழந்தைக்கும் போதுமான (பணத்) தை அவர் தருவதில்லை. நான் அவரிடமிருந்து அவருக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டதைத் தவிர (போதுமான தொகையை அவராகத் தரமாட்டார்) என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள், உனக்கும் உன் குழந்தைக்கும் போதுமானதை நியாயமான அளவுக்கு நீ எடுத்துக்கொள்! என்று கூறினார்கள். (புகாரி: 5364)

இரவில் தரித்தலும் தாம்பத்திய உறவும்: இஸ்லாம் கணவனிடம் நிறைவேற்றுமாறும், கவனம் செலுத்துமாறும் வேண்டிக் கொள்கின்ற முக்கியமான உரிமைகளில் ஒன்றாகும். அவள் மனைவி என்ற அடிப்படையில் அவளுக்கு இரக்கம், அன்பு, அவளுடன் கொஞ்சிக் குலாவுதல், அவளின் உடலியற் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்

என்பன தேவைப்படுகின்றது, இல்லாவிடின் அவள் அவைகளை தவறான முறையில் பெற நிர்ப்பந்திக்கப்படலாம். நபி (ஸல்) அவர்கள் ஜாபிர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள்: ஜாபிரே! நீர் திருமணம் முடித்தீரா? அதற்கவர்: ஆம் என்றார், கன்னிப் பெண்ணா அல்லது கன்னிகழிந்த பெண்ணா? என்றார்கள், ஏற்கனவே கன்னிகழிந்த பெண் என்றார்கள், அதற்கு நபியவர்கள்: நீர் ஒரு கன்னிப் பெண்ணை திருமணம் முடித்திருக்கக் கூடாதா? நீ அவளுடன் கொஞ்சுவாய், அவளும் உன்னுடன் கொஞ்சுவாள். நீ அவளை சிரிக்கவைப்பாய், அவளும் உன்னை சிரிக்கவைப்பாள் என்றார்கள். (புகாரி: 6387)

**அவளின் இரகசியங்களை பாதுகாத்தல்,** அவளின் குறைகளை வெளிப்படுத்தாதிருத்தல், அவளிடம் காண்பவை, கேட்பவை என்பவற்றை மறைத்தல், அவர்களிடையே உள்ள தனிப்பட்ட தொடர்புகளை பாதுகாத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளிலே அல்லாஹ்விடத்தில் அந்தஸ்தால் மிகக் கெட்டவன், தன் மனைவியுடன் உடலுறவு கொண்டு விட்டு அவள் இரகசியங்களை பகிரங்கப்படுத்துபவனாவான். (முஸ்லிம்: 1437)

**அவளுடன் அழகிய முறையில் நடந்துகொள்ளல்,** சிறந்த முறையில் வாழ்க்கை நடத்தல், தங்களது வாழ்க்கையுடன் தொடர்புபட்ட விடயங்களில் அவளுடன் ஆலோசித்தல், தன் கருத்திலும், முடிவிலும் மாத்திரம் இருக்கக் கூடாது, உண்மையான நட்பின் மூலம் அவளுக்கு சந்தோசத்தையும் மன அமைதியையும் வழங்க வேண்டும், அது அவளுடன் பரிகாசம் செய்வதன் மூலமும், கொஞ்சி விளையாடுவதன் மூலமும், மென்மையாக பேசுவதன் மூலமுமாகும். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஃமின்களில் பூரணமான ஈமான் உடையவர்கள் அவர்களில் அழகிய நற்குணம் உடையவர்களாவார்கள், உங்களில் சிறந்தவர்கள் உங்களது மனைவிமர்களிடம் சிறந்தவர்களே. (இப்னு ஹிப்பான்: 4176)

**அவளால் ஏற்படும் அசௌகரியங்களை பொறுத்துக் கொள்ளுதல்,** அவளின் தவறுகளை பொருட்படுத்தாதிருத்தல், அவளின் சருகள்களை தேடாதிருத்தல், இறைத்தூதர் (ஸல்)

அவர்கள் கூறினார்கள்: ஒரு முஃமின் மற்றொரு முஃமினினை வெறுக்க வேண்டாம், அவளிடம் ஒரு விடயத்தை வெறுத்தால், மற்றொரு விடயம் அவனுக்கு விருப்பமாக இருக்கும். (முஸ்லிம்: 1469)

**அவளை தீய, மோசமான இடங்களிலிருந்து பாதுகாத்தல்.** அல்லாஹ் கூறுகின்றான்: "முஃமின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள் அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும்." (தஹ்ரீம்: 6)

**அவளுக்கு சொந்தமான பணத்தை பாதுகாத்தல்,** அவளின் உத்தரவின்றியே தவிர அதிலிருந்து எடுக்கமாட்டான், அதில் கொடுக்கல் வாங்கல் செய்வதாயிருந்தாலும் அவள் அறிந்து பொருந்திக் கொண்டு இணக்கப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிமின் பூரண மனத்திருப்தியின்றி அவனின் பணம் ஹலால் ஆகமாட்டாது.

## உறவினர்க்கு செய்யவேண்டிய கடமை

ஒரு மனிதனின் குடும்பத்தினர், இரத்த உறவினர்கள் ஆகியோருடன் சேர்ந்து நடக்குமாறு இஸ்லாம் தூண்டுகின்றது, அவன் பணம் படைத்தவனாக இருந்தால் அவனின் கட்டாயமான தர்மம் மற்றும் மேலதிக தர்மம் என்பவற்றின் மூலம் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல், செலவுக்காக பணம் வழங்குதல் வேண்டும். மேலும் அவ்களின் நிலமைகளை விசாரித்தல், அவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளல், அவர்களின் துன்பம், சந்தோஷம் என்பவற்றில் பங்கெடுத்தல். அல்லாஹ் கூறுகின்றான்: "ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்)." (நிஸா: 1)

ஒரு முஸ்லிம் தன் உறவினர் தன்னோடு சேர்ந்து நடக்காவிட்டாலும் அவர்களுடன் சேர்ந்து நடக்க வேண்டும், அவர்கள் அவனுக்கு

அநியாயம் செய்து அவனுக்கு தீங்கிழைத்தாலும் அவர்களை மன்னிக்க வேண்டும், அவர்கள் அவனை விட்டும் தூரமாகி, அவனை வெறுத்து நடந்தாலும் அவர்களுடன் நெருங்கிப் பழகவேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பதிலுக்கு பதில் உறவாடுகிறவர் (உண்மையில்) உறவைப் பேணுகிறவர் அல்லர், மாறாக உறவு முறிந்தாலும் அந்த உறவுடன் இணைகிறவரே உறவைப் பேணுபவராவார். (புகாரி: 5991)

உறவுகளை துண்டித்து நடப்பதை இஸ்லாம் எச்சரிக்கின்றது, அதை பெரும் பாவமாக கணிக்கின்றது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் படைப்பினங்களை படைத்து முடித்த போது உறவானது (எழுந்து இறைவனின் அரியாசனத்தின் கால்களைப் பற்றிக்கொண்டு) உறவுகளைத் துண்டிப்பதிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோரியே இப்படி நிற்கிறேன் என்று கூறி (மன்றாடி) யது. அல்லாஹ், ஆம். உன்னை (உறவை)ப் பேணி நடந்து கொள்பவனுடன் நானும் நல்ல முறையில் நடந்துகௌள்வேன் என்பதும், உன்னைத் துண்டித்து விடுபவனை நானும் துண்டித்து விடுவேன் என்பதும் உனக்குத் திருப்தியளிக்கவில்லையா? என்று கேட்டான். அதற்கு உறவு, ஆம் (திருப்தியே) என் இறைவா! என்று கூறியது. அல்லாஹ், இது உனக்காக நடக்கும் என்று சொன்னான். இறைத்தூதர் (ஸல்) அவர்கள், நீங்கள் விரும்பினால் “(நயவஞ்சகர்களே!) நீங்கள் (போருக்கு வராமல்) பின்வாங்கிக் கொண்டு பூமியில் குழப்பம் விளைவிக்கவும் உங்கள் உறவுகளைத் துண்டித்துவிடவும் முனைகிறீர்களா?” எனும் (திருக்குர்ஆன் 47:22 வது) வசனத்தை ஓதிக்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். (புகாரி: 5987)

## பிள்ளைகளுக்கு நிறை வேற்ற வேண்டிய கடமை

அவர்களை பேணிக்காத்தல், அவர்களின் விடயங்களில் அக்கறை காட்டுதல், அவர்களை கண்டிப்பாக வளர்த்தல், அவர்களின் அத்திவசிய தேவைகளான உணவு, உடை, உறையுல் ஆகியவற்றை பொறுப்பேற்றல். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருவன் தன் பொறுப்பில் உள்ளவர்களை வீணடிப்பது அவனுக்கு பாவத்தால் போதுமானதாகும். (ஹாகிம்: 8526)

பொருத்தமான பெயர்களை அவர்களுக்கு தெரிவுசெய்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மறுமைநாளில் நீங்கள் உங்கள் பெயர்களைக் கொண்டும் உங்களது தந்தைமார்களின் பெயர்களைக் கொண்டும் தான் அழைக்கப்படுவீர்கள். எனவே உங்களின் பெயர்களை அழகுபடுத்திக்கொள்ளுங்கள். (இப்னு ஹிப்பான்: 5818)

அவர்களின் உள்ளங்களில் சிறந்த குணங்களை பதியவைத்தல் உதாரணமாக: நாணம், பெரியோர்களை மதித்தல், கண்ணியப்படுத்தல், உண்மை, அமானிதம், பெற்றோர்க்கு கட்டுப்படுதல். மேலும் கீழ்த்தரமான பேச்சுக்கள், செயல்கள் என்பவற்றை விட்டும் அவர்களை அப்புறப்படுத்தல். உதாரணமாக: பொய், ஏமாற்றுதல், தந்திரம், மோசடி, களவு, பெற்றோருக்கு நோவினை செய்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் பிள்ளைகளை கண்ணியமாக வளருங்கள், அவர்களுக்கு அழகிய ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுங்கள். (இப்னு மாஜா: 3671)

அவர்களுக்கு பிரயோசனமான கல்வியை வழங்குதல், நல்ல முறையில் வளர்த்தல், அவர்களுக்கு சிறந்த நண்பர்களை தெரிவு செய்து கொடுத்தல். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள் தம் பொறுப்பின் கீழ் உள்ளவர்கள் பற்றி ஒவ்வொருவரும் விசாரிக்கப் படுவீர்கள். தலைவர் பொறுப்பாளியாவார். அவர் தம் குடிமக்கள்பற்றி விசாரிக்கப் படுவார்கள். ஓர் ஆண் மகன் தன் குடும்பத்துக்குப் பொறுப்பாளியாவான். தன் பொறுப்பிலுள்ளவர்கள் பற்றி அவனும் கேட்கப்படுவான். ஒரு பெண், கணவனின் வீட்டுக்குப் பொறுப்பாளியாவாள். அவள் தன்னுடைய பொறுப்பிலுள்ளவர்கள் பற்றி விசாரிக்கப்படுவாள். ஓர் ஊழியன் தன் முதலாளியின் செல்வத்துக்குப் பொறுப்பாளியாவான். அவன் தன்னுடைய பொறுப்பு பற்றி விசாரிக்கப் படுவான். (புகாரி: 893)

அவர்கள் நலமாக வாழ ஆசைப்படுதல், அவர்களுக்காகப் பிரார்த்தித்தல், அவர்களுக்கு கேடாக பிரார்த்திக்காதிருத்தல். இறைத்தூதர் (ஸல்)

அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் உங்களுக் கெதிராகவோ, உங்கள் பிள்ளைகளுக் கெதிராகவோ, உங்கள் வேலையாட்களுக் கெதிராகவோ, உங்கள் சொதுத்துக்களுக் கெதிராகவோ பிரார்த்திக்காதீர்கள். கொடைகளை ஏற்றுக் கொள்வதற்காக ஒரு நேரத்தை அல்லாஹ் வைத்துள்ளான் அந்நேரத்தை நீங்கள் சமீபிப்பீர்களானால் உங்கள் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படும். (அபூ தாவுத்: 1532)

பிள்ளைகளுக்கு மத்தியில் நீதத்தைப் பேணல் வேண்டும். கொடைகளிலும் அன்பளிப்புகளிலும் ஒருவரை விட மற்றவருக்கு மேல் மிச்சமாக வழங்கக் கூடாது. அது இரக்கம் காட்டுவதிலானாலும் சரியே. அவர்களுக்கு மத்தியில் சமத்துவத்தைப் பேணாதிருப்பதிருப்பது அவர்களை தமது பெற்றோருக்கு நோவினை செய்யத் தூண்டுகின்றது. மேலும் சகோதரர்களுக்கு மத்தியில் கோபத்தையும் குரோதத்தையும் தூண்டிவிடுகின்றது.

நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தை தனது பணத்திலிருந்து எனக்கு ஒரு அன்பளிப்பை வழங்கினார். அப்போது எனது தாய் கூறினார்கள்: நீங்கள் நபியவர்களிடம் சென்று இதற்கு அவரை சாட்சியாக வைக்கும் வரை நன் இதனை பொருந்திக் கொள்ள மாட்டேன் என்றார்கள். எனவே எனது தந்தை என்னையும் அழைத்துக் கொண்டு நபியவர்களடம் சென்றார்கள், நபியவர்களை எனது அன்பளிப்பின் மீது சாட்சியாளனாக வைப்பதற்காக, இறைத்தூதர் அவர்கள் அவரிடம் கேட்டார்கள்: இவ்வாறு நீர் உனது பிள்ளைகள் அனைவருக்கும் வழங்கினீரா? என்று, அதற்கு அவர்: இல்லை என பதிலளித்தார். அதற்கு நபியவர்கள்: அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு மத்தியில் நீதமாக நடந்து கொள்ளுங்கள். எனவே எனது தந்தை அந்த அன்பளிப்பை மீட்டெடுத்தார்கள். (முஸ்லிம்: 1623)

## அண்டை வீட்டாருக்கு செய்ய வேண்டிய கடமை

இஸ்லாம் அயல்வீட்டாருக்கு பெரும் அந்தஸ்தையும் பெரும் உரிமையையும் வழங்கியள்ளது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள்

கூறுகின்றார்கள்: அண்டை வீட்டார் குறித்து என்னிடம் (வானவர்) ஜிப்ரீல் அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார். எந்த அளவிற்கென்றால், அண்டை வீட்டாரை எனக்கு வாரிசாக்கி விடுவாரோ என்று கூட நான் எண்ணினேன். (புகாரி: 6014)

இஸ்லாம் அவர்களுக்கு பரிபூரணமான முறையில் உபகாரம் செய்யும் படி ஏவுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: "மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை." (நிஸா: 36)

சொல்லினாலோ செயலினாலோ அவர்களுக்கு நோவினை செய்வதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்களிடம்: பெண்ணொருத்தி பகலில் நோன்பு நோற்கின்றாள், இரவில் நின்று வணங்குகின்றாள் ஆனால் அவள் தன் அண்டை வீட்டாருக்கு நோவினை செய்கின்றாள் எனக் கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள்: அவளில் எந்த நலவும் இல்லை, அவள் நரகத்தில் இருப்பாள் என்றார்கள். மேலும் நபியவர்களிடம் கூறப்பட்டது: இன்னும் ஒரு பெண் கடமையான தொழுகையை நிறைவேற்றி, ரமழானில் நோன்பு நோற்று, எஞ்சிய உணவை தர்மமாகக் கொடுக்கின்றாள், ஆனால் அவள் ஒருவரையும் தனது நாவால் நோவிப்பதில்லை எனக் கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள்: அவள் சுவர்க்கத்தில் இருப்பாள் என்றார்கள். (ஹாகிம்: 7305)

அவர்களுக்கு நோவினை செய்வதை ஈமானுக்கு முரணான காரியமாக இஸ்லாம் கருதுகின்றது. அல்லாஹ்வின் மீதாணையாக! அவன் இறை நம்பிக்கையாளன் அல்லன். அல்லாஹ்வின் மீதாணையாக! அவன் இறை நம்பிக்கையாளன்

அல்லன். அல்லாஹ்வின் மீதாணையாக அவன் இறை நம்பிக்கையாளன் அல்லன் என்று (மூன்று முறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவன் யார்? இறைத் தூதர் அவர்களே! என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் எவனுடைய நாச வேலைகளிலிருந்து அவனுடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு பெறவில்லையோ அவன்தான் என்று பதிலளித்தார்கள். (புகாரி: 6016)

அதேபோன்று அவரிடமிருந்து ஏற்படும் தீங்குகளை சகித்துக்கொண்டு அவருடன் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும்.

அண்டை வீட்டார்கள் மூன்று வகைப்படுகின்றனர்:

- மூன்று உரிமைகளை உடைய அண்டைவீட்டான்: உறவினர் எனும் உரிமை, அண்டை வீட்டான் எனும் உரிமை, முஸ்லிம் எனும் உரிமை.
- இரண்டு உரிமைகளை உடைய அண்டை வீட்டான்: அண்டை வீட்டான் எனும் உரிமை, முஸ்லிம் எனும் உரிமை.
- ஓர் உரிமை உடைய அண்டை வீட்டான்: அண்டை வீட்டான் எனும் உரிமை.

அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) அவர்களின் வீட்டில் ஓர் ஆடு அறுக்கப்பட்டிருந்தது அவர்கள் கேட்டார்கள்: எங்கள் யூத அயலவருக்கு கொடுத்தீர்களா? நான் நபி (ஸல்) அவாகள் கூறக் கேட்டுள்ளேன்: ஜிப்ரீல் அயல்வீட்டவர் விடயத்தில் எனக்கு உபதேசம் செய்து கொண்டே இருந்தார், அவர்கள் என் அநந்தரக்காரர்களாக மாறிவிடுவார்களோ என்று எண்ணும் அளவுக்கு. (என்ற ஹதீஸை அப்துல்லாஹ் பின் அம்ர் ரலி) கூறினார்கள். (திர்மிதி: 1943)

## தோழர்களுக்கு செய்வேண்டிய கடமை

இஸ்லாம் தோழர்கள் விடயத்தில் அக்கறை காட்டுமாறு தூண்டுகின்றது. அவர்களுக்கென்று சில உரிமைகளையும் இஸ்லாம் வைத்துள்ளது. அவையாவன அவருக்கு நல்பதேசம் செய்தல், நன்மையை நாடுதல்.

நபி (ஸல்) அவாகள் கூறினார்கள்: அல்லாஹ்விடத்தில் நண்பர்களில் சிறந்தவர் நல்ல தோழமையை உடையவனே. மேலும் அல்லாஹ்விடத்தில் அண்டை வீட்டார்களில் சிறந்தவர் தனது அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொண்டவனே. (இப்னு ஹிப்பான்: 2539)

இரு நண்பர்களினதும் உரிமைகள் அவர்களில் இருவரில் ஒருவர் மரணித்த பின்பும் நீடிக்கின்றது. பனூ ஸலமாவைச் சேர்ந்த ஒரு மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டார்: அல்லாஹ்வின் தூதரே! எனது பெற்றோர் இருவரும் மரணித்த பின்பும் அவர்களுக்கு நல்லுபகாரம் செய்ய வேண்டிய விடயங்கள் எஞ்சி இருக்கின்றனவா? அதற்கு நபியவர்கள்: ஆம், அவர்களுக்காக பிராாத்திப்பது, அவர்களுக்காக பாவமன்னிப்புத் தேடுவது, அவர்களுக்குப் பின் அவர்களின் உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது, இரத்த உறவினர்களை சேர்ந்து நடப்பது ஏனெனில் அவர்கள் மூலமே அந்த உறவுகள் ஏற்பட்டன, மேலும் அவர்களின் நண்பர்களை கௌரவித்தல். (அபூதாவுத்: 5142)

## விருந்தினரிற்கான உரிமைகள்

இஸ்லாத்தில் விருந்தாளிக்கான உரிமையென்பது அவர்கள் நன்கு உபசரிக்கப்பட வேண்டும் என்பதாகும். ஒரு நபித்தோழர் கூறுகின்றார்: நபி (ஸல்) அவர்கள் பேசிய போது என் காதுகளால் கேட்டேன். என் கண்களால் பார்த்தேன். அப்போது அவர்கள், அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாரைக் கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தாளிக்குத் தம் கொடையைக் கண்ணியமாக வழங்கட்டும் என்று கூறினார்கள். அப்போது, இறைத்தூதர் அவர்களே! அவரின் கொடை என்ன? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், (அவரின் கொடை) ஒரு பகல் ஓர் இரவு (உபசரிப்பது) ஆகும். விருந்துபசாரம் மூன்று தினங்களாகும். அதற்கு மேல் (அளிக்கும் உணவும் உபசரிப்பும்) அவருக்குத் தர்மமாக அமையும். மேலும், அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை

கொண்டவர் நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும் என்று கூறினார்கள். (புகாரி: 6019)

விருந்தாளியை உபசரிப்பதை சிறந்த நற்செயலாக கருதுகின்றது. நபி (ஸல்) அவாகள் கூறினார்கள்: குதிரையின் மூக்கனக் கயிறைப் பிடித்துக் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் போரிடுகின்ற, மனிதர்களுக்கு தீங்கு செய்வதை விட்டும் தவிர்ந்து நடக்கின்ற மனிதனைப் போன்ற சிறந்த ஒருவர் கிடையாது, மேலும் ஒருவர் அவர் தனது ஆட்டு மந்தையுடன் நாட்டுப் புறத்தில் வாழ்கின்றார், அவரிடம் வந்திறங்கும் விருந்தாளியை நல்ல முறையில் உபசரித்து அவரின் உரிமையை நிறைவேற்றுகின்றார், அவரைப் போன்ற சிறந்த ஒருவரும் கிடையாது என்றார்கள். (ஹாகிம்: 2378)

விருந்தாளியுடன் நடந்து கெள்ள வேண்டிய சில ஒழுக்கங்களும் உள்ளன. அவையாவன: அவரை அழகிய முறையில் வரவேற்றல், மலர்ந்த முகத்துடன் அவருடன் உரையாடுதல், அழகிய முறையில் அவரை வழியனுப்பிவைத்தல். இறைத்தூதர் (ஸல்) அவாகள் கூறினார்கள்: ஒரு மனிதர் தனது விருந்தாளியுடன் வீட்டு வாயில் வரை செல்வது எனது வழிமுறையில் உள்ளதே. (இப்னு மாஜா: 3358)

அதே போன்று விருந்தாளி விருந்தளிப்பவரின் நிலையைப் புரிந்து நடந்த கொள்ள வேண்டும், அவருக்கு இயலாததை அவர் மீது சுமத்தக் கூடாது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் சிரமத்துக்குள்ளாகும் வரை அவரிடம் தங்கியிருப்பது ஒரு முஸ்லிமுக்கு ஆகுமாகமாட்டாது. அப்போது தோழர்கள் கேட்டார்கள்: இறைத்தூதரே எப்படி அவரை சிரமமாக்குவது என்று, அதற்கு நபியவர்கள்: அவருக்கு விருந்தளிக்க ஒன்றும் இல்லாமலாகும் வரை அவரிடம் தங்கியிருப்பது என்றார்கள். (முஸ்லிம்: 48)

முஸ்லிம்களின் உதாரண புருஷர் இறைத்தூதர் (ஸல்) அவர்களைப் பற்றி இமாம் கஸ்ஸாலி தனது ‘இஹ்யா’ எனும் நூலில் கூறுகின்றார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தன்னிடம் வருபவர்களை கண்ணியப்படுத்துவார்கள், சிலவேளை இரத்த உரவோ, பால்குடி

உறவோ இல்லாத ஒருவருக்குக் கூட தனது ஆடையை உட்காரும் படி விரித்துக் கொடுப்பார்கள், தான் வைத்திருக்கும் தலையணையைக் கூட வருபவருக்கு கொடுப்பார்கள், அவர் மறுத்தாலும் கட்டாயப்படுத்தி ஏற்கவைப்பார்கள், அவரிடம் விருந்தாளியாக வந்த அனைரும் அவர்தான் மனிதர்களில் கண்ணியமானவர் என எண்ணுவார்கள், அவரிடம் உட்கார்ந்திருப்பவர் ஒவ்வொருவரினதும் உரிமையைப் பேணி நடப்பார்கள், அனைவர் பக்கமும் தன் முகத்தை திருப்பி அவரின் அழகிய பேச்சு, நல்லுபதேசம், என்பவற்றை அனைவரும் பெறும் வண்ணம் நிகழ்த்துவார்கள், அத்தடன் அவரின் அவை நாணம், பணிவு, அமானிதம் என்பவை பிரதிபளிக்கும் அவையாக இருக்கும், நபியவர்கள் தனது தோழர்களை அவர்களின் புனைப் பெயரைக் கொண்டே அழைப்பார்கள், அவர் மனிதர்களில் கோபத்தை விட்டும் தூரமானவராகவும், திருப்பொருத்ததிற்கு நெருக்கமானவராகவும் காணப்பட்டார்.

தொழில் மற்றும் தொழிலாளர்கள் சம்பந்தமாக இஸ்லாம் சில கோட்பாடுகளை வகுத்துள்ளது. அவை தொழிலதிபர் தொழிலாளிகளுடனும், தொழிலாளிகள் தொழிலதிபருடனும் கொண்டிருக்க வேண்டிய தொடர்பினை தெளிவுபடுத்துகின்றன. அச்சட்டதிட்டங்கள் பின்வருமாறு:

## தொழிலாளர்களின் உரிமைகள்

முதலாளிக்கும் அவருக்குக் கீழால் இருப்பவர்களுக்கும் இடையிலான தொடர்பானது, மனித நேயத்தை வெளிப்படுத்தும் சகோதரத்துவமான, சமத்துவமான தொடர்பாக இருக்க வேண்டும் என இஸ்லாம் பணிக்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்கள் அடிமைகள் உங்கள் சகோதரர்கள் ஆவார்கள், அவர்களை அல்லாஹ் உங்கள் பொறுப்பில் வைத்துள்ளான், எவரின் பொறுப்பில் தனது சகோதரன் இருக்கின்றானோ, அவர் உண்ணுவதையே அவருக்கும் உண்ணக் கொடுக்கட்டும், அவர் அணிவதையே அவருக்கும் அணிவிக்கட்டும், அவர்களுக்கு இயலாததை செய்யக் கொடுக்காதீர்கள், அப்படிக் கொடுப்பீர்களாயின் அவர்களுக்கு உதவியாக இருங்கள். (புகாரி: 30)

கூலிக்காரனின் உரிமை உரிய நேரத்தில் அவரின் கூலி வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூவருக்கெதிராக கியாமத் நாளில் நான் வழக்குரைப்பேன்! என் பெயரால் சத்தியம் செய்து மோசடி செய்தவன், சுதந்திரமானவனை (அடிமையாக) விற்று அந்தக் கிரயத்தைச் சாப்பிட்டவன், கூலிக்கு ஒருவரை அமர்த்தி, அவரிடம் வேலை வாங்கிக் கொண்டு கூலி கொடுக்காமல் இருந்தவன் (ஆகிய இவர்கள்தான் அந்த மூவர்)!(புகாரி: 2270)

வேலை தொடங்குவதற்கு முன்னர் வேலையாளியின் கூலி தீர்மானிக்கப்பட வேண்டும். ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் கூலியைத் தெளிவாக குறிப்பிடாமல் ஒருவரை கூலிக்கு அமர்த்துவதை தடைசெய்துள்ளார்கள். (அஹ்மத்: 11582)

அவர் தனது வேலையை முடித்த உடனே அவரின் கூலி வழங்கப்பட வேண்டும் என கட்டளையிடுகின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கூலிக்காரனின் கூலியை அவனது வியர்வை காய்வதற்கு முன்பு கொடுத்துவிடுங்கள். (இப்னு மாஜா: 2443)

அவர்களின் சக்திக்கு மேற்பட்ட வேலைகளை அவர்களுக்கு வழங்குவது கூடாது, அவ்வாறு வழங்குவதாயின், அவர்களின் கூலியை அதிகரிக்க வேண்டும், அல்லது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்களுக்கு இயலாததை செய்யக் கொடுக்காதீர்கள், அப்படிக் கொடுப்பீர்களாயின் அவர்களுக்கு உதவியாக இருங்கள். (புகாரி: 30)

உழைப்பு மற்றும் உழைப்பாளிகளின் தரத்தை உயர்த்தும் நோக்கில் உழைத்து சம்பாதிப்பதை சிறந்த சம்பாத்தியமாக இஸ்லாம் ஆக்கியுள்ளது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் தம் கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒரு போதும் உண்ண முடியாது. தாவூத் நபி அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தனர். (புகாரி: 2072)

இஸ்லாம் தொழில் செய்வதை தூண்டுகின்றது, அதில் ஆர்வ மூட்டுகின்றது. இறைத்தூதர் (ஸல்) அவாகள் கூறினார்கள்:

உங்களில் ஒருவன் ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு தன்னுடைய முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து விற்று வாழ்வது மக்களிடம் யாசகம் கேட்பதை விடச் சிறந்ததாகும். இதன் மூலம் அல்லாஹ் அவனுக்கு இழிவு ஏற்படாமல் தடுத்து விடுவான். மக்கள் அவனுக்குக் கொடுக்கவும் செய்யலாம் அல்லது மறுக்கவும் செய்யலாம். (புகாரி: 1471)

## தொழில் அதிகாரியின் (முதலாளியின்) உரிமை

இஸ்லாம் தொழில் அதிகாரியிடம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பேணுமாறு வேண்டுவது போலவே, தொழிலாளர்கள் தொழில் அதிகாரியின் உரிமைகளைப் பேணுமாறும் பணிக்கின்றது. அவர்களுக்கு ஒரு வேலை வழங்கப்பட்டால், அதனை தாமதமின்றி செவ்வனே நிறைவேற்றுவது அவர்களின் கடமையாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஒரு வேலையை செய்தால் அதனை செவ்வனே நிறைவேற்றுவதை அல்லாஹ் விரும்புகின்றான். (அபூயஃலா: 4386)

தொழிலாளி தனது வேலையை நலன் பயக்கும் நோக்கிலும் சிறப்பாகவும் செய்வதனை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக அதனை சிறந்த, தூய்மையான சம்பாத்தியமாக ஆக்கியுள்ளது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சம்பாத்தியத்தில் சிறந்தது தொழிலாளியின் சம்பாத்தியமாகும், அவன் நலவை நாடவேண்டும். (அஹ்மத்: 8393)

## பொதுவான கடமைகளும் உரிமைகளும்

ஒரு முஸ்லிம் தன் சகோதர முஸ்லிம்கள் விடயத்தில் அக்கறையுள்ளவனாக இருக்க வேண்டும் என இஸ்லாம் கட்டளையிடுகின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக்

கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் ஏற்பட்டுவிடுகிறது. (புகாரி: 6011)

அவர்களின் நிலை சீர் பெறவேண்டுமெனும் நோக்கில் பாடுபட வேண்டும் என்றும் பணிக்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவன் தான் விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பும்பாதவரை பூரண முஃமினாக மாட்டான். (புகாரி: 13)

நெருக்கடிகளிலும் சோதனைகளிலும் அவர்களுடன் இருக்க வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு கட்டிடித்தின் ஒரு பகுதி இன்னொரு பகுதியை எப்படி வலுப்படுத்திக் கொண்டிருக்கிறதோ அது போன்றே ஓர் இறை நம்பிக்கையாளர் இன்னொரு இறை நம்பிக்கையாளர் விஷயத்தில் நடக்க வேண்டும் என்று நபி (ஸல்) கூறிவிட்டுத் தம் விரல்களைக் கோர்த்துக் காட்டினார்கள். (புகாரி: 481)

அவர்களுக்கு தேவை ஏற்படுகின்ற போது உதவி செய்யுமாறு இஸ்லாம் கட்டளையிடுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: எனினும் அவர்கள் மார்க்க விஷயத்தில் உங்களிடம் உதவி தேடினால், உதவி புரிவது உங்கள் மீது கடமையாகும் - ஆனால் உங்களிடம் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்திற்கு விரோதமாக (அவர்களுக்கு உதவி செய்வது) கூடாது - அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு கவனித்துக் கொண்டே இருக்கின்றான். (அன்பால்: 72)

அவர்களுக்கு உதவி மறுப்பதை இஸ்லாம் தடுக்கின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த மனிதன் ஒரு முஸ்லிமின் கண்ணியம் அழிக்கப்படுகின்ற நேரத்தில், அல்லது அவனது மானம் சீரழிக்கப்படுகின்ற நேரத்தில், அவனுக்கு உதவி செய்ய மறுக்கின்றானோ, அவன் தனக்கு உதவி வேண்டுமென ஆசைப்படும் இடத்தில் அல்லாஹ் அவனுக்கு உதவி செய்ய மறுத்துவிடுவான். மேலும் எந்த மனிதன் ஒரு முஸ்லிமின் கண்ணியம் அழிக்கப்படுகின்ற நேரத்தில், அல்லது அவனது மானம் சீரழிக்கப்படுகின்ற நேரத்தில், அவனுக்கு உதவி செய்கின்றானோ, அவன் தனக்கு உதவி வேண்டுமென ஆசைப்படும் இடத்தில் அல்லாஹ் அவனுக்கு உதவிசெய்வான். (அபூதாவூத்: 4884)

# நற்குணங்கள் பற்றி இஸ்லாம்

இஸ்லாம் நற்குணங்களை சம்பூரணப்படுத்தும் நோக்கில் தோன்றிய மாாக்கமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் நற்குணங்களை பரிபூரணப்படுத்துவதற்கே அனுப்பப்பட்டேன். (ஹாகிம்)

நபியவர்கள் எந்த நற்குணத்தையும் வலியுறுத்தாமல் இருக்கவில்லை. அதே போன்று எந்த தீய குணத்தையும் எச்சரிக்காது விட்டு விடவில்லை. எனினும் (நபியே) மன்னிப்பைக் கைக் கொள்வீராக! நன்மையைக் கடைபிடிக்குமாறு (மக்களை) ஏவுவீராக மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்து விடும். (அஃராப்: 199)

ஒரு முஸ்லிமின் சமூகத்தினுடனான தொடர்புகளும், ஏனையவர்களுடனான தொடர்புகளும் எவ்வாறு அமைய வேண்டும் என்ற கட்டுப்பாடுகளையும் தெளிவுபடுத்தினார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தடை செய்யப்பட்டவற்றை விட்டும் உன்னைப் காத்துக்கொள், மக்களில் சிறந்த அடியானாக திகழுவாய். இறைவன் உனக்கு அழித்தவற்றைப் பொருந்திக் கொள், மக்களில் பெரிய செல்வந்தனாகத் திகழ்வாய். உன் அண்டை வீட்டானுடன் நன்றாக நடந்து கொள் ஒரு உண்மை விசுவாசியாகத் திகழ்வாய். உனக்கு விரும்புபவற்றை மற்றவருக்கும் விரும்பி விடு, ஓர் உண்மை முஸ்லிமாகத் திகழ்வாய். அதிகம் சிரிக்காதே ஏனெனில் அதிகம் சிரிப்பது உள்ளத்தை இறக்கச் செய்துவிடும். (திர்மிதி)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிற முஸ்லிம்கள் எவருடைய நாவு, கையின் தொல்லைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே முஸ்லிமாவார். மேலும் அல்லாஹ்வால் தடுக்கப்பட்டவற்றைவிட்டு ஒதுங்கியவரே முஹாஜிராவார். (புகாரி: 10)

ஒரு தடவை நபியவர்கள் தன் தோழர்களிடம் கேட்டார்கள்: வங்கரோத்துக் காரன் யார் தெரியுமா? அதற்கு அவர்கள் எவ்விதப் பணமும் செல்வமுமற்றவர் தான் எங்களில் வங்கரோத்துக்காரன் ஆவான் என்றனர். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமூகத்தில் வங்கரோத்துக்காரன் யாரென்றால், மறுமையில் தொழுகை, நோன்பு, தர்மம் என்பவற்றை எடுத்துக் கொண்டு

வருவான் அதே நேரம் ஒருவனுக்கு திட்டியிருப்பான், ஒருவன் மீது அவதூறு சொல்லியிருப்பான், ஒருவன் இரத்தத்தை ஓட்டியிருப்பான், அடித்திருப்பான். அப்போது இவனுடை நல்லறங்கள் அவர்களுக்கு கொடுக்கப்படும், இவ்வாறு ஒவ்வொருக்கும் கொடுத்து தீர்ப்பளிக்க முன்னர் இவனுடைய நல்லறங்கள் தீர்ந்துவிட்டால், அவர்களுடைய தீமைகளிலிருந்து எடுத்து இவன் மீது சுமத்தப்பட்டு இறுதியில் இவன் நரகத்தில் எடுத்தெறியப்படுவான். (முஸ்லிம்: 2581)

இஸ்லாத்தின் கட்டளைகளும் விளக்கங்களும் ஒற்றுமையுடன் இணைந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதனையே இலக்காக் கொண்டுள்ளன. இஸ்லாம் தடை செய்தவற்றிலிருந்து ஒரு சில விடயங்களை உதாரணத்திற்காக இங்கு முன்வைக்கின்றோம்:

இறைவனுடன் இன்னொருவரைக் கூட்டாக்குவதை தடை செய்கின்றது. நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான். இது அல்லாத (பாவத்) தை தான் நாடியவருக்கு மன்னிப்பான். (நிஸா: 116)

சூனியத்தை தடைசெய்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அழித்துவிடும் பாவங்களை தவிர்ந்து கொள்ளுங்கள், இறைனுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல். (புகாரி: 2766)

அநியாயத்தையும் அட்டூழியத்தையும் தடை செய்கின்றது. சொல்லாலும் செயலாலும் மற்றவர் மீது அடந்தேருதல், உரிமைகளை அதனை உரியவர்களுக்கு நிறை வேற்றாதிருத்தல் போன்ற அனைத்தையும் இது பொதிந்துள்ளது. என் இறைவன் ஹராம் எனத் தடுத்திருப்பவை எல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான, மானக்கேடான செயல்கள்,பாவங்கள், நியாயமின்றி (ஒருவருக்கொருவர்) கொடுமை செய்வது. (அஃராப்: 33)

மனித உயிர்களை கொலை செய்வதை தடை செய்துள்ளது. எவனேனும் ஒருவன், ஒரு முஃமினை வேண்டுமென்றே கொலை செய்வானாயின் அவனுக்கு உரிய தண்டனை நரகமே ஆகும். என்றென்றும் அங்கேயே தங்குவான். அல்லாஹ் அவன் மீது கோபம் கொள்கிறான். இன்னும்

அவனைச் சபிக்கிறான். அவனுக்கு மகத்தான வேதனையையும் (அல்லாஹ்) தயாரித்திருக்கிறான். (நிஸா: 93)

தன் உயிர், செல்வம், மானம் என்பவற்றிற்காக கொலை செய்யப்பட்டவனும் கொலை செய்தவனும் இவ்வெச்சரிக்கையிலிருந்து வெளியேறுகின்றனர். நபியவர்கள் கூறினார்கள்: யார் தன் செல்வத்தைக் காக்க போராடி கொலை செய்யப்படுகின்றாரோ, அவர் இறைவனின் பாதையில் உயிர்நீத்த தியாகியாவார். மேலும் யார் தன் குடும்பம், செல்வம், மார்க்கம் என்பவற்றிற்காகப் போராடி கொலை செய்யப்படுகின்றாரோ, அவரும் இறை பாதையில் உயிர்நீத்த தியாகியாவார்.

உறவுகளைத் துண்டித்து நடப்பதையும் இனபந்துக்களுடன் கோபித்து நடப்பதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. இறைவன் கூறுகின்றான்: (போருக்கு வராது) நீங்கள் பின் வாங்குவீர்களாயின், நீங்கள் பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் சுற்றத்தாரை (அவர்களுடன் கலந்து உறவாடுவதிலிருந்தும்) துண்டித்து விடவும் முனைவீர்களாயின் இத்தகையோரைத்தாம் அல்லாஹ் சபித்து, இவர்களைச் செவிடாக்கி இவர்கள் பார்வைகளையும் குருடாக்கி விட்டான். (முஹம்மத்: 22- 23)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உறவுகளைத் துண்டித்து நடப்பவன் சுவனம் நுழையமாட்டான். (முஸ்லிம்)

உறவுகளை துண்டித்து நடப்பது என்பது அவர்களை சந்திக்காமல் விட்டுவிடுவதும், அவர்களின் நிலமைகளை விசாரித்து அறியாமல் இருப்பதும், அவர்களில் ஏழை,எளியவர்களுடன் தொடர்பற்றிருப்பதுமாகும். இவன் செல்வந்தனாக இருப்பின் தன் ஏழை உறவினர்களுக்கு வாறி வழங்கிட வேண்டும். ஏனெனில் ஒரு தர்மம் செய்வது தர்மம் மாத்திரமே. அதேவேளை தன் உறவினரான ஏழைக்கு தர்மம் செய்வதனால் இரண்டு வகையான கூலிகள் கிடைக்கின்றன. 1- தானதர்மம் 2- உறவினருடன் சேர்ந்து நடத்தல். இவன் ஓர் ஏழையாக இருப்பின் தன் உறவினர்களிடம் ஸலாம் கூறி நிலமைகளைக் கேட்டறிவான், இதமான வார்த்தைகளைக் கூறி மலர்ந்த முகத்துடன் நடந்துகொள்வான்.

இஸ்லாம் விபச்சாரத்தைம் அதற்கு இட்டுச் செல்லும் அனைத்து வழிகளையும் தடை செய்கின்றது. நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள் நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது. (இஸ்ரா: 32)

பொல்லாத நோய்கள் பரவுவதை விட்டும் சமூகத்தைக் காப்பதுமே விபச்சாரம் தடைசெய்யப்படுவதற்கான காரணங்களாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐந்து விடயங்கள் இருக்கின்றன, அவற்றின் மூலம் நீங்கள் சோதிக்கப்படுவீர்களாயின் அவை உங்களை அடையாமலிருக்க இறைவனிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். எந்த சமூகத்தில் விபச்சாரம் தோன்றி அவர்கள் அதனை அமுல்படுத்துகின்றார்களோ, முன் சென்றவர்களுக்கு ஏற்படாத கொல்லை நோய்கள் அவர்களை பீடித்துவிடும். (இப்னு மாஜா: 4019)

விபச்சாரத்தில் மிக்கொடியது திருமணம் செய்ய தடைசெயப்பட்ட உறவினர்களுடன் விபச்சாரம் செய்வதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் திருமணம் செய்ய தடை செயப்பட்டவர்களுடன் விபச்சாரம் செய்கின்றானோ அவனை கொலை செய்துவிடுங்கள். (ஹாகிம்)

ஓரினச் சேர்க்கையையும் இஸ்லாம் தடைசெய்துள்ளது. நபி லூத் (அலை) அவர்களின் சமூகத்தினர் அழிவுக்கு உட்பட்டதை அல் குர்ஆன் கூறும் போது: எனவே (தண்டனை பற்றிய) நம் கட்டளை வந்துவிட்ட போது, நாம் (அவ்வூரின்) அதன் மேல் தட்டைக் கீழ்தட்டாக்கி விட்டோம் இன்னும் அதன் மீது சுடப்பட்ட செங்கற்களை மழை போல் பொழியவைத்தோம். அக்கற்கள் உம் இறைவனிடமிருந்து அடையாளம் இடப்பட்டிருந்தன. (அவ்வூர்) இந்த அநியாயக்காரர்களுக்கு வெகு தொலைவிலும் இல்லை. (ஹூத்: 82 - 83)

அதாவது யார் அவர்கள் செய்த செயலை செய்கின்றாரோ அவர் அவர்களுக்கு எற்பட்ட தண்னைகளை பயந்து கொள்ளட்டும். நபி (ஸல்) அவர்கள் ஏழு நபர்களுக்கு மும்மூன்று முறை

சாபமிட்டார்கள் அவர்கள் கூறினார்கள்: எவன் நபி லூத் அவர்களின் சமூகத்தினர் செய்த ஓரினச் சேர்கையில் ஈடுபடுகின்றானோ, அவன் நாசமடையட்டும், மேலும் எவன் ஒரு பெண்ணையும் அவள் மகளையும் மனைவியாக வைத்திருக்கின்றானோ அவனும் நாசமடையட்டும், எவன் தன் பெற்றோரை திட்டுகின்றானோ அவனும் நாசமடையட்டும், எவன் ஒரு மிருகத்துடன் உடலுறவு கொள்கின்றானோ அவனும் நாசமடையட்டும், எவன் பூமியின் எல்லைகளை மாற்றுகின்றானோ அவனும் நாசமடையட்டும், எவன் அல்லாஹ் அல்லாத ஒன்றிற்காக அறுத்துப் பழியிடுகின்றானோ அவனும் நாசமடையட்டும், எந்த அடிமை தன் எஜமானை விட்டு விரண்டோடுகின்றானோ அவனும் நாசமடையட்டும். (ஹாகிம்: 8054)

மேலும் ஒரு பெண் இன்னொரு பெண்ணுடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. நபியவர்கள் கூறினார்கள்: பெண்களுக்கிடையின் ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது விபச்சாரமாகும். (அபூய:லா: 7491)

அநாதைகளின் சொத்துக்களை சாப்பிடுவதையும் இஸ்லாம் தடை செய்கின்றது. ஏனெனில் பலவீனமானவர்களின் சொத்துக்கள் உரிமைகள் சேதப்படுத்தப்படுகின்றன. நிச்சயமாக, யார் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத்தான்- இன்னும் அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெறியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள். (நிஸா: 10)

அநாதைகளை நிர்வகிக்கும் ஒரு ஏழை மேற்கூறிய எச்சரிக்கையிலிருந்து விதிவிலக்காக்கப்படுகின்றான். அந்த அநாதைகளை நல்ல முறையில் அரவனைத்து கவனிப்பது அவன் பயன் பெறும் விதத்தில் அவன் சொத்துக்களை நிர்வகிப்பதனால் அந்த அனாதையின் வருமானத்திலிருந்து ஒரு பகுதியை இவன் எடுப்பதில் தவறில்லை. அல்லாஹ் கூறுகின்றான்: இன்னும் (அவ்வநாதைகளின் பொறுப்பேற்றுக் கொண்டவர்) செல்வந்தராக இருந்தால் (அச்சொத்திலிருந்து ஊதியம் பெறுவதைத்) தவிர்த்துக்

கொள்ளட்டும் - ஆனால், அவர் ஏழையாக இருந்தால் நியாயமான அளவு சாப்பிட்டுக் கொள்ளவும். (நிஸா: 6)

பொய்சாட்சி சொல்வதையும் இஸ்லாம் முழுமையாக தடைசெய்கின்றது. மேலும் அதைப் பெரும் பாவமாக அடையாளப் படுத்துகின்றது. ஏனெனில் அதுதான் சமூகத்தில் உரிமைகள் மீறப்படுவதற்கும் அநீதி நிலவுவதற்கும் காரணமாக இருக்கின்றது. அத்துடன் அநியாயம் செய்தவன் தொடர்ந்தும் அநியாயத்தில் இருக்கவும் உதவியாக இருக்கின்றது. நபியவர்கள் கூறுகின்றார்கள்: (ஒருமுறை) இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று மூன்று முறை கேட்டார்கள். நாங்கள், ஆம், இறைத்தூதர் அவர்களே! (அறிவியுங்கள்) என்று கூறினோம். நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வுக்கு இணை வைப்பதும், பெற்றோரைப் புண்படுத்துவதும் என்று சொல்லிவிட்டு சாய்ந்து கொண்டிருந்த அவர்கள் எழுந்து அமர்ந்து, அறிந்து கொள்ளுங்கள்: பொய் பேசுவதும் பொய் சாட்சியமும் (மிகப் பெரும் பாவம்தான்) என்று கூறினார்கள். இதை அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். (இதைக் கண்ட) நான் அவர்கள் நிறுத்திக் கொள்ளக் கூடாதா? என்றேன். (புகாரி: 5076)

சூதாட்டத்தை தடை செய்துள்ளது. அதில் தனி நபர் மற்றும் சமூகத்திற்கு பயனில்லாத வழிகளில் மனித வளங்களும் பொருளாதார வளங்களும் அழிவுக்கு உற்படுத்தப்படுகின்றன. அல்லாஹ் கூறுகின்றான்: ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். (மாயிதா: 90)

சூதாடுபவன் அதிக பொருளீட்டுபவனாக இருப்பின் நிச்சயமாக தவறான முறையின் மற்றவர்களின் செல்வத்தை சாப்பிடுகின்றான் (என்பதே பொருள்). திரும்பவும் வெற்றி பெற பலவிதமான சதித்திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் செய்கின்றான். அவன் தோல்வியடைந்து நஷ்டப்பட்டவனாக இருப்பினும் பலவிதமான

விதத்தில் தன் செல்வத்தை வீணடித்தவனாக கருதப்படுகின்றான். அனைத்து பணமும் அவனை விட்டு சென்று விட்டால், சூதாடி தன் பணத்தை அடைவதற்காக திருட்டு, கொள்ளை என்பவற்றில் ஈடுபட்டு பணம்திரட்ட முற்படுகின்றான்.

வழிப்பறிக் கொள்ளை போன்ற குடி மக்களை அச்சமுறச் செய்யும் செயற்பாடுகளை மேற் கொள்வதும் இஸ்லாத்தில் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. அதனால் ஒரு சமூகத்தின் இயல்பு நிலை பாதிக்கப்படுகின்றது.

அல்லாஹ்வுடனும் அவன் தூதருடனும் போர் புரிந்து, பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரிபவர்களுக்குத் தண்டனை இதுதான் (அவர்கள்) கொல்லப்படுதல், அல்லது தூக்கிலிடப்படுதல், அல்லது மாறுகால் மாறுகை வெட்டப்படுதல், அல்லது நாடு கடத்தப்படுதல் இது அவர்களுக்கு இவ்வுலகில் ஏற்படும் இழிவாகும். மறுமையில் அவர்களுக்கு மிகக்கடுமையான வேதனையுமுண்டு. (மாயிதா: 33)

வழிப்பறிக் கொள்ளைக் காரர்களின் செயற்பாட்டிற்கேட்ப தண்டனை நிறை வேற்றப்படும். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்கள் சொத்துக்களை சூறையாடி உயிர்களையும் சேதத்தையும் ஏற்படுத்தியிருப்பின் அவர்களை கொலை செய்து கழுவில் அறைய வேண்டும். மேலும் பணத்தை சூறையாடாமல் உயிர் சேதம் மாத்திரம் செய்திருப்பின், அவர்களை கொலை செய்ய வேண்டும். எந்த உயிர் சேதமும் செய்யாமல் பணத்தை மாத்திரம் சூறையாடியிருப்பின், அவர்களின் மாறுகால், மாறுகை துண்டிக்கப்படவேண்டும். அவர்கள் பணத்தை எடுக்காமல் பயமுறுத்தல் மாத்திரம் செய்திருப்பின், அவர்கள் நாடு கடத்தப்படவேண்டும். (பைஹகி: 17090)

பொய் சத்தியம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அதாவது ஒருவன் மற்றவருக்கு சொந்தமான ஒரு பொருளை தனதாக்கிக் கொள்ள இறைவனை சாட்சியாகவைத்து சத்தியம் செய்வதாகும். இச்செயலாகிறது ஒருவனை நரகத்தில் நுழைய வைத்துவிடும். யார் அல்லாஹ்விடத்தில் தான் செய்த வாக்குறுதியையும் தன் சத்தியப் பிரமாணங்களையும் அற்ப விலைக்கு விற்கிறார்களோ, அவர்களுக்கு

நிச்சயமாக மறுமையில் யாதொரு நற்பாக்கியமும் இல்லை. அன்றியும், அல்லாஹ் அவர்களுடன் பேச மாட்டான். இன்னும் இறுதி நாளில் அவன் அவர்களை (கருணையுடன்) பார்க்கவும் மாட்டான். அவர்களைப் (பாவத்தைவிட்டுப்) பரிசுத்தமாக்கவும் மாட்டான். மேலும் அவர்களுக்கு நோவினைமிக்க வேதனையும் உண்டு. (ஆலு இம்ரான்: 77)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஒரு முஸ்லிம் சகோதரனின் பொருளை சத்தியத்தின் மூலம் தனதாக்கிக் கொள்கின்றானோ, இறைவன் அவனுக்கு நரகை கட்டாயமாககி விடுகின்றான். சுவனத்தை தடை செய்து விடுகின்றான். அப்போது ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதரே அது ஒரு சிறிய பொருளாக இருப்பினும் சரியா? என்று வினவ, அது ஒரு பல் துலக்கும் குச்சியாக இருப்பினும் சரியே. என பதிலளித்தார்கள். (முஸ்லிம்: 137)

தற்கொலையையும் இஸ்லாம் தடை செய்கின்றது. நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். எவரேனும் (அல்லாஹ்வின்) வரம்பை மீறி அநியாயமாக இவ்வாறு செய்தால், விரைவாகவே அவரை நாம் (நரக) நெருப்பில் நுழையச் செய்வோம். அல்லாஹ்வுக்கு இது சுலபமானதேயாகும். (நிஸா: 29-30)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஒரு ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கின்றானோ, மறுமையில் இறைவன் அதன் மூலம் அவனை வேதனை செய்வான். (முஸ்லிம்: 137)

பொய், மோசடி, நம்பிக்கைத் துரோகம், வாக்கு மோசடி போன்ற கீழ்த்தரமான குணங்களை இஸ்லாம் தடைசெய்கின்றது. ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், (அவனுடைய) தூ தருக்கும் மோசம் செய்யாதீர்கள் நீங்கள் அறிந்து கொண்டே, உங்களிடமுள்ள அமானிதப் பொருட்களிலும் மோசம் செய்யாதீர்கள். (அன்பால்: 27)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்கு பண்புகள் எவனிடம்

உள்ளனவோ அவன் வடிகட்டிய முனாஃபிக் ஆவான். அவற்றில் ஏதேனும் ஒன்று யாரிடமேனும் இருந்தால் அதை விட்டொழிக்கும் வரை நயவஞ்சகத்தின் ஒரு பண்பு அவனிடம் இருந்து கொண்டே இருக்கும். நம்பினால் துரோகம் செய்வான், பேசினால் பொய் பேசுவான், ஒப்பந்தம் செய்தால் அதை மீறுவான், விவாதம் புரிந்தால் நேர்மை தவறிப் பேசுவான். (புகாரி: 34)

முஸ்லிம் கிரந்தத்தில் அவன் தொழுது, நோன்பு வைத்து தான் உண்மையான முஸ்லிம் என நினைத்தாலும் சரியே. என்ற வாசகமும் வந்துள்ளது.

சமூகத்தின் சகோதரர்களுக்கு மத்தியில் கோபதாபங்கள், பொறாமை என்பவற்றையும் முற்றாகத் தவிர்க்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஒருவருக் கொருவர் கோபிக்கவோ, பொறாமை கொள்ளவோ, சதித்திட்டம் தீட்டவோ வேண்டாம். அல்லாஹ்வின் அடிமைகளாக மாறுங்கள், அனைவரும் சகோதரர்களாக ஆகிவிடுங்கள். எந்த முஸ்லிமும் தன் சகோதரனுடன் மூன்று நாட்களுக்கு அதிகமாக கோபித்திப்பது ஆகுமாக மாட்டாது. (முஸ்லிம்: 2559)

பொறாமையின் விபரீதங்களையும் நபியவர்கள் குறிப்பிட்டார்கள். பெரும்பாலான பிரச்சினைகளுக்கு அதுவே காரணமாக அமைகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பொறாமையை நான் உங்களுக்கு எச்சரிக்கின்றேன். நெருப்பு விறகை எறித்துவிடுவது போன்று பொறாமையும் நல்லறங்களை எறித்துவிடும். (அபூதாவுத்: 4903)

சாபமிடுதல் தீய வார்த்தைகள் மூலம் திட்டுதல் என்பனவும் தடை செய்யப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு விசுவாசி சாபமிடுபவனாகவோ, குறை கூறுபவனாகவோ, மோசமான வார்த்தைகளை பேசுபவனாகவோ, செய்பவனாகவோ இருக்கமாட்டான். (அஹ்மத்: 3948)

விரோதிகளுடனும் தீய வார்த்தைகளை பேசுவதை விட்டுவிட வேண்டும். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இணைவைப்பாளர்களுக்கு எதிராக பிரார்த்தனை புரிய முடியுமா என நபியவர்களிடம் வினவப்பட்ட போது: அவர்கள் கூறினார்கள்: நான்

சாபமிடுபவனாக அனுப்பப்படவில்லை, இரக்கம் காட்டுபவனாகவே அனுப்பபட்டுள்ளேன். (முஸ்லிம்:)

கஞ்சதனத்தையும் உலோபித் தனத்தையும் இஸ்லாம் எச்சரிக்கின்றது. ஏனெனில் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் செல்வம் என்பது இறைவனுடையதாகும் மனிதன் தனக்கும் தன் பொறுப்பில் இருப்பவர்களுக்கும் நியாயமாக செலவிடுவதற்காக இறைவன் அமானிதமாக அதனை வழங்கியுள்ளான். தேவையுள்ள சகோதரர்களுக்கும் அதில் உரிமையுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தர்மம் செய்பவன் அல்லாஹ்விற்கு நெருக்கமானவனே, மேலும் சுவனத்திற்கும், மக்களுக்கும் நெருக்கமானவனே, நரகை விட்டு தூரமானவனே, உலோபி அல்லாஹ்விலிருந்து தூரமானவனாவான். மேலும் சுவனத்தை விட்டும், மனிதர்களை விட்டும் தூரமானவன், நரகத்திற்கு மிக்க நெருக்கமானவன். கஞ்சத்தனமுடைய ஒரு வணக்கவாளியை விட கொடை கொடுக்கும் ஓர் அறிவிலி இறைவனிடம் சிறந்தவனாவர். (திர்மிதி: 1961)

ஒரு சமூகத்தில் உலோபித்தனம் என்ற வியாதி பரவுவதனால் ஏற்படும் தீய விளைவுகளை நபியவர்கள தெளிவுபடுத்தினார்கள்: அநியாயத்தை நீங்கள் பயந்து கொள்ளுங்கள் மறுமை நாளில் அது இருள்களாக உங்களை சூழ்ந்து கொள்ளும். மேலும் உலோபித்தனத்தை பயந்து கொள்ளுங்கள் அதுதான் உங்களுக்கு முன் சென்றவர்களை அழிவிற்குட்படுத்தியது. அதுவே அவர்களை இரத்தம் ஓட்டவும், தடை செய்யப்பட்டவற்றை ஆகுமாக்கவும் தூண்டியது. (முஸ்லிம்:)

பணம் படைத்த ஒரு முஸ்லிமுடன் வறுமைக் கோட்டில் வாழும் அவனுடைய சகோதரர்கள் உதவி கோரி அவர்களுக்கு அவன் உதவிக்கரம் நீட்டாத போது அல்லது அவர்களின் சுமைகளைக் குறைக்காத போது இஸ்லாம் அவனை விட்டும் தூரமாகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரண்டு விடயங்கள் ஓர் இறை விசுவாசியிடம் இருக்கமாட்டாது: கஞ்சத்தனம், தீய குணம். (திர்மிதி: 1962)

செல்வத்தை முறையற்ற விதத்தில் செலவு செய்வதையும் வீண் விரையம் செய்வதனையும் இஸ்லாம் தடை செய்கின்றது. இன்னும், உறவினருக்கு அவருடைய உரிமை (பாத்தியதை) களைக் கொடுப்பீராக மேலும், ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும், (அவரவர்களுக்கு உரியதைக் கொடுத்து விடுவீராக!) வீணாகப் (பொருளை) விரையஞ் செய்யாதீர். நிச்சயமாக விரயஞ் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள். ஷைத்தானோ தன்னுடைய இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கின்றான். (இஸ்ரா: 26 - 27)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (பெற்றெடுத்த) தாய்மார்களுக்குத் துன்பம் தருவதையும், பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பதையும் (நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ள பிற மனிதர்களின் உரிமைகளை) நிறைவேற்றாமலிருப்பதையும் பிறரின் செல்வத்தை (அநியாயமாக) அபகரித்துக் கொள்வதையும் தேவையற்ற வீண் பேச்சுக்கள் பேசுவதையும் அதிகமாக கேள்விகள் கேட்பதையும், செல்வத்தை வீணாக்குவதையும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு ஹராமாக (விலக்கப்பட்டதாக) ஆக்கியுள்ளான். (புகாரி: 2408)

மார்க்கத்தில் வீண் சிரமத்தை ஏற்படுத்திக் கொள்வதையும் அளவு கடந்து செல்வதையும் தடை செய்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக இந்த மார்க்கம் எளிதானது. இம்மார்க்கத்தை எவரும் (தமக்கு) சிரமமானதாக ஆக்கினால், அவரை அது மிகைத்துவிடும். எனவே, நடுநிலைமையையே மேற்கொள்ளுங்கள். இயன்றவற்றைச் செய்யுங்கள் நற்செய்தியையே சொல்லுங்கள் காலையிலும் மாலையிலும் இரவில் சிறிது நேரமும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். (புகாரி: 39)

தற்பெருமை, பெருமை என்பவற்றை எச்சரிக்கின்றது. (பெருமையோடு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் பெருமையாகவும் நடக்காதே! அகப் பெருமைக்காரர், ஆணவங் கொண்டோர் எவரையும் நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான். உன் நடையில் (மிக வேகமோ, அதிக சாவதானமோ இல்லாமல்) நடுத்தரத்தை மேற்கொள் உன் குரலையும் தாழ்த்திக் கொள் குரல்களிலெல்லாம்

வெறுக்கத்தக்கது நிச்சயமாக கழுதையின் குரலேயாகும். (லுக்மான்: 18 - 19)

பெருமையைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவருடைய உள்ளத்தில் அணுவளவேனும் பெருமை இருக்கின்றதோ அவர் சுவனம் நுழையமாட்டார். அப்போது குழுமியிருந்த தோழர்களில் ஒருவர்: ஒரு மனிதன் தன் ஆடை, அணிகலன், காலணிகள் என்பவை அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்றான் அதுவும் பெருமையில் அடங்குமா? என்று வினவினார். அதற்கு நபியவர்கள்: அல்லாஹ் அழகியவன் அவன் அழகையே விரும்புகின்றான். பெருமை என்பது உண்மையை மறுப்பதும் மனிதர்களை தரக்குறைவாக கருதுவதுமாகும் என்றார்கள். (முஸ்லிம்: 91)

மேலும் பெருமையைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் தன் ஆடைகளை பெருமையாக தரையில் இழுத்துச் செல்கின்றாரோ, மறுமையில் இறைவன் அவனை ஏரெடுத்தும் பார்க்மாட்டான். (புகாரி: 3665)

மக்களின் குறைகளை துருவித் துருவி ஆராய்வதையும் அவர்களைப் பற்றி தீய எண்ணம் வைப்பதையும் புறம் பேசுவதனையும் தடை செய்கின்றது. முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும் (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள் அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேச வேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன் மிக்க கிருபை செய்பவன். (ஹுஜ்ராத்: 12)

நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள்: புறம் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? அதற்கு தோழர்கள் அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள் என்றனர். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உன் சகோதரனைப்பற்றி அவர் விரும்பாத ஒரு விடயத்தை இனனொருவரிடம் கூறுவதாகும். அந்த விடயம் அவரிடத்தில் இருந்தாலும் அது புறமாகுமா? என்று வினவப்பட்டபோது, அவனிடம் இருப்பதைக் கூறுவது தான் புறமாகும், அவனிடம் இல்லாததைக் கூறுவது அவதூறாகும் என்றார்கள். (முஸ்லிம்: 2589)

மற்றவர்களின் பேச்சை அவர்கள் அறியாத விதத்தில் கேட்பதனை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். (அவருக்குஅளிக்கப்படும் வேதனையும் நிற்காது.) தாம் கேட்பதை மக்கள் விரும்பாத நிலையில். அல்லது, தம்மைக் கண்டு மக்கள் வெருண்டோடும் நிலையில். அவர்களின் உரையாடலைக் காது தாழ்த்தி (ஒட்டு)க்கேட்கிறவரின் காதில் மறுமை நாளில் ஈயம் உருக்கி ஊற்றப்படும். (புகாரி: 7042)

மற்றவர்களின் துன்பத்தைப் பார்த்து குதூகளிப்பதனை இஸ்லாம் தடை செய்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: துன்பத்தில் வீழ்திருக்கும் உன் சகோதரனைப் பார்த்து உன் சந்தோசத்தை வெளிப்படுத்திவிடாதே அல்லாஹ் அவனுக்கு நிவாரனத்தை வழங்கி உன்னை சோதிக்கலாம். (திர்மிதி: 2506)

பட்டப் பெயர் கூறி அழைப்பதனையும் சொல், செயல், சைக்கினைகள் மூலம் நக்கல், நையாண்டி செய்வதனையும் இழிவு படுத்துவதனையும் தடை செய்கின்றது. முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறியதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம். (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம் இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப் பெயர்களால் அழைக்காதீர்கள். (ஹுஜ்ராத்: 11)

ஒரு நீதிபதி தன் தீர்ப்பில் அநீதியாக (பக்கசர்ாபாக) நடப்பதனை தடை செய்கின்றது. ஏனெனில் இஸ்லாத்தில் ஒரு நீதியாளன் இறைவனின்

சட்டத்தை நடை முறை படுத்துபவனாகக் கருதப்படுகின்றான். அவன் அநீதியிழைத்து விட்டால் அவனுக்கு வழங்கப்பட்ட அமானிதத்தை மோசடி செய்தவனாகக் கணிக்கப்படுகின்றான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரண்டு நீதிபதிகள் நரகத்தில் நுழைவார்கள், மற்றொரு நீதிபதி சுவனம் நுழைவார். சத்தியத்தைக் கொண்டு தீர்ப்பளித்த நீதிபதி சுவனம் நுழைவார், அநீதியாக தீர்ப்பளித்த நீதிபதிகள் நரகம் நுழைவர், அறியாமையைக் கொண்டு தீர்ப்பளித்த நீதிபதியும் நரகம் நுழைவான். அப்போது நபித் தோழர்கள் கேட்டார்கள்: அறியாமையின் காரணமாக தீர்ப்பளித்தவன் செய்த குற்றமென்ன? அதற்கு: அவன் கற்கும் வரைக்கும் தீர்ப்பளிக்கக் கூடாது என்றார்கள். (ஹாகிம்)

எவ்வித ரோஷமுமின்றி தன் மனைவியை இன்னொருவனுக்குக் கூட்டிக் கொடுப்பதனை தடை செய்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்று மனிதர்களை மறுமையில் இறைவன் ஏரெடுத்தும் பார்க்கமாட்டான்: தன்பெற்றோருக்கு மாறுசெய்பவன், ஆணுக்கு ஒப்பாக நடக்கும் பெண், மாற்றானுக்கு தன் மனைவியை கூட்டிக்கொடுப்பவன். (நஸாஈ)

ஆண்கள் பெண்களுக்கு ஒப்பாவதையும், பெண்கள் ஆண்களுக்கு ஒப்பாவதையும் தடை செய்கின்றது. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஆண்களில் பெண்களைப் போன்று ஒப்பனை செய்து கொள்பவர்களையும், பெண்களில் ஆண்களைப் போல் ஒப்பனை செய்து கொள்பவர்களையும் சபித்தார்கள். (புகாரி: 5885)

நல்லதை செய்து விட்டு பின்னர் சொல்லிக் காட்டுவதை நான் உங்களுக்கு எச்சரிக்கின்றேன், (அது இறைவனுக்கு) நன்றி கெட்ட விதத்தில் நடப்பதாகும், மேலும் நன்மைகளை அழித்து விடும் செயலுமாகும் என்று கூறிய நபி (ஸல்) அவர்கள் பின் பின்வரும் இறைவசனத்தை ஓதிக்காட்டினார்கள்: நம்பிக்கை கொண்டவர்களே! மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப் போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள். (பகரா: 264)

கொடுத்த தர்மத்தை திருப்பக் கேட்பது தடை செய்யப்பட்டுள்ளது. தன் அன்பளிப்பைத் திரும்பப் பெறுபவன் வாந்தியெடுத்த பிறகு அதை மீண்டும் நக்குகின்ற நாயைப் போன்றவன் ஆவான். (புகாரி: 2589)

கோள் சொல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. மனிதர்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை உண்டு பண்ணும் விதத்தில் கோள் சொல்லித் திரிபவனுக்கு கடுமையான தண்டனை இருப்பதாக எச்சரிக்கின்றது. அன்றியும், இழிவானவனான அதிகம் சத்தியம் செய்யும் ஒவ்வொருவனுக்கும் நீர் வழிப்படாதீர் (அத்தகையவன்) குறை கூறித்திரிபவன், கோள் சொல்லிக் கொண்டு நடப்பவன். (கலம்: 10 - 11)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கோள் சொல்பவன் சுவனம் நுழையாமாட்டான். (முஸ்லிம்: 105)

மனிதர்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை உண்டு பண்ணும் விதமாக கோள் சொல்லித்திரிவதனால் ஏற்படும் விளைவுகள் யாவரும் அறிந்தவையே. நபி (ஸல்) அவர்கள் தடை செய்த கோபதாபங்கள், மனஸ்தாபங்கள் என்பன இதனால் ஏற்பட்டுவிடுகின்றன. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் தம் சகோதரரிடம் (மனஸ்தாபம் கொண்டு) மூன்று நாள்களுக்கு மேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று. அவர்கள் இருவரும் சந்திக்கும் போது ஒருவரை ஒருவர் முகத்தைத் திருப்பிக்கொள்வர். (இவ்வாறு செய்யலாகாது.) ஸலாமை முதலில் தொடங்குகிறவர் தாம் இவர்களில் சிறந்தவராவார். (புகாரி: 6077)

மேலும் கோள் சொல்வதன் விளைவாக மற்றவர்கள் பற்றி மோசமான எண்ணங்களும் மற்றவர்களை துருவித் துருவி ஆராயும் பழக்கம் எற்படுகின்றது. இவற்றை அல் குர்ஆன் தடை செய்கின்றது: ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும் (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். (ஹுஜ்ராத்: 12)

இல்லாதவர்களின் இல்லாமையைப் பயன் படுத்தி அவர்களுக்கு எதிராக செயற்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. அப்போது தான் இரக்கம், ஒற்றுமை, சகோதர வாஞ்சையுள்ள ஒரு சமூகத்தை உருவாக்கிட முடிகின்றது. மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன்

எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை. (நிஸா: 21)

தன் அநந்தரக்காரர்களை சிரமத்திற்கு உட்படுத்தும் நோக்கில் ஒருவர் மரணசாசனம் எழுதக் கூடாது. அல்லாஹ் கூறுகின்றான்: (இதுவும்) அவர்களின் மரண சாஸனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர் தான். ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது. (அந்நிஸா: 12)

## உணவு, குடிபானங்கள், உடைகள் என்பவற்றில் தடை செய்யப்பட்டவை

மதுபானம் அதனோடு தொடர்பான போதை வஸ்துக்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன. அவை உண்ணுபவை, குடிப்பவை, நுகர்பவை, ஊசிகள் மூலம் ஏற்றப்படுபவை என அனைத்தையும் உள்ளடக்கும். ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும். ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்- அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? (மாயிதா: 90 - 91)

இஸ்லாம் மதுபானம் மற்றும் அதன் அர்த்தத்தில் இருக்கும் அனைத்து விதமான வஸ்துக்களையும் வேரறுத்துவிட்டது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மதுபானத்தையும் அதனை புகட்டுபவன், அருந்துபவன், பிளிபவன், சுமப்பவன், விற்பவன், வாங்குபவன் மற்றும் அதன் பெறுமதியை உண்ணுபவன் என அனைவரையும் இறைவன் சபித்துள்ளான். (ஹாகிம்)

இந்த கடுமையான எச்சரிக்கையின் மூலம் இஸ்லாம் மனிதனின் உள்ளுணர்வுகளையும் சிந்தனைளையும் அவை மாசுபடுவதனை விட்டும் பாதுகாக்கின்றது. ஏனெனில் அவன் மனித நிலையிலிருந்து ஐயறிவு மிருகங்களின் நிலைக்கு சென்றுவிடக்கூடாது.

மேலும் போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி இருப்பவன் அவற்றை அடைவதற்கு கொலை, கொள்ளை என எந்தப் பாவத்திற்கும் துணிந்து விடுகின்றான். இதனால் தான் இஸ்லாம் பெரும் பாவத்தின் உயிர் நாடியென மதுபானத்திற்கு பெயர் சூட்டியுள்ளது.

இறந்த பிராணிகளின் இறைச்சி, பன்றி இறைச்சி மற்றும் பின்வரும் இறை வசனம் கூறுகின்ற பிராணிகளின் இறைச்சி வகைகள் தடை செய்யப்பட்டுள்ளன. (தானாகச்) செத்தது, இரத்தம், பன்றியின் இறைச்சி, அல்லாஹ் அல்லாததின் பெயர் கூறப்பட்டு (அறுக்கப்படாத) தும், கழுத்து நெறித்துச் செத்ததும், அடிபட்டுச் செத்ததும், கீழே விழுந்து செத்ததும், கொம்பால் முட்டுப் பட்டுச் செத்ததும், (கரடி, புலி போன்ற) விலங்குகள் கடித் (துச் செத்) தவையும் உங்கள் மீது ஹராமாக்கப் பட்டிருக்கின்றன. (அனுமதிக்கப்பட்டவற்றில்) எதை நீங்கள் (உயிரோடு பார்த்து, முறைப்படி) அறுத்தீர்களோ அதைத் தவிர (அதை உண்ணலாம். அன்றியும் பிற வணக்கம் செய்வதற்காகச்) சின்னங்கள் வைக்கப் பெற்ற இடங்களில் அறுக்கப்பட்டவையும், அம்புகள் மூலம் நீங்கள் குறி கேட்பதும் (உங்களுக்கு விலக்கப்பட்டுள்ளன)- இவையாவும் (பெரும்) பாவங்களாகும். (மாயிதா: 3)

அத்துடன் வேண்டுமென்றே இறைவனின் பெயர் கூறாமல் அறுக்கப்பட்டவையும் அல்லது அல்லாஹ் அல்லாத ஒருவனின் பெயர் கூறி அறுக்கப்பட்டயையும் தடை செய்யப்பட்டுள்ளன. எதன் மீது (அறுக்கும்போது) அல்லாஹ்வின் பெயர் கூறப்படவில்லையோ அதைப் புசியாதீர்கள் - நிச்சயமாக அது பாவமாகும். (அன்ஆம்: 121)

மிருகங்களில் சிங்கம், புலி, ஓநாய் போன்ற வேட்டைப் பட்களுடையனவும் பறவைகளில் பருந்து போன்ற வேட்டை நகங்களை உடையனவும் உண்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளன.

மனித உடலுக்கு வெளிப்படையான தீங்கை ஏற்படுத்தும் அனைத்து விதமான குடிபானங்களும் உணவு வகைகளும் தடை செய்யப் பட்டுள்ளன. உதாரணமாக: புகைத்தல்: நீங்கள் உங்களையே கொலை செய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். (அந்நிஸா: 21)

ஆண்கள் பட்டாடை அணிவதும் தங்க ஆபரணங்கள் அணிவதும் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் பெண்கள் அணிவதில் தவறு கிடையாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமூகத்தில் தங்கமும் பட்டும் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்து. அண்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. (அஹ்மத்: 1966)

## இஸ்லாம் ஊக்குவித்த நன்னடத்தைகளில் சிலவற்றை உதாரணத்திற்காக முன்வைக்கின்றோம்

சொல், செயல் இரண்டிலும் நேர்மை இருக்க வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுக்குமாறும் (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான்- நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். (நஹ்ல்: 90)

நெருங்கியவனுக்கும் அந்நியனுக்கும் ஒரே நீதியாக இருக்க வேண்டும். நீங்கள் பேசும் பொழுது - அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் - நியாயமே பேசுங்கள் அல்லாஹ்வுக்கு (நீங்கள் கொடுத்த) உறுதி மொழியை நிறைவேற்றுங்கள். நீங்கள் நினைவு (கூர்ந்து நடந்து) கொள்ளும் பொருட்டே அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கிறான். (அன்ஆம்: 152)

கோபம், அமைதி இரு சந்தர்ப்பத்திலும் நீதியாக நடக்க வேண்டும், முஸ்லிம், முஸ்லிம் அல்லாதவனுக்கும் ஒரே நியாயம் அவசியமாகும்.

தன் தேவையை விட பிறர் தேவையை முற்படுத்துமாறு இஸ்லாம் ஊக்குவிக்கின்றது. அதுதான் உண்மையான நேசத்திற்கு அடையாளமாகும். அதனால் சமூக அங்கத்தவர்களுக்கு மத்தியில் உயரியதோர் பிணைப்பு ஏற்படுகின்றது. இப்பண்புள்ளவர்களை அல் குர்ஆன் புகழ்ந்து பேசுகின்றது. தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களை விட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் - இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப்பட்டார்களோ, அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். (ஹஷ்ர்: 9)

நல்ல தோழமையை வரவேற்கின்றது. அத்துடன் தீயவர்களுடனான சகவாசங்களை எச்சரிக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் நல்ல தோழமை மற்றும் தீய தோழமையையும் அவற்றால் ஏற்படும் விளைவு களையும் பின்வரும் உதாரணத்தினூடாக தெளிவுபடுத்துகின்றார்கள்: நல்ல நண்பன் மற்றும் கெட்ட நண்பனின் நிலையானது கஸ்தூ ரியைச் சுமக்கிறவனின் நிலையையும், (உலைக் களத்தில்) உலை ஊதுகிறவனின் நிலையையும் ஒத்திருக்கிறது. கஸ்தூரியைச் சுமப்பவன் ஒன்று அதை உனக்கு அன்பளிப்பாக வழங்கலாம். அல்லது நீ அவனிடமிருந்து (அதை விலைக்கு) வாங்கிக் கொள்ளலாம். அல்லது அதிலிருந்து நீ நறுமணத்தையேனும் பெறலாம். ஆனால் உலை ஊதுபவனோ ஒன்று உன்னுடைய ஆடையை எரித்துக் கரித்துவிடுவான் அல்லது (அவனிடமிருந்து) நீ துர்வாடையையாவது அடைந்தே தீருவாய். (புகாரி: 5214)

இரு தரப்புக்களுக்கு மத்தியில் சிக்கல்கள் ஏற்படும் போது அவர்களுக்கு மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுத்துவதனை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. (நபியே!) தர்மத்தையும், நன்மையானவற்றையும், மனிதர்களிடையே சமாதானம் செய்து வைப்பதையும் தவிர, அவர்களின் இரகசியப் பேச்சில் பெரும்பாலானவற்றில் எந்த விதமான நலமும் இல்லை. ஆகவே எவர் அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை

நாடி இதைச் செய்கின்றாரோ, அவருக்கு நாம் மகத்தான நற்கூலியை வழங்குவோம். (நிஸா: 114)

இரண்டு தரப்பாருக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை இஸ்லாம் தொழுகை, நோன்பு போன்ற ஏனைய கட்டயாமான வழிபாடுகளுக்கு வழங்கியிருக்கும் தரத்தையும் அந்தஸ்தையும் வழங்கியிருக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை,நோன்பு தர்மம் என்பவற்றை விட சிறந்த விடயத்தை அறிவிக்கட்டுமா? இரண்டு தரப்புகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகும். ஏனெனில் இரண்டு தரப்புகளுக்கிடையில் சிக்கல் தோன்றுவது அனைத்தையும் அழித்துவிடக் கூடியதாகும். (திர்மிதி: 2509)

சிதைந்த உள்ளங்களை ஒன்று படுத்துவதற்கும் பிரிவினையை தவிர்த்து ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் பொய் சொல்வதற்கான சலுகையைக் கூட இஸ்லாம் வழங்குகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பின்வரும் நிலைகளில் பொய்யுரைப்பவர்களை நான் பொய்யர்களெனக் கருத மாட்டேன்: மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் பொய்யுரைப்பவன், யுத்ததில் பொய்யுரைப்பவன், ஒரு கணவன் மனைவியிடமும், மனைவி கனவனிடமும் கூறும் வார்த்தைகள். (அபூ தாவுத்: 4921)

மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறும் போது: (பரஸ்பரம் பிணங்கிய இரண்டு தரப்பாரிடமும்) நல்லதை (புனைந்து) சொல்லி மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துபவன் பொய்யன் அல்லன். (புகாரி: 2692)

ஒவ்வொருவரும் தன் சக்திக்கு உட்பட்டவிதத்தில் அனைத்து வழிவகைகளிலும் நன்மையை ஏவுவதனையும் தீமையைத் தவிர்ப்பதனையும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இதன் மூலம் தான் அறிவற்றவன் ஏற்றுக் கொள்கின்றான், குறுக்கு வழியில் செல்பவன் நல்வழிப்படுத்தப்படுகின்றான், மறந்தவன் நினைவூட்டப்படுகின்றான், நேரான வழியில் செல்பவன் உதவி செய்யப்படுகின்றான், அல்லாஹ்வின் கட்டளைகளை நடை முறைப்படுத்தப்பட்டு, அவன் விலக்கல்களை

தவிர்ந்து நடப்பதன் மூலம் மக்கள் இஸ்லாத்தில் நிலை பெறுகின்றார்கள். சமூகத்தில் அநியாயம், அட்டூழியம், உரிமை மீறல் என்பன பரவிவிடாமல் இருக்க இதுவே வலிமையான கேடயமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தீய காரியத்தைக் கண்டுவிட்டால் அதனை தன் கரத்தினால் நீக்கட்டும், அதற்கு இயலாவிடின் தன் நாவினால் நீக்கட்டும், அதற்கும் இயலாவிடின் தன் உள்ளத்தினால் அதனை வெறுத்துவிடட்டும். அதுதான் இறை நம்பிக்கையில் ஆகக் குறைந்த படித்தரமாகும். (முஸ்லிம்: 49)

நன்மையை ஏவி தீமையை தடுப்பதனை விட்டு விடவதனால் ஏற்படும் விபரீதத்தை நபியவர்கள் ஓர் உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தினார்கள்: அல்லாஹ்வின் (சட்ட) வரம்புகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவனுக்கும் அவற்றை மீறி நடப்பவனுக்கும் உவமை - ஒரு சமுதாயத்தைப் போன்றதாகும். அவர்கள் கப்பலில் (தங்களுக்கு இடம் பிடிப்பதற்காகச்) சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். (அதன்படி) அவர்களில் சிலருக்குக் கப்பலின் மேல் தளத்திலும் சிலருக்குக் கீழ்த் தளத்தில் கிடைத்தது. கீழே இருந்தவர்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்ட போது (அதைக் கொண்டு வர) அவர்கள் மேல் தளத்தில் இருப்பவர்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. (அதனால் மேலே இருந்தவர்களுக்குச் சிரமம் ஏற்பட்டது). அப்போது, கீழ்த் தளத்தில் இருந்தவர்கள் (தமக்குள்) நாம் (தண்ணீருக்காக) நம்முடைய பங்கில் (கீழ்த் தளத்தில்) ஓட்டையிட்டுக் கொள்வோம் நமக்கு மேலே இருப்பவர்களைத் தொந்தரவு செய்யாமலிருப்போம் என்று பேசிக் கொண்டார்கள். அவர்கள் விரும்பிய படி செய்து கொள்ள அவர்களை மேல் தளத்தில் உள்ளவர்கள் விட்டு விட்டால் (கப்பலில் இருப்பவர்கள்) அனைவரும் அழிந்து போவார்கள். (ஓட்டையிட விடாமல்) அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொள்வார்களாயின் அவர்களும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள். (அவர்களுடன் மற்ற) அனைவரும் தப்பிப் பிழைத்துக் கொள்வார்கள். (புகாரி: 2493)

நன்மையை ஏவி தீமையை தடுப்பதனை விட்டு விடுவதனால் ஏற்படும் தண்டனையை அல்லாஹ் அல் குர்ஆனில் கூறுகின்றான்: இஸ்ராயீலின் சந்ததிகளிலிருந்து, கா∴பிராகி விட்டவர்கள், தாவூது, மர்யமின் குமாரர்

ஈஸா ஆகிய இவர்களின் நாவால் சபிக்கப்பட்டுள்ளனர். ஏனென்றால் அவர்கள் (இறைவனின் கட்டளைக்கு) மாறு செய்து கொண்டும், வரம்பு மீறி நடந்து கொண்டும் இருந்தார்கள். இன்னும் தாம் செய்து கொண்டிருந்த தீய காரியங்களைவிட்டு ஒருவரையொருவர் தடுப்போராகவும் அவர்கள் இருக்கவில்லை. அவர்கள் செய்து கொண்டிருந்தவையெல்லாம் நிச்சயமாக மிகவும் தீயவையாகும். (மாயிதா: 78)

நன்மையை ஏவி தீமையை தடுப்பதற்கு சில ஒழுங்கு விதிகளும் அனுகுமுறைகளும் இருக்கின்றன:

- தான் ஏவி, விலக்கும் அம்சங்கள் பற்றிய யதார்த்தமான அறிவு இருத்தல். (இல்லாவிடின் அழைக்கப்படுபவர்களின் மார்க்க விடயங்களில் சிக்கலை ஏற்படுத்திவிடுவான்) சுப்யான் என்ற நபித்தோழர் கூறுகின்றார்: நான் நபியவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே நான் என் வாழ்வில் உறுதியாக கடைபிடிக்க வேண்டிய ஒரு விடயத்தை கற்றுத்தாருங்கள் என்று கேட்டேன். அப்போது நபியவர்கள்: அல்லாஹ் தான் என் இரட்சகன் என்று மொழிந்த பின்னர் அதில் உறுதியாக இருப்பீராக என்றார்கள். அப்போது நான், நீங்கள் என் மீது அதிகம் அஞ்சும் விடயம் என்ன என்று வினவியதற்கு தன் நாவைப் பிடித்து இதைத்தான்என்றார்கள். (இந்த நபிமொழியை விளக்கும் அபூ ஹாதம் என்ற அறிஞர் கூறுகின்றார்: நபி (ஸல்) அவர்கள்: நாவு என்று கூறிவிடாமல் தன் நாவைப் பிடித்து இந்த நாவை என்று கூறியதன் மூலம் தான் மக்களுக்கு கற்றுக் கொடுக்கும் விடயத்தை தான் முதலில் செய்து காட்டுகின்றார்கள்.) (இப்னு ஹிப்பான்: 5699)
- அவன் ஒரு விடயத்தை தடுப்பதன் மூலம் ஏற்படும் விபரீதம் அதனை தடுக்காமல் இருந்தால் ஏற்படுவதை விட பெரிதாக இருக்காமல் இருத்தல்.
- தான் தடுக்கும் விடயத்தை தானே செய்பவனாகவும், தான் ஏவும் விடயத்தை தானே செய்யாமல் இருப்பவனாகவும் இருக்காதிருத்தல். அல்லாஹ் கூறுகின்றான்: ஈமான் கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்?

நீங்கள் செய்யாததை நீங்கள் கூறுவது அல்லாஹ்விடம் பெரிய பாவமாக இருக்கிறது. (ஸப்: 3)

- நளினமாகவும் இரக்கமாகவும் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த விடயத்தில் நலினம் இருக்கின்றதோ அந்த விடயத்தை அது அழகுபடுத்தாமல் இருப்பதில்லை, எதில் கடினம் கையாளப்படுகின்றதோ அது அதனை அசிங்கப் படுத்தாமல் இருப்பதுமில்லை. (முஸ்லிம்: 2594)

- நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் விடயத்தில் தனக்கு ஏற்படும் துன்பங்களை சகிப்பவனாக இருக்க வேண்டும். என் அருமை மகனே! நீ தொழுகையை நிலை நாட்டுவாயாக நன்மையை ஏவி, தீமையை விட்டும் (மனிதர்களை) விலக்குவாயாக உனக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வாயாக! நிச்சயமாக இது உறுதிமிக்க செயல்களில் உள்ளதாகும். (லுக்மான்: 17)

இஸ்லாம் நற்குணத்தை வலியுறுத்துவதனுடன் அதனை ஒவ்வொருவரும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என ஊக்குவிக்கின்றது. இறை நம்பிக்கையில் பூரணமாவர்கள் நற்குணமுள்ளவர்களும் தங்கள் குடுப்பத்தவர்களுடன் மிருதுவாக நடப்பவர்களுமாவர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். (திர்மிதி: 2612)

நற்குணமுள்ளவர்களுக்கு வழங்கப்படும் நற்கூலியினை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: உங்களில் எனக்கு மிக நேசத்திற்குரியவரும், மறுமையில் எனக்கு மிக நெருக்கமானவரும் நற்குண சீலர்களே, எனக்கு கோபத்திற்குரியவர்களும் என்னை விட்டும் வெகு தொலைவில் இருப்பவர்களும் அதிகம் பேசுபவர்களும் மக்களை கவர்வதற்காக பெருமையடிப்பவர்களும் ஆவார்கள். (திர்மிதி: 2018)

நல்லவற்றை செய்யுமாறு இஸ்லாம் அழைக்கின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நடுநிலை உள்ளவர்களாயினும், தகுதியுள்ளவர்களாயினும் நல்லதையே செய்யுங்கள். அது

தகுதியுள்ளவரை அடைந்தால் அது சேர வேண்டிய இடத்தை அடைந்து விட்டது. இல்லாவிட்டால் அதற்கு தகுதியானவர்களில் நீங்கள் இருக்கின்றீர்கள். (முஸ்னத் ஷிஹாப்: 747)

செய்திப் பரிமாற்றத்தின் போது அதன் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துமாறு கட்டளையிடுகின்றது. "மு.:மின்களே! :.பாஸிக் (தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள் (இல்லையேல்) அறியாமையினால் (குற்ற மற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம் பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப் படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்." (ஹுஜ்ராத்: 6)

நலவையே நாடுமாறும் ஏவுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்கம் என்பது நலவை நாடுவதாகும். அப்போது நபித் தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே யாருக்கு நலவை நாடுவது என் வினவிய போது, அல்லாஹ்வுக்கும் அவனது வேதத்திற்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் அவர்களின் பொதுமக்களுக்கும் நலவை நாடுவதாகும் என்றார்கள்.

அல்லாஹ்வுக்கு நலவை நாடுவது என்பது அவனை விசுவாசித்து அவனுக்கு மாத்திரம் வணக்க வழிபாடுகளை செய்து அவனது பெயர்ப் பண்புகளில் அவனைப் பரிசுத்தப்படுத்தி இணை கற்பிக்காமல் இருக்க வேண்டும்.

அவனது வேதத்திற்கு நலவை நாடுவது என்பது அது இறைவனிடமிருந்து அருளப்பட்ட அவனது வார்த்தை என்றும் அருளப்பட்ட இறுதி வேதம் என்றும் உறுதியாக நம்புவதுடன் அது ஏவியவற்றை செய்தும் தடைசெய்த அனைத்தையும் தவிர்ந்தும் நடந்து அதனையே பின்பற்றியொழுகும் வழிகாட்டியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அவனது தூதருக்கு நலவை நாடுவது என்பது அவர் ஏவியவற்றில் அவருக்கு வழிப்பட்டு, கூறியவற்றை உண்மைப்படுத்தி, அவர் தடுத்துள்ளவற்றை விட்டும் விலகி நடப்பதாகும். மேலும் அவரை நேசித்து, கண்ணியப்படுத்தி,

அவர் வழிமுறைகளை நடை முறைப் படுத்தி, அவற்றை மக்களுக்கு மத்தியில் பரப்பிவிடுவதாகும்.

முஸ்லிம்களின் தலைவர்களுக்கு நலவை நாடுவது என்பது அவர்கள் பாவமான காரியங்களை மேற்கொள்ளுமாறு கட்டளை பிரப்பிக்காதவரை அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகும். மேலும் நல்ல விடயங்களை அவர்களுக்கு தெரியப்படுத்தி அவற்றில் அவர்களுக்கு ஒத்தாசையுடன் இருக்க வேண்டும். அவர்களுக் கெதிராக வெளிப்படாமல் நளினமான முறையில் மக்கள் உரிமைகளை அவர்களுக்கு விளங்கப்படுத்திட வேண்டும்.

பொது மக்களுக்கு நலவை நாடுவது என்பது அவர்களின் மார்க்க விடயங்களிலும் உலக விடயங்களிலும் நல்லவற்றின் பால் அவர்களை வழிநடாத்தி அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்து, அவர்களுக்கு ஏற்படும் கெடுதிகளிலிருந்து அவர்களைக் காத்திட வேண்டும். அத்தோடு தனக்கு விரும்புவதையே அவர்களுக்கும் விரும்புவதுடன் தனக்கு விரும்பாதவற்றை அவர்களுக்கும் விரும்பாமல் அவர்கள் விரும்பும் விதமாக அவர்களை நடாத்திட வேண்டும்.

கொடை, தர்மம் என்பவற்றை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அதனால் மக்கள் மனதை வென்று, அவர்களின் நேசத்தையும் பாசத்தையும் பெற்றிட முடின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: இரண்டு குணத்தை இறைவன் விரும்புகின்றான் ஒன்று நற்குணம் மற்றது தர்மம். மேலும் இரண்டு குணங்களை இறைவன் வெறுக்கின்றான், ஒன்று தீய குணம் மற்றது கஞ்சத்தனம். மேலும் எந்த மனிதனுக்கு அல்லாஹ் நலவை நாடுகின்றானோ, மக்களின் தேவைகளை நிறைவேற்றும் நிமித்தம் அவனை செயற்படுத்துகின்றான்.

தர்மத்திற்கான வரையறையை அல்-குர்ஆன் கூறுகின்றது: “(உலோபியைப் போல் எதுவும் வழங்காது) உம் கையை உம் கழுத்தில் கட்டப் பட்டதாக்கிக் கொள்ளாதீர் அன்றியும், (அனைத்தையும் செலவழித்து உம் கையை) ஒரே விரிப்பாக விரித்து விடாதீர். அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும், (கையில் எதுவுமில்லாத ஓட்டாண்டியாகி) துக்கப்பட்டவராகவும் ஆகிவிடுவீர்.” (இஸ்ரா: 29)

மக்களின் குறைகளை மறைக்குமாறும், அவர்களின் துன்பங்களை நிவர்த்தி செய்யுமாறும், அவர்களின் விடயங்களை சுலபப்படுத்துமாறும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: யார் இவ்வுலகில் ஒரு விசுவாசியின் துன்பங்களில் ஒரு துன்பத்தை நிவர்த்தி செய்கின்றாரோ, இறைவன் மறுமை நாளில் அவரின் துன்பங்களில் ஒரு துன்பத்தை அகற்றி விடுகின்றான். யார் ஒரு கஷ்டவாளியின் கஷ்டத்தை சுலபமாக்கிக் கொடுக்கின்றானோ இவ்வுலகிலும் மறுமையிலும் இறைவன் அவனது கஷ்டத்தை இலகுபடுத்திக் கொடுக்கின்றான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கின்றானோ ஈருலகிலும் இறைவன் அவனது குறைகளை மறைத்து விடுகின்றான். ஓர் அடியான் தன் சகோதரனுக்கு உதவி செய்யும் காலமெல்லாம் அல்லாஹ் அவனுக்கு உதவி செய்கின்றான். (முஸ்லிம்: 2699)

வணக்க வழிபாடுகளை செய்வதற்கும் விலக்கப்பட்டவைகளை தவிர்ந்து நடப்பதற்கும் பொறுமை அவசியமாகின்றது. இதனால் இஸ்லாம் பொறுமையினை வலியுறுத்துகின்றது. “எனவே (நபியே!) உம்முடைய இறைவனின் தீர்ப்புக்காகப் பொறுத்திருப்பீராக, நிச்சயமாக நீர் நம் கண்காணிப்பில் இருக்கின்றீர்.” (தூர்: 48)

மேலும் இறைவன் ஏற்படுத்தியிருக்கும் விதியின் மீதும் பொறுமையாக இருக்க வேண்டும். வறுமை, பசி, நோய், அச்சம் போன்றவை மனிதனை பீடிக்கும் போது அவன் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும். “நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!” (பகரா: 55)

கோபத்தை அடக்குமாறும் இயன்றளவு மன்னிக்குமாறும் இஸ்லாம் கட்டளையிடுகின்றது. அதனால் சமூக அங்கத்தவர்களுக்கிடையிலான உறவுகள் வலுப்பொறுகின்றன. கோபதாபங்கள் பிளவுகள் இல்லாதொழிக்கப்படுகின்றன. எனவே இவ்விரு பண்புகளையும் கொண்டவர்களுக்கு இஸ்லாம் மகத்தான கூலியினை வழங்குகின்றது. “இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும்,

சுவனபதியின் பக்கமும் விரைந்து செல்லுங்கள். அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது. அது பயபக்தி உடையோருக்காகவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. (பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள். தவிர கோபத்தை அடக்கிக் கொள்வார்கள். மனிதர் (கள் செய்யும் பிழை) களை மன்னிப்போராய் இருப்பார்கள். (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான். (ஆலு இம்ரான: 133- 134)

கெடுதி செய்பவர்களுக்கும் நல்லதையே பிரதி செய்யுமாறு இஸ்லாம் பணிக்கின்றது. இதனால் மனித உள்ளங்களில் இருக்கும் குரோதம், பழிவாங்கும் எண்ணம் இல்லாதொழிந்து அவை (மிருதுவடைந்து விடுகின்றன) சீர்பெற்றுவிடுகின்றன.



# இஸ்லாத்தில் ஒழுக்க நெறிகள்

இஸ்லாம் பல ஒழுக்க விழுமியங்களை முன்வைத்து முஸ்லிம்கள் தமது அன்றாட வாழ்க்கையில் நடை முறைப்படுத்தி இஸ்லாத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

## உணவின் போது கடைபிடிக்க வேண்டிய சில ஒழுக்க நெறிகள்:

உணவு உட்கொள்ள முன்னர் அல்லாஹ்வின் பெயரைக் கூறுதல், வலக்கரத்தால் தனக்கு முன்னால் உள்ளவற்றை உண்ணுதல், உட்கொண்ட பின்னர் இறைவனை புகழ்தல். (இடக்கரம் பொதுவாக அறுவறுக்கத்தக்கவற்றை மேற்கொள்ளவே பயன்படுத்தப்படுகின்து). நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மடியில் வளர்ந்து வந்த சிறுவனாக இருந்தேன். (ஒரு முறை) என் கை உணவுத் தட்டில் (இங்கும் அங்குமாக) அலைந்து கொண்டிருந்தது. அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம், சிறுவனே! அல்லாஹ்வின் பெயரைச் சொல். உன் வலக் கரத்தால் சாப்பிடு. உன (துகை)க்கு அருகிலிருக்கும் பகுதியிலிருக்கும் எடுத்துச்சாப்பிடு! என்று கூறினார்கள். அதன் பிறகு இதுவே நான் உண்ணும் முறையாக அமைந்தது என உமர் பின் அபீ ஸலமா (ரலி) அவர்கள் கூறினார்கள். (புகாரி: 5376)

1. எந்த உணவையும் குறை கூறாமல் இருத்தல். நபி (ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒரு போதும் குறை கூறியதில்லை. அவர்கள் ஓர் உணவை விரும்பினால் உண்பார்கள் இல்லையென்றால் விட்டு விடுவார்கள். (புகாரி: 3563)

2. அளவுக்குமீறி எந்த உணவையும் பானத்தையும் உட் கொள்ளாது இருத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் நிரப்பும் பைகளில் வயிறு மிக மோசமானதாகும்.

மனிதா உன் விலாவை நிமிர்த்தத் தேவையான சில பிடிகள் உனக்குப் போதுமாகிவிடுகின்றன. அப்படித்தான் அவசியமாயின் மூன்றில் ஒரு பகுதி உணவிற்கும், மற்றொரு பகுதி பாணத்திற்கும், மற்றொரு பகுதி சுவாசத்திற்கும் இருக்கட்டும். (இப்னு ஹிப்பான்: 5236)

3. பாத்திரத்தில் மூச்சி விடுவதனையும் அதில் ஊதுவதனையும் தவிர்த்தல். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாத்திரத்தில் மூச்சு விடுவதனையும் அதில் ஊதுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். (அபூதாவுத்: 3728)

4. மற்றவர் அறுவறுப்பாகக் கருதும் வண்ணம் உட்கொள்ளாதிருத்தல். அபூ ஸயீத்அல்குத்ரீ (ரலி) கூறினார்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தண்ணீர் தோல் பைகளை இக்தினாஸ் செய்ய வேண்டாமெனத் தடை விதித்தார்கள். அதாவது அவற்றின் வாய்ப் பகுதியை வெளிப்பக்கமாகச் சுருட்டிவிட்டு அதிலிருந்து நீர் பருகுவதைத் தடை செய்தார்கள (புகாரி: 5625)

5. தனித்து சாப்பிடாமல் மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிடுதல். அல்லாஹ்வின் தூதரே நாங்கள் சாப்பிடுகின்றோம் ஆனால் வயிறு நிரம்புவதில்லை என்று ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் முறைப்பாடு செய்தார். அதற்கு நபியவர்கள் நீங்கள் தனித்து சாப்பிடுகின்றீர்களா அல்லது கூட்டாக சாப்பிடுகின்ரீர்களா? என்று வினவினார்கள். நாங்கள் தனித்தே சாப்பிடுகின்றோம் என்று அம்மனிதர் கூற, நபியவர்கள் கூறினார்கள்: நீங்கள் கூட்டாக இறைவனின் பெயர் கூறி சாப்பிடுங்கள் உங்கள் உணவில் அபிவிருத்தி செய்யப்படும். (இப்னு ஹிப்பான்: 5224)

ஒருவர் விருந்திற்கு அழைக்கப்பட்டு, அழைக்கப்படாத இருவரும் அவருடன் சேர்ந்து வந்நிதிருந்தால் அவருக்காக விருந்தோம்பல் செய்பவரிடம் அனுமதி கோரல்.

# ஒரு வீட்டிற்குள் நுழைய உத்தரவு கேட்பதன் ஒழுங்கு முறைகள்

- வீட்டிற்கு வெளியே நின்று உத்தரவு கேட்டல். “ஈமான் கொண்டவர்களே! உங்கள் வீடுகளல்லாத (வேறு) வீடுகளில், அ(வ்வீட்டிலுள்ள) வர்களிடம் அனுமதி பெற்று, அவர்களுக்கு ஸலாம் சொல்லாதவரை (அவற்றினுள்) பிரவேசிக்காதீர்கள்.” (நூர்: 27)

- வீட்டிற்கு உள்ளே சென்று உத்தரவு கேட்டல். “இன்னும் உங்களிலுள்ள குழந்தைகள் பிராயம் அடைந்து விட்டால் அவர்களும், தங்களுக்கு (வயதில்) மூத்தவர்கள் அனுமதி கேட்பது போல் அனுமதி கேட்க வேண்டும்.” (நூர்: 59)

- வீடுகளில் இருக்கும் இரகசியங்களையும் மறைவான விடயங்களையும் காப்பதற்காகவே இஸ்லாம் இவ்வொழுக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒருவர் ஒரு துவாரத்தின் வழியாக நபி (ஸல்) அவர்களின் வீட்டினுள் எட்டிப் பார்த்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் ஈர்வழிச் சீப்பால் தம் தலையைக் கோதிக் கொண்டிருந்தார்கள். (அவர் எட்டிப் பார்த்ததையறிந்த) நபி (ஸல்) அவர்கள், நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய் என்று எனக்கு (முன்பே) தெரிந்திருந்தால் இந்த ஈர்வழியைக் கொண்டே உன் கண்ணைக் குத்தியிருப்பேன். (வீட்டுக்குள், நுழைய) அனுமதி கேட்க வேண்டும் என்று சட்டமாக்கப்பட்டதே பார்வைகள் (வரம்பு மீறி வீட்டிலிருப்பவர்களின் மீது விழக் கூடும் என்ற) காரணத்தினால் தான் என்று கூறினார்கள். (புகாரி: 5924)

- அனுமதி கிடைக்காத போது தொடர்ந்தும் உத்தரவு கேட்காமல் இருத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: மூன்று விடுத்தம் உத்தரவு கேட்கப்பட்டும் வழங்கப்படாவிட்டால் திரும்பிச் சென்று விடுங்கள். (முஸ்லிம்: 2154)

- உத்தரவு கேட்பவர் தான் யார் என்பதை முதலில் கூற வேண்டும். ஜாபிர் (ரலி) அறிவித்தார், என் தந்தை (ஒரு யூதருக்குக்) கொடுக்க வேண்டியிருந்த ஒரு கடன் விஷயமாக நபி (ஸல்) அவர்களிடம்

நான் சென்று கதவைத் தட்டினேன். அப்போது அவர்கள், யார் அது? என்று கேட்டார்கள். அதற்கு நான், நான்தான் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள்,நான் நான் என்றால்...? என அதை விரும்பாதவர்களைப் போன்று கூறினார்கள். (புகாரி: 6250)

## ஸலாம் (முகமன்) கூறுவதன் ஒழுக்கம்

சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களிடையிலும் ஸலாம் முகமன் கூறுவதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது. உங்கள் மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும் என்று கூறுவதனால் அன்பும் பரஸ்பர உறவும் உண்டாகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: என் ஆத்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது சத்தியமாக நீங்கள் விசுவாசம் கொள்ளும் வரை சுவனம் நுழையமாட்டீர்கள், நீங்கள் ஒருக்கொருவர் நேசம்வைக்கும் வரை விசுவாசம் கொள்ளமாட்டீர்கள், உங்களுக்கு மத்தியில் நேசத்தை ஏற்படுத்தும் ஒரு விடயத்தை அறிவிக்கட்டுமா? உங்களுக்கு மத்தியில் ஸலாத்தைப் பரப்பிக்கொள்ளுங்கள். (அபூதாவுத்: 5193)

ஸலாத்திற்கு பதில் கூறுவது கட்டாயமாகும். “உங்களுக்கு ஸலாம் கூறப்படும் பொழுது, அதற்குப் பிரதியாக அதைவிட அழகான (வார்த்தைகளைக் கொண்டு) ஸலாம் கூறுங்கள். அல்லது அதையே திருப்பிக் கூறுங்கள்.” (நிஸா: 86)

இஸ்லாம் ஸலாம் உடன் தொர்புடைய உரிமைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வாகனத்தில் செல்பவர் நடந்து செல்பவருக்கும், நடந்து செல்பவர் அமர்ந்திருப்பவருக்கும், சிறு குழுவினர் பெருங் குழுவினருக்கும் (முதலில்) சலாம் சொல்லட்டும். (புகாரி: 6233)

### கூட்டத்தின் ஒழுக்கங்கள்:

கூட்டத்திற்குள் நுழையும் போதும் அங்கிருந்து வெளியேறும் போதும் அங்கிருப்பவர்களுக்கு ஸலாம் கூற வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் ஒரு கூட்டத்திற்கு சென்றுவிட்டால் ஸலாம் கூறுங்கள் பின்னர் அங்கு அமர விரும்பினால் அமருங்கள். எழுந்துவிட்டாலும்

ஸலாம் கூறுங்கள் எழும்புவதை விட அமர்வதே சிறந்ததாகும். (இப்னு ஹிப்பான்: 494)

தாராளமாக இடம்விட்டு அமர்தல். “ஈமான் கொண்டவர்களே! சபைகளில் அகன்று இடங்கொடுங்கள் என்று உங்களுக்குச் சொல்லப்பட்டால், அகன்று இடம் கொடுங்கள், அல்லாஹ் உங்களுக்கு இடங் கொடுப்பான் தவிர, ‘எழுந்திருங்கள்’ என்று கூறப்பட்டால், உடனே எழுந்திருங்கள், அன்றியும், உங்களில் ஈமான் கொண்டவர்களுக்கும், கல்வி ஞானம் அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான்- அல்லாஹ்வோ நீங்கள் செய்பவற்றை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.” (முஜாதலா: 11)

ஒருவரை எழுப்பி விட்டு அவரின் இடத்தில் மற்றொருவரை அமரச்செய்தலாகாது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவர் மற்றவரை எழுந்திருக்க வைத்து விட்டு தான் அவ்விடத்தில் அமர வேண்டாம். தாராளமாக இடம் விட்டு அமர்ந்துவிடுங்கள். (முஸ்லிம்: 2177)

யாராவது ஒரு இடத்திலிருந்து எழுந்து விட்டு மீண்டும் அவ்விடத்திற்கு வந்து விட்டால் அவரே அவ்விடத்திற்கு தகுதியானவராகும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: யார் ஒரு இடத்திலிருந்து எழுந்துவிட்டு மீண்டும் அவ்விடத்திற்கு வந்துவிட்டால் அவரே அவ்விடத்திற்கு மிகவும் தகுதியானவராவார்.

அமர்ந்திருப்பவர்களின் அனுமதியின்றி அவர்களைக் கடந்து செல்லாதிருத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அமர்ந்திருப்பவர்களின் அனுமதியின்றி அவர்களைக் கடந்து செல்வது ஆகுமாக மாட்டாது. (அபூதாவுத்: 4845)

மூன்றாமவர் இருக்க இருவர் இரகசியம் பேசிக்கொள்ளலாகாது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் மூவர் இருக்க இருவர் தங்களுக்கிடையில் இரகசியம் பேசிக்கொள்ள வேண்டாம். அது மற்றவருக்கு கவலையை ஏற்படுத்தும். நீங்கள் மூன்று பேர் இருக்கும் போது மூன்றாமவரை விட்டு விட்டு இரண்டு பேர் மட்டும் இரகசியம் பேச வேண்டாம் நீங்கள்

மூவரும் மக்களுடன் கலக்கும் வரை! ஏனெனில், (அவ்வாறு மூன்று பேர் இருக்கும் போது இருவர் மட்டும் பேசுவது) மூன்றாமவரை வருத்தமடையச் செய்யும். (புகாரி: 6290)

கூட்டத்தின் மத்தியில் (நடுவில்) அமராது இருக்க வேண்டும். ஹு தைபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: கூட்டத்தின் நடுவில் அமர்வதனை நபி (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள். (அபூதாவுத்: 4826)

கூட்டம் அதன் பேச்சுக்கள் நிறைந்தாகவோ, அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனை அற்றதாகவோ இருக்கக் கூடாது. அனைவரினதும் மார்க்கரீதியான மற்றும் உலக விடயங்களைக் கருத்திற் கொண்ட கலந்துரையாடலாக அந்த கூட்டம் இருக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த ஒன்று கூடலில் இறைவனின் பெயர் நினைவு கூறப்படாமல் முடிவடைகின்றதோ அதன் அங்கத்தவர்கள் இறந்த கழுதையின் சடலத்தை விட்டு எழுந்து செல்வதைப் போன்று எழுந்து செல்கின்றனர். அவர்களுக்கு கைசேதம் ஏற்பட்டு விடுகின்றது. (அபூதாவுத்: 4855)

சபையில் இருப்பவர்கள் விரும்பாதவற்றை அவர்கள் முகத்தின் முன்னே கூறக்கூடாது. அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்களின் சபைக்குள் ஒரு மனிதர் நுழைந்தார். அவர் கரங்களில் மஞ்சல் நிற அடையாளம் காணப்பட்டது. நபி (ஸல்) அவ்ாகள் தான் விரும்பாத ஒன்றைக் கண்டுவிட்டால் அதனை சம்பந்தப்பட்டவர் முகத்தின் முன்னே சொல்வது மிகக் குறைவாகும். எனவே அவர் வெளியே சென்றதும் எம்மிடம் கூறினார்கள்: அவரின் கைகளை கழுவிவிடுமாறு நீங்கள் அவரிடம் கூறினால் மிக நன்றாக இருக்கும். (அபூதாவுத்: 4182)

## ஒன்றுகூடலின் ஒழுங்குகள்

எவ்விடத்திலாவது மனிதர்கள் ஒன்றுகூடுவதை பொதுவாக இஸ்லாம் வரவேற்கின்றது. ஒன்று கூடுவது என்பது வரவேற்கப்பட்ட விடயமாகும். அதனால் எதிர்பார்க்கப்படும் பயனை முழுமையாக ஈட்டிக்கொள்ள முடிகின்றது. ஒன்றுகூடலுக்கு பங்கம் விளைவிக்கும் அனைத்தக்

காரணிகளையும் இஸ்லாம் களைந்து விட முயற்சிக்கின்றது. இதனால் இஸ்லாமியர்கள் தங்கள் உடலை சுத்தமாக வைத்திருக்குமாறு வலியுறுத்துகின்றது. ஒருவனிடமிந்து வரும் துர் வாடையினால் அருகிலிருப்பவர் துன்புறக் கூடாது. மேலும் அவர்களின் ஆடைகள் சுத்தமாக இருக்க வேண்டும் என்கின்றது. மற்றவர்கள் பார்த்து அறுவறுக்கும் அளவிற்கு அவனின் தோற்றம் இருக்கக்கூடாது.

ஒருவர் கதைத்துக் கொண்டிருக்கும் போது இடையில் குறுக்கிடாமல் அவரின் பேச்சுக்கு காது தாழ்த்த வேண்டும். ஒரு சபையில் அமர்ந்து இருப்பவர்களுக்கு இடையூறு செய்யாமல் கிடைக்கும் இடத்தில் அமர வேண்டும். நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை ஒன்றுகூடல் ஒன்றில் கூறினார்கள்: யார் வெள்ளிக்கிழமை குளித்து விட்டு வாசனையை பூசிக் கொண்டு தன்னிடமுள்ள ஆடைகளில் மிக சிறந்ததை அணிந்து, பள்ளிவாயலுக்கு சென்று மற்ற சகோதரர்களுக்கு தொந்தரவு செய்யாமல் இறைவன் நாடியளவு தொழுகையில் ஈடுபட்டபின்பு இமாமின் பிரசங்கத்தை செவிமடுத்து அவருடன் தொழுகையை நிறைவேற்றுகின்றாரோ, அவரின் இச்செயல் இந்த வெள்ளிக்கும் முந்திய வெள்ளிக்கும் இடையில் அவர் செய்த பாவங்களுக்கு பரிகாரமாக அமைந்தவிடும். (இப்னு குஸைமா: 1762)

ஒருவர் தும்மிவிட்டால் அவர் இறைவனை புகழ்ந்திட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் தும்மினால், அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று சொல்லுங்கள். (இதைக் கேட்கும்) உங்கள் சகோதரர் அல்லது நண்பர் யர்ஹமுக்கல்லாஹ் (அல்லாஹ் உங்களுக்குக் கருணை புரியட்டும்) என்று சொல்லட்டும். அவர் உங்களுக்கு யர்ஹமுக்கல்லாஹ் என்ற சொன்னால், நீங்கள் (அவருக்காக) யஹ்தீக்குமுல்லாஹ் வ யுஸ்லிஹ் பாலக்கும் (அல்லாஹ் உங்களுக்கு நல்வழி காட்டட்டும்! உங்கள் நிலையைச் சீராக்கட்டும்) என்று சொல்லுங்கள். (புகாரி: 6224)

தும்மலின் போது பின்வரும் ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களில் ஒருவர் தும்மும் போது தன் இரு கைகளையும் தன் முகத்தில் வைத்து சப்தத்தைத் தாழ்த்திக் கொள்ளவும். (ஹாகிம்: 7684)

கொட்டாவி விடுபவன் இயன்றளவு அதனை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் அது சோம்பலின் அடையாளமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் தும்மலை விரும்புகின்றான், கொட்டாவியை வெறுக்கின்றான். உங்களில் ஒருவர் தும்மி அல் ஹம்து லிலாஹ் என்று சொன்னால் அதனை செவியுற்றவர்: யர்ஹமுகல்லாஹ் என்று என்று சொல்லவேண்டும். கொட்டாவி ஷைத்தானின் புறத்திலிருந்து வருவதாகும், உங்களில் ஒருவருக்கு கொட்டாவி வந்தால் இயன்றளவு அதனை கட்டுப்படுத்திவிடவும். அவர் 'ஹா' என்று கூறிவிட்டால் ஷைத்தான் அவரைப் பார்த்து சிரித்துவிடுகின்றான். (புகாரி: 6223)

சபையில் ஏப்பம் விடுவதனை தவிர்க்க வேண்டும். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றாகள்: நபியவர்களின் சபையில் ஒருவர் ஏப்பம் விட்டார். நபியவர்கள் கூறினார்கள்: எங்களிடம் ஏப்பம் விடுவதனை தவிர்த்துக் கொள்ளுங்கள், உலகில் அதிகம் வயிறு நிறம்பியவன் மறுமையில் நீண்ட நேரம் பட்டிணியில் இருப்பான். (திர்மிதி: 2478)

## உரையாடலின் ஒழுக்கம்

ஒருவர் கதைத்து முடியும் வரை இடையில் குறுக்கிடாமல் அவரின் பேச்சுக்கு முழுமையாக செவி தாழ்த்தல். நபி (ஸல்) அவர்கள் இறுதி ஹஜ்ஜின் போது கூறினர்கள்: (மனிதரின் பேச்சுக்கு செவிசாய்ப்பீராக) (புகாரி: 121)

கேட்டுக் கொண்டிருப்பவர் புரியும் விதமாக தெளிவாகக் கதைத்தல். அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் அனைவரும் புரியும்படி தெளிவாக, பிரித்துப் பிரித்து பேசுபவராக இருந்தார்கள். (அபூ தாவுத்: 4839)

முகமலர்சியுடன் கதைத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நன்மையான காரியத்தையும் சிறிதாகக் கருத வேண்டாம், அது உங்கள் சகோதரனை முக மலர்ச்சியுடன் சந்திப்பதாயினும் சரியே. (முஸ்லிம்: 2626)

நல்ல வார்த்தைகளையே கதைத்தல். மக்கள் தம் மூட்டுக்கள்

ஒவ்வொன்றுக்காகவும் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு நாளிலும் தருமம் செய்வது அவர்களின் மீது கடமையாகும். இருவருக்கிடையே நீதி செலுத்துவதும் தருமமாகும் அல்லது அவரின் பயணச் சுமைகளை அதில் ஏற்றி விடுவதும் தருமமாகும். நல்ல (இனிய) சொல்லும் ஒரு தருமமாகும். ஒருவர் தொழுகைக்குச் செல்ல எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் தருமமாகும். தீங்கு தரும் பொருளைப் பாதையிலிந்து அகற்றுவதும் ஒரு தருமமேயாகும். (புகாரி: 2989)

## நோயுற்றவரை நோய் விசாரிக்கும் ஒழுங்குகள்

நோயுற்றவரை சந்தித்து அவர் நிலை பற்றி விசாரிப்பதனை இஸ்லாம் ஆர்வமூட்டுகின்றது. அதனை ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமையாக அடையாளப் படுத்துகின்றது. ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து. அவை ஸலாமுக்கு பதிலுரைப்பது, நோயாளியை விசாரிப்பது, ஜனாஸாவப் பின்தொடர்வது, விருந்தழைப்பை ஏற்றுக் கொள்வது. தும்முபவருக்கு மறுமொழி கூறுவது ஆகியவையாகும். (புகாரி: 1240)

நோயுற்ற வரை நலம் விசாரிப்பதனால் கிடைக்கும் நற்கூலியினை முஸ்லிம்களுக்கு ஆர்வமூட்டும் விதமாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் ஒரு நோயுற்றவரை நலம் விசாரிக்கின்றாரோ அவர் சுவர்க்கத்தில் பழம் கொய்து கொண்டிருக்கின்றார். (முஸ்லிம்: 2568)

நலம் விசாரிக்கும் போது நோயாளியுடன் இரக்கமாகவும் பரிவாகவும் நடந்து கொள்ளல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோயுற்றவரின் நெற்றியில் (அல்லது கரத்தில்) கையைவைத்து நிலமை எப்படி இருக்கின்றது? என்று விசாரிப்பது தான் நலம் விசாரிப்பதின் பூரண முறையாகும். (திர்மிதி: 2731)

நோயாளிக்காக பிரார்த்தனைபுரிவது. யார் ஒரு நோயாளியை விசாரிக்கச்சென்று உமக்கு பூரண சுகம் கிடைக்க மகத்தான அர்ஷின் இரட்சகனாகிய அல்லாஹ்விடம் கேட்கின்றேன் என்று கேட்டுவிட்டால், அல்லாஹ் அவனுடைய நோயைக்குணப்படுத்துவான்.

# பரிகாசம் செய்வதன் ஒழுங்குகள்

சிலர் நினைப்பது போன்று இஸ்லாம் பொதுவாகவே பரிகாசம், விளையாட்டுக்கள், அனுமதிக்கப்பட்ட ஆடம்பரங்கள் என்பவற்றை விட்டும் அப்பாற்பட்ட மார்க்கம் கிடையாது. ஹன்ழலா அல் உஸைதி என்ற நபித்தோழர் கூறுகின்றார்: ஒரு முறை அபூ பக்ர் (ரலி) அவர்கள் என்னை சந்தித்து ஹன்ழலாவே எப்படி இருக்கின்றீர் என்று கேட்டார். ஹன்ழலா நயவஞ்சகனாகிவிட்டான் எனக் கூற வியப்படைந்த அபூ பக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ் பரிசுத்தமானவன் நீர் என்ன கூறுகின்றீர்? என்று கேட்டார். நாம் நபிகளாரிடம் இருக்கும் போது சுவனம், நரகம் பற்றிக் கூறப்படுகின்றது. அப்போது அதனைப் பார்ப்பது போன்று பயபக்கிதியுடன் இருக்கின்றோம். நபியவர்களிடத்திலிருந்து கலைந்து சென்றுவிட்டால், அனைத்தையும் மறந்துவிடுகின்றோம். என்று நான் கூறியதும் இவ்வாறுதான் என்னுடைய நிலையும் இருக்கின்றது என்று அபூ பக்ர் கூறினார். உடனே நாம் இருவரும் நபியவர்களிடம் சென்றோம். அல்லாஹ்வின் தூதரே ஹன்ழலா நயவஞ்சகனாகிவிட்டான். என்று நான் கூறினேன். அப்போது நபியவர்கள் ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள் என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதரே உங்களிடமிருக்கும் போது சுவனம், நரகம் பற்றி நினைக்கின்றோம், அவற்றை நம் கண்களினால் பார்ப்பது போன்று இருக்கின்றது. உங்களிடமிருந்து சென்றுவிட்டால் அனைத்தையும் மறந்துவிடுகின்றோம். அப்போது நபியவர்கள் கூறினார்கள்: என் உயிர் எவன் கைவசம் இருக்கினறதோ அந்த இறைவன் மீது ஆணையாக, நீங்கள் என்னிடம் இருப்பது போன்று எப்பொழுதும் இருப்பீர்களாயின் உங்கள் படுக்கை வரரிப்பிலும் நீங்கள் செல்கின்ற பாதைகளிலும் உங்களை வானவர்கள் கை குழுக்குவார்கள். எனினும் ஹன்ழலாவே. அது ஒரு நேரம், இது ஒரு நேரம் என்று மூன்று விடுத்தங்கள் கூறினார்கள். (முஸ்லிம்: 2750)

இந்த நபிமொழியில் அனுமதிக்கப்பட்ட முறையில் உலக விடயங்களில் ஈடுபடுவதும் மன அமைதி பெறும் இதர காரியங்களில் ஈடுபடுவதும் உள்ளத்திற்கு புத்துணர்ச்சிதரும் அம்சமங்கள் என தெளிவுபடுத்தினார்கள். பரிகாசம் செய்யும் ஒழுங்கையும் நபியவர்கள்

கூறியுள்ளார்கள். நபித்தோழர்கள் கேட்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதரே நீங்களுமா பரிகாசம் செய்கின்றீர்கள்? ஆம், உண்மையை மாத்திரம் தான் நான் கூறுவேன் என்றார்கள். (திர்மிதி: 1940)

சொல்லினால் பரிகாசம் செய்வதைப் போன்று செயலினாலும் பரிகாசம் செய்ய முடியும். நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் பரிகாசம் செய்பவராக இருந்தார்கள். அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஸாஹிர் என்று ஒரு நாட்டுப்புற மனிதர் இருந்தார், அவர் தூதர் (ஸல்) அவர்களுக்கு நாட்டுப் புறத்திலிருந்து அன்பளிப்புக்களை கொண்டுவருவார், அவர் திரும்பிச் செல்ல நாடும் போது நபியவர்கள் அவரை தயார் படுத்தி அனுப்புபவர்களாக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸாஹிர் எங்கள் நாட்டுப்புறமாவார், நாங்கள் அவருக்கு நகர்வாசிகள் ஆவோம். ஒரு முறை அவர் தனது பொருட்களை விற்றுக் கொண்டு இருக்கும் போது நபியவர்கள் அவர் காணாதவாறு அவரின் பின்னால் வந்து அவரை கட்டி அணைத்தார்கள், அவர் யாரிது? என்னை விட்டுவடுங்கள் என்று திரும்பிப்பார்த்தும் நபியவர்கள் என்பதை அறிந்து கொண்டார், எனவே அவர் தனது முதுகை நபிகளாரின் மார்போடு சேர்த்துவைத்துக் கொண்டார். அப்போது நபியவர்கள் கூறலானார்கள்: இந்த அடிமையை யார் வாங்குவது? அப்போது ஸாஹிர் கூறினார்: அல்லாஹ்வின் தூதரே என்னை நீங்கள் பெறுமதியற்றவனாக கண்டுகொள்வீர்கள் என்று, அதற்கு நபியவர்கள்: இல்லை, நீர் அல்லாஹ்விடத்தில் பெறுமதிமிக்கவர் என்றார்கள். (இப்னு ஹிப்பான்: 5790)

பரிகாசம் ஒரு முஸ்லிமின் மனதை நோவிக்கக் கூடியதாகவோ, இழிவுபடுத்துவதாகவோ இருக்கக்கூடாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை சங்கடத்திற்கு உள்ளாக்குவது ஆகுமாகமாட்டாது. (அஹ்மத்: 23114)

பரிகாசம் உண்மையின் வட்டத்திலிருந்து வெளியே செல்லக்கூடாது. இல்லாவிட்டால் மக்களை சிரிக்கவைப்பதற்காக பொய்சொல்லும் நிலை உருவாகிவிடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்களை சிரிக்கவைக்க வேண்டும் என்பதற்காக உரை நிகழ்த்துபவனுக்கு கேடு உண்டாவதாக என மூன்று முறை கூறினார்கள். (அபூதாவுத்: 4990)

# மரணித்தவரின் உறவினருக்கு ஆறுதல் கூறுவதன் ஒழுக்கங்கள்

ஒரு மனிதர் மரணித்து விட்டால், அவரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதும், அவர்களின் கவலைகளைக் குறைப்பதும், அவர்களின் சோதனையைத் தணிப்பதும் முஸ்லிம்களின் கடமையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யாராவது ஒரு முஃமின் சோதனையால் பீடிக்கப்பட்டிருக்கும் தன் சகோதரனுக்கு ஆறுதல் கூறுவானானால்,அல்லாஹ் மறுமைநாளில் அவனுக்கு கண்ணியத்தின் ஆடையை அணிவிப்பான். (இப்னு மஜா: 1601)

மரணித்தவரின் குடும்பத்தினருக்காக பிரார்த்தித்தல், அவர்களை பொறுமை கொள்ளுமாறும், நன்மையை எதிர்பார்க்குமாறும் வேண்டுதல்.

உசாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் நபியவர்களிடம் இருந்தோம், அப்போது அவரின் மகள்மார்களில் ஒருவர் தனது குழந்தை மரணத்தருவாயில் இருப்பதாகவும் அவருக்கு அவசரமாக வருமாறும் தூதனுப்பியிருந்தார். நபி (ஸல்) அவர்கள் தூதனைப் பார்த்துக் கூறினார்கள்: திரும்பிச் சென்று அவளிடம் கூறு: வாங்கிக் கொண்டதும் அல்லாஹ்வுக்கே, வழங்கியதும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது. மேலும் அவளுக்கு பொறுமை கொள்ளுமாறும், நன்மையை எதிர்பார்க்குமாறும் ஏவுவீராக. சற்று நேரத்தில் தூதுவன் திரும்பி வந்து: நீங்கள் வரவேண்டுமென்று அவர் சத்தியம் செய்து கேட்டுக் கொள்கிறார் என்று கூறினான். உடனே நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள், அவர்களுடன் ஸஃத் பின் உபாதா, முஆத் பின் ஜெபல் (ரலி) ஆகியோரும் சென்றனர், அவரிடம் குழந்தை கொடுக்கப்பட்டது அதன் மூச்சு தடுமாறிக் கொண்டிருந்தது நபிகளாரின் கண்கள் கண்ணீர் சிந்தின, அப்போது ஸஃத் (ரலி) அவர்கள்: அல்லாஹ்வின் தூதரே இது என்ன? என்று கேட்டார்கள், நபியவர்கள்: இது அல்லாஹ் தன் அடியார்களின் உள்ளத்தில் வைத்த அன்பாகும், அல்லாஹ் தனது அடியார்களில் இரக்கமுள்வர்களுக்கே இரக்கம்காட்டுகின்றான். (முஸ்லிம்: 923)

மரணித்தவருக்கு பாவமன்னிப்பு வேண்டி பிரார்த்தித்தல். இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறுவது மிகப் பொருத்தம் எனக் கூறுகின்றார்கள்: அல்லாஹ் உனக்கு அதிக நன்மைகளை வழங்குவானாக, உனக்கு நல்ல ஆறுதலை வழங்குவனாக, உன் மரணித்த உறவினரின் பாவங்களை மன்னிப்பானாக.

மரணித்தவரின் குடும்பத்தினருக்கு உணவு சமைத்துக் கொடுப்பது சிறந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜஃபரின் குடும்பத்தினருக்கு உணவு சமைத்துக்கொடுங்கள். அவர்கள் கவலையில் இருக்கின்றனர். (ஹாகிம்: 1377)

## தூக்கத்தின் ஒழுக்கங்கள்

பிஸ்மி (அல்லாஹ்வின் பெயரைக்) கூறி, வலது விலாப்புறமாக சாய்ந்து தூங்க வேண்டும். தூங்க முன் தூங்கும் இடத்தில் தீங்கு தரும் ஏதாவது இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களில் ஒருவர் தூங்குவதற்கு வந்தால் தனது கீழாடையால் தான் தூங்கும் விரிப்பை தட்டி விடட்டும், அல்லாஹ்வின் பெயரையும் கூறட்டும், ஏனென்றால் அவன் விரிப்பில் என்ன இருக்கும் என்பது அவனுக்குத் தெரியாது. அவர் தூங்க நாடினால் வலது விலாப்புறமாக தூங்கட்டும், பின்வரும் துஆவையும் (பிரார்த்னையையும்) ஓதிக் கொள்ளட்டும்:

سُبْحانَك رَبِّيَ وَضَعْتُ جَنْبِيَ وَبك أَرْفَعُه إنْ أَمْسَكْتَ نَفْسِيَ فَاغْفِرْ لَهَا وَإنْ أَرْسَلْتَهَا فَاحْفَظْهَا بِمَا حَفِظْتَ بِهِ عِبَادَكَ الصَّالِحِيْنَ.

பொருள்: தூய்மையான இறைவனே! உன் பெயரைக் கொண்டு என் விலாவை வைத்தேன், உன் பெயரைக் கொண்டே அதனை உயர்த்துகிறேன், அதனை நீ தடுத்து வைத்தால் அதனை மன்னித்து விடு, அதனை விட்டுவிட்டால் நீ நல்லடியார்களை எவ்வாறு பாதுகாப்பாயோ அவ்வாறு அதனைப் பாதுகாத்துவிடு. (இப்னு ஹிப்பான்: 5534)

தூங்கி எழுந்ததும் நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த துஆக்களை

ஓதிக் கொள்ள வேண்டும். ஹுதைபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 'நபி (ஸல்) அவர்கள் இரவில் தூங்கச்சென்றால் தனது கையை கண்ணத்தின் மீது வைத்து:

اللَّهُمَّ بِاسْمِكَ أَمُوتُ وَأَحْيَا

இறைவா! உன் பெயரைக் கூறியே மரணிக்கின்றேன், திரும்பவும் உயிர் பெறுகின்றேன் என கூறுவார்கள். தூங்கி எழுந்தால்:

اَلْحَمْدُ لِلهِ الَّذِي أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُوْرُ.

எங்களை மரணிக்கவைத்து திரும்பவும் உயிர்ப்பித்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும், அவனிடமே நாம் திரும்பிச்செல்வோம் என்று கூறுவார்கள். (புகாரி: 6314)

நேரகாலத்துடன் தூங்குவதற்கு முயற்சிக்க வேண்டும் தகுந்த காரணமின்றி தாமதிக்கக் கூடாது. நபி (ஸல்) அவர்கள் இஷா தொழுகைக்கு முன் தூங்கவதையும், அதற்குப் பின்பு கதைத்துக் கொண்டிருப்பதையும் வெறுப்பவர்களாக இருந்தார்கள். (புகாரி: 568)

குப்புறப்படுப்பது வெறுக்கப்பட்டுள்ளது. இறைததூதர் (ஸல்) அவர்கள் தனது வயிற்றுப் புறமாக தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதருக்குப் பக்கத்தால் சென்றார்கள் அப்போது தனது காலினால் அவரின் வயிற்றைக்கிள்ளி: இது அல்லாஹ் விரும்பாத ஒரு படுக்கையாகும் என்றார்கள். (இப்னு ஹிப்பான்: 5549)

ஆபத்தான விடயங்களில் இருந்து எச்சரிக்கையாக இருப்பதும், பாதுகாப்பு எடுத்துக் கொள்வதும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த நெருப்பாகின்றது உங்களின் எதிரியாகும், நீங்கள் தூங்கச் செல்லும் போது அதனை அணைத்து விடுங்கள். (புகாரி: 6294)

## வெளித்தேவைக்கு (மல, சலம் கழிக்கச்) செல்வதன் ஒழுக்கங்கள்

பிஸ்மி (அல்லாஹ்வின் பெயரைக்) கூறுவது, நுழைவதற்கு முன்பும், நுழைந்ததற்கு பின்பும் அவைகளுக்கான துஆக்களை ஓதிக்

கொள்வது. அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் வெளித் தேவைக்காக செல்லும் போது:

بِسْمِ اللهِ اَللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ

அல்லாஹ்வின் பெயரால், இறைவா! ஆண் ஷைதான்கள் மற்றும் பெண் ஷைதான்களின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். (இப்னு அபீ ஷைபா: 29902)

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் வெளித் தேவையை முடித்து விட்டு வெளியே வந்ததும்: غُفْرَانَكَ இறைவா உன்னிடம் பாவமன்னிப்பு வேண்டுகிறேன் என்று கூறுவார்கள். (இப்னு குஸைமா: 90)

வெளித் தேவையை நிறை வேற்றும் போது கிப்லா திசையை முன்னோக்கவோ, பின்னோக்கவோ கூடாது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் உங்களுக்கு தந்தையின் தரத்தில் இருக்கின்றோம், உங்களில் எவரும் மல, சலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்கவோ, பின்னோக்கவோ வேண்டாம், மூன்று கற்களுக்குக் குறைவான தொகையினால் சுத்தம் செய்யவும் வேண்டாம், மேலும் அவைகளில் விட்டைகள் சேர்க்கப்படவும் கூடாது. (இப்னு குஸைமா: 80)

மனிதர்களின் பார்வையை விட்டும் மறைந்திருத்தல். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் வெளித் தேவையை நிறைவேற்ற வந்தால், அவர் மறை வெடுத்துக் கொள்ளட்டும். ஷி (இப்னு மாஜா: 337)

தேவையை நிறைவேற்றியதன் பின்பு முன், பின் துவாரங்களை கல் மற்றும் அது போன்றவற்றினால், அல்லது தண்ணீரினால் சுத்தம் செய்ய வேண்டும், தண்ணீரினால் சுத்தம் செய்வது சிறந்ததாகும்.

# தாம்பத்திய உறவில் ஈடுபடுவதின் ஒழுக்கங்கள்

தாம்பத்திய உறவில் ஈடுபடும் நேரத்தில் அல்லாஹ்வை நினைவு கூர்வது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (ஒருவர் தனது மனைவியுடன் உறவு கொள்ளும் போது):

بِسْمِ اللهِ اَللَّهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

பொருள்: அல்லாஹ்வின் பெயரால், இறைவா எங்களை ஷைத்தானை விட்டும் தூரமாக்கிவிடு, ஷைத்தானை நீ எங்களுக்கு அருள்பாளித்தவற்றை விட்டும் தூரமாக்கி விடு என்று கூறினால் அவர்களுக்கு ஒரு குழந்தை ஏற்படுத்தப்பட்டால் அவன் அதற்கு எந்த தீங்கையும் செய்யமாட்டான். (புகாரி: 141)

மனைவியுடன் கொஞ்சி விளையாடுதல். நபி (ஸல்) அவர்கள் ஜாபிர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள்: ஜாபிரே! நீர் திருமணம் முடித்தீரா? அதற்கவர்: ஆம் என்றார், கன்னிப் பெண்ணா அல்லது ஏற்கனவே திருமணமானவளா? என்றார்கள், ஏற்கனவே திருமணமானவள் என்றார்கள், அதற்கு நபியவர்கள்: நீர் ஒரு கன்னிப் பெண்ணை திருமணம் முடித்திருக்கக் கூடாதா? நீ அவளுடன் கொஞ்சுவாய், அவளும் உன்னுடன் கொஞ்சுவாள். நீ அவளை சிரிக்கவைப்பாய், அவளும் உன்னை சிரிக்கவைப்பாள் என்றார்கள். (புகாரி: 5367)

அன்பாகவும் மென்மையாகவும் அவளுடன் நடந்துகொள்ளல், முத்தமிடல், அவளின் நாக்கை உரிஞ்சுதல். ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நோன்பாளியாக இருக்கும் போது எனக்கு முத்தம்தருவார்கள், எனது நாக்கை உருஞ்சுவார்கள். (இப்னு குஸைமா: 2003)

இருவரும் விரும்பிய விதத்தில் இன்பம் அனுபவிக்கலாம் பின்வரும் ஹதீஸில் கூறப்படும் நிபந்தனையுடன்: உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து: அல்லாஹ்வின் தூதரே நான் அழிந்துவிட்டேன் எனக் கூறுகின்றார்கள், அதற்கு நபியவர்கள்: எது உங்களை அழிவிற்கு உள்ளாக்கியது என்றார்கள், அதற்கு

அவர்கள்: நான் நேற்றிரவு எனது வாகனத்தை மறுபுரம் திருப்பினேன் என்றார்கள். நபியவர்கள் எப்பதிலும் சொல்லவில்லை. அல்லாஹ் அவன் தூதருக்கு பின்வரும் வசனத்தை இறக்கினான்: “ (பெண்கள் உங்கள் விளைநிலங்களாவார்கள், நீங்கள் நாடியவாறு விளைச்சல் செய்யுங்கள்) ” அப்போது நபியவர்கள் கூறினார்கள்: முன்னோக்கு, பின்னோக்கு, பின்துவாரத்தையும் மாதவிடாய் காலத்தையும் தவிர்ந்துகொள். (திர்மிதி: 2980)

அவர்களுக்கிடையிலுள்ள தனிப்பட்ட தொடர்புகளை பாதுகாத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மறுமை நாளிலே அல்லாஹ்விடத்தில் அந்தஸ்தால் மிகக்கெட்டவன், தன் மனைவியுடன் உடலுறவு கொண்டுவிட்டு அவள் இரகசியங்களை பகிரங்கப் படுத்துபவனாவான். (முஸ்லிம்: 1437)

## பிரயாண ஒழுக்கங்கள்

அநியாயமாக அபகரித்துக் கொண்ட மற்றவர்களின் சொத்துக்கள், அமானிதங்கள் என்பவற்றை உரியவர்களுக்கு திருப்பிக் கொடுத்தல், கடன்களை அடைத்தல், குடும்பத்தவர்கின் செலவினங்களுக்கு வழிவகுத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘ஒருவர் தம் சகோதரருக்கு அநீதி ஏதேனும் இழைத்திருந்தால் (அவருடன் சமரசம் செய்து) அதிலிருந்து அவர் (இவ்வுலகிலேயே) தம்மை விடுவித்துக் கொள்ளட்டும். ஏனெனில், அங்கு (மறுமையில் ஈட்டுத் தொகை கொடுக்க) பொற்காசோ, வெள்ளிக்காசோ இருக்காது. இவர் தம் சகோதரருக்கு (இழைத்த அநீதிக்கு ஈடாக) இவருடைய நன்மைகளிலிருந்து (தேவையானவற்றை) எடு(த்துக் கொடு)க்கப்படும் இவரிடம் நன்மைகளே இல்லை என்றால், (அநீதிக்குள்ளான) சகோதரனின் பாவங்களிலிருந்து (விகிதாசாரப்படி) எடுத்து இவர் மீதுசுமத்தப் (படும். இந்நிலை ஏற்) படுவதற்கு முன்பே (இம்மையில் சமரசம் செய்து கொள்ளட்டும்).’ (புகாரி: 6534)

தனியாக பிரயாணம் செய்யாதிருத்தல், அத்தியவசியமாக இருந்தால், அல்லது எவரும் இல்லாவிட்டால் தனியே செல்லலாம். நபி (ஸல்) அவர்கள் பிரயணத்திலிருந்து வந்த ஒருவரிடம் கேட்டார்கள்: நீ யாருடன்

வந்தாய்? அவர் நான் யாருடனும் வரவில்லை என்றார், அதற்கு நபியவர்கள்: தனித்து பிரயாணிப்பவன் ஷைத்தான் ஆவான், இரு பிரயாணிகளும் ஷைத்தான்கள் ஆவார்கள், மூன்று பிரயாணிகளே பிரயாணிகளாக கருதப்படுவார்கள். (ஹாகிம்: 2495)

நல்ல பிரயாணத் தோழர்களை தேர்ந்தெடுத்தல், ஒருவரை தலைவராக நியமித்துக் கொள்ளல். மூவர் பிரயாணம் செய்தால் அவர்கள் ஒருவரை தலைவராக நியமித்துக்கொள்ளட்டும். (அபூதாவுத்: 2608)

தான் வரும் நேரத்தை குடும்பத்தினருக்கு அறிவித்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அதை செய்து காட்டினார்கள். அவர்களிடத்தில் இரவில் வரக் கூடாது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் நீண்ட நாட்கள் கழித்து ஊர் திரும்பினால் இரவு நேரத்தில் திடீரெனத் தம் வீட்டாரிடம் செல்ல வேண்டாம். (புகாரி: 5244)

தனது குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோருக்கு பயணம் சொல்லி விட்டு செல்ல வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் பிரயாணம் செய்ய நாடினால் தனது நண்பர்களுக்கு ஸலாம் சொல்லட்டும் ஏனென்றால் அவர்கள் இவருடை பிரார்த்தனையுடன் அவர்களுடைய நல்ல பிரார்த்தனைகளையும் அதிகப்படுத்திக் கொடுப்பார்கள். (அபூ யஃலா: 6686)

தனது வேலை முடிந்ததும் உடனடியாக வீடு திரும்ப வேண்டும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பயணம் வேதனையின் ஒரு பங்காகும். அது உங்களை உறங்க விடாமலும், உண்ண விடாமலும், பருக விடாமலும் தடுத்து விடும். எனவே, உங்களில் ஒருவர் (ஒரு வேலையாகப் பயணம் புறப்பட்டுச் சென்று) தன் தேவையை முடித்துக் கொண்டால் அவர் தன் வீட்டாரிடம் விரைவாக (திரும்பிச்)சென்று விடட்டும். (புகாரி: 3001)

## பாதையில் பேணவேண்டிய ஒழுக்கங்கள்

பாதையின் ஒழுக்கங்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் சாலையில் அமர்வதைத் தவிர்ந்து கொள்ளுங்கள் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது தோழர்கள், எங்களுக்கு அங்கு அமர்வதைத் தவிர வேறு வழியில்லை அவை தாம், நாங்கள் பேசிக் கொள்கிற எங்கள் சபைகள் என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், அப்படியென்றால் நீங்கள் அந்தச் சபைகளுக்கு வ (ந்து அம) ரும் போது, பாதைக்கு அதன் உரிமையைக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். தோழர்கள், பாதையின் உரிமை என்ன? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், (அந்நியப் பெண்களைப் பார்க்காமல்) பார்வையைத் தாழ்த்திக் கொள்வதும் (பாதையில் செல்வோருக்குச் சொல்லாலோ செயலாலோ) துன்பம் தராமலிருப்பதும், சலாமுக்கு பதிலுரைப்பதும், நன்மை புரியும் படி கட்டளையிடுவதும், தீமையிலிருந்து தடுப்பதும் (அதன் உரிமைகள்) ஆகும் என்று பதிலளித்தார்கள். (புகாரி: 2465)

மற்றுமோர் அறிவிப்பில்: அல்லல் உறுபனுக்கு உதவி செய்வதும், வழி தெரியாதவருக்கு வழியைக் காட்டிக்கொடுப்பதும் என்றார்கள். (அபூ தாவுத்: 4817)

பாதையை பேணிக் காப்பது, பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தாதிருத்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சாபத்திற்குள்ளான இருவரை பயந்துகொள்ளுங்கள். அவ்விருவரும் யார்? என வினவப்பட்டது. அதற்கு: மனிதர்களின் பாதையில் அல்லது நிழலில் மலம் கழிப்பவன் என்றார்கள். (முஸ்லிம்: 267)

பிறருக்கு நோவினை செய்கின்றவைகளை சுமந்து செல்லாதிருத்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தம்முடன் அம்பை எடுத்துக் கொண்டு நம்முடைய பள்ளிவாசலில் அல்லது நம்முடைய கடை வீதியில் நடந்து சென்றால், அவர். அவற்றின் முனைகளை (மறைத்து) ப் பிடித்துக் கொள்ளட்டும். அல்லது. தம் கைக்குள் (அதன் முனையை) மூடிவைத்துக் கொள்ளட்டும். அவற்றில் எதுவும் முஸ்லிம்களில் யாரையும் கீறிவிடக் கூடாது. (புகாரி: 2333)

# கொடுக்கல், வாங்கல் சம்பந்தமான ஒழுக்கங்கள்

வியாபாரத்தின் அடிப்படை அது கூடும் என்பதாகும். ஏனெனில் அது விற்பவர், வாங்குபவர் ஆகிய இருவருக்குமிடையில் பிரயோஜனங்களை பரிமாறிக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாகும். ஆனால் எப்போது இரு தரப்பினரில் ஒருவருக்கு அல்லது இருவருக்கமே தீங்கு ஏற்படுமோ, அப்போது அது தடைசெய்யப்படுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்: “(ஏ! ஈமான் கொண்ட விசவாசிகளே! உங்கள் சொத்துக்களை உங்களுக்கு மத்தியில் அநீதமாக சாப்பிடவேண்டாம்) ” (நிஸா: 29)

வியாபாரத்தின் மூலம் சம்பாதிப்பதை இஸ்லாம் ஒரு சிறந்த, தூய்மையான சம்பாத்தியமாகக் கருதுகின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் தொழில்களில் மிகத் தூய்மையானது அல்லது மிகச் சிறந்தது எது என வினவப்பட்டது. அதற்கவர்கள்: ஒரு மனிதன் தன் கரத்தினால் உழைப்பதும், அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமும் என்றார்கள். (ஹாகிம்: 2158)

இஸ்லாம் வியாபாரத்தில் அமானிதத்தைப் பேணுமாறு தூண்டுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உண்மையான, நம்பிக்கையான முஸ்லிம் வியாபாரி மறுமைநாளில் அல்லாஹ்வின் பாதையில் மரணம் எய்திவர்களுடன் இருப்பார். (ஹாகிம்: 2142)

பொருளில் மறைந்திருக்கும் குறைகள் இருந்தால் அவைகளை தெளிவு படுத்துதல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் ஒரு பொருளை தெளிவு படுத்தாது விற்பது அவருக்கு ஆகுமாகமாட்டாது, மேலும் அதில் குறை இருப்பதை அறிந்தவர் அதனை தெளிவு படுத்தாதிருப்பதும் ஆகுமாகமாட்டாது. (அஹ்மத்: 16056)

பொருளில் மோசடி செய்யாதிருத்தல், குறைகளை வெளிப்படையாகக் கூறுதல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒரு உணவுக்குவியலுக்குப் பக்கத்தால் சென்றார்கள், அதில் கையைப் போட்டுப் பார்த்ததும் அவர் விரல்களில் ஈரம் பட்டது. உடனே நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உணவுக்காரரே இது என்ன? என்று, அதற்கு அவர்:

மழை நீர் வடிந்துள்ளது அல்லாஹ்வின் தூதரே! என்றார், அதற்கு நபியவர்கள்: மனிதர்கள் காணும் படியாக அதனை உணவுக்கு மேல் வைத்திருக்கக் கூடாதா? எவர் மோசடி செய்கின்றாரோ, அவர் என்னைச்சார்ந்தவர் அல்லர் என்றார்கள். (முஸ்லிம்: 102)

உண்மை பேசுதல், பொய் போசாதிருத்தல். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: விற்பவரும், வாங்குபவரும் பிரியாமலிருக்கும் வரை வியாபாரத்தை முறித்துக் கொள்ளும் உரிமை இருவருக்கும் உண்டு! அவ்விருவரும் உண்மை பேசி(க் குறைகளைத்) தெளிவுபடுத்தியிருந்தால் அவர்களின் வியாபாரத்தில் அபிவிருத்தி அளிக்கப்படும்! குறைகளை மறைத்துப் பொய் சொல்லியிருந்தால் அவர்களின் வியாபாரத்தில் உள்ள அபிவிருத்தி நீக்கப்படும்! (புகாரி: 2082)

கொடுக்கல், வாங்கலில் விட்டுக்கொடுத்தல்: அதுவே விற்பவருக்கும், வாங்குபவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகின்றது. பணத்தை மாத்திரம் நோக்காக் கொண்டு சகோதரத்துவத்தையும் மனிதநேயத்தையும் இழக்கும் நிலை ஏற்படுவதை தடுக்கின்றது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: வாங்கும் பொழுதும் விற்கும் பொழுதும் வழக்குரைக்கும் பொழுதும் பெருந்தன்மையாக நடந்து கொள்ளும் மனிதருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! (புகாரி: 2076)

வியாபாரத்தில் சத்தியம் செய்யாதிருத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் வியாபாரத்தில் அதிகம் சத்தியம் செய்வதை நான் எச்சரிக்கின்றேன், ஏனென்றால் அது (பொருளை) விற்கவைத்து விடும், பின்பு (இலாபத்தை) அழித்துவிடும். (முஸ்லிம்: 1607).

பொருளை வாங்கியவர் (பொருள் பொருத்தமில்லையென) திருப்பித்தரும் போது அதனை வாங்கிக் கொள்வதை இஸ்லாம் ஆர்வமூட்டுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: வாங்கியவர் பொருளை திருப்பித்தரும் போது எவர் விட்டுக் கொடுப்புடன் வாங்கிக் கொள்கின்றாரோ, அல்லாஹ் மறுமைநாளில் அவரின் தவறுகளை விட்டுவிடுகின்றான். (இப்னு ஹிப்பான்: 5029)

இது வரை நாம் இஸ்லாமிய ஒழுக்கங்களிற் சிலவற்றைப் பார்த்தோம், இன்னும் பல ஒழுக்கங்கள் இருக்கின்றன, அனைத்தையும் இங்கு கூறுவது சாத்தியமாகாது. இஸ்லாம் மனிதவாழ்வுடன் பொதுவாக மற்றும் தனிப்பட்டரீதியாக தொடர்புபடுகின்ற எந்தவொரு விடயத்தையும் விட்டுவைக்கவில்லை, அல்-குர்ஆனும் நபிவழியும் அவை சம்பந்தமான வழிகாட்டல்களையும் போதனைகளையும் சட்டதிட்டங்களையும் வகுத்துத் தந்துள்ளன. அவற்றின் நோக்கம் ஒரு முஸ்லிமின் வாழ்க்கை முழுவதும் நன்மைகளை ஈட்டித் தருகின்ற வணக்கமாக அமைய வேண்டும் என்பதே.

# முடிவுரை

நாம் எமது இந்த ஆய்வினை முடிவுக்குக் கொண்டு வரும் முன் இஸ்லாத்தை ஏற்ற இருவர் அதனைப் பற்றி வழங்கிய கருத்துக்ளை நோக்குவோம்:

F. Filweas என்பவர் கூறுகின்றார்: மேற்கிலே ஒரு பெரும் ஆன்மிக இடைவெளி காணப்படுகின்றது, எந்தவொரு கொள்கை, கோட்பாட்டிற்கும் அந்த இடைவெளியை நிரப்பி அங்கு மனிதனுக்கு சந்தோஷத்தை பெற்றுக்கொடுக்க முடியவில்லை. அங்கு பொருளாதாரச் செழிப்பு நன்றாகவே இருக்கின்றது, மனிதர்களின் லௌகீக ஆசைகள் அனைத்தும் நிறை வேற்றிக் கொடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதே. மேற்குலக மனிதன் எப்போதும் தனது வாழ்கையின் பெறுமதியற்ற தன்மையை உணர்கின்றான், எதற்காக நான் வாழ்கின்றேன்? நான் எங்கு செல்கின்றேன்? ஏன்? எதற்காக? என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருக்கின்றான். எந்த ஒருவனும் இந்த கேள்விகளுக்காக சரியான பதிலை வழங்கவில்லை. அந்த அப்பாவி மனிதன் எந்த மார்க்கத்தைப் பற்றி தவறான வதந்திகளை மாத்திரம் அறிந்துவைத்துள்ளானோ, அந்த உறுதியான மார்க்கமே அவர் தேடும் நோய்க்கான மருந்தாக உள்ளது. என்றாலும் ஒளி சிரகடிக்க ஆரம்பித்துவிட்டது, விடியல் ஒளி வீச ஆரம்பித்துவிட்டது. மேற்கத்தியர்கள் சிறு, சிறு கூட்டமாக இஸ்லாத்தில் நுழைய ஆரம்பித்துவிட்டனர். மேற்கத்திய மனிதன் தனது இரு கண்களினாலும் இஸ்லாத்தை அமுல்படுத்துகின்ற, அதன்படி வாழுகின்ற ஆண்களையும்

பெண்களையும் காண ஆரம்பித்துவிட்டான். ஒவ்வொருநாளும் அவர்களில் சிலர் இஸ்லாத்தில் நுழைகின்றனர். அதுதான் ஆரம்பம்.

D. Potter என்பவர் கூறுகின்றார்: இஸ்லாம் அல்லாஹ்வின் சட்டமாகும், எம்மை சூழ உள்ளவற்றைப் பார்ப்பதன் மூலம் அதனை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம், அல்லாஹ்வின் ஏவலினால் மாத்திமே இந்த மலைகள், கடல்கள், கோல்கள், நட்சத்திரங்கள், இயங்கிக் கொண்டிருக்கின்றன, அவற்றின் கடமைகளை சீராக செய்கின்றன. ஒரு எழுத்தாளனின் கதையில் வரும் கதாபாத்திரங்கள் எவ்வாறு அவனுக்கு கட்டுப்பட்டவைகளோ அவ்வாறே இப்பிரபஞ்சம் அவற்றைப் படைத்தவனுக்கு கட்டுப்பட்டவையாகும் (அல்லாஹ்வுக்கே உயர்ந்த உதாரணம் உரித்தானதாகும்), அந்த எழுத்தாளன் தீர்மானித்தபடியே அவை பேசுகின்றன, செய்கின்றன. அவ்வாறே இந்த பிரபஞ்சத்தில் இருக்கின்ற ஒவ்வொரு அணுவும், சடப் பொருளும் கூட அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவைகளே. ஆயினும் இந்த மனிதன் அவைகளில் இருந்து வேறுபட்டவனாவான், அவனுக்கு அல்லாஹ் தேர்வுச் சுதந்திரத்தை வழங்கியுள்ளான், அவனுக்கு அல்லாஹ்வுக்கு கட்டுப்படவும் முடியும், தனக் கென்றொரு சட்டத்தை நிருவி அதனை ஏற்று அதன் படி ஒழுகவும் முடியும். கவலைக்குரிய விடயம் என்னவென்றால் பொரும்பாலான நிலைகளில் அவன் இரண்டாவது முறையையே தேர்ந்தெடுத்துள்ளான். இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெரும் தொகையினர் இஸ்லாத்தை ஏற்க வருகின்றனர், ஏனென்றால் அவர்கள் ஆன்மிக சுகத்தையும், மன அமைதியையும் பெறுவதற்கு அதிக தேவையுள்ளவர்களாக இருக்கின்றனர். இஸ்லாத்தை ஆய்வு செய்தவர்களிலும், இஸ்லத்தை ஒழித்துக்கட்ட வேண்டும், அதன் குறைகளை அம்பலப்படுத்த வேண்டும் எனும் உறுதியுடன் கிறிஸ்தவப் பிரச்சாரத்தை

**தொடங்கிய கிறிஸ்தவ அழைப்பாளிலும் பெரும் தொகையினர் முஸ்லிம்களாக மாறிவிட்டனர். இஸ்லாம் சத்தியமானது, அதன் ஆதாரங்கள் பலம் வாய்ந்தவை, எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பது தெளிவாகின்றது.**

مركز أصول

Osoul Center

www.osoulcenter.com

IslamHouse.com

eDialogue

Interested in ISLAM?
Join For a Free Private Live Chat

edialogue org

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

لدعم المركز

مصرف الراجحي
Al Rajhi Bank

SA148000 0296608010005372

احد برامج المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

osoulcenter

+966504442532

www.osoulcenter.com

عرض تعريفي عن مركز أصول
ومجالاته ووحداته.. مشاهدة ممتعة لك

ISO 9001
حاصل على شهادة الاعتماد من الآيزو

حاصل على جائزة التميز في العمل الخيري

# இஸ்லாத்தின் சர்வதேச தூது

இந்நூலை வாசிக்கும் ஒவ்வொருவரிடமும் நாம் வினையமாக கேட்டுக்கொள்வது என்னவெனில் ஒருமுகப்படுத்தப்பட்ட தன் சிந்தனையை களைந்து உண்மையை அறியும் நோக்கில் இப்புத்தகத்தை வாசியுங்கள். தவறுகளை ஆராயும் நோக்கிலோ, குறைகளைத் தேடும் நோக்கிலோ வாசிக்க வேண்டாம். வாசிப்பவரின் அறிவுதான் தீர்ப்பளிக்க வேண்டுமே தவிர அவனது உணர்வு கிடையாது. அப்படி உணர்வை தீர்ப்பாளிப்பவராக எடுப்பவர் அல்லாஹ் இழிவுபடுத்தியவர்களில் ஆகிவிடுகின்றான். “மேலும், ‘அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்’ என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் ‘அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்’ என்று கூறுகிறார்கள். அவ்வாறாயின் அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காத, நேர்வழிபெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா?” (பகரா: 170)

Downlad the book

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

www.guidetoIslam.com

1 234567 890128 >